பகுதி IV

மத்திய வங்கியினதும், இலங்கையிலுள்ள வங்கித் தொழில் நிறுவனங்களினதும் கடமைகளும் தொழிற்பாடுகளும் தொடர்பான 1995 ஆம் ஆண்டின் முதன்மைச் சட்டவாக்கங்கள்

		பக்கம்
1.	1995ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டம்	I
2.	1995ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, மதுவரி (திருத்தச்) சட்டம்	V
3.	1995ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க, இலங்கைக் கடன் தகவல் பணியகம் (திருத்தச்) சட்டம்	VII
4.	1995ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க பாதுகாப்பு அறவீடு (திருத்தச்) சட்டம்	XI
5.	1995ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க வருமானவரி மீதான மிகைவரி (திருத்தச்) சட்டம்	XIII
6.	1995ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க, சான்று (சிறப்பேற்பாடுகள்) சட்டம்	XVII
7.	1995ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க, இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டம்	XXV
8.	1995ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க நிதிச் சட்டம்	XXXVII
9.	1995ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம்	XLVII
10.	1995ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க, மாகாணசபை மொத்த விற்பனவு வரவு வரிகள் (எல்லைகளும் விலக்களிப்புக்களும்) சட்டம்	XLVIII
11.	1995ஆம் ஆண்டின் 26ஆம் இலக்க, பணச்சட்டம் (திருத்தச்) சட்டம்	XLIX
12.	1995ஆம் ஆண்டின் 27ஆம் இலக்க உண்ணடாட்டரசிறை (திருத்தச்) சட்டம்	LI
13.	1995ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கி (திருத்தச்) சட்டம்	LXVI
14.	1995ஆம் ஆண்டின் 31ஆம் இலக்க உள்ளூர்த் திறைசேரி உண்டியல்கள் (திருத்தச்) சட்டம்	LXXVIII
15.	1995ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க பதிவு செய்யப்பட்ட பங்குத்தொகுதி பிணையங்கள் (திருத்தச்) சட்டம்	LXXXVIII
16.	1995ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க, வங்கித்தொழில் (திருத்தச்) சட்டம்	CI
17.	1985ஆம் ஆண்டின் 34ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டம்	CXXXIX
18.	1995ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க பாதுகாப்பு அறவீடு (திருத்தச்) சட்டம்	CXLII

1995 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டம்

[1995, மார்ச் மாதம் 30 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

1995 ஆம் நிதியாண்டின் சேவைக்கு ஏற்பாடு செய்வதற்கும், அத்தகைய சேவையின் நோக்கத்திற்காக இலங்கையிலோ அல்லது இலங்கைக்கு வெளியிலோ கடன்களைத் திரட்டுவதற்கு அதிகாரமளிப்பதற்கும், அந்நிதியாண்டின்போது அரசாங்கத்தின் குறித்த முயற்சிகள் தொடர்பில் நிதிகள் ஏற்பாடு செய்வதற்கும், அத்தகைய முயற்சிகளின் செலவினத்திற்கு அந்நிதியாண்டின்போது தேவைப்படும் பணங்களைத் திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்திற்குச் சேர்ந்த அல்லது அதனிடமுள்ள வேறேதேனும் நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து முற்பணமாகக் கொடுப்பதை இயலச் செய்வதற்கும், திரட்டு நிதியத்திற்கு அத்தகைய பணங்களை மீளளிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும், அத்துடன் மேற்சொல்லப்பட்ட கருமங்களுடன் தொடர்பான அல்லது அவற்றின், இடைநேர் விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.

1. இச்சட்டம் 1995 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச்சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (1) இச்சட்டத்தில், "நிதியாண்டான 1995 ஆம் ஆண்டு" எனக் குறிப்பீடு செய்யப்படுவதும், 1995 சனவரி 01 ஆம் திகதி தொடங்கி 1995 திசெம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடைவதுமான காலப்பகுதிக்கான சேவைக்காக நூற்றி அறுபத்தாறாயிரத்து எண்ணூற்றி இரண்டு மில்லியன் எழுநூற்றி இருபத்திரண்டாயிரம் ரூபாவென மதிப்பிடப்படும் அரசாங்கத்தின் செலவினத் தொகையானது செலவினம் எதற்கும் அதிகாரமளிக்கும் வேறு சட்டமெதற்கும் பங்கமின்றி –

நிதி

(அ) திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்தின் அல்லது அதனிடமுள்ள வேறேதேனும் நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து வழங்கப்பட வேண்டுமென இத்தால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள கொடுப்பனவுகளிலிருந்தும்; அத்துடன்,

(ஆ) அரசாங்கத்துக்காகவும் அதன் சார்பிலும் இலங்கையிலோ வெளிநாட்டிலோ திரட்டப்பட வேண்டுமென இத்தால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள கடன்களின் வரும்படியிலிருந்தும், பெறப்படல் வேண்டும். எவ்வாறாயினும் அத்தகைய வரும்படியின் கூட்டு மொத்தத் தொகையானது தொண்ணூறாயிரத்தி அறுநூற்றி அறுபத்தாறு மில்லியன் முன்னூற்றித் தொண்ணூற்றி ஏழாயிரம் ரூபாவினை விஞ்சுதலாகாது.

இதன்கண் முன்னர் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள நூற்றி அறுபத்தொன்பதினாயிரத்து எண்நூற்றி இரண்டு மில்லியன் எழுநூற்றி இருபத்திரண்டாயிரம் ரூபாகொண்ட பணத்தொகை இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு செலவிடப்படலாம்.

(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அரசாங்கத்துக்காகவும், அதன் சார்பிலும் கடன் திரட்டுவதற்கு அதிகாரமளிக்கும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்குப் பங்கமின்றி பயனுடையனவாதல் வேண்டும்.

3. (1) நிதியாண்டான 1995 ஆம் ஆண்டின்போது, இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் I ஆம் நிரையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு முயற்சியிலிருந்தும் அரசாங்கம் பெறும் பெறுகைகள் அத்தகைய முயற்சியின் கணக்கிற்கு வரவுவைக்கப்படுதல் வேண்டும். ஆனால், அவ்வாறு வரவுவைக்கப்படும் பெறுகைகளின் கூட்டு மொத்தத் தொகையானது, அந்த அட்டவணையின் III ஆம் நிரையில் உள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக் குறைந்த எல்லையை விஞ்சுதலாகாது. அத்தகைய முயற்சியின் தேறிய மேன்மிகை ஏதேனுமிருப்பின் அத்தேறிய மேன்மிகையானது நிதியாண்டான 1995 ஆம் ஆண்டு முடிவுற்ற பின்னர் ஆறு மாதங்கள் முடிவடைவதற்கு முன்னர் திரட்டு நிதியத்திற்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழான தேறிய மேன்மிகையைத் தீர்மானிக்கும் நோக்கத்திற்காகப் பின்வரும் கட்டணங்கள், அவையாவன :-

(அ) முயற்சியினது வருமானத்திற்கு முறைப்படி பொறுப்பாக்கப்படற்பாலனவான, கொடுக்கப்பட்டனவாயினுஞ் சரி அல்லது தேர்மானவையாயினுஞ்சரி, முயற்சியினது தொழிற்பாட்டு, தாபன, மற்றும் ஏனைய செலவுகள்: அத்துடன்

(ஆ) முயற்சியினது அசைவுள்ளனவும் அசைவற்றனவுமான சொத்தினது தேய்மானத்தை மேவுவதற்கான ஏற்பாடு,

என்பன ஒவ்வொரு முயற்சியின் வருமானத்திலும் எதிரீடு செய்யப்படல் வேண்டும்.

(3) நிதியாண்டான 1995 ஆம் ஆண்டின்போது இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் I ஆம் நிரையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு முயற்சியின்பேரிலும், அரசாங்கத்தால் உறப்படும் செலவினம், அந்த நிதி ஆண்டின்போது அத்தகைய முயற்சியிலிருந்து, அரசாங்கம் பெறும் பெறுகைகளிலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும். ஆனால், அத்தகைய செலவினம் அந்த அட்டவணையின் II ஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய எல்லையை விஞ்சுதலாகாது.

(4) நிதியாண்டான 1995 ஆம் ஆண்டின் முடிவில் இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் I ஆம் நிரையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள ஏதேனும் முயற்சியிலிருந்து நிலுவையாகவுள்ள பற்றுமீதி, அந்த அட்டவணையின் VI ஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய எல்லையை விஞ்சுதலாகாது.

4. நிதியாண்டான 1995 ஆம் ஆண்டின்போது எப்போதேனும் இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் II ஆம் நிரையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள ஏதேனும் முயற்சியிலிருந்து அரசாங்கம் பெறும் பெறுகைகள், அத்தகைய முயற்சியின் மீது அரசாங்கத்தினால் உறப்பட்ட செலவினங்களைச் சமாளிப்பதற்குப் போதியனவாயிராவிடின் அமைச்சர், அத்தகைய செலவினத்திற்கு அவசியமென அவர் கருதும் அத்தகைய தொகைகள் முற்பணங்களாகத் திரட்டு நிதியிலிருந்து அல்லது அரசாங்கத்திற்குச் சேர்ந்த அல்லது அதனிடமுள்ள வேறேதேனும் நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து கொடுக்கப்படற்பாலதாதல் வேண்டுமெனக் காலத்துக்குக்காலம் கட்டளை மூலம் பணிக்கலாம்: எவ்வாறாயினும், அவ்வாறு முற்பணமாகக் கொடுக்கப்படும் பணத்தொகைகளின் கூட்டுமொத்தத் தொகை, அந்த அட்டவணையின் II ஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள செலவினங்களின் ஆகக்கூடிய எல்லையை விஞ்சாதிருத்தல் வேண்டும். அத்தகைய முயற்சி தொடர்பில் அவ்வாறு முற்பணமாகக் கொடுக்கப்பட்ட ஏதேனும் பணத்தொகை அமைச்சரால் கட்டளை மூலம் பணிக்கப்படக்கூடிய அத்தகைய முறையில் திரட்டு நிதியத்துக்கு மீளளிக்கப்படுதல் வேண்டும்.

5. (1) இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையில் ஏற்பாடுகளின் பயனைக்கொண்டு, அந்த அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள எந்தத் தலைப்பின் கீழும் தோன்றும் எந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழும் மீண்டுவருஞ் செலவினத்திற்குக் குறித்தொதுக்கப்பட்டிருந்தது. ஆனால் செலவு செய்யப்படாமலும் அல்லது செலவு செய்யப்படுதல் சாத்தியமில்லாமலும் இருக்கும் எவையேனும் பணங்கள், திறைசேரிச் செயலாளரின் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட வேறெவரேனும் அலுவலரின் கட்டளை மூலம் அந்நிகழ்ச்சித் திட்டத்திற்குட்பட்ட ஆக்கப்பொருட் செலவினத்திற்கெனச் செய்யும் குறித்தொதுக்கலுக்கு அல்லது அத்தலைப்பிற்குட்பட்ட வேறேதேனும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான மீண்டுவருஞ் செலவினத்தின் அல்லது மூலதனச் செலவினத்தின் குறித்தொதுக்கலுக்கும் கைமாற்றப்படலாம்.

(2) இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் தலைப்பின் கீழுள்ள நிகழ்ச்சித் திட்டமெதன் கீழும் ஆக்கப்பொருட் செலவினத்துக்கென ஒதுக்கப்பட்டுள்ள பணங்களெவையும் குறித்தொதுக்கலிலிருந்து கைமாற்றப்படல் ஆகாது.

6. (1) வரிகளிலிருந்தும் வேறு மூலகங்களிலிருந்தும் பெறப்படும் பெறுகைகள், அதிகாரமளிக்கப்பட்ட செலவினங்களுக்கு நிதி வசதியளிப்பதற்கு என எதிர்பார்க்கப்பட்ட பணத்தொகைகளையும் விடக் குறைவாயிருக்குமெனஃ அல்லது

(2) ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்கு அல்லது நோக்கங்களுக்கு முதலில் ஒதுக்கப்பட்ட பணத்தொகைகள் மேலும் தேவைப்படமாட்டாவென, அமைச்சர் திருப்திப்படுமிடத்து, திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்திற்குச் சேர்ந்த அல்லது பணங்களிலிருந்து அவரால் வழங்கப்பட்ட ஆணைப்பத்திரத்தில் அதிகாரத்தின் கீழான செலவினத்திற்காக முன்னர் வழங்கப்பட்ட எவையேனும் பணத்தொகைகளை அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் முழுமையாக அல்லது பகுதியளவில் அவர் மீளப்பெறலாம்.

7. (1) (அ) இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் II ஆம் நிரையிலும் IV ஆம் நிரையிலும், V ஆம் நிரையிலும் குறித்துரைக்கப்பட்டுள்ள, ஆகக்கூடிய எல்லைகளுள் எதனையும்ஃ

(ஆ) இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் III ஆம் நிரையிலும் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக்குறைந்த எல்லைகளையும், அமைச்சர் அரசாங்கத்தின் அங்கீகாரத்தோடு 1996 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கட்டளை மூலம் வேறுபடுத்தலாம் அல்லது மாற்றலாம்.

(2) இப்பிரிவின்கீழ் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்படும் கட்டளை எதுவும், பாராளுமன்றத்தினாலான தீர்மானத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டிருந்தாலன்றிப் பயனுடையதாதலாகாது.

(3) அத்தகைய கட்டளை எதுவும் அதன்கண் அவ்விதம் கூறப்பட்டிருந்தால், அதன்கண் குறிப்பிடப்பட்டிருக்கக் கூடியதும் அத்தகைய கட்டளை ஆக்கப்பட்ட திகதிக்கு முந்தியதுமான அத்தகைய திகதியிலிருந்து பயனுடையதாயிருந்ததாகக் கருதப்படல் வேண்டும்.

8. பாராளுமன்றமானது தீர்மானத்தின் மூலம் இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையை, அந்த அட்டவணையின் தோதான நிரைகளுக்கு, ஏதேனும் முயற்சியையும், அத்துடன்

(அ) அத்தகைய முயற்சி தொடர்பான எல்லா ஆகக்கூடிய எல்லைகளையும் அல்லது அவற்றுள் எவற்றையும்.

(ஆ) அத்தகைய முயற்சி தொடர்பிலான ஆகக்குறைந்த எல்லையையும்,

சேர்ப்பதன் மூலம் திருத்தலாம்.

9. 1995 சனவரி 1 ஆம் திகதி தொடங்கி இச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதிக்கு நேர்முந்திய திகதியன்று முடிவடையும் காலப்பகுதிக்கான சேவைக்கென நிதி ஏற்பாடு வழங்கி பாராளுமன்றத்தால் 1994, நவம்பர் மாதம் இருபத்தைந்தாம் நாளன்று நிறைவேற்றப்பட்ட ஏதாவது தீர்மானத்தில் எது எவ்வாறு இருப்பினும்

(அ) அத்தீர்மானத்திற்கான முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் தலைப்பின் கீழ் காணப்படும் ஏதேனும் நிகழ்ச்சித் திட்டத்துக்கென அத்தீர்மானத்தால் குறித்தொதுக்கப்பட்ட பணத்திலிருந்து அக்காலப் பகுதியில் செலவழிக்கப்பட்டுள்ள எவையேனும் பணத்தொகைகள், எல்லா நோக்கங்களுக்கும், அத்தீர்மானத்தின் அதிகாரத்தின் கீழ் செலவிடப்பட்டதாக

கருதப்படாது. இச்சட்டத்தின் கீழான அதிகாரத்தின் கீழ் செலவழிக்கப்பட்டுள்ளனவாகக் கருதப்படுதல் வேண்டும்.

(ஆ) இச்சட்டத்துக்கான முதலாவது அட்டவணையில் எத்தலைப்பின் கீழும் நேரொத்த நிகழ்ச்சித் திட்டத்துக்கென அத்தீர்மானத்தால் ஒதுக்கப்பட்ட பணங்களிலிருந்து செலவழிக்கப்பட்டுள்ள எவையேனும் பணத்தொகைகள், எல்லா நோக்கங்களுக்கும் தலைப்பு 361 திறைசேரிச் சேவைகள் திணைக்களத்தின் கீழ் காணப்படும் நிகழ்ச்சித்திட்டம் 3 இன் கீழ் செலவழிக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படல் வேண்டும்.

(இ) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாள்வரை செலவழிக்கப்படாதனவான அவ்வாறு குறித்தொதுக்கப்பட்ட எவையேனும் பணங்கள் எல்லா நோக்கங்களுக்கும், இச்சட்டத்தின் கீழ் உள்ள நேரொத்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் குறித்தொதுக்கப்பட்ட பணங்களில் சேர்த்துக் கொள்ளப்பட்டனவாகக் கருதப்படுதல் வேண்டும்;

(ஈ) அத்தீர்மானத்துக்கான இரண்டாவது அட்டவணையின் குறித்துரைக்கப்பெற்ற செயற்பாடுகள் தொடர்பில் 1995 சனவரி மாதம் 1 ஆம் திகதி தொடர்பான இச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதிக்கு நேர் முந்திய நாளில் முடிவடையும் காலப்பகுதியில் திரட்டிய நிதியத்திலிருந்து முற்பணமாக செலுத்தப்பட்ட எவையேனும் பணத்தொகைகள், எல்லா நோக்கங்களுக்கும், அத்தீர்மானத்தின் அதிகாரத்தின் கீழ் அவ்வாறு முற்பணமாக வழங்கப்பட்டனவாகக் கருதப்படாமல் இச்சட்டத்தின் அதிகாரத்தின் கீழ் முற்பணமாகச் செலுத்தப்பட்டனவாகக் கருதப்படுதல் வேண்டும்.

10. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை இருக்கும் சந்தர்ப்பத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

1995 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, இலங்கைக் கடன் தகவல் பணியகம் (திருத்தச்) சட்டம்

[1995, ஏப்ரில் மாதம் 27 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

1990 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, இலங்கைக் கடன் தகவல் பணியகச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

1. இச்சட்டம், 1995 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, இலங்கைக் கடன் தகவல் பணியகச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும். 1990 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, இலங்கைக் கடன் தகவல் பணியகச் சட்டத்தின் விரிவுப்பெயர், "பணியகத்தின் பங்குதாரர்களுக்கு அத்தகைய தகவலை ஏற்பாடு செய்வதற்குமாக" என்னும் சொற்களுக்குப் பதிலாக "பணியகத்தின் பங்குதாரர்களுக்கு அத்துடன் உடன் நிகழ்வாக அத்தகைய தகவல் எந்த எவரேனும் கடன்பெறுநருக்கு அல்லது உத்தேச கடன் பெறுநருக்கு தொடர்புடையதோ அத்தகைய எவரேனும் கடன் பெறுநருக்கு அல்லது உத்தேச கடன் பெறுநருக்கு வேண்டுகோளின்மீதும் அத்தகைய தகவலை ஏற்பாடு செய்வதற்கும்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

3. முதன்மைச் சட்டவாக்கதின் 6 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகிறது

"பணியகத்தின் பணிகள்.

6. பணியகத்தின் பணிகள் பொருளாதாரத்தின் எல்லா துறைகளுக்கும் குறிப்பாக ஒழுங்குமுறை சாராத துறைக்கும் கடன் விநியோகத்துக்கு வசதியளிக்கும் நோக்குடன் –

(1) கடன் நிறுவனங்களின் கடன் பெறுவோர், மற்றும் உத்தேச கடன் பெறுவோர் மீதான வியாபார, கடன் வழங்கும் மற்றும் நிதிசார் தகவலைச் சேர்த்தலும் ஒன்றிணைத்தலும் ;

(2) கடன் வழங்கும் நிறுவனங்களான பணியகத்தின் பங்குதாரர்களுக்கும், உடன்நிகழ்வாக தகவல் எந்த கடன் பெறுநர்கள் அத்துடன் உத்தேச கடன் பெறுநர்களுக்குத் தொடர்புடையதோ அந்த கடன் பெறுநர்களுக்கும் அல்லது உத்தேச கடன் பெறுநர்களுக்கும், வேண்டுகோளின்பேரில் கடன் தகவல் கொடுத்துதவுதல்;

(3) இலங்கையில் ஒரு கடன்வீத முறையை தாபித்தல், கடன் வீதத்தைப் பொறுப்பேற்று ஏதேனும் வெளிநாட்டு, உள்நாட்டு முகவராண்மைகளுக்கு அத்தகைய கடன் வீதத்தை விற்பனை செய்தல்; அத்துடன்

(4) கடன் வழங்கும் நிறுவனங்களான பணியகத்தின் பங்குதாரர்களுக்காக ஆராய்ச்சிக் கருத்திட்டங்களை பொறுப்பேற்றல்."

4. முதன்மைச் சட்டவாக்கதின் 7 ஆம் பிரிவு பின்வருமாறு இத்தால் திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (அ), (ஆ), (இ), (ஈ) என்னும் பந்திகளை நீக்கிவிட்டு அவற்றிற்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன் மூலம் :-

"(அ) கடன் வழங்கும் நிறுவனங்களிடமிருந்து கடன் பெறுவோர் மீது ஒரு தரவு வங்கியை பேணுதல்;

(ஆ) கடன் வழங்கும் நிறுவனங்களின் கடன் பெறுநர்கள் அல்லது உத்தேச கடன் பெறுநர்களின் வியாபார, கடன், நிதிசார் தகவலை சேகரித்தலும், ஒன்றிணைத்தலும் ;

(இ) அவ்வாறு சேகரிக்கப்பட்ட தகவலை களஞ்சியப்படுத்தல்;

(ஈ) (i) பணியகத்தின் பங்குதாரர்களுக்கு இரகசியமாக ;

(ii) பணியகத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதிகளுக்கும், நிபந்தனைகளுக்கும் அமைவாக அத்தகைய தகவல் எந்த ஒரு கடன் பெறுநருக்கு அல்லது உத்தேச கடன்பெறுநருக்கு பணியகத்தின் ஒரு பங்குதாரரினால்;

வேண்டுகோளின்பேரில் கடன் தகவலைக் கொடுத்துதவுவதற்கும் அத்தகைய தகவல் எந்தப் படிவங்களில் கொடுத்துதவப்பட வேண்டுமென விதித்துரைப்பதற்கும்"

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவு, அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

"(4) உட்பிரிவு (3) இன் கீழ் பங்குகளைப் பிரித்தொதுக்குவதற்கு அல்லது மாற்றுவதற்கு அங்கீகாரமளிக்கும்போது, பணச்சபையானது, பணியகத்தின் வழங்கப்பட்ட பங்கு மூலதனத்தின் ஆகக்குறைந்தது முப்பத்தொரு நூற்றுவீதத்தை தான் வைத்திருப்பதனை உறுதிப்படுத்திக்கொள்ளுவதற்கு முயலவேண்டும்."

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

"(1) பணியகமானது, காலத்துக்குக் காலம் ஆறு மாதங்களை விஞ்சாத காலப்பகுதிகளுக்கு, மத்திய வங்கியிலிருந்து அல்லது கடன் வழங்கும் நிறுவனங்களிலிருந்து பணத்தொகைகளைக் கடனாகப் பெறலாம்".

7. பின்வரும் புதிய பிரிவு, 16 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்னர், இத்தால் உட்புகுத்தப்படுகிறது என்பதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 16அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்.

"சபை பங்கிலாபங்களை வெளிப்படுத்தல்"

16அ. சபையானது ஏதேனும் ஆண்டுக்கான பணியகத்தின் தேறிய இலாபத்திலிருந்து, சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான, அத்தகைய தொகையினதான பங்கிலாபங்களை வெளிப்படுத்தலாம்".

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :-

"கணக்காய்வு"

18. (1) சபை பணியகத்தின் கணக்குகளை கணக்காய்வு செய்வதற்கு தகைமைபெற்ற ஒரு கணக்காய்வாளர் அல்லது கணக்காய்வாளர்களை ஆண்டுதோறும் நியமித்தல் வேண்டும்.

(2) அடுத்துவரும் ஆண்டின் யூன் மாதம் முப்பதாம் திகதிக்கு முன்னர் (1) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட கணக்காய்வாளரினால், ஒவ்வொரு ஆண்டுக்கான பணியகத்தின் கணக்குகளையும் சபை கணக்காய்வு செய்யச் செய்வித்தல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட கணக்காய்வாளர் பணியகத்தின் கணக்குகளைப் பரிசோதனைசெய்து ஐந்தொகையின் செம்மையை நிச்சயப்படுத்துதல் வேண்டுமென்பதுடன்,

(அ) அவருக்குத் தேவைப்பட்ட எல்லாத் தகவல்களையும் விளக்கவுரைகளையும் தாம் பெற்றாரா அல்லவா எனவும்; அத்துடன்

(ஆ) அறிக்கையில் குறிப்பீடு செய்யப்பட்ட ஐந்தொகையும் கணக்குகளும் பணியகத்தின் அலுவல்கள்பற்றிய உண்மையானதும் செம்மையானதுமான நோக்கை வெளிக்காட்டுவதற்கு முறையாக தயாரிக்கப்பட்டனவா எனவும்;

குறிப்பிடுகின்ற அறிக்கையொன்றைக் கொடுத்துதவுதலும் வேண்டும்.

(4) கணக்காய்வாளரின் அறிக்கை சபைக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

(5) இப்பிரிவில் "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது –

(அ) இலங்கையின் வரைவுபெற்ற கணக்காளர் நிறுவனத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினராகவிருந்து, கணக்காளராகத் தொழில் புரிவதற்கு அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றை வைத்திருப்பவரான ஒரு தனியாள் என்று பொருளாகும்; அல்லது

(ஆ) அதன் வதிவுள்ள பங்காளர்கள் ஒவ்வொருவரும், இலங்கையின் வரைவுபெற்ற கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினராகவிருந்து கணக்காளராகத் தொழில்புரிவதற்கு அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றை வைத்திருக்கின்ற கணக்காளர் குழுமம் எனப் பொருள்படும்".

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :–

"அமைச்சருக்கு அனுப்பப்பட வேண்டிய ஆவணங்கள்

19. சபையானது, ஏதேனும் ஆண்டு தொடர்பில், 18 ஆம் பிரிவின்கீழ் கணக்காய்வாளரின் அறிக்கை கிடைக்கப்பெற்றதும், அமைச்சருக்கும் எல்லா பங்குதாரர்களுக்கும் அந்த ஆண்டுதொடர்பான பின்வரும் ஆவணங்களுள் ஒவ்வொன்றினதும் பிரதியொன்றை அனுப்பிவைக்கச் செய்தல் வேண்டும் :–

(அ) கணக்காய்வாளரின் அறிக்கை;

(ஆ) ஐந்தொகை;

(இ) இலாப, நட்டக் கணக்கு ;

(ஈ) அவ்வாண்டிற்கான பணியகத்தின் வேலைபற்றிய கணக்கொன்றைக் கொடுக்கும் அத்தகைய சபைத் தவிசாளரின் அறிக்கை.

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவு, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் "பங்காளரின் வேண்டுகோளின்பேரில் பணியகத்தின் ஒரு பங்குதாரரான கடன்வழங்கு நிறுவனமொன்றுக்குத்தவிர அல்லது" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அத்தகைய பங்காளரின் வேண்டுகோளின்பேரில் பணியகத்தின் ஒரு பங்குதாரரான கடன் வழங்கு நிறுவனமொன்றுக்கு தவிர அத்துடன் உடன் நிகழ்வாக, அத்தகைய தகவல் எந்த எவரேனும் கடன் பெறுநருக்கு அல்லது உத்தேச கடன் பெறுநருக்கு தொடர்புடையதோ அத்தகைய எவரேனும் கடன் பெறுநருக்கு அல்லது உத்தேச கடன்பெறுநருக்கு தவிர" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

11. பின்வரும் பிரிவு, 25 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்னர் இத்தால் உட்புகுத்தப்படுகிறது என்பதுடன் முதன்மைச் சட்டவாக்கத்தின் 25அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :-

"ஏதேனும் கடன்வழங்கு நிறுவனத்தினால் இச்சட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கான பாதுகாப்பு.

25அ. வேறு ஏதேனும் சட்டத்திலுள்ள எது எப்படியிருப்பினும் கடன் வழங்கும் நிறுவனம் எதுவும், இச்சட்டத்தினால் அத்தகைய கடன் வழங்கும் நிறுவனத்தின்மீது சுமத்தப்பட்ட அல்லது குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் கடமையை அல்லது பணியைப் புரியும் அல்லது நிறைவேற்றும் நோக்கங்களுக்காக அல்லது அத்தகைய கடன் வழங்கும் நிறுவனத்திற்கு பணியகத்தால் கொடுத்து உதவப்பட்ட ஏதேனும் தகவலின் நம்பிக்கையின்மீது அத்தகைய கடன் வழங்கும் நிறுவனத்தினால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யாதுவிடப்பட்ட ஏதேனும் செயல் அல்லது காரணத்தினால் எவரேனும் ஆளினால் உறப்பட்ட அல்லது ஏற்பட்ட அல்லது உறப்பட்டதாக அல்லது ஏற்பட்டதாகச் சார்த்துரைக்கப்பட்ட ஏதேனும் இழப்பு அல்லது நட்டம் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தில் ஏதேனும் வழக்கு அல்லது வழக்கு நடவடிக்கைக்கு ஆளாதல் அல்லது அமைந்ததாதல் ஆகாது."

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவு அப்பிரிவின் நாலாம் உட்பிரிவில் "27 (1) (அ) அல்லது (ஆ) என்னும் பிரிவின்கீழ் தவறொன்று புரியப்பட்ட" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக "உட்பிரிவு (1) (அ) அல்லது (ஆ) வின் கீழ் தவறொன்று புரியப்பட்ட" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

13. முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவு" கடன் வழங்கும் நிறுவனம்" என்னும் வரைவிலக்கணத்தில் அந்த வரைவிலக்கணத்தின் இறுதியில் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

"(எ) கசெற்றில் வெளியிடப்பட்ட கட்டளையின்மூலம், அந்த நிறுவனத்தின் உறுதியான நிதி நிலைமையை கவனத்திற்கெடுத்து நிதியென்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரினால் வெளியிடப்பட்ட கடன் ஏற்பாடு செய்வதற்கான ஏதேனும் வேறு நிறுவனம் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக கடன் வழங்கும் நிறுவனம் ஒன்றாதல் வேண்டும்".

14. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

–

1995 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, பாதுகாப்பு அறவீடு (திருத்தச்) சட்டம்

[1995. ஜூன் மாதம் 27 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்துப்பட்டது.]

1991 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்கப் பாதுகாப்பு அறவீட்டுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

1. இச்சட்டம் 1995 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, பாதுகாப்பு அறவீடு (திருத்தச்) சட்டமென எடுத்துக்காட்டப்படலாம்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1991 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்கப் பாதுகாப்பு அறவீட்டுச் சட்டத்தின் 4 ஆம் பிரிவு, அப்பிரிவின் (ஈ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

"(ஈ) 1994 சனவரி 1 ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் ஆனால் 1995 யூலை 1 ஆம் திகதிக்கு முன்னரான ஒவ்வொரு காலாண்டிற்கும் -

(i) அக்காலாண்டின் முதலாவது மாதத்திற்கு அவ்வாளின் மொத்த விற்பனை வரவின் மூன்றரைச் சதவீதத்துக்குச் சமனான தொகையொன்றை அக்காலாண்டின் இரண்டாம் மாதத்தின் பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர்;

(ii) அக்காலாண்டின் இரண்டாம் மாத்தத்திற்கு அவ்வாளின் மொத்த விற்பனை வரவின் மூன்றரைச் சதவீதத்திற்குச் சமனான தொகையொன்றை அக்காலாண்டின் மூன்றாம் மாதத்தின் பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் ; அத்துடன்

(iii) அக்காலாண்டிற்கு அத்தகைய ஆளினால் செலுத்தப்படற்பாலதான அறவீட்டின் தொகை, இப்பந்தியின் (i) ஆம் (ii) ஆம் உட்பந்திகளின் ஏற்பாடுகளுக்கு இணங்க அவரால் செலுத்தப்படும் தொகைகளின் கூட்டுமொத்தத்தால் குறைக்கப்பட்டு, அக்காலாண்டின் முடிவை உடனடுத்த மாதத்தின் பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர்.

(உ) 1995, யூலை 1 ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்குகின்ற ஆனால் 1996 சனவரி 1 ஆம் திகதிக்கு முன்னரான ஒவ்வொரு காலாண்டிற்கும் -

(i) அக்காலாண்டின் முதலாவது மாதத்திற்கு அவ்வாளின் மொத்த விற்பனை வரவின் நாலரைச் சதவீதத்திற்குச் சமனான தொகையொன்றை அக்காலாண்டின் இரண்டாம் மாதத்தின் பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர்;

(ii) அக்காலாண்டின் இரண்டாம் மாதத்திற்கு அவ்வாளின் மொத்த விற்பனை வரவின் நாலரைச் சதவீதத்திற்குச் சமனான தொகையொன்றை அக்காலாண்டின் மூன்றாம் மாதத்தின் பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர்;

(iii) அக்காலாண்டிற்கு அத்தகைய ஆளினால் செலுத்தப்படற்பாலதான அறவீட்டின் தொகை, இப்பந்தியின் (i) ஆம், (ii) ஆம் உட்பந்திகளின் ஏற்பாடுகளுக்கிணங்க அவரால் செலுத்தப்படும் தொகைகளின் கூட்டுமொத்தத்தால் குறைக்கப்பட்டு, அக்காலாண்டின் முடிவை உடனடுத்த மாதத்தின் பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர்."

3. முதன்மைச் சட்டவாக்கத்துக்கான அட்டவணை இத்தால் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் அட்டவணை இடப்படுகின்றது :-

"அட்டவணை (பிரிவு 3)

காலாண்டு	வீதம்
1992, சனவரி 1 ஆம் திகதியன்று தொடங்கும் காலாண்டுக்கு	1 சதவீதம்
1992, ஏப்ரில் 1 ஆம் திகதியன்று தொடங்கும் காலாண்டுக்கு	2.3 சதவீதம்
1992, யூலை 1 ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்குகின்ற ஆனால் 1994, சனவரி 1 ஆம் திகதிக்கு முன்னரான காலாண்டு எதற்கும்	3 சதவீதம்
1994, சனவரி 1 ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்குகின்ற ஆனால் 1995, யூலை 1 ஆம் திகதிக்கு முன்னரான காலாண்டு எதற்கும்	3.5 சதவீதம்
1995, யூலை 1 ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்குகின்ற ஆனால் 1996 சனவரி 1 ஆம் திகதிக்கு முன்னரான காலாண்டு எதற்கும்	4.5 சதவீதம்

4. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையில் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

1995 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க வருமானவரி மீதான மிகைவரி (திருத்தச்) சட்டம்

[1995, ஜூலை மாதம் 25 ஆம் திகதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

1989 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, வருமானவரி மீதான மிகைவரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

1. இச்சட்டம் 1995 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, வருமானவரி மீதான மிகைவரி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும் 1989 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க வருமானவரி மீதான மிகைவரிச் சட்டத்திற்கான விரிவுப்பெயர் "முறையே 1989 ஏப்ரில் 1 ஆம் திகதியன்றும் 1990 ஏப்ரில் 1 ஆம் திகதியன்றும் 1991 ஏப்ரில் 1 ஆம் திகதியன்றும் 1992 ஏப்ரில் 1 ஆம் திகதியன்றும் 1993 ஏப்பிரில் 1 ஆம் திகதியன்றும் தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டுகளுக்கான" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "முறையே 1989 ஏப்ரில் 1 ஆம் திகதியன்றும் 1990 ஏப்ரில் 1 ஆம் திகதியன்றும் 1991 ஏப்ரில் 1 ஆம் திகதியன்றும் 1992 ஏப்ரில் 1 ஆம் திகதியன்றும் 1993 ஏப்ரில் 1 ஆம் திகதியன்றும் அத்துடன் 1995 ஏப்ரில் 1 ஆம் திகதியன்றும் தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டுகளுக்கான" என்னும் சொற்களையும் இலக்கங்களையும்: இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவு, "ஆனால் 1995 மார்ச் 31 ஆந் திகதிகளுக்குப் பிந்தாமல் முடிவடைகின்றன" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "ஆனால் 1996 மார்ச் 31 ஆம் திகதிக்குப் பிந்தாமல் முடிவடைகின்ற" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (v) என்னும் பந்தியில் "1993 ஏப்ரில் 1 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னரும், அத்துடன்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக "1993 ஏப்ரில் 1 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னரும்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்:

(2) அப்பிரிவின் (vi) ஆம் பந்தியில் '1994 நவெம்பர் 15 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னரும்," என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக "1994 நவெம்பர் 15 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னரும்: அத்துடன்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம்: அத்துடன்

(3) அப்பிரிவின் (vi) ஆம் பந்தியை உடனடுத்து பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன் மூலம் :-

(vii) 1995 ஏப்பிரில் 1 ஆம் திகதியன்று தொடங்கின்ற இயைபான ஆண்டுக்கு அவரால் செலுத்தப்படற்பாலதான மிகைவரித் தொகையின்

(அ) ஐம்பது சதவீதத்துக்குக் குறையாத தொகையை 1995 ஆகஸ்ட் 15 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னரும்: அத்துடன்

(ஆ) மிகுதியை 1995 நவெம்பர் 15 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னரும்."

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (2) என்னும் பந்தியில் "ஊதியத்திலிருந்து ஏழரை சதவீதத்தையும்," அத்துடன் என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஊதியத்திலிருந்து ஏழரை சதவீதத்தையும்," என்னும் சொற்களையும் இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (ஊ) என்னும் பந்தியில் "கொடுபடற்பாலதான ஊதியத்திலிருந்து ஏழரைச் சதவீதத்தையும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கொடுபடற்பாலதான ஊதியத்திலிருந்து ஏழரைச் சதவீதத்தையும்; அத்துடன்", என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(3) அப்பிரிவின் (ஊ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்;

"(எ) மேற்படி ஏப்பிரில் 1 ஆம் திகதியன்று தொடங்குகின்ற இயைபான ஆண்டுக்கு -

அவ்வூழியரின் ஊதியத்திலிருந்து அவ்வாண்டிற்குக் கழிக்கப்படற்பாலதான மொத்த வருமானவரியிலிருந்து

(i) அத்தகைய ஊழியருக்கு 1995 யூலை மாதத்திற்குக் கொடுபடற்பாலதான ஊதியத்திலிருந்து 7 1/2 சதவீதத்தையும்; அத்துடன்

(ii) அத்தகைய ஊழியருக்கு 1995 ஒக்டோபர் மாதத்திற்குக் கொடுபடற்பாலதான ஊதியத்திலிருந்து 7 1/2 சதவீதத்தையும்".

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் அவ்வுட்பிரிவிற்கான காப்புவாசகத்தின் (ii) ஆம் பந்தியை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

"(ii) இச்சட்டத்தின்கீழ் இயைபான ஆண்டொன்றுக்கு மிகைவரி செலுத்துவதற்கு ஆளாகின்றவரான எவரேனும் ஆள் -

(அ) 1989 ஏப்பிரில் 1 ஆம் திகதியன்று தொடங்குகின்ற இயைபான ஆண்டிற் உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் கீழ் 1989 ஏப்பிரில் 4 ஆம் திகதியன்று தொ வரி மதிப்பீட்டாண்டிற்கு அவரால் செலுத்தப்படற்பாலதான வருமானவ

(i) 7 1/2 சதவீதத்துக்குக் குறையாத தொகையையும் 1989 ஆகஸ் திகதியன்று அல்லது அதற்கு முன்னரும்; அத்துடன்

(ii) 7 1/2 சதவீதத்திற்குக் குறையாத தொகையையும் 1989 திகதியன்று அல்லது அதற்கு முன்னரும்;

(ஆ) 1990 ஏப்பிரில் 1 ஆம் திகதியன்று தொடங்குகின்ற இயை

உண்ணாட்டரசிறைச் சட்டத்தின்கீழ் 1989 ஏப்பிரில் 1 வரிமதிப்பீட்டாண்டிற்கு அவரால் செலுத்தப்ப

(i) 7 1/2 சதவீதத்திற்குக் குறையாத அல்லது அதற்கு முன்னரும்;

(ii) 7 1/2 சதவீதத்திற்குக் குறைய அல்லது அதற்கு முன்

(இ) 1991 ஏப்பிரில் 1 ஆம் திகதியன்று தொடங்கும் இயைபான ஆண்டிற்கு –

உண்ணாட்டரசிறைச் சட்டத்தின்கீழ் 1990 ஏப்பிரில் 1 ஆம் திகதியன்று தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டிற்கு அவரால் செலுத்தப்படற்பாலதான வருமானவரியின்

(i) 7 1/2 சதவீததத்திற்குக் குறையாத தொகையை 1991 ஆகஸ்ட் 15 திகதியன்று அல்லது அதற்கு முன்னரும்;

(ii) 7 1/2 சதவீதத்திற்குக் குறையாத தொகையை 1991 நவம்பர் 15 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னரும்;

(ஈ) 1992 ஏப்பிரில் 1 ஆம் திகதியன்று தொடங்குகின்ற இயைபான ஆண்டிற்கு –

உண்ணாட்டரசிறைச் சட்டத்தின்கீழ் 1991 ஏப்பிரில் 1 ஆம் திகதியன்று தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டிற்கு அவரால் செலுத்தப்படற்பாலதான வருமானவரியின்

(i) 7 1/2 சதவீதத்திற்குக் குறையாத தொகையை 1992 ஏப்பிரில் 1 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னரும்;

(ii) 7 1/2 சதவீதத்திற்குக் குறையாத தொகையை 1992 நவம்பர் 15 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னரும்;

(உ) 1992 ஏப்பிரில் 1 ஆம் திகதியன்று தொடங்குகின்ற இயைபான ஆண்டிற்கு

உண்ணாட்டரசிறைச் சட்டத்தின்கீழ் 1992 ஏப்பிரில் 1 ஆம் திகதியன்று தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டிற்கு அவரால் செலுத்தப்படற்பாலதான வருமானவரியின் –

(i) 7 1/2 சதவீதத்திற்குக் குறையாத தொகையை 1993 ஆகஸ்ட் 15 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னரும்;

(ii) 7 1/2 சதவீதத்திற்குக் குறையாத தொகையை 1993 நவம்பர் 15 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னரும்;

(ஊ) 1994 ஏப்பிரில் 1 ஆம் திகதியன்று தொடங்கும் இயைபான ஆண்டிற்கு

உண்ணாட்டரசிறைச் சட்டத்தின்கீழ் 1993 ஏப்ரில் 1 ஆம் திகதியன்று தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டிற்கு அவரால் செலுத்தப்படற்பாலதான வருமான வரியின் –

7 1/2 சதவீதத்திற்குக் குறையாத தொகையை 1994 ஆகஸ்ட் 15 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னரும்;

(எ) 1995 வீதத்திற்குக் குறையாத தொகையை 1994 நவம்பர் 15 ஆம் திகதியன்று உண்ணாற்கு முன்னரும்;

வரிமதிப்பீ யென்று தொடங்குகின்ற இயைபான ஆண்டிற்கு –

(i) 7 1/2 சத 1994 ஏப்ரில் 1 ஆம் திகதியன்று தொடங்குகின்ற அல்லது அ செலுத்தப்படற்பாலதான வருமான வரியின் –

யை 1995 ஆகஸ்ட் 15 ஆம் திகதியன்று

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (2) என்னும் பந்தியில் "ஊதியத்திலிருந்து ஏழரை சதவீதத்தையும்," அத்துடன் என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஊதியத்திலிருந்து ஏழரை சதவீதத்தையும்," என்னும் சொற்களையும் இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (ஊ) என்னும் பந்தியில் "கொடுபடற்பாலதான ஊதியத்திலிருந்து ஏழரைச் சதவீதத்தையும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கொடுபடற்பாலதான ஊதியத்திலிருந்து ஏழரைச் சதவீதத்தையும்; அத்துடன்", என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(3) அப்பிரிவின் (ஊ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்

"(எ) 1995 ஏப்பிரில் 1 ஆம் திகதியன்று தொடங்குகின்ற இயைபான ஆண்டுக்கு -

அவ்வூழியரின் ஊதியத்திலிருந்து அவ்வாண்டிற்குக் கழிக்கப்படற்பாலதான மொத்த வருமானவரியிலிருந்து

(i) அத்தகைய ஊழியருக்கு 1995 யூலை மாதத்திற்குக் கொடுபடற்பாலதான ஊதியத்திலிருந்து 7 1/2 சதவீதத்தையும்; அத்துடன்

(ii) அத்தகைய ஊழியருக்கு 1995 ஒக்டோபர் மாதத்திற்குக் கொடுபடற்பாலதான ஊதியத்திலிருந்து 7 1/2 சதவீதத்தையும்".

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் அவ்வுட்பிரிவிற்கான காப்புவாசகத்தின் (ii) ஆம் பந்தியை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

"(ii) இச்சட்டத்தின்கீழ் இயைபான ஆண்டொன்றுக்கு மிகைவரி செலுத்துவதற்கு ஆளாகின்றவரான எவரேனும் ஆள் -

(அ) 1989 ஏப்ரில் 1 ஆம் திகதியன்று தொடங்குகின்ற இயைபான ஆண்டிற்கு உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் கீழ் 1989 ஏப்பிரில் 4 ஆம் திகதியன்று தொடங்கும் வரி மதிப்பீட்டாண்டிற்கு அவரால் செலுத்தப்படற்பாலதான வருமானவரியின்

(i) 7 1/2 சதவீதத்துக்குக் குறையாத தொகையையும் 1989 ஆகஸ்ட் 15 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னரும்; அத்துடன்

(ii) 7 1/2 சதவீதத்திற்குக் குறையாத தொகையையும் 1989 நவம்பர் 15 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னரும்;

(ஆ) 1990 ஏப்ரில் 1 ஆம் திகதியன்று தொடங்குகின்ற இயைபான ஆண்டிற்கு -

உண்ணாட்டரசிறைச் சட்டத்தின்கீழ் 1989 ஏப்ரில் 1 ஆம் திகதியன்று தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டிற்கு அவரால் செலுத்தப்படற்பாலதான வருமானவரியின் -

(i) 7 1/2 சதவீதத்திற்குக் குறையாத தொகையை 1990 ஆகஸ்ட் 15 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னரும்;

(ii) 7 1/2 சதவீதத்திற்குக் குறையாத தொகையை 1990 நவம்பர் 15 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னரும்;

(இ) 1991 ஏப்பிரில் 1 ஆம் திகதியன்று தொடங்கும் இயைபான ஆண்டிற்கு –

உண்ணாட்டரசிறைச் சட்டத்தின்கீழ் 1990 ஏப்ரில் 1 ஆம் திகதியன்று தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டிற்கு அவரால் செலுத்தப்படற்பாலதான வருமானவரியின்

(i) 7 1/2 சதவீததத்திற்குக் குறையாத தொகையை 1991 ஆகஸ்ட் 15 திகதியன்று அல்லது அதற்கு முன்னரும்;

(ii) 7 1/2 சதவீதத்திற்குக் குறையாத தொகையை 1991 நவம்பர் 15 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னரும்;

(ஈ) 1992 ஏப்ரில் 1 ஆம் திகதியன்று தொடங்குகின்ற இயைபான ஆண்டிற்கு –

உண்ணாட்டரசிறைச் சட்டத்தின்கீழ் 1991 ஏப்ரில் 1 ஆம் திகதியன்று தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டிற்கு அவரால் செலுத்தப்படற்பாலதான வருமானவரியின்

(i) 7 1/2 சதவீதத்திற்குக் குறையாத தொகையை 1992 ஏப்பிரில் 1 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னரும்;

(ii) 7 1/2 சதவீதத்திற்குக் குறையாத தொகையை 1992 நவம்பர் 15 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னரும்;

(உ) 1993 ஏப்பிரில் 1 ஆம் திகதியன்று தொடங்குகின்ற இயைபான ஆண்டிற்கு

உண்ணாட்டரசிறைச் சட்டத்தின்கீழ் 1992 ஏப்பிரில் 1 ஆம் திகதியன்று தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டிற்கு அவரால் செலுத்தப்படற்பாலதான வருமானவரியின் –

(i) 7 1/2 சதவீதத்திற்குக் குறையாத தொகையை 1993 ஆகஸ்ட் 15 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னரும்;

(ii) 7 1/2 சதவீதத்திற்குக் குறையாத தொகையை 1993 நவம்பர் 15 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னரும்;

(ஊ) 1994 ஏப்பிறில் 1 ஆம் திகதியன்று தொடங்கும் இயைபான ஆண்டிற்கு உண்ணாட்டரசிறைச் சட்டத்தின்கீழ் 1993 ஏப்ரில் 1 ஆம் திகதியன்று தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டிற்கு அவரால் செலுத்தப்படற்பாலதான வருமான வரியின் –

(i) 7 1/2 சதவீதத்திற்குக் குறையாத தொகையை 1994 ஆகஸ்ட் 15 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னரும்;

(ii) 7 1/2 சத வீதத்திற்குக் குறையாத தொகையை 1994 நவம்பர் 15 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னரும்;

(எ) 1995 ஏப்ரில் 1 ஆம் திகதியன்று தொடங்குகின்ற இயைபான ஆண்டிற்கு –

உண்ணாட்டரசிறைச் சட்டத்தின்கீழ் 1994 ஏப்ரில் 1 ஆம் திகதியன்று தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டிற்கு அவரால் செலுத்தப்படற்பாலதான வருமான வரியின் –

(i) 7 1/2 சதவீதத்திற்குக் குறையாத தொகையை 1995 ஆகஸ்ட் 15 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னரும்;

(ii) 7 1/2 சத வீதத்திற்குக் குறையாத தொகையை 1994 நவம்பர் 15 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னரும்.

அத்தகைய மிகைவரியாகச் செலுத்துமிடத்து, அத்தகைய ஆள், அந்த இயைபான ஆண்டிற்கு அவரால் செலுத்தப்பட்ட தொகையைவிட அவரால் செலுத்தப்படற்பாலதான மிகைவரியின் விஞ்சுதொகையை 1989 ஏப்ரில் 1 ஆம் திகதியன்று தொடங்குகின்ற இயைபான ஆண்டின் விடயத்தில் 1990 நவம்பர் 30 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர்;

1990 ஏப்ரில் 1 ஆம் திகதியன்று தொடங்குகின்ற இயைபான ஆண்டின் விடயத்தில் 1991 நவம்பர் 30 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர்;

1991 ஏப்ரில் 1 ஆம் திகதியன்று தொடங்குகின்ற இயைபான ஆண்டின் விடயத்தில் 1992 நவம்பர் 30 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர்;

1992 ஏப்ரில் 1 ஆம் திகதியன்று தொடங்குகின்ற இயைபான ஆண்டின் விடயத்தில் 1993 நவம்பர் 30 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர்;

1993 ஏப்பிரில் 1 ஆம் திகதியன்று தொடங்குகின்ற இயைபான ஆண்டின் விடயத்தில் 1994 நவம்பர் 30 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர்;

1994 ஏப்ரில் 1 ஆம் திகதியன்று தொடங்குகின்ற இயைபான ஆண்டின் விடயத்தில் 1995 நவம்பர் 30 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர்; அத்துடன்

1995 ஏப்ரில் 1 ஆம் திகதியன்று தொடங்குகின்ற இயைபான ஆண்டின் விடயத்தில் 1996 நவம்பர் 30 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்தினால் அத்தகைய ஆள், 3 ஆம் பிரிவின் கீழ் எந்தக் கொடுப்பனவுகளைச் செய்யுமாறு அவர் தேவைப்படுத்தப்படுகின்றாரோ அந்தக் கொடுப்பனவுகள் தொடர்பில் ஏதேனும் தண்டத்திற்கு ஆளானவராதல் ஆகாது."

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 8ஆம் பிரிவு, "வருமானவரி" என்பதன் வரைவிலக்கணத்தின் (1) ஆம் பந்தியின் (ஆ) என்னும் உட்பந்தியை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாக பின்வரும் உட்பந்தியை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

"(ஆ) முறையே 1993 ஏப்ரில் 1 ஆம் திகதியும் 1994 ஏப்ரில் 1 ஆம் திகதியும் அத்துடன் 1995 ஏப்ரில் 1 ஆம் திகதியும் தொடங்குகின்ற இயைபான ஆண்டிற்கு, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் கீழ் அக்கம்பனியால் அந்த இயைபான ஆண்டிற்கு அச்சட்டத்தின்

(i) பிரிவு 33 என்பதன் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் அவ்வாண்டிற்கு அக்கம்பனியால் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் வருமான வரியினதும்; அத்துடன்

(ii) பிரிவு 82 என்பதன் அல்லது பிரிவு 83 என்பதன்கீழ் அவ்வாண்டிற்கு அளிக்கப்பட்ட ஏதேனும் நிவாரணத்தினதும் அத்துடன் 85அ என்னும் பிரிவின்கீழ் அனுமதிக்கப்பட்ட ஏதேனும் கழிப்பனவினதும் கூட்டுமொத்தத் தொகையை அதிலிருந்து கழித்தபின்னர்

செலுத்தப்படற்பாலதான வருமானவரி என்று பொருள்படும்"

8. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையில் ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையை மேலோங்கி நிற்றல் வேண்டும்.

1995 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சான்று (சிறப்பேற்பாடுகள்) சட்டம்

[1995. ஜூலை மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

குடியியல், குற்றவியல் நடவடிக்கைகள் கணனிகள் மூலம் சமர்ப்பிக்கப்படும் கூற்றுக்களில் அடங்கியுள்ள கட்புல, செவிப்புலப் பதிவுகளினதும் தகவலினதும் ஏல்தகமைக்கு ஏற்பாடு செய்வதற்கும் அத்துடன் அதனோடு தொடர்புடைய அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.

1. இச்சட்டம், 1995 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சான்று (சிறப்பேற்பாடுகள்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. சான்ஜக் கட்டளைச் சட்டத்தில் அல்லது ஏதேனும் வேறு எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறு இருப்பினும், இதன்கண் ஏற்பாடு செய்யப்பட ஏதேனும் விடயம் தொடர்பில் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

3. (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளைப் பிரயோகிப்பதிலிருந்து எழுகின்றதும் அல்லது அதற்கு இடைநேர்விளைவானதும் இச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிராததுமான ஏதேனும் விடயத்தைத் தீர்மானிப்பதற்கென சான்றுக் கட்டளைச் சட்டத்தினது அல்லது ஏதேனும் வேறு சட்டத்தினது ஏற்பாடுகள், தோதானவிடத்தும் விடயத்தின் நீதி தேவைப்படுத்துகின்றவாறான திரிபுகளுடனும் ஏற்றுப் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்படாத எவையேனும் விடயங்களைத் தீர்மானிப்பதற்குச் சான்றுக் கட்டளைச் சட்டத்தின் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளைப் பிரயோகிக்கும் நோக்கத்திற்கென, சான்றுக் கட்டளைச் சட்டத்தில் அல்லது அத்தகைய வேறு சட்டத்தில் ஆவணங்கள் தொடர்பான அல்லது அதுபோன்ற ஒரு விடயத்தை ஆளுகின்ற ஏற்பாடுகள், நீதியின் நலன் தேவைப்படுத்துகின்றவாறான அத்தகைய பொருத்தமான திரிபுகளுடன் இச்சட்டத்தின்கீழ் ஏல்தக்கதான ஒரு பதிவு, மீளாக்கம் அல்லது கூற்று அல்லது வேறு சான்று விடயத்தில் ஏற்றுப் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்படாத எவையேனும் விடயங்களைத் தீர்மானிப்பதற்கும் மேற்கூறப்பட்டவாறாக சான்றுக் கட்டளைச் சட்டத்தின் அல்லது வேறு சட்டத்தின் ஏற்பாடுகளை ஏற்றுப் பிரயோகித்தல் தோதானதாக அல்லது நடைமுறைச் சாத்தியமானதாக இல்லாதவிடத்து, நீதிமன்றமானது, அதன் உள்ளார்ந்த தத்துவத்தைப் பிரயோகிக்கையில்:, நீதியின் நலன் தேவைப்படுத்துகின்றவாறான அத்தகைய கட்டளையை ஆக்குவதன்மூலம் அத்தகைய விடயத்தைத் தீர்மானிக்கலாம்.

பாகம் I
சமகாலப் பதிவுகள்

4. (1) ஒரு நிகழ்வின் நேரடி வாய்மொழிச் சான்று ஏல்தக்கதாகவிருக்கின்ற ஏதேனும் வழக்கு நடவடிக்கையில் –

(அ) இலத்திரன்வழி அல்லது பொறிமுறைவழிப் பயன்பாட்டால் பதிவு அல்லது மீளாக்கம் செய்யப்பட்டது.

(ஆ) இப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவிற்கமைய, பதிவு அல்லது மீளாக்கல் புலன்களால் உய்த்தறியக்கூடியதாகச் செய்வதற்கான அத்தகைய முறையில் இயக்கப்படக்கூடியது, வெளிக்காட்டப்படக்கூடியது அல்லது மீளாக்கம் செய்யக்கூடியது;

(இ) பதிவை அல்லது மீளாக்கத்தைச் செய்வதில் முக்கியமாகவிருந்த எல்லா நேரங்களிலும் விடயத்திற்கேற்ப பதிவை அல்லது மீளாக்கத்தைச் செய்வதற்குப் பயன்படுத்தப்பட்ட இயந்திரம் அல்லது உபாயம் முறையாகத் தொழிற்படுகிறது அல்லது அதுமுறையாகத் தொழிற்படவில்லையெனில் எவ்வகையில் அது முறையாகத் தொழிற்படாதிருக்கின்றதோ, அல்லது தொழிற்படவில்லையோ அவ்வகை, பதிவின் அல்லது மீளாக்கத்தின் செம்மையைப் பாதிக்கக் கூடியவாறான அத்தகைய தன்மையினதானதில்லை;

(ஈ) பதிவு அல்லது மீளாக்கம், அத்தகைய பதிவு அல்லது மீளாக்கம் செய்யப்படும்போது செய்யப்பட்ட பின்னர் எத்தன்மைத்தான எந்த முறையிலும் மாற்றப்படவில்லை அல்லது கைபோடப்படவில்லை, அல்லது அத்தகைய பதிவை அல்லது மீளாக்கத்தைச் செய்தபின்னர் எல்லா முக்கிய நேரங்களிலும் அது பாதுகாப்பான கட்டுக்காப்பில் வைக்கப்பட்டது அத்துடன் அத்தகைய கட்டுக்காப்பிலிருக்கும் போது அத்தகைய பதிவு அல்லது மீளாக்கம் மாற்றப்படுவதற்கு அல்லது கைபோடப்படுவதற்கான சாத்தியத்தைத் தடுப்பதற்குப் போதிய முற்காப்புகள் எடுக்கப்பட்டன,

எனக் காட்டப்பட்டால், அந்நிகழ்வைத் தாபிக்கக்கூடியதான அதன் ஏதேனும் சமகாலப் பதிவு அல்லது மீளாக்கம் அந்நிகழ்வின் சான்றாக ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்

(2) ஒராம் உட்பிரிவில் தரப்பட்டுள்ள நிபந்தனைகள் திருப்திப்படுத்தப்படுமாயின், பதியப்பெற்ற அல்லது மீளாக்கம் செய்யப்பட்ட நிகழ்வு எவரேனும் ஆளினால் சாட்சிப்படுத்தப்படினும் அல்லாவிடினும், அப்பதிவு அல்லது மீளாக்கம் அத்தகைய நிகழ்வின் சான்றாக ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

(3) ஒராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் பதிவை அல்லது மீளாக்கத்தை –

(அ) புலன்களினால் உய்த்தறியக்கூடியதாகச் செய்வதற்கான அத்தகைய முறையில் இயக்கச்செய்ய, வெளிக்கொணர அல்லது மீளாக்க முடியாதவிடத்து;

(ஆ) அவ்வாறு உய்த்தறியக்கூடியதாக ஆனால் ஒரு குறிப்பிட்ட அறிவியலில் பரீட்சயமில்லாத ஓர் ஆளுக்குப் புரியாததாகவிருக்குமிடத்து; அல்லது

(இ) அதன் மூலவடிவத்தில், அதை உய்த்தறியவும், சான்றாகப் பெறவும் வசதியாக இல்லாத அத்தகைய தன்மையினதாகவுள்ளவிடத்து;

நீதிமன்றமானது, புரியக்கூடியதும் புலன்களால் உய்த்தறியக்கூடியதுமான அத்தகைய பதிவின் அல்லது மீளாக்கத்தின் விடயத்துக்கேற்ப ஒரு சொல் மாற்றத்தை, மொழிபெயர்ப்பை மாற்றத்தை அல்லது உருமாற்றத்தைச் சான்றாக ஏற்றுக்கொள்ளதாக்கலாம்.

(4) ஏதேனும் தோதான சாதனத்தின் துணையுடன் அல்லது அத்துணையில்லாமல் அல்லது மனிதத் தலையீட்டுடன் அல்லது தலையீடில்லாமல், ஒரு எந்திரத்தால் அல்லது உபாயத்தால் அல்லது பல எந்திரங்களினால் அல்லது உபாயங்களினால் அல்லது ஏதேனும் இணைப்பில் வெவ்வேறு எந்திரங்களினால் அல்லது உபாயங்களினால் இலத்திரன் அல்லது பொறிமுறை வழிகளில் பயன்பாட்டினால்; பதிவு அல்லது மீளாக்கம் செய்யப்பட்டதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டம்

[1995, ஆகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

இலங்கைக் கணக்கீட்டு நியமங்களையும் இலங்கைக் கணக்காய்வு நியமங்களையும் தாபிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும்; இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபையைத் தாபிப்பதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அத்துடன் அவற்றின் இடை நேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.

1. இச்சட்டம், 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (1) (இதனகத்துப் பின்னர் "நிறுவகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பட்டயம்பெற்ற இலங்கைக் கணக்காய்வாளர் நிறுவகம், காலத்துக்குக் காலம், தொழில் முயற்சிகளின் கணக்குகளைத் தயாரிப்பதிலும் சமர்ப்பித்தலிலும் ஒரு சீரான, உயர் நியமத்தையும் பேணும் நோக்கத்துக்கு அவசியமாகக் கூடியவாறானவையும் (இதனகத்துப் பின்னர், "இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள்" எனக் குறிப்பீடு செய்யப்படுகின்றவையுமான) அத்தகைய கணக்கீட்டு நியமங்களைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் கடைப்பிடிக்கப்பட்ட இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள் கசற்றில் வெளியிடப்பட்டும் அத்தகைய வெளியீட்டுத் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் அல்லது அதில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய திகதியிலிருந்தும் அதன் பின்னரும் பயனுடையனவாகவும் வருதலும் வேண்டும்.

3. (1) நிறுவகமானது, காலத்துக்காலம், தொழில் முயற்சிகளினது கணக்குகளின் கணக்காய்வு நடாத்தப்படுவதனை ஆளுவதற்கு அவசியமாகக்கூடியவாறான (இதனகத்துப் பின்னர் "இலங்கைக் கணக்காய்வு நியமங்கள்" எனக் குறிப்பீடு செய்யப்படுகின்ற) தோதான கணக்காய்வு நியமங்களைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் கடைப்பிடிக்கப்பட்ட இலங்கைக் கணக்காய்வு நியமனங்கள் கசெற்றில் வெளியிடப்பட்டு அத்தகைய வெளியீட்டுத் திகதியிலிருந்தும் அதன்பின்னரும் அல்லது அதில் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய பிந்திய திகதியிலிருந்தும் அதன் பின்னரும் பயனுடையனவாக வருதல் வேண்டும்.

4. (1) நிறுவகமானது, அவசியமானபோதெல்லாம், இச்சட்டத்தின் கீழ் அதனால் கடைப்பிடிக்கப்பட்ட இலங்கைக் கணக்கீட்டு நியமங்களையும் இலங்கைக் கணக்காய்வு நியமங்களையும் மீளாய்வு செய்தலும், மாற்றுதலும், திருத்துதலும் வேண்டுமென்பதுடன், அத்தகைய மீளாய்வு செய்யப்பட்ட, மாற்றப்பட்ட அல்லது திருத்தப்பட்ட நியமங்களைக் கசெற்றில் வெளியிடுவித்தலும் வேண்டும்; அத்துடன் அத்தகைய மீளாய்வுகள், மாற்றங்கள் மற்றும் திருத்தங்கள் என்பன அத்தகைய மீளாய்வுகள் வெளியீட்டுத் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் அல்லது அதில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய திகதியிலிருந்தும் அதன் பின்னரும் பயனுடையனவாக வருதல் வேண்டும்.

(2) நிறுவகமானது, கசற்றில் வெளியிடப்படும் அறிவித்தல்மூலம் அல்லது அதற்குப் பிரசித்தம் கொடுப்பதற்குக் கருதப்பட்ட அத்தகைய வேறு முறையில் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களும் இலங்கைக் கணக்காய்வு நியமங்களும் பற்றியும் அவற்றுக்குச் செய்யப்பட்ட மீளாய்வுகள், மாற்றங்கள், மற்றும் திருத்தங்கள் என்பன பற்றியும் பொதுமக்களுக்கு அறிவித்தல் வேண்டும்.

5. இச்சட்டத்தின் 2 ஆம், 3 ஆம் பிரிவுகளின் கீழ் நிறுவகத்தினால் கடைப்பிடிக்கப்பட்ட நியமங்கள் (இதனகத்துப்பின்னர் "குறித்துரைக்கப்பட்ட தொழில் முயற்சிகள்" எனக் குறிப்பீடு செய்யப்படுபவையும், இச்சட்டத்துக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்படுபவையுமான எல்லாத் தொழில் முயற்சிகளுக்கும் ஏற்புடைத்தானதாதல் வேண்டும்.

6. (1) ஒவ்வொரு குறித்துரைக்கப்பட்ட தொழில் முயற்சியினதும் நிதிச் செயலாற்றுகையும் நிதி நிலைமையும் பற்றி உண்மையானதும் நியாயமானதுமான கருத்தை முன்வைக்கும் குறிக்கோளுடன், அத்தகைய தொழில் முயற்சியின் கணக்குகளை இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கிணங்க அதன் கணக்குகளைக் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்துவதற்கு எல்லா அவசிய நடவடிக்கைகளை எடுத்தலும் அதன் கணக்குகளை இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்தலும் கடமையாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாகச் செய்லாற்றுகின்ற ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட தொழில்முயற்சி இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாழியாதல் வேண்டும்.

7. (1) குறித்துரைக்கப்பட்ட ஒவ்வொரு தொழில் முயற்சியினதும் கணக்குகள் நிறுவகத்தினால் வழங்கப்பட்ட தொழில் செய்வதற்கான ஒரு சான்றிதழை வைத்திருக்கும் நிறுவகத்தின் உறுப்பினர்களாகவுள்ள உயர் தொழில்சார் தகைமைகளைக் கொண்டுள்ள உயர் தொழில் ரீதியில் தகமைபெற்ற கணக்காய்வாளர்களினாற் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கிணங்க நடாத்தப்பட்டுள்ளதென்றும் கணக்குகளானவை இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கிணங்கத் தயாரிக்கப்பட்டுச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளனவென்றும் தமது கணக்காய்வு அறிக்கையில் அத்தாட்சிப்படுத்தப்படுத்துதல் அத்தகைய கணக்காய்வாளர்களின் கடமையாதலும் வேண்டும்.

(2) எவரேனும் தகைமையுள்ள கணக்காய்வாளர் (1) ஆம் உட்பிரிவினால் தேவைப்படுத்தப்பட்டவாறு இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களுக்கு இணங்கியொழுகத்தவறுமிடத்து, செய்யப்பட்ட விலகல்களை அவர் தெளிவாகக் குறித்துரைத்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய விலகல்களுக்கான காரணங்களைக் கொடுத்தலும் வேண்டும்.

8. (1) இரண்டாம் உட்பிரிவின் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய உறுப்பினர்களைக் கொண்டுள்ள கணக்கீட்டு நியமங்கள் குழு இத்தால் தாபிக்கப்படுகின்றதென்பதுடன், அத்தகைய குழு விதப்புரைகளைச் செய்து இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் கணக்கீட்டு நியமங்களைக் கடைப்பிடிப்பதில் வேறுவகையாக நிறுவகத்திற்கு உதவுதலும் வேண்டும்.

(2) கணக்கீட்டு நியமங்கள் குழு பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட நிறுவகத்தின் தலைவர், அத்துடன் நிறுவகத்தின் வேறு ஐந்து உறுப்பினர்கள்;

(ஆ) ஐக்கிய இராச்சியத்தின் பட்டயம் பெற்ற முகாமைக் கணக்காளர்கள் நிறுவகத்தின் இலங்கைப் பிரிவினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் ஓர் உறுப்பினர்;

(இ) கம்பனிகள் பதிவாளர்;

(ஈ) இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதி;

(உ) மத்திய வங்கியைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கென மத்திய வங்கி ஆளுநரினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட ஓர் உறுப்பினர்;

(ஊ) இலங்கை வர்த்தக மன்றத்தினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட கம்பனியொன்றின் பணிப்பாளராக அல்லது குறித்துரைக்கப்பட்ட ஒரு தொழில் முயற்சியில் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் பரந்த அனுபவம் கொண்ட ஆளொருவராக இருக்கும் ஓர் உறுப்பினர்;

(எ) இலங்கை வர்த்தக கைத்தொழில் மன்றச் சம்மேளனத்தால் பெயர் குறித்து நியமிக்கப்படுபவராகிய உறுப்பினர் ஒருவர்; இவர் கம்பனிப் பணிப்பாளரொருவராகவோ அல்லது குறித்துரைக்கப்பட்ட தொழில் முயற்சியொன்றில் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டமொன்றின் பரந்த அனுபவம் பெற்ற ஆளொருவராக இருத்தல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் கணக்கீட்டு நியமங்கள் குழுவானது, மத்திய வங்கியின் மேற்பார்வைக் கட்டுப்பாட்டுக்குள் வரும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் தொடர்பில் அல்லது வேறு நிதி நிறுவனங்கள் தொடர்பில் கடைப்பிடிக்கப்படவேண்டிய கணக்கீட்டு நியமங்கள் தொடர்பாக விதப்புரை செய்யுமாறு கோரப்படுமிடத்து அது அத்தகைய விதப்புரைகளைச் செய்யுமுன்னர் மத்திய வங்கியுடன் கலந்தாலோசித்து அதன் ஒருப்பாட்டைப் பெறுதல் வேண்டும்.

9. (1) இரண்டாம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய உறுப்பினர்களைக் கொண்ட கணக்காய்வு நியமங்கள் குழுவொன்று இத்தால் தாபிக்கப்படுகின்றது என்பதுடன் அத்தகைய குழுவானது, இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் கணக்காய்வு நியமங்களைக் கடைப்பிடித்தலில் விதப்புரைகளைச் செய்தல் வேண்டும் என்பதுடன் வேறு வகையில் நிறுவகத்திற்கு உதவுதலும் வேண்டும்.

(2) கணக்காய்வு நியமக் குழுவானது, அத்தகைய நிறுவகத்தின் பேரவையால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட எட்டு நிறுவக உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்; இவர்களுள் ஆகக் குறைந்தது நால்வராவது 8 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட கணக்கீட்டு நியமங்கள் குழுவின் உறுப்பினர்களாதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் நிறுவகமானது, அவசியமானதென அது கருதுகின்றவாறும் கருதும்போதும் கணக்கீட்டு நியமங்கள் குழுவில் சேவையாற்றுவதற்கு கணக்காய்வுத் துறையில் சிறப்பு அனுபவம்கொண்ட எவரேனும் ஆளை ஒத்துத் தேர்ந்தெடுக்கலாம்.

10. (1) கணக்கீட்டு நியமங்கள் குழுவுக்கு அல்லது கணக்காய்வு நியமக்குழுவுக்கு பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் (இவர் இப்பிரிவில் "பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர்" எனப் குறிப்பீடு செய்யப்படுவார்) அவரை பெயர் குறித்து நியமிக்கும் ஆளுக்கு முகவரியிட்டனுப்பப்படும் கடிதமொன்றின் மூலம் அத்தகைய குழுவிலிருந்து பதவி விலகலாம்.

(2) கணக்கீட்டு நியமங்கள் குழுவின் அல்லது கணக்காய்வு நியமங்கள் குழுவின் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் அத்தகைய குழுவில் நான்கு ஆண்டுகளைக்கொண்டவொரு காலப்பகுதிக்கு சேவையாற்றுதல் வேண்டும் என்பதுடன் மீள் நியமனத்திற்குத் தகுதியுடையவராதலும் வேண்டும்.

(3) இறக்கின்ற அல்லது அத்தகைய குழுவிலிருந்து பதவி துறக்கின்ற பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவரின் இடத்திற்கென கணக்கீட்டு நியமங்கள் குழுவுக்கு அல்லது கணக்காய்வு நியமங்கள் குழுவுக்கு பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஆளொருவர் அவர் பெயர் குறித்து நியமிக்கப்பட்டட எந்த உறுப்பினரைப் பின்னுறுகின்றாரோ அந்த உறுப்பினரின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்கு அத்தகைய குழுவில் சேவைபுரிதல் வேண்டும்.

11 (1) "இலங்கைக் கணக்கீட்டு, கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை" என்று அழைக்கப்படவும் அறியப்படவும் வேண்டியதான சபையொன்று தாபிக்கப்படுதல் வேண்டும். (இது இதனகத்துப் பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்).

(2) சபையானது (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயரைக்கொண்டு இடையறா வழியுரிமையும் பொது இலச்சினையும் கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் என்பதுடன் அதன் கூட்டிணைப்புப் பெயரில், வழக்குத் தொடரலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத்தொடரவும்படலாம்.

12. (1) சபை பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) (இதனகத்துப்பின்னர் "பதவி வழி உறுப்பினர்கள்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) மூன்று உறுப்பினர்கள், இவர்கள்

(i) கம்பனிகளின் பதிவாளராக;

(ii) உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதியாக அத்தடன்,

(iii) இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை மற்றும் ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதியாக பதவிதாங்கும் ஆட்களாக இருத்தல் வேண்டும்;

(ஆ) (இதனகத்துப்பின்னர் "நியமன உறுப்பினர்கள்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அமைச்சரால் நியமிக்கப்படும் பின்வருவோர் அடங்கிய பத்து உறுப்பினர்கள் –

(i) மத்திய வங்கி ஆளுநரால் பெயர் குறித்து நியமிக்கப்படும் மத்திய வங்கியின் ஆளுநர் ஒருவர்;

(ii) நிறுவகத்தால் பெயர் குறித்து நியமிக்கப்படும் ஆட்களிடையேயிருந்து தெரிவுசெய்யப்பட்ட நிறுவகத்தின் மூன்று உறுப்பினர்கள்;

(iii) ஆகுசெலவு முகாமைத்துறைக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினரொருவர்; இவர் நிறுவனத்தின் இலங்கைப் பிரிவினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட மூன்று உறுப்பினர்களிடையேயிருந்து தெரிவு செய்யப்படுதல் வேண்டும்;

(iv) இலங்கை சட்டவறிஞர் சங்கத்தால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட மூன்று சிரேஷ்ட சட்டவறிஞர்களிடையேயிருந்து தெரிவுசெய்யப்பட்ட சிரேஷ்ட சட்டவறிஞர் ஒருவர்;

(v) குறித்துரைக்கப்பட்ட ஒரு தொழில் முயற்சியில் சிரேஷ்ட மட்டத்தில் பரந்த முகாமைத்துவ அனுபவம் கொண்ட இரண்டு கம்பனிப் பணிப்பாளர்கள் அல்லது வேறு ஆட்கள்; இவர்களுள் ஒருவர், இலங்கை வர்த்தக மன்றத்தால் சமர்ப்பிக்கப்பட்ட மூன்று பெயர்களின் குழாமொன்றிலிருந்து தெரிவுசெய்யப்பட்டவராகவும் மற்றவர் இலங்கை வர்த்தக கைத்தொழில் மன்றங்களின் சம்மேளனத்தால் சமர்ப்பிக்கப்பட்ட மூன்று பெயர்களின் குழாமொன்றிலிருந்து தெரிவுசெய்யப்பட்டவர்களாகவும் இருத்தல் வேண்டும்;

(vi) இலங்கை சட்டவறிஞர் சங்கத்தால் பெயர் குறித்து நியமிக்கப்படும் மூன்று வங்கியாளர்களைக் கொண்ட குழாமொன்றிலிருந்து தெரிவுசெய்யப்படும் ஒரு சிரேஷ்ட வங்கியாளர்; அத்துடன்

(vii) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தால் தாபிக்கப்பட்டதான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்ட மூன்று ஆட்களைக் கொண்ட குழாம் ஒன்றிலிருந்து, அதன் நோக்கெல்லைக்குட்பட்ட பல்கலைக்கழகங்களில், பகுதிகளையும் கல்விப்பீடங்களையும் அத்துடன் கணக்கியல் அல்லது தொழில் முகாமைத்துவ அல்லது தொழில் நிர்வாக பட்டப்பின்படிப்பு நிறுவகங்களையும் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கென தெரிவுசெய்யப்பட்ட ஆளொருவர்.

(2) அமைச்சர் சபையின் நியமன அங்கத்தவர்களுள் ஒருவரை சபையின் தவிசாளராக இருப்பதற்கென நியமித்தல் வேண்டும்.

13. சபையின் நியமன உறுப்பினர் ஒவ்வொருவரும், இறப்பினால், பதவி விலகலினால் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதனால் முன்னரே பதவியை வறிதாக்கினாலன்றி நான்கு ஆண்டுகளைக்கொண்டவொரு காலப்பகுதிக்குப் பதவிதாங்குதல் வேண்டும்.

14. (1) அமைச்சரானவர், கசற்றில் வெளியிடப்படும் கட்டளையின் மூலம், அதற்கான காரணம் எதனையும் காட்டாமல் நியமன உறுப்பினர் எவரையும் சபையிலிருந்து அகற்றலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் கட்டளை ஒன்று எந்த உறுப்பினர் தொடர்பில் வெளியிடப்படுகின்றதோ அந்த உறுப்பினர், கசற்றில் அத்தகைய கட்டளை வெளியிடப்பட்ட திகதியன்று பதவியை வறிதாக்கியவராகக் கருதப்படுதல் வேண்டும்.

15. நியமன உறுப்பினர் ஒருவர், அப்பயன்பட அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பும் கடிதத்தின்மூலம் தமது பதவியிலிருந்து எந்நேரத்திலும் விலகலாமென்பதுடன், அத்தகைய பதவி விலகலானது, அது அமைச்சரினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதன்மேல் பயனுக்கு வருதலும் வேண்டும்.

16. பதவியிலிருந்து அகற்றப்படுதல் அல்லாத வேறு வகையில் பதவியை வறிதாக்குகின்ற நியமன உறுப்பினர் ஒருவர் மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதல் வேண்டும்.

17. சபையின் நியமன உறுப்பினர் எவரும் இறப்பு, பதவி, விலகல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படல் காரணமாகப் பதவி வறிதாக்குகின்ற சந்தர்ப்பத்தில், அமைச்சரானவர், 12 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு, அத்தகைய உறுப்பினரை அடுத்து வருவதற்கு வேறு எவரேனும் ஆளை நியமிக்கலாம். அத்தகைய உறுப்பினரின் இடத்துக்கு அவ்வாறு நியமிக்கப்படும் உறுப்பினர் எவரும், அவர் எவ்வுறுப்பினரை அடுத்து வருகின்றாரோ, அவ்வுறுப்பினரின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

18. (1) சபையின் தவிசாளர் சபையின் ஒவ்வொரு கூட்டத்திலும் தலைமை தாங்குதல் வேண்டும். அத்தகைய ஏதேனும் கூட்டத்தில் தவிசாளர் இல்லாதவிடத்து, சமூகமளித்திருக்கும் உறுப்பினர்கள், அத்தகைய கூட்டத்துக்குத் தலைமைதாங்குவதற்கென உறுப்பினர்கள் ஒருவரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(2) சபையின் கூட்டமெதற்குமான கூட்ட நடப்பெண் சபையின் ஆறு உறுப்பினர்களுக்குக் குறைவாக இருத்தலாகாது.

(3) இப்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, சபையானது, கூட்டங்கள் மற்றும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்கள் கையாளப்படுவது தொடர்பிலான நடவடிக்கைமுறையை ஒழுங்குபடுத்தலாம்.

(4) சபையின் செயல், முடிவு அல்லது நடவடிக்கை எதுவும், அதன் உறுப்பினர்களுள் ஏதேனும் வெற்றிடம் அல்லது அதன் உறுப்பினர் எவரினதும் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருக்கின்ற காரணத்தினால் மட்டும் வலிவுடையதற்றதெனக் கருதப்படலாகாது.

(5) சபையின் ஏதேனும் கூட்டத்தின் தவிசாளருக்குத் தமது சொந்த வாக்குக்கு மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றுக்கு இருத்தல் வேண்டும்.

19. சபையின் உறுப்பினர்களுக்கு, நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாக உள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான முறையிலும் அத்தகைய வீதங்களிலும் ஊதியமளிக்கப்படுதல் வேண்டும்.

20. (1) சபையின் தவிசாளரானவர், சுகயீனம் அல்லது வேறு இயலாமை அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாகத் தமது பதவியின் கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதிருந்தால், அமைச்சரானவர், அவரது இடத்தில் பதில் கடமை ஆற்றுவதற்கென வேறொரு உறுப்பினரை நியமிக்கலாம்.

(2) அமைச்சர், அதற்கான காரணம் எதனையும் காட்டாது தவிசாளர் பதவியிலிருந்து தவிசாளரை அகற்றலாம்.

(3) தவிசாளர், அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பும் கடிதம் மூலம் எந்நேரத்திலும் பதவியிலிருந்து விலகலாம்.

(4) இரண்டாம், (3) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய, தவிசாளரின் பதவிக்காலமானது, சபையில் அவரது உறுப்பாண்மைக்காலமாதல் வேண்டும்.

21. (1) சபையின் இலச்சினை சபையின் தவிசாளரின் கட்டுக்காவலில் இருத்தல் வேண்டும்.

(2) சபையின் இலச்சினை, சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம்.

(3) சபையின் இலச்சினை, சபையின் மூன்று உறுப்பினர்களின் சமூகத்திலன்றி சாதனம் அல்லது ஆவணம் எதிலும் பொறிக்கப்படலாகாது என்பதுடன், அவ்வுறுப்பினர்கள் எல்லோரும், தாம் சமூகமாய் இருந்தற்கு அடையாளமாக அச்சாதனத்தில் கையொப்பமிடுதலும் வேண்டும்.

22. சபையானது, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய –

(அ) அதன் கடமைகளையும் பணிகளையும் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் அவசியமானதென அது கருதக்கூடியவாறான அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமித்தல் வேண்டும். என்பதுடன், அவர்கள்மீது ஒழுங்காற்றுக் கட்டுப்பாட்டையும் பிரயோகிக்கலாம்;

(ஆ) அவ்வாறு நியமிக்கப்படும் அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும் ஊதியமாகச் செலுத்தப்படவேண்டிய தொகைகளை நிர்ணயித்தல் வேண்டும்.

(இ) அத்தகைய அலுவலர்களினதும், சேவையார்களினதும் சேவை நியதி, நிபந்தனைகளைத் தீர்மானித்தல் வேண்டும்;

(ஈ) அத்தகைய அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் நன்மைக்காகச் சகாய நிதியங்களை அல்லது செயற்றிட்டங்களைத் தாபித்து, ஒழுங்குபடுத்தலாம் என்பதுடன் அத்தகைய ஏதேனும் நிதியத்துக்கு அல்லது செயற்றிட்டத்துக்கு உதவுதொகைகள் அளித்தலும் வேண்டும்.

23. குறித்துரைக்கப்பட்ட வியாபாரத் தொழில்முயற்சிகளினால் இலங்கை கணக்கீட்டு நியமங்களும் இலங்கை கணக்காய்வு நியமங்களும் இணங்கியொழுகப்படுவதைத் கண்காணிப்பதே சபையின் பணியாதல் வேண்டும்.

24. சபைக்கு –

(அ) கொள்வனவு, மானியக்கொடை, இறுதிவிருப்பாவணக் கையிருப்பு ஆகியவற்றின் பயன் காரணமாக அல்லது வேறுவகையில் அதற்கு உரித்தாக்கப்படக்கூடிய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்வதற்கும் வைத்திருப்பதற்கும், அத்துடன் அதை விற்பதற்கு, ஈடுவைப்பதற்கு, குறித்தொதுக்குவதற்கு, கொடுத்து மாற்றுவதற்கு அல்லது வேறுவகையில் கையுதிர்ப்பதற்கும்;

(ஆ) அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய ஒப்பந்தங்களையும் உடன்படிக்கைகளையும் செய்துகொள்வதற்கும்;

(இ) அதன் பணிகளைச் செவ்வனே நிறைவேற்றுவதற்குச் சபையின் அபிப்பிராயப்படி அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும் அல்லது கருமங்களையும் செய்வதற்கும்,

ஆன தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

25. (1) இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கியொழுகக் கணக்குகள் ஆக்கப்பட்டிருக்கின்றனவா என்பதைத் தீர்மானிப்பதற்குச் சபையை இயலச் செய்வதற்காக, அத்தகைய தொழில்முயற்சியினது ஆண்டுக் கணக்குகளின் பிரதியொன்றைச் சபைக்குச் சமர்ப்பித்தல் குறித்துரைக்கப்பட்ட ஒவ்வொரு வியாபாரத் தொழில்முயற்சியினதும் கடமையாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் சபையானது, அதன் கடமைகளைப் புரிதலைச் இயலச்செய்யும் நோக்கத்திற்காக, சபை அல்லது சபையினால் அதன்சார்பில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆள், குறித்துரைக்கப்பட்டதொரு தொழில் முயற்சி அதன் இயைபான கணக்குகளைச் சபைக்குச் சமர்ப்பித்த பின்னர் ஓராண்டுக்குப் பிந்தாமல் வழங்கப்படும் எழுத்திலான அறிவித்தல் மூலம் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய தொழில் முயற்சியை அல்லது அதன் கணக்காய்வாளர்களை, சபைக்கு அல்லது சபையினால் அதன் சார்பில் அதிகாரமளிக்கப்பட்ட ஆளுக்கு, அறிவித்தலில் குறித்துரைக்கப்பட வேண்டியவாறான அத்தகைய காலத்திற்குள்ளதாக அதன் கணக்குகள் தொடர்பிலான ஏதேனும் தகவலைக் கொடுத்துதவுமாறு தேவைப்படுத்தலாம் என்பதுடன், அறிவித்தல்களில் குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள்ளாக அத்தகைய தேவைப்பாட்டுடன் இணங்கியொழுகுவது, விடயத்துக்கேற்றாற் போன்று அத்தகைய குறித்துரைக்கப்பட்ட தொழில்முயற்சியின் அல்லது கணக்காய்வாளர்களின் கடமையாதலும் வேண்டும்.

(3) சபையானது, (1) ஆம் உட்பிரிவின்கீழ் அதன் கடமைகளைப் புரியும் நோக்கத்துக்காக அதன் கணக்குகளைத் தயாரித்தல் அல்லது சமர்ப்பித்தல் தொடர்பான ஏதேனும் கருமங்கள்மீது ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட தொழில்முயற்சியின் எவரேனும் பணிப்பாளரை, அலுவலரை அல்லது கணக்காய்வாளரை ஆணையிட்டழைப்பதற்கும் விசாரிப்பதற்குமான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

26. சபை அல்லது அதன் சார்பில் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆள், இச்சட்டத்தின்கீழ், அதன் கடமைகளைப் புரிவதற்கு அவசியமானவை அல்லது உசிதமானவையெனக் கருதக்கூடியவாறான அத்தகைய புலனாய்வுகளைக் கொண்டுநடத்தலாம் அல்லது அத்தகைய விசாரணைகளை நடத்தலாமென்பதுடன், அத்தகைய நோக்கத்துக்காக அத்தகைய ஏதேனும் புலனாய்வில் அல்லது விசாரணையில், ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட தொழில்முயற்சியின் எவரேனும் பணிப்பாளரை, அலுவலரை அல்லது கணக்காய்வாளரை சபையின் முன் தோன்றும்படி அல்லது அத்தகைய புலனாய்வின் அல்லது விசாரணையின் நோக்கத்துக்காகத் தேவைப்படுத்துகின்றனவான அத்தகைய பணிப்பாளரின், அலுவலரின், அல்லது கணக்காய்வாளரின் உடைமையில் அல்லது கட்டுப்பாட்டிலுள்ள எவையேனும் அத்தகைய புத்தகங்களை அல்லது ஆவணங்களைக் காண்பிக்கும்படி எழுத்திலான அறிவித்தல்மூலம் ஆணையிட்டழைக்கலாம்.

27. (1) (அ) ஆறாம் பிரிவின் அல்லது 7 ஆம் பிரிவின் அல்லது 25 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகத் தவறுகின்ற அல்லது அவற்றை மீறுகின்ற ஆளெவரும்;

(ஆ) 25 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் அவர்மீது சுமத்தப்பட்ட ஏதேனும் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகத் தவறுகின்ற அல்லது தெரிந்துகொண்டே அத்தகைய ஏதேனும் தேவைப்பாட்டுடன் இணங்குகின்றதான ஏதேனும் பொய்யான தகவலைக்கொடுத்துதவுகின்ற ஆளெவரும்;

(இ) 25 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது 26 ஆம் பிரிவின்கீழ் அவ்வாறு செய்யும்படி தேவைப்படுத்தப்படும்போது சபையின் முன்பு தோன்றுவதற்குத் தவறுகின்றவரான அல்லது சபையினால் அல்லது சபையினால் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரினால் அவரிடம் கேட்கப்பட்ட ஏதேனும் வினாவுக்கு விடையளிக்க மறுக்கின்றவரான அல்லது சபையினால் அல்லது சபையினால் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரினால் அவ்வாறு செய்யும்படி தேவைப்படுத்தப்படும்போது, அவரது உடைமையில் அல்லது கட்டுப்பாட்டில் உள்ள ஏதேனும் புத்தகத்தை அல்லது ஆவணத்தைக் காண்பிக்க மறுக்கின்றவரான அல்லது சபையினால் அல்லது சபையினால் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட ஓர் ஆளினால் அவரிடம் கேட்கப்பட்ட ஏதேனும் வினாவுக்குத் தெரிந்துகொண்டே ஏதேனும் பொய்யான விடையை அளிக்கின்றவரான குறித்துரைக்கப்பட்ட தொழில் முயற்சியொன்றின் பணிப்பாளரும், அலுவலரும் அல்லது கணக்காய்வாளரும்

இச்சட்டத்தின்கீழ், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், அந்த ஆளொவ்வருவரும், நீதிவானொருவர் முன்னிலையிலான சுருக்கமுறை விளக்கத்தின்பின் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழ் ஆளொருவர் தவறொன்றுக்குக் குற்றத் தீர்ப்பளிக்கப்படுமிடத்து, அத்துடன் அத்தகைய தவறை உருவாக்கிய செயலானது குறித்துரைக்கப்பட்ட தொழில்முயற்சியொன்றுடன் பங்குதாரர்கள் அல்லது அத்தகைய குறித்துரைக்கப்பட்ட தொழில்முயற்சியொன்றின் தொடர்புள்ள ஏதேனும் நிதிசார் நிறுவனத்தை அல்லது உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தைத் தவறாக இட்டுச்செல்லும் நோக்கத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் கருதுமிடத்தும், அல்லது இச்சட்டத்தின்கீழ் உரிமம்பெற்ற வர்த்தகவங்கியொன்று குற்றத்தீர்ப்பளிக்கப்படுமிடத்தும், அத்துடன் நீதிமன்றமானது தவறை உருவாக்கிய செயலானது, அத்தகைய வங்கியின் வைப்பீட்டாளர்களைத் தவறாக இட்டுச்செல்லும் நோக்கத்துடன் செய்யப்பட்டதெனக் கருதுமிடத்தும் நீதிமன்றமானது தவறாளிக்கு, ஐந்தாண்டு காலத்தை விஞ்சாத ஒரு காலத்துக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனையை அளிக்கலாம்.

(3) இச்சட்டத்தின்கீழான தவறொன்று, ஆட்கள் குழுவொன்றினால் புரியப்படும் இடத்து தவறு புரியப்படும் ஒரு காலத்தில் அத்தகைய ஆட்கள் குழுவின் ஒரு பணிப்பாளராக, முகாமையாளராக, செயலாளராக அல்லது இவர்களையொத்த வேறு அலுவலராக உள்ளவரான ஆளெவரும், அவர் தவறானது தமது அறிவுக்கெட்டாமலும் அவரது மறைமுக ஆதரவு இல்லாமலும் புரியப்பட்டதெனவும் அத்துடன் அவரின் பணிகளின் தன்மையையும், விடயத்தின் அல்லது சூழ்நிலைகளையும் கருத்திற்கொண்டு, பிரேயாகிக்கப்படவேண்டியவாறு தவறு புரிவதைத் தடுப்பற்கான அத்தகைய எல்லா விழிப்புக் கவனத்தையும் அவர் பிரயோகித்தார் எனவும் எண்பித்தாலன்றி, அந்தத் தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதல் வேண்டும்.

28. (1) சபையானது, எந்தச் சூழ்நிலைகளில் இச்சட்டத்தின் கீழான தவறு புரியப்பட்டதோ அந்தச் சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு, அத்தகைய தவறுக்கு விதிக்கப்படற்பாலதான

குற்றப்பணத்தின் மூன்றிலொரு பங்கை விஞ்சாதவொரு பணத்தொகைக்கு அத்தகைய தவறை இணக்கலாமென்பதுடன், இப்பிரிவின்கீழான தவறொன்றை இணக்குவதில் சபையால் பெற்றுக்கொள்ளப்பட்ட எல்லாப் பணத் தொகைகளும் சபையின் நிதியத்திற்கு வரவுவைக்கப்படுதலும் வேண்டும்.

(2) குறித்துரைக்கப்பட்ட தொழில்முயற்சியொன்று, அல்லது ஒரு கணக்காய்வாளர் இச்சட்டத்தின் ஏற்பாடுகளை மீறியுள்ளதாகவும் அத்துடன் அத்தகைய மீறுகையானது பாரதூரமானதொரு தன்மையானதல்லவெனவும் சபை திருப்திப்படுமிடத்து, அது –

(அ) அத்தகைய தொழில்முயற்சியை அதன் கணக்குகளை மீளக் கணக்காய்வு செய்யுமாறு அல்லது அத்தகைய கணக்குகள் வெளியிடப்பட்டிருக்குமிடத்து அவற்றை மீளவெளியிடுமாறு அல்லது தொடர்ந்துவரும் ஆண்டிற்கான அதன் கணக்குகளில் பொருத்தமான திருத்தத்தை உள்ளடக்குமாறு பணிக்கலாம்; அல்லது

(ஆ) அத்தகைய குறித்துரைக்கப்பட்ட தொழில்முயற்சியானது பகிரங்கக் கம்பனியொன்றாக இருக்குமிடத்து, அத்தகைய இணங்கியொழுகாமைக்கான காரணத்தையும் அத்தகைய பகிரங்கக் கம்பெனியின் கணக்குகள் இணங்கியொழுகாமையினாலான நிதிசார் விளைவையும் விளக்கி, அதன் எல்லாப் பங்குதாரர்களுக்கும் எழுத்திலான அறிவிப்பொன்றை அனுப்பும்படியும், அத்துடன் அத்தகைய தொழில்முயற்சியானது இலங்கைப் பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் உரிமமளிக்கப்பட்ட பங்குப் பரிவர்த்தனையொன்றில் நிரற்படுத்தப்பட்டவொரு பகிரங்கக் கம்பனியாகவிருக்குமிடத்து, மேலதிகமாக அத்தகைய அறிவிப்புப் பற்றிய பிரதியொன்றை அத்தகைய ஆணைக்குழுவுக்கும் அத்தகைய பங்குத் தொகுதிப் பரிவர்த்தனைக்கும் அனுப்பும்படியும் பணிக்கலாம்.

29. ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட தொழிற்பொறுப்புமுயற்சியின் எவரேனும் கணக்காளர் இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டை மீறுகின்றவிடத்து, அத்தகைய மீறுகை பற்றி அத்தகைய கணக்காளருக்கெதிராக அத்தகைய குழு தகுந்த நடவடிக்கை எடுப்பதனை இயலச்செய்யும் நோக்கத்திற்காக அத்தகைய கணக்காளர் உறுப்பினரொருவராகவிருக்கின்ற ஏதேனும் உயர்தொழில்சார் குழுவின் கவனத்திற்குக்கொண்டு வருதல் சபையின் கடமையாதல் வேண்டும் :–

30. ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட தொழில் பொறுப்பு முயற்சியானது, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கிச் செயலாற்றத் தவறுகின்றவிடத்து, அத்தகைய நிகழ்வுபற்றி –

(அ) அத்தகைய குறித்துரைக்கப்பட்ட தொழில்பொறுப்புமுயற்சியின்செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதற்கு அல்லது மேற்பார்வை செய்வதற்குச் சட்டத்தினால் தத்துவமளிக்கப்பெற்ற ஏதேனும் அதிகாரசபையின்; அத்துடன்

(ஆ) அத்தகைய இணங்காமை அத்தகைய குறித்துரைக்கப்பட்ட தொழிற்பொறுப்புமுயற்சியின் வரிப் பொறுப்புக்களில் கணிசமானளவு குறைப்பை .விளைவித்துள்ளதென சபை கருதினால், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின்,

கவனத்திற்குக் கொண்டுவருதல் கடமையாதல் வேண்டும்.

31. (1) கசற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் காலத்திற்குக் காலம் அமைச்சரால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தொகையினதானதும் குறித்துரைக்கப்பட்ட ஒவ்வொரு தொழில்முயற்சியினதும் முன்னைய ஆண்டுக்கான ஐந்தொகையில் காட்டப்பட்டவாறாக பங்குடைமையாளர்களின் ஒப்புரவின் நூற்றுவீதம் அல்லது அத்தகைய தொழில் முயற்சியின் முந்திய ஆண்டுக்கான இலாப நஷ்டக் கணக்கில் காப்பாற்பட்டவாறான வரிக்குப் பின்னரான அதன் இலாபங்களின் ஒரு நூற்றுவீதம், ஆகிய இவற்றுள் எது கூடியதோ அந்த நூற்று வீதத்தைக்

கொண்டதுமான இறை ஒன்று அத்தகைய பொறுப்பு முயற்சியினால் விதிக்கப்பட்டு அறவிடப்பட்டு செலுத்தப்படுதல் வேண்டும்.

(2) இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளை ஒவ்வொன்றும், கசெற்றில் அது வெளியிடப்படும் திகதியன்று அல்லது அதிற் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய பிந்திய திகதியன்று வலுவுக்கு வருதல் வேண்டும் என்பதுடன் அது வெளியிடப்பட்டதிலிருந்து இரண்டு மாதங்களுக்குள் அங்கீகாரத்துக்கெனப் பாராளுமன்றத்தின் முன் கொணரப்படுதலும் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத கட்டளை எதுவும் அதன்கீழ் ஏலவே செய்யப்பட்ட எதனதும் செல்லுபடியாந்தன்மைக்குப் பங்கமின்றி, அங்கீகாரம் மறுக்கப்பட்ட திகதியிலிருந்து இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும். கட்டளை ஒன்றானது அவ்வாறு அங்கீகாரம் மறுக்கப்பட்ட திகதி பற்றிய அறிவித்தல் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

32. (1) சபையானது அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். சபையின் நிதியத்தில்

(அ) சபையின் பயன்பாட்டிற்காகப் பாராளுமன்றத்தினால் காலத்திற்குக்காலம் வாக்களிக்கப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்;

(ஆ) பிரிவு 31 இன் கீழ் விதிக்கப்பட்ட இறையின் வரும்படிகளாக சபையினால் பெறப்பட்ட அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்; அத்துடன்

(இ) இச்சட்டத்தின் கீழ் அதன் தத்துவங்களையும், கடமைகளையும் பிரயோகிப்பதிலும் புரிவதிலும் சபையால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும், வரவு வைக்கப்படல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் கீழான, அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் கீழான சபையின் தத்துவங்கள், கடமைகள் அத்துடன் பணிகள் என்பனவற்றை பிரயோகிக்கையிலும், புரிகையிலும், நிறைவேற்றுகையிலும் அதனால் உறப்படும் ஏதேனும் செலவினத்தைக்கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப்படும் எல்லாப் பணத்தொகைகளும் சபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

33. (1) சபையின் நிதி ஆண்டு பஞ்சாங்க ஆண்டாகவிருத்தல் வேண்டும்.

(2) பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் கணக்குகளின் கணக்காய்வு தொடர்பில் அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் சபையின் கணக்குகளின் கணக்காய்வுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

34. சபையானது ஒவ்வொரு நிதியாண்டின் முடிவிலும் ஆண்டின் போதான அதன் செயற்பாடுகளின் அறிக்கை ஒன்றை வெளியிடுதல் வேண்டுமென்பதுடன் அது அங்கீகாரத்துக்கென அமைச்சருக்குச் சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும். அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டதன் மேல் அமைச்சர் அத்தகைய அறிக்கையை பாராளுமன்றத்தின் முன்வைக்கச்செய்வித்தல் வேண்டும்.

35. (1) (அ) இச்சட்டத்தின்கீழ் சபையினால் நல்லெண்ணத்துடன் புரியப்பட்ட அல்லது புரியப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயலுக்காக சபைக்கெதிராக; அல்லது

(ஆ) இச்சட்டத்தின்கீழ் அல்லது சபையின் பணிப்புரையின்மீது நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயலுக்காக சபையின் எவரேனும் உறுப்பினருக்கு, அலுவலருக்கு அல்லது சேவையாளருக்கு எதிராக

துடர்ச்சி அல்லது குற்ற வழக்கு எதுவும் தொடரப்படுதலாகாது.

(2) ஏதேனும் நீதிமன்றத்தின் முன் சபையினால் அல்லது சபைக்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் சபையினால் உறப்பட்ட செலவினம் எதுவும் சபையில் நிதியத்திலிருந்து செலுத்தப்படல் வேண்டுமென்பதுடன் ஏதேனும் அத்தகைய துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் சபைக்குச் செலுத்தப்பட்ட அல்லது சபையால் அறவிடப்பட்ட ஏதேனும் செலவுகள் சபையின் நிதியத்திற்கு வரவுவைக்கப்படுதலும் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழ் அல்லது சபையின் பணிப்புரையின் மீது (1) ஆம் உட்பிரிவின் (ஆ) எனும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான அத்தகைய எவரேனும் ஆளினால் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில், ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் அவருக்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அவரால் உறப்பட்ட ஏதேனும் செலவினமானது, அத்தகைய செயலானது நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் கருதினால், அத்தகைய துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அத்தகைய செலவினமானது அவரால் அறவிடப்பட்டாலன்றி, சபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

36. சபையின் எல்லா உறுப்பினர்களும், அலுவலர்களும் அத்துடன் சேவையாளர்களும் தண்டனைச் சட்டக்கோவையின் நோக்கத்திற்குள்ளும் அதற்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

37. சபையானது, இலஞ்சச் சட்டத்தின் கருத்தினுள் ஓர் அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்று எனக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்க பொருள்கொள்ளப்படுதலும் வேண்டும்.

38. (1) அமைச்சரானவர், விதித்துரைக்கப்பட வேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட அல்லது ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் கருமம் தொடர்பாக ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) இச்சட்டத்தினால் ஆக்கப்படும் ஒவ்வோர் ஒழுங்குவிதியும் கசெற்றில், வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் திகதியன்று அல்லது அந்த ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய பிந்திய திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒவ்வோர் ஒழுங்கு விதியும், அது வெளியிடப்பட்டதன்பின் வசதிப்படக்கூடியவாறான விரைவில் அங்கீகாரத்துக்கென, பாராளுமன்றத்தின் முன்னர் வைக்கப்படுதல் வேண்டும். அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி, அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட திகதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர், செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, நீக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி எந்தத் திகதியிலிருந்து இல்லாதொழிக்கப்பட்டதெனக் கருதப்பட வேண்டுமோ அந்தத் திகதி பற்றிய அறிவித்தலானது கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

39. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறு விதமாகத் தேவைப்படுத்தினாலன்றி –

"மத்திய வங்கி" என்பது பணச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கி எனப்பொருள்படும்;

"கம்பனி" என்பது 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின்கீழ் தரப்பட்ட அதே கருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

"இலங்கை வர்த்தக மன்றம்" என்பது வர்த்தக மன்றக் கட்டளைச் சட்டத்தினால் கூட்டிணைக்கப்பட்ட இலங்கை வர்த்தக மன்றம் எனப்பொருள்படும்;

"காரணிகர் கம்பனி" என்பது –

(அ) வாடிக்கையாளர் கம்பனியின் வியாபாரக் கடன்களுக்காகப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுகின்ற,

(ஆ) வாடிக்கையாளர் கம்பனிக்கு ஏற்படக்கூடிய வியாபாரக் கடன்களுக்கான பொறுப்பு ஏற்று இறப்பினால் ஏற்படும் ஆபத்தை வாடிக்கையாளர் கம்பனிக்கு நீக்குகின்ற

(இ) வாடிக்கையாளர் கம்பனியின் வியாபாரக் கடன்களைப் பொறுப்பேற்று குறித்த சில சந்தர்ப்பங்களில் அவற்றின் பெறுமதியின் ஒரு பாகத்தை உடனடியாகவும் மீதியை கடன்கள் உதிர்ந்த பின்பு முற்பணமாகக் கொடுக்கின்ற,

(ஈ) பொதுவாக வாடிக்கையாளர் கம்பனியின் பண ஓட்டத்தைச் சீர்திருத்துவதற்கான ஒரு கடனையோ அல்லது பல கடன்களையோ கொள்வனவு செய்கின்ற, அல்லது

(உ) மாற்று வழியுடன் அல்லது மாற்று வழியில்லாது வாடிக்கையாளர் வியாபாரக் கடன் ஒன்றைப் பொறுப்பேற்கின்ற ஒரு கம்பனி என்று பொருளாகும்.

"நிதி முகாமைக் கம்பனி" என்பது, வாடிக்கையாளர் முன்னுரிமைகளையும் தேவைகளையும் பொறுத்து பலவகையான சொத்துக்களில் முதலீடு செய்வதில் தமது வாடிக்கையாளர் கம்பனியின் செயற்பாடுகளை முகாமை செய்கின்ற ஒரு கம்பனி என்று பொருளாகும்.

"பட்டயக் கணக்காளர்கள் நிறுவகம்" என்பது 1959 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, பட்டயக் கணக்காளர் நிறுவகச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட பட்டயக் கணக்காளர் நிறுவகம் எனப்பொருள்படும்;

"உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி" என்பது, 1987 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் வங்கித்தொழிலைக்கொண்டு நடாத்துவதற்கென உரிமமளிக்கப்பட்ட ஒரு பகிரங்கக் கம்பனி எனப்பொருள்படும்;

"விதித்துரைக்கப்பட்டது" என்பது, அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதியினால் விதித்துரைக்கப்பட்டது எனப்பொருள்படும்;

"பகிரங்கக் கூட்டுத்தாபனம்" என்பது, முழுமையாக அல்லது பகுதியளவில் மானியமாகவோ கடனாகவோ அல்லது வேறு வகையாகவோ அரசாங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகளுடன் அல்லது மூலதனத்துடன், கம்பனிகள் சட்டம் தவிர்ந்த ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது அதன்கீழ் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்படுகின்ற ஏதேனும் கூட்டுத்தாபனம், சபை அல்லது வேறு குழு எனப் பொருள்படும்;

"பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு" என்பது 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவெனப் பொருள்படும்;

"பங்குதாரர் ஒப்பரவு" என்பது, ஒரு பகிரங்கக் கம்பனி தொடர்பாகப் பயன்படுத்தப்படும் போது அக்கம்பனியினது வழங்கப்பட்ட மூலதனமும் அதன் ஒதுக்குகளும் எனப் பொருள்படும்.

40. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

1995 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, நிதிச் சட்டம்

[1995, ஆகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

1995 சனவரி 1 ஆம் திகதியன்று தொடங்கும் நிதியாண்டிற்கு நிதி சார்ந்தவையும் வேறுவகையானவையுமான குறித்த சில பிரேரணைகளுக்கு சட்டவலு அளிப்பதற்கு அவசியமான சட்ட ஏற்பாடுகளை ஆக்குவதற்கானதொரு சட்டம்

1. இச்சட்டம், 1995 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, நிதிச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்

அத்தியாயம் 1
பாகம் I

டீசல் மோட்டார் வாகன விதிப்பனவைச் சுமத்துதல்

2. டீசல் மோட்டார் வாகனம் ஒவ்வொன்றுக்கும் 1995 ஏப்ரில் 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஒவ்வோராண்டிற்கும் பத்தாயிரம் ரூபாவுக்குச் சமமான பணத்தொகையொன்று அறவிடப்படுதலும் வேண்டும். (இது இப்பாகத்தில் 'விதிப்பனவு" எனக் குறிப்பீடு செய்யப்படும்.) அத்தகைய ஒவ்வோராண்டிற்கும் செலுத்தற்பாலதான விதிப்பனவு டீசல் மோட்டார் வாகனத்தின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரரால் இயைபான திகதியன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்படுதல் வேண்டும்.

ஆயினும், டீசல் மோட்டார் வாகனம் ஒன்று ஏதேனும் ஆண்டில் சிறுவர்களை பாடசாலைகளுக்கும், பாடசாலைகளிலிருந்தும் அல்லது அலுவலக பணியாட்டொகுதியினரை அலுவலகங்களுக்கும் அலுவலகங்களிலிருந்தும் அல்லது வேலைத்தலங்களுக்கும் வேலைத்தளங்களிலிருந்தும் அல்லது பொருட்களை ஏற்றிச் செல்வதற்கு பயன்படுத்தப்படுவதாக இவ்வத்தியாயத்தின்கீழ் ஆணையாளரால் பதிவுசெய்யப்படுமிடத்து, அத்தகைய டீசல் மோட்டார் வாகனத்தின்மீது செலுத்தப்படற்பாலதான விதிப்பனவு ஐயாயிரம் ரூபாவாதல் வேண்டும்.

பாகம் II

ஆடம்பர மோட்டார் வாகன விதிப்பனவு, ஓரளவு ஆடம்பர மோட்டார் வாகன விதிப்பனவு மற்றும் ஓரளவு ஆடம்பர இரட்டை நோக்க மோட்டார் வாகன விதிப்பனவு ஒன்றைச் சுமத்துதல்

3. (ஓரளவு ஆடம்பர இரட்டை நோக்க மோட்டார் வாகனமொன்றைத் தவிர) ஆடம்பர மோட்டார் வாகனம் ஒவ்வொன்றின்மீதும் 1995 ஏப்பிரில் 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஒவ்வோராண்டிற்கும், ஆனால் ஏழு ஆண்டுகளுக்கு மேற்படாமல் இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள அந்தந்த வீதம்படி ஆடம்பர மோட்டார் வாகன விதிப்பனவொன்று அறவிடப்படுதலும் விதிக்கப்படுதலும் செலுத்தப்படுதலும் வேண்டும். (இது இப்பிரிவில் "விதிப்பனவு" எனக் குறிப்பீடு செய்யப்படும்). ஒவ்வோராண்டிற்கும் செலுத்தப்படற்பாலதான அத்தகைய விதிப்பனவு ஆடம்பர மோட்டார் வாகனச் சொந்தக்காரரால் இயைபான திகதியன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்படுதல் வேண்டும்.

4. ஓரளவு ஆடம்பர மோட்டார் வாகனம் ஒவ்வொன்றின்மீதும் 1995 ஏப்பிரில் 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஒவ்வோராண்டிற்கும், ஆனால் ஏழு ஆண்டுகளுக்கு மேற்படாமல், இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள அந்தந்த வீதப்படி ஓரளவு ஆடம்பர மோட்டார் வாகன விதிப்பனவொன்று அறவிடப்படுதலும் விதிக்கப்படுதலும் செலுத்தப்படுதலும் வேண்டும். (இது இப்பிரிவில் "விதிப்பனவு" எனக் குறிப்பீடு செய்யப்படும்).

அத்தகைய ஒவ்வோராண்டிற்கும் செலுத்தப்படற்பாலதான விதிப்பனவு ஓரளவு ஆடம்பர மோட்டார் வாகனத்தின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரரால் இயைபான திகதியன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்படுதல் வேண்டும்.

5. ஓரளவு ஆடம்பர இரட்டை நோக்க மோட்டார் வாகனம் ஒவ்வொன்றின் மீதும் 1995 ஏப்பிரில் 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஒவ்வோராண்டிற்கும் ஆனால் ஏழு ஆண்டுகளுக்கு மேற்படாமல், இச்சட்டத்திற்கான மூன்றாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள அந்தந்த வீதப்படி ஓரளவு ஆடம்பர இரட்டைநோக்க மோட்டார் வாகன விதிப்பனவொன்று அறவிடப்படுதலும் விதிக்கப்படுதலும் செலுத்தப்படுதலும் வேண்டும். (இது இதனகத்துப்பின்னர் "விதிப்பனவு" எனக் குறிப்பீடு செய்யப்படும்.) அத்தகைய ஒவ்வோராண்டிற்கும் செலுத்தப்படற்பாலதான விதிப்பனவு ஓரளவு ஆடம்பர இரட்டை நோக்க மோட்டார் வாகனச் சொந்தக்காரரால் இயைபான திகதியன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்படுதல் வேண்டும்.

பாகம் III
விதிப்பனவைத் திரட்டுதல்

6. இவ்வத்தியாயத்தின் இப்பாகத்தின் நோக்கங்களுக்காக "விதிப்பனவு" என்பது டீசல் மோட்டார் வாகன விதிப்பனவையும் ஆடம்பர மோட்டார் வாகன விதிப்பனவையும் ஓரளவு ஆடம்பர மோட்டார் வாகன விதிப்பனவையும் அத்துடன் ஓரளவு ஆடம்பர இரட்டை நோக்க மோட்டார் வாகன விதிப்பனவையும் அத்துடன் அதனுடன் சேர்க்கப்படும் ஏதேனும் தண்டப் பணத்தையும் உள்ளடக்கும்.

7. குறித்துரைக்கபட்ட மோட்டார் வாகனம் ஒவ்வொன்றினதும் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர் 8 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய 1995 ஏப்பிரில் 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் ஆண்டிற்கு அவரால் செலுத்தப்படற்பாலதான விதிப்பனவை இயைபான திகதியன்று அல்லது அதற்கு முன்னர் ஆணையாளருக்குச் செலுத்த வேண்டும்.

8. (1) ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட மோட்டார் வாகனம் தொடர்பில் காப்புறுதி செய்யும் அல்லது காப்புறுதிப் பத்திரமொன்றைப் புதுப்பிக்கும் காப்பீட்டுதாரர் ஒவ்வொருவரும் –

(அ) குறித்துரைக்கப்பட்ட மோட்டார் வாகனமொன்று தொடர்பில் அவர் காப்புறுதி செய்கின்ற அல்லது காப்புறுதிப் பத்திரமொன்றைப் புதுப்பிக்கின்ற நேரத்தில் அத்தகைய குறித்துரைக்கப்பட்ட மோட்டார் வாகனத்தின்மீது அத்தகைய பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரரால் செலுத்தப்படற்பாலதான விதிப்பனவிற்குச் சமமான தொகையொன்று அத்தகைய வாகனத்தின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரரிடமிருந்து திரட்டுதல் வேண்டும்;

(ஆ) அவ்வாறு திரட்டப்பட்ட தொகையை, அத்தொகை திரட்டப்பட்ட மாதத்தை உடனடுத்துவரும் மாதத்தின் பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்குமுன்னர், ஆணையாளரால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் அத்தகைய விவரங்கள் அடங்கிய வெளிப்படுத்துகையொன்றுடன் ஆணையாளருக்கு அனுப்புதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க ஏதேனும் தொகையைத் திரட்டுகின்ற காப்பீட்டுதாரர் ஒவ்வொருவரும் அவ்வாறு திரட்டப்பட்ட தொகை திரட்டப்பட்டமையை ஆணையாளரால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் முறையாக ஒப்பேற்றல் வேண்டும்.

(3) எவரேனும் காப்பீட்டுதாரரால் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க குறித்துரைக்கப்பட்ட மோட்டார் வாகனமொன்றின் எவரேனும் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரரிடமிருந்து திரட்டப்பட்ட ஏதேனும் தொகையானது, அத்தகைய காப்பீட்டுதாரர் அத்தகைய தொகையைத் திரட்டிய திகதியன்று அத்தகைய பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரரால் ஆணையாளருக்குச் செலுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) வேறு ஏதேனும் சட்டத்தில் எது எவ்வாறிருப்பினும், இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின்கீழ் எவரேனும் காப்பீட்டுதாரரால் திரட்டப்பட்டு ஆணையாளருக்கு அனுப்பப்படுவதற்கென அத்தகைய காப்பீட்டுதாரரால் வைத்திருக்கப்படும் ஏதேனும் தொகையானது, அத்தகைய காப்பீட்டுதாரரின் தொழில் வங்கி முறியும் விடயத்தில் எடுக்கப்படும் விடயத்தில் அல்லது கலைக்கப்படும் விடயத்தில் நிறைவேற்றுகைக்கு அல்லது நிருவாகத்திற்கு அல்லது கடன்தருநர்களின் நலனுக்காக சாட்டுதலுக்குப் பொறுப்பாகின்றவாறான அத்தகைய காப்பீட்டுதாரரின் அத்தகைய ஆதனமாகக் கருதப்படுதலாகாது என்பதுடன் அத்தகைய தொகையானது, அத்தகைய காப்பீட்டுதாரரின் வங்கி முறிவிலுள்ள, ஒடுக்குதலிலுள்ள அல்லது சாட்டுதலிலுள்ள மரணச் சொத்தினின்று வேறானதாகவும் அதன் பாகமாக அமையாததாகவும் இருத்தல் வேண்டும்.

(5) காப்பீட்டுதாரர் எவரும் விதித்துரைக்கப்பட்ட மோட்டார் வாகனமொன்றின் பதிவுசெய்யப்பட்ட எவரேனும் சொந்தக்காரரிடமிருந்து, இச்சட்டத்தின்கீழ் அத்தகைய பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரரிடமிருந்து திரட்டப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட விதிப்பனவை திரட்டத் தவறுகின்றவிடத்து அல்லது காப்பீட்டுதாரர் எவரும் அத்தகைய தொகையைத் திரட்டியிருந்து அவ்வாறு திரட்டப்பட்ட தொகையை அத்தகைய தொகை திரட்டப்பட்ட மாதத்தை உடனடுத்துவரும் மாதத்தின் பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்குமுன்னர் ஆணையாளருக்கு அனுப்பியிராதவிடத்து, அத்தகைய காப்பீட்டுதாரர், இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் திரட்டுமாறு அவர் தேவைப்படுத்தப்பட்ட ஆளால் திரட்டியிராத தொகைக்கு, அல்லது விடயத்திற்கேற்ப, திரட்டப்பட்டதும் ஆணையாளருக்கு அனுப்பப்படாததும் அத்தகைய தொகைக்கும் அல்லது அதன் பாகத்திற்கும் அத்துடன் விடயத்திற்கேற்ப திரட்டப்படாததும் அல்லது திரட்டப்பட்டு அனுப்பப்படாததுமான அத்தகைய தொகைக்குப் பொறுப்பாதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய தொகை ஆணையாளருக்கு அனுப்பப்பட்டிருக்க வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட தினத்தையடுத்த தினத்திலிருந்து தவறுகையில் உள்ளதாகக் கருதப்படுதலும் வேண்டும்; அத்துடன் அத்தகைய காப்பீட்டுதாரர் அத்தகைய திகதியிலிருந்து இச்சட்டத்தின் கருத்தெல்லைக்குள் தவறாளரொருவராகக் கருதப்படுதலும் வேண்டும்.

(6) காப்பீட்டுதாரர் எவரும் (5) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் தவறாளரொருவராகக் கருதப்படுமிடத்து, தவறுகையிலுள்ள விதிப்பனவின் தொகை, 10 ஆம் பிரிவிலும் 11 ஆம் பிரிவிலும் ஏற்பாடுசெய்யப்பட்ட முறையில் அத்தகைய தவறாளரிடமிருந்து அறவிடப்படலாம்.

9. குறித்துரைக்கப்பட்ட மோட்டார் வாகனம் ஒவ்வொன்றினதும் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர், ஏதேனும் ஆண்டிற்கு அத்தகைய மோட்டார் வாகனம் தொடர்பில் காப்புறுதிப்பத்திரமொன்றின் வழங்கீட்டிற்கென அல்லது புதுப்பித்தலுக்கென காப்பீட்டுதாரருக்கு விண்ணப்பிக்கும் நேரத்தில், அவ்வாண்டிற்குக் குறித்துரைக்கப்பட்ட அம்மோட்டார் வாகனம் தொடர்பில் விதிப்பனவின் கொடுப்பனவுக்கான எண்பிப்பை முன்வைத்தல் வேண்டும்.

10. (1) குறித்துரைக்கப்பட்ட மோட்டார் வாகனமொன்றின் பதிவு செய்யப்பட்ட சொந்தக்காரரால் 1995 ஏப்ரில் 1 ஆம் திகதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் ஆண்டிற்குச் செலுத்தப்படற்பாலதான விதிப்பனவு இயைபான திகதியன்று அல்லது அதன்முன் அவரால் செலுத்தபடாதவிடத்து விதிப்பனவு தவணை தவறுகையில் உள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய சொந்தக்காரர் அத்தகைய திகதியிலிருந்து தவறாளரொருவராகக் கருதப்படுதலும் வேண்டும்.

(2) விதிப்பனவு எதுவும் உட்பிரிவு (1) நடைமுறையிலிருப்பதன் காரணமாக தவணை தவறுகையிலிருப்பதாகக் கருதப்படுமிடத்து, தவறாளர் விதிப்பனவிற்கு மேலதிகமாக விதிப்பனவு ஐம்பது சதவீதத்திற்கு சமமான தொகையொன்றின் தண்டப்பணமொன்றைச் செலுத்துவதற்காளாதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் இவ்வத்தியாயத்தின்கீழ் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் விதிப்பனவு தவணை தவறுகையிலிருக்குமிடத்து, ஆணையாளர், 11 ஆம் பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு அத்தகைய விதிப்பனவை அறவிட முற்படுவதற்கு முன்னர் எழுத்திலான அறிவித்தல் மூலம் அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் தவணைதவறுகையிலுள்ள விதிப்பனவைச் செலுத்துமாறு தவறாளரைத் தேவைப்படுத்துதல் வேண்டும்.

(4) அறிவித்தலொன்று பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரருக்கு நேரடியாக சேர்ப்பிக்கப்பட்டால் அல்லது அவ்வாகனத்தின் பதிவுச் சான்றிதழில் தரப்பட்டுள்ள முகவரியில் அவருக்கு முகவரியிடப்பட்டு பதிவுத் தபாலில் அனுப்பப்பட்டால் அத்தகைய அறிவித்தல் அவருக்கு முறையாகச் சேர்ப்பிக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும். பதிவுத் தபாலில் அனுப்பப்பட்ட அறிவித்தலொன்றின் விடயத்தில், அறிவித்தலானது, அது சாதாரணமாக அவருக்கு ஒப்படைக்கப்படும் திகதியன்று தவறாளரால் பெறப்பட்டிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

11. பத்தாம் பிரிவின்கீழ் அனுப்பப்படும் அறிவித்தலொன்றில் குறிப்பீடு செய்யப்பட்டிருக்கும் திகதி முடிவடையும் முன்னர் விதிப்பனவுத் தொகை செலுத்தப்பட்டிருக்காதவிடத்து, ஆணையாளர், அத்தகைய விதிப்பனவுத் தொகையையும் அத்தகைய விதிப்பனவைச் செலுத்துவதற்குத் தவறியுள்ள பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரரின் பெயரையும் அவர் கடைசியாக வசித்த இடத்தையும் கொண்டிருக்கும் சான்றிதழொன்றை, அத்தகைய இடம் எப்பிரிவுக்குள் அமைந்துள்ளதோ அப்பிரிவின்மீது நியாயாதிக்கம் கொண்டுள்ள நீதிவான் ஒருவருக்கு வழங்கலாம். நீதிவான் அதன்மேல், விதிப்பனவை அறவிடுவதற்கு தவறுகை புரிந்தவருக்கு எதிராக ஏன் மேலும் வழக்கு நடவடிக்கைகள் எடுக்கப்படக்கூடாதென்பதற்கான காரணம் காட்டுவதற்காகத் தம்முன் தோன்றுமாறு அத்தகைய தவறுகை புரிந்தவரை அழைத்தல் வேண்டும். அத்துடன், போதுமான அளவு காரணம் காட்டத் தவறுகின்றவிடத்து, செலுத்துவதிற் தவறுகை புரியப்பட்டிருக்கும் விதிப்பனவானது, மறியற்றண்டனையினால் தண்டிக்கப்படற்பாலதல்லாத, குற்றப்பணத்தினால் மட்டுமே தண்டிக்கப்படற்பாலதான தவறொன்றுக்கு அத்தகைய தவறுகை புரிந்தவர்மீது நீதிவானின் தண்டனை விதிப்பொன்றின்மூலம் சுமத்தப்பட்ட குற்றப்பணமொன்று என்றாற்போன்று கருதப்படுதல் வேண்டும். அத்துடன், அத்தகைய தவறொன்றுக்குச் சுமத்தப்படும் குற்றப்பணமொன்றின் கொடுப்பனவில் தவறுகை புரிதல் தொடர்பிலான 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கக் குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் 291 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் (அதன் (அ), (ஈ) அத்துடன் (i) என்னும் பந்திகள் தவிர), அதன்மேல் ஏற்புடையனவாதல் வேண்டும் என்பதுடன், நீதிவான், அவ்வுட்பிரிவின் ஏற்பாடுகள் மூலம் அத்தகைய தண்டனை விதிக்கின்றபோது செய்திருக்கக்கூடிய ஏதேனும் பணிப்புரையை ஆக்கலாம்.

பாகம் IV
நானாவிதம்

12. (1) டீசல் மோட்டார் வாகனமொன்றின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர் ஒருவர், அவ்வாகனம் ஆறு பேர்களுக்குக் குறையாத எண்ணிக்கை கொண்ட பிள்ளைகளைப் பள்ளிக்கூடங்களுக்கும் பள்ளிக்கூடங்களிலிருந்தும் அல்லது ஆறு பேர்களுக்குக் குறையாத எண்ணிக்கை கொண்ட அலுவலகப் பணியாட்டொகுதியினரை அலுவலகங்களுக்கும், அலுவலகங்களிலிருந்தும் அல்லது வேலைத்தலங்களுக்கும் வேலைத்தலங்களிலிருந்தும் கொண்டு செல்வதற்கு அல்லது பண்டங்கள் கொண்டு செல்வதற்குக் கிரமமாகப் பயன்படுத்தப்படுகின்ற ஒரு வாகனமாக அத்தகைய வாகனத்தைப் பதிவுசெய்யும் நோக்கத்துக்காக ஆணையாளருக்கு விண்ணப்பமொன்று செய்யலாம். அத்தகைய வாகனம் எதுவும் அத்தகைய நோக்கத்துக்காகக் கிரமமாகப் பயன்படுத்தப்படவிருக்கிறது. அததுடன் விடயத்துக்கேற்றவாறு அத்தகைய வாகனத்தில் கொண்டுசெல்லப்படவிருக்கும் பிள்ளைகளின் அல்லது அலுவலர்களின் எண்ணிக்கை பற்றிய வெளிப்படுத்துகையொன்று அதனோடு இணைக்கப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் செய்யப்பட்ட விண்ணப்பமும் வெளிப்படுத்துகையும் கிடைக்கப்பெற்று அதில் செய்யப்பட்டுள்ள உறுதிக்கூற்றுகளின் உண்மைத் தன்மையில் திருப்தியுற்றதன்மேல், ஆணையாளர், விண்ணப்பம் எவ்வாண்டு தொடர்பில் செய்யப்படுகிறதோ, அவ்வாண்டின்போது விண்ணப்பத்தில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள நோக்கத்துக்காகக் கிரமமாகப் பயன்படுத்தப்படும் வாகனம் என அத்தகைய வாகனத்தைப் பதிவு செய்தல் வேண்டும்.

(3) டீசல் மோட்டார் வாகனெமான்றின் பதிவு செய்யப்பட்ட சொந்தக்காரர் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அவரினால் செய்யப்பட்ட விண்ணப்பம் அல்லது வெளிப்படுத்துகை எதிலும் பொய்யான சரியில்லாத கூற்றொன்றைச் செய்திருக்கிறார் என அல்லது அத்தகைய டீசல் மோட்டார் வாகனமானது, அது எந்நோக்கத்துக்காகக் பதிவு செய்யப்பட்டதோ அந்நோக்கத்துக்காகப் பயன்படுத்தப்படவில்லையென ஆணையாளர் காணுகின்றவிடத்து, அவர், அத்தகைய பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர் தம்பக்க உரையை எடுத்தியம்ப அவருக்கு ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுத்த பின்னர், (2) ஆம் உட்பிரிவின்கீழ் அத்தகைய டீசல் மோட்டார் வாகனம் தொடர்பில் வழங்கப்பட்ட பதிவை இல்லாதாக்கலாம். அத்தகைய இல்லாதாக்கல் ஒவ்வொன்றும், அத்தகைய பதிவானது, எவ்வாண்டு தொடர்பில் செய்யப்பட்டதோ, அவ்வாண்டு தொடங்கும் திகதியிலிருந்து பயனுறுதல் வேண்டும்.

13. (1) அமைச்சர், விதித்துரைக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்படும் கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் அது கசெற்றில் வெளியிடப்படும் திகதியன்று அல்லது அத்தகைய ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய திகதியன்று வலுவுக்கு வருதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஒழுங்குவிதி கசெற்றில் வெளியிடப்படும் திகதியிலிருந்து மூன்றுமாத காலப்பகுதியொன்றுக்குள் பாராளுமன்றத்தின்முன் கொணரப்படுதலும் வேண்டும், அல்லது அத்தகைய காலப்பகுதிக்குள் பாராளுமன்றக் கூட்டம் எதுவும் நடத்தப்படாவிட்டால், அத்தகைய காலப்பகுதி முடிவடைந்தபின்னர் நடாத்தப்படும் பாராளுமன்றத்தின் முதல் கூட்டத்தில், அத்தகைய ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென்ற பிரேரணை ஒன்றின்மூலம் பாராளுமன்றத்தின்முன் கொணரப்படுதல் வேண்டும். அத்தகைய பிரேரணையொவ்வொன்றிற்குமான அட்டவணையில், பிரேரணை எவ்வொழுங்குவிதி பற்றிக் குறிப்பீடு செய்கின்றதோ அவ்வொழுங்குவிதியின் உரையமைப்புத் தரப்பட்டிருத்தல் வேண்டும்.

(3) அங்கீகரிப்பதற்குப் பாராளுமன்றம் மறுக்கின்ற (1) ஆம் உட்பிரிவின்கீழான ஒழுங்குவிதி எதுவும், அத்தகைய மறுப்புத் தெரிவிக்கப்பட்ட திகதியிலிருந்து அதன்கீழ் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி நீக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும். அத்தகைய ஒழுங்குவிதி எதுவும் எத்திகதியிலிருந்து நீக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுகின்றதோ, அத்திகதி பற்றிய அறிவிப்பு கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

14. இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகள், அத்தகைய பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர் ஏதேனும் பிறநாட்டு அரசாங்கமாக அல்லது ஐக்கிய நாடுகள் சபையாக அல்லது அதன் எவையேனும் முகவர் நிலையங்களாக அல்லது ஏதேனும் பிறநாட்டு அரசாங்கத்தின் இலங்கையிலுள்ள இலங்கைப் பிரஜை ஒருவர் அல்லாத பிரதிநிதியாக (அவர் எத்தன்மைத்தான எப்பெயர் , எப்பண்புப்பெயர் அல்லது பதவிப்பெயர் கொண்டு அழைக்கப்பட்டாலுஞ்சரி, அல்லது ஐக்கிய நாடுகள் சபையின் அல்லது அதன் எவையேனும் முகவர் நிலையங்களின் பிரதிநிதியாகி அல்லது அத்தகைய ஏதேனும் அரசாங்கத்தின் அல்லது ஐக்கிய நாடுகள் சபையின் அல்லது அதன் எவையேனும் முகவர் நிலையங்களின் இலங்கையிலுள்ள வியாபார ஆணையாளராக அல்லது காவற்றூது அலுவலராக அல்லது, அத்தகைய ஏதேனும் பிரதிநிதியின் பணியாட்டொகுதியில் இருக்கின்ற ஆள் எவரும் இலங்கைப் பிரஜையொருவராக இல்லாதிருக்கின்ற அல்லது அத்தகைய ஏதேனும் பிறநாட்டின் அத்தகைய ஏதேனும் அரசாங்கத்தின் அல்லது ஐக்கிய நாடுகள் சபையின் அல்லது அதன் எவையேனும் முகவர் நிலையங்களின் அல்லது ஏதேனும் குறித்துரைக்கப்பட்டுள்ள சர்வதேச

ஒழுங்கமைப்பின் ஆணையாளராக அல்லது காவற்றூது அலுவலராக அல்லது அதன் இலங்கைப் பிரஜையொருவராக இல்லாதிருக்கின்ற பிரதிநிதியாக இருக்கின்றவிடத்து, ஏற்புடையனவாதல் ஆகாது.

இப்பிரிவின் நோக்கங்களுக்காக, குறித்துரைக்கப்பட்ட ஒரு சர்வேதச ஒழுங்கமைப்பு என்பது, கசெற்றில் வெளியிடப்படும் அறிவித்தல்மூலம் நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் அமைச்சரினால் அவ்வாறு குறித்துரைக்கப்படும் ஒழுங்கமைப்பு ஒன்று ஆகும்.

15. இச்சட்டத்தின் நிருவாகத்துக்கு ஆணையாளர் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

16. குறித்துரைக்கப்பட்ட மோட்டார் வாகனமொன்றின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர் அத்தகைய மோட்டார் வாகனம் தொடர்பில் விதிப்பனவொன்றை 1995, ஏப்பிரில் 1 ஆம் திகதியன்றோ அல்லது அதற்குப் பின்னரோ ஆனால் இச்சட்டம் தொடங்கும் திகதிக்குமுன்னர் செலுத்துமாறு தேவைப்படுத்தப்படுகின்றவிடத்து, அத்தகைய பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர் இச்சட்டம் தொடங்கிய திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் ஆணையாளருக்கு விதிப்பனவைச் செலுத்தினால், அவர், எல்லா நோக்கங்களுக்காகவும் அத்தகைய தேவைப்பாட்டுடன் இணங்கியொழுகிவிட்டார் எனக் கருதப்படுதல் வேண்டும். அத்தகைய விதிப்பனவு எதுவும் அவ்வாறு செலுத்தப்படாதவிடத்து, இச்சட்டம் தொடங்கிய திகதியிலிருந்து மூன்றுமாத காலப்பகுதியொன்று முடிவடைந்தபின்னர் அத்தகைய விதிப்பனவு தொடர்பில் தவறுகை புரியப்பட்டுள்ளது எனக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர், இச்சட்டத்தின் கருத்தெல்லைக்குள் அத்தகைய திகதியிலிருந்து தவறுகை புரிந்த ஒருவராகக் கருதப்படுதலும் வேண்டும்.

17. இச்சட்டத்தின் இவ்வத்தியாயத்தில் சந்தர்ப்பம் வேறுவகையில் தேவைப்படுத்தினாலொழிய

"ஆணையாளர்" என்பது, மோட்டார் வாகனப் போக்குவரத்துச் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் எனப் பொருள்படும்;

"டீசல் மோட்டார் வாகனம்" என்பது, டீசலைப் பயன்படுத்துகின்ற அல்லது டீசலைப் பயன்படுத்தக்கூடியவாறு இசைவாக்கப்பட்ட வாகனம் எனப் பொருள்படும்;

"காப்புறுதி செய்பவர்", என்பது 1993 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 16 ஆம் திகதிய, 754/7 ஆம் இலக்க, அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் பகிரங்க கூட்டத்தாபனங்களை அல்லது அரசாங்கத்துக்குச் சொந்தமான தொழில் பொறுப்பு முயற்சிகளை 1987 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்கப் பகிரங்கக் கம்பெனிகளாக மாற்றும் சட்டத்தின்கீழ் பகிரங்கக்கம்பெனி ஒன்றாகக் கூட்டிணைக்கப்பட்ட இலங்கைக் காப்புறுதிக் கூட்டத்தாபனம் அல்லது 1979 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்கக் காப்புறுதியின் (விசேட ஏற்பாடுகள்) கீழ் தாபிக்கப்பட்ட சுதந்திரமானகூட்டுத்தாபனம் அல்லது, காப்புறுதித் தொழிலைச் செய்வதற்கென அதிகாரமளிக்கப்பட்டிருக்கின்றதென 1962 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கக் காப்புறுதிச் சட்டத்தின் கட்டுப்பாட்டின்கீழ் ஏதேனும் கம்பெனி எனப் பொருள்படும்;

"தரை வாகனம்" என்பது, எந்நிலப்பகுதியிலிலும் பயன்படுத்தப்படக்கூடியவாறு சரிசெய்யப்பட்டதும் வாகத்தின் மாதிரியும் சிலிண்டர் திறனளவும் விதித்துரைக்கப்பட்டுள்ளனவுமான ஏதேனும் மோட்டார் வாகனம் எனப் பொருள்படும்;

"ஆடம்பர மோட்டார் வாகனம்" என்பது, தரை வாகனம் ஒன்று தவிர்ந்த எந்த டீசல் மோட்டார் வாகனத்தின் சிலிண்டர் திறன் அளவு 2500 க.செ.மீ.ஐ விஞ்சுகின்றதோ அந்த டீசல் மோட்டார் வாகனம் அல்லது அந்தப் பெற்றோல் மோட்டார் வாகனத்தின் திறன் அளவு 2000 க.செ.மீ.ஐ விஞ்சுகிறதோ அந்தப் பெற்றோல் மோட்டார் வாகனம் எனப் பொருள்படும்;

"அமைச்சர்" என்பது போக்குவரத்து என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர் எனப் பொருள்படும்;

மோட்டார் சைக்கிள்", "மோட்டார் ட்ரை சைக்கிள்", "மோட்டார் நோயாளர் வண்டி", "மோட்டார் பிரேத வண்டி" மற்றும் வலுவற்றோர் வண்டி" என்பனவற்றுக்கு, மோட்டார் வாகனப் போக்குவரத்துச் சட்டத்தில் குறித்தொதுக்கப்பட்டுள்ள அவ்வவற்றுக்குரிய பொருள் உண்டு;

"மோட்டார் வாகனம்" என்பது, மோட்டார் சைக்கிள், மோட்டார் ட்ரை சைக்கிள், மோட்டார் நோயாளர் வண்டி, மோட்டார் பிரேத வண்டி, வலுவுற்றோர் வண்டி, லொறி, உழவு இயந்திரம் அல்லது கை உழவு இயந்திரம் அல்லாததும் ஒன்பது பேர்களுக்கு மேற்படாத மூன்று பேர்களுக்குக் குறையாததுமான ஆட்களையும் (சாரதி உட்பட) அவர்களது பொருட்களையும் ஏற்றிச் செல்வதற்கென நிர்மாணிக்கப்பட்டு அல்லது இசைவாக்கப்பட்டு இயந்திரத்தினால் உந்தப்படும் வாகனம் எதுவும் எனப் பொருள்படும்;

"பெற்றோல் மோட்டார் வாகனம்" என்பது மோட்டார் வாகனப் போக்குவரத்துச் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டது எனப் பொருள்படும்.;

"இயைபான திகதி" என்பது,

(அ) ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றைந்தாம் ஆண்டு ஏப்ரில் 1 ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் பதிவுசெய்யப்பட்ட குறித்துரைக்கப்பட்ட மோட்டார் வாகனம் தொடர்பில், அத்துடன் அது எவ்வாண்டில் பதிவு செய்யப்பட்டதோ அவ்வாண்டு தொடர்பில் அத்தகைய குறித்துரைக்கப்பட்ட மோட்டார் வாகனம் பதிவுசெய்யப்பட்ட திகதி எனப் பொருள்படும்.

(ஆ) ஆயிரத்து தொளாயிரத்துத் தொண்ணூற்றைந்தாம் ஆண்டு ஏப்ரில் 1 ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் பதிவுசெய்யப்பட்ட குறித்துரைக்கப்பட்ட வாகனம் தொடர்பில் அத்துடன், அது எவ்வாண்டில் பதிவுசெய்யப்பட்டதோ அவ்வாண்டுக்குப் பின்வரும் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட குறித்துரைக்கப்பட்ட வாகனம் தொடர்பில், அத்தகைய குறித்துரைக்கப்பட்ட மோட்டார் வாகனம் எத்திகதியன்று பதிவுசெய்யப்பட்டதோ அத்திகதியோடு நேரொத்திருக்கும் அத்தகைய பின்வரும் ஆண்டிலான திகதி என அல்லது அத்தகைய பின்வரும் ஆண்டில் நேரொத்த திகதி எதுவும் இல்லாதிருக்கின்றவிடத்து, அத்தகைய குறித்துரைக்கப்பட்ட மோட்டார் வாகனம் எத்திகதியன்று பதியப்பட்டதோ, அத்திகதியோடு நேரொத்ததானதும் அத்தகைய பின்வரும் ஆண்டில் உள்ளதுமான திகதி எனப் பொருள்படும்.

(இ) 1995 ஏப்ரில் 1 ஆம் திகதியன்றுக்கு முன்னரும், 1995 ஏப்ரில் 1 ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னரான ஏதேனும் ஆண்டின் பதிவு செய்யப்பட்டதான குறித்துரைக்கப்பட்ட மோட்டார் வாகனம் ஒன்று தொடர்பில் எந்தத் திகதியன்று அத்தகைய குறித்துரைக்கப்பட்ட மோட்டார் வாகனம் பதிவு செய்யப்பட்டதோ அந்த ஆண்டிலான எந்தத் திகதிக்கு நேரொத்த திகதி என்றும், அத்தகைய ஆண்டில் நேரொத்த திகதி இல்லாவிடத்து, அந்தத் திகதியன்று அத்தகைய குறித்துரைக்கப்பட்ட மோட்டார் வாகனம் பதிவு செய்யப்பட்டதோ அந்த ஆண்டிலான அந்தத் திகதிக்கு அடுத்துவரும் திகதிக்கு நேரொத்த திகதி என்றும் பொருள்படும்.

"ஓரளவு ஆடம்பரமான இரட்டை நோக்கு மோட்டார் வாகனம்" என்பது இரட்டை நோக்க மோட்டார் வாகனம் எனப் பதிவு செய்யப்பட்டதான ஓர் ஆடம்பர மோட்டார் வாகனம் என்று பொருள்படும்;

"ஓரளவு ஆடம்பர மோட்டார் வாகனம்" என்பது 2,200 க.செ.மீற்றருக்கு மேற்பட்ட ஆனால் 2500 க.செ. மீற்றருக்கு மேற்படாத சிலிண்டர் திறனளவைக் கொண்ட டீசல் மோட்டார் வாகனம் அல்லது 1,800 க.செ. மீற்றருக்கு மேற்பட்ட ஆனால் 2,000 க.செ. மீற்றருக்கு மேற்படாத சிலிண்டர்

திறனளவு கொண்ட பெற்றோல் மோட்டார் வாகனம் எனப்பொருள்படுமென்பதுடன் நிலவாகனமொன்றையும் உள்ளடக்குவதாகக் கருதப்படுதல் வேண்டும்.

"குறித்துரைக்கப்பட்ட மோட்டார் வாகனம்" என்பது ஏதேனும் மோட்டார் வாகனம், ஏதேனும் ஆடம்பர மோட்டார் வாகனம், ஏதேனும் ஓரளவு ஆடம்பர மோட்டார் வாகனம் அல்லது ஏதேனும் ஓரளவு ஆடம்பர இரட்டை நோக்க மோட்டார் வாகனம் என்று பொருள்படும் ;

"ஆண்டு" என்பது, ஏதேனும் ஆண்டில் ஏப்ரில் 1 ஆம் திகதி தொடங்கி அடுத்து வரும் ஆண்டு மார்ச் 31 ஆம் திகதிவரையிலுமான பன்னிரண்டுமாதக் காலப்பகுதி என்று பொருள்படும்.

அத்தியாயம் II

புடைவைப் பங்குக் குறித்தொதுக்கல் ஒன்றின்கீழ் ஏற்றுமதி செய்யப்படும் புடைவைகள், புடைவை உற்பத்திப் பொருட்கள் என்பன மீதிலான தீர்வை விதிப்பனவும் சேகரிப்பும்

18. புடைவைப் பங்குக் குறித்தொதுக்கல் ஒன்றின்கீழ் ஏற்றுமதி செய்யப்படும் புடைவைகள், புடைவை உற்பத்திப் பொருட்கள் என்பன ஒவ்வொன்றின் மீதும் 1995, ஏப்ரில் 1 ஆம் திகதியிலிருந்து இச்சட்டத்திற்கான நான்காம் அட்டவணையில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளவாறான அத்தகைய வீதங்களிலான தீர்வையொன்று விதிக்கப்பட்டு அறவிடப்பட்டு அத்துடன் செலுத்தப்படுதலும் வேண்டும்.

19. (1) பதினெட்டாம் பிரிவின்கீழ் புடவைப் பங்குக் குறித்தொதுக்கல் ஒன்றின்கீழ் ஏற்றுமதி செய்யப்படும் ஏதேனும் புடவை அல்லது புடவை உற்பத்திப் பொருட்கள் என்பன மீது செலுத்தப்படற்பாலதான தீர்வை எந்தப் பதிவுசெய்த ஏற்றமதியாளருக்கு அத்தகைய புடைவைப் பங்குக் குறித்தொதுக்கலானது வழங்கப்பட்டுள்ளதோ அந்தப் பதிவுசெய்த ஏற்றுமதியாளரால், இயைபான அதிகாரிக்குச் செலுத்தப்படுதல் வேண்டும். அத்தகைய புடைவை அல்லது புடைவை உற்பத்திப் பொருள் ஏற்றுமதிசெய்யப்பட்ட பின்பும் தீர்வையானது பதிவுசெய்த ஏற்றுமதியாளரால், அத்துடன் அவர் அத்தகைய ஏற்றுமதியானது புடவைப் பங்குக் குறித்தொதுக்கலொன்றின் கீழானது என்பதை எண்பிப்பதற்கான ஏற்றுமதி உரிமமொன்றிற்கு அல்லது வேறு ஆவணப்படுத்துகைக்கு விண்ணப்பிக்கும் நேரத்திலும் செலுத்தப்படலாம்.

(2) இயைபான அதிகாரியானவர் அதிகார சபையினால் குறித்துரைக்கப்பட்ட விதத்தில் இச்சட்டத்தின்கீழ் அவரால் பெற்றுக்கொள்ளப்படும் எல்லாத் தீர்வைகளையும் பெற்றுக்கொண்டமை பற்றி அறிவித்தல் வேண்டும்.

20. பதிவு செய்த ஏற்றுமதியாளரான, 18 ஆம் பிரிவின்கீழ் செலுத்துவதற்குரித்தான ஏதேனும் தீர்வையை 19 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட உரிமத்திற்கு அல்லது ஆவணப்படுத்துகைக்கு விண்ணப்பிக்கும் நேரத்தில் செலுத்துவதற்குத் தவறுகின்றவிடத்து அல்லது மறுக்கின்றவிடத்து, இயைபான அதிகாரி அத்தகைய உரிமத்தை அல்லது வேறு ஆவணப்படுத்துகையை அத்தகைய பதிவுசெய்யப்பட்ட ஏற்றுமதியாளருக்கு வழங்க மறுப்பதும், புடைவைப் பங்குச் சபை அத்தகைய பதிவு பெற்ற ஏற்றுமதியாளருக்கு வழங்கிய அப்போதைக்கு வலுவிலிருக்கின்றதான ஏதேனும் புடவைப் பங்குக் குறித்தொதுக்கலையும் இல்லாதாக்குவதும் சட்டமுறையானதாதல் வேண்டும்.

21. இயைபான அதிகாரியானவர், இச்சட்டத்தின்கீழ், அவரால் சேகரிக்கப்பட்ட எல்லாத் தீர்வைகளையும் திரட்டு நிதியத்திற்கு வரவு வைக்கச் செய்வித்தல் வேண்டும்.

22. இச்சட்டத்தின்கீழ் புடவைகள், புடவை உற்பத்திப் பொருட்கள் என்பன மீது 1995 ஏப்பிரில் 1 ஆம் திகதிக்குப் பின்னரும் இச்சட்டம் தொடங்குவதற்கு முன்னரும் செலுத்தப்படற்பாலதான எல்லாத் தீர்வைகளும் இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு முன்பு பதிவுபெற்ற ஏற்றுமதியாளர்

ஒருவரிடமிருந்து அறிவிடப்பட்ட எல்லாத் தீர்வைகளும் எல்லா நோக்கங்களுக்காகவும் செல்லுபடியுள்ளவிதமாக அறிவிடப்பட்டதாகக் கருதப்படுதலும் அத்துடன் அறவிடப்படுதலும் வேண்டும்.

23. ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றைந்து ஏப்ரில் 1 ஆம் திகதியன்று தொடங்குகின்றதும், இச்சட்டம் தொடங்கும் திகதியன்று முடிவடைகின்றதுமான காலப்பகுதியின்போது பதிவுசெய்யப்பட்ட ஏற்றுமதியாளர் ஒருவரால் ஏற்றுமதி செய்யப்பட்ட எவையேனும் புடவைகள் அல்லது புடவை உற்பத்திப் பொருட்கள், இச்சட்டத்தின்கீழ் ஏதேனும் தீர்வையைச் செலுத்துவதற்கு ஆளாகும் பதிவுசெய்யப்பட்ட ஏற்றுமதியாளரொருவர் இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள்ளாக அத்தீர்வையை, இயைபான அதிகாரிக்குச் செலுத்துதல் வேண்டும். பதிவுசெய்யப்பட்ட ஏற்றுமதியாளரொருவர் அத்தகைய காலப்பகுதிக்குள்ளாக அத்தகைய தீர்வையைச் செலுத்தத் தவறுகின்றவிடத்து, புடவைப் பங்குச் சபையானது அத்தகைய பதிவுசெய்யப்பட்ட ஏற்றுமதியாளருக்கு வழங்கப்பட்டு அப்போதைக்கு வலுவிருக்கின்றதான ஏதேனும் புடவைப் பங்குக் குறித்தொதுக்கலை நீக்கஞ் செய்யலாம்.

24. சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி, இச்சட்டத்தின் இந்த அத்தியாயத்தில்

"இலங்கை முதலீட்டுச் சபை" என்பது, 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை முதலீட்டுச் சபை என்று பொருளாகும்;

"பதிவுபெற்ற ஏற்றுமதியாளர்" என்பது, விடயத்திற்கேற்றாற்போன்று புடவைக் கைத்தொழில்கள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுடன் அல்லது இலங்கை முதலீட்டுச் சபையுடன் பதிவுசெய்தவரான புடவை, புடவை உற்பத்திப் பொருட்கள் என்பனவற்றின் உற்பத்தியாளர் என்று பொருள்படும்;

"இயைபான அதிகாரி" என்பது,

(அ) இலங்கை முதலீட்டுச் சபையுடன் பதிவுசெய்த ஏற்றுமதியாளர் தொடர்பில், இலங்கை முதலீட்டுச் சபையின் பணிப்பாளர் தலைமையதிபதி என்று பொருளாகும்; அத்துடன்

(ஆ) புடவைக் கைத்தொழில்கள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுடன் பதிவுசெய்த ஏற்றுமதியாளர் தொடர்பில் அத்தகைய அமைச்சின் செயலாளர் என்று பொருள்படும்;

"புடவை ஏற்றுமதிப் பங்கு" என்பது –

இலங்கை அரசாங்கத்திற்கும் வேறேதேனும் நாட்டின் அரசாங்கத்திற்கும் இடையிலான ஓர் உடன்படிக்கையின்கீழ் அல்லது அதற்கிணங்க குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றின்போது குறித்துரைக்கப்பட்டவோர் அளவிலான புடவைகளை அல்லது புடவை உற்பத்திப் பொருட்களை இலங்கையிலிருந்து அந்த வேறு நாட்டிற்கு ஏற்றுமதி செய்வதற்கான உரித்துடைமை;

"புடவை உற்பத்திப் பொருள்" என்பது, பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றிலிருந்து அல்லது எல்லாவற்றிலுமிருந்தும் ஆக்கப்பட்ட ஓர் உற்பத்திப் பொருள் என்று பொருளாகும்.

பருத்தி, கம்பளி, மனிதவர்க்க நார், பட்டுக்கலந்த நார் அல்லது வேறு தாவர நார்;

"புடவைப் பங்குக் குறித்தொதுக்கல்" என்பது, வேறொரு நாட்டுக்கு ஏற்புடைத்தான புடவை ஏற்றுமதிப் பங்கின்கீழ் குறித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதியின்போது, குறித்துரைக்கப்பட்ட அளவினதான புடவைகளை அல்லது புடவை உற்பத்திப் பொருட்களை, அந்த நாட்டுக்கு ஏற்றுமதி

செய்வதற்கு, பதிவுபெற்ற ஏற்றுமதியாளர் ஒருவரை இயலச்செய்கின்றதான புடவைப் பங்குச் சபையினால் வழங்கப்பட்ட ஏதேனும் அதிகாரவளிப்பு எனப் பொருளாகும்;

"புடவைப் பங்குச் சபை" என்பது, புடவை ஏற்றுமதிப் பங்கை நிருவகிக்கவும் முகாமைசெய்யவுமென அமைச்சரால் நியமிக்கப்பட்ட புடவைப் பங்குச் சபை என்று பொருளாவதுடன் அதன் உபகுழுவையும் உள்ளடக்கும்.

25. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

1995 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்த) சட்டம்

[1995, நவெம்பர் மாதம் 16 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

1. இச்சட்டம், 1995 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. ஆயிரத்துத் தொளாயிரத்து தொண்ணூறாம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்படும் கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 22 ஆம் பிரிவு, "வங்கி" என்பதன் வரைவிலக்கணணத்துக்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

"வங்கி" என்பது -

(அ) 1985 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிராந்திய கிராமிய அபிவிருத்தி வங்கிச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் வங்கி நீங்கலாக, 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழிற் சட்டத்தின் கருத்துக்குட்பட்ட வர்த்தக வங்கியொன்று என்றும்;

(ஆ) 165 ஆம் அத்தியாயமாக இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் என்றும்; அத்துடன்

(இ) 1971 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட தேசிய சேமிப்பு வங்கி என்றும் பொருளாகும்."

3. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

1995 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, மாகாண சபை மொத்த விற்பனை வரவு வரிகள் (எல்லைகளும் விலக்களிப்புக்களும்) சட்டம்

(1995, நவம்பர் மாதம் 17 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)

மொத்த மற்றும் சில்லறை விற்பனைகள் மீது மொத்த விற்பனை வரவு வரிகளை மாகாண சபைகள் எந்த எல்லைகளுக்குள்ளாகவும், எந்த விலக்களிப்புகளுக்கமைவாகவும் விதிக்கலாமோ அந்த எல்லைகளையும் விலக்களிப்புக்களையும் விதிப்புரைப்பதற்கானதொரு சட்டம்,

பாராளுமன்றத்தினால் சட்டத்தின்மூலம் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய எல்லைகளுக்குள்ளாகவும் அத்தகைய விலக்களிப்புகளுக்கமைவாகவும் மொத்த மற்றும் சில்லறை விற்பனைகள்மீது மொத்தவிற்பனை வரவு வரியை விதிக்கும் நியதிக் சட்டங்களை ஆக்குவதற்கு அரசியலமைப்பு மாகாண சபைகளுக்கு தத்துவத்தை வழங்கியுள்ளதாதலாலும்.

அத்துடன் மாகாண சபைகள் இத்தத்துவத்தை பயனுறு வகையில் பிரயோகிப்பதை இயலச் செய்யும் நோக்குடன் பாராளுமன்றம் அத்தகைய எல்லைகளையும் விலக்களிப்புகளையும் விதித்துரைப்பது உசிதமானதாகவுள்ளதாலும்:

ஆகவே, இப்பொழுது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

(1) இச்சட்டம். 1995 ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க மாகாணசபை மொத்தவிற்பனை வரவு வரிகள் (எல்லைகளும் விலக்களிப்புகளும்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்

2. (1) மொத்தம் மற்றும் சில்லறை விற்பனைகள் மீது மாகாணசபை ஒன்றினால் ஆக்கப்பட்ட நியதிச் சட்டம் ஒன்றின்மூலம் விதிக்கப்படும் மொத்தவிற்பனை வரவு வரி இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் எடுத்துக்காட்டப்பட்ட எல்லைகளுக்குள்ளாகவும், இச்சட்டத்திற்கான அட்டவணையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள விலக்களிப்புக்களுக்கு அமைவாகவும் இருத்தல் வேண்டும்.

(2) அத்தகைய மொத்த விற்பனை வரவு வரி அறவிடப்படவேண்டிய வீதமானது, எந்த மொத்தவிற்பனை வரவின் மீது அது விதிக்கப்படுகின்றதோ அந்த மொத்த விற்பனை வரவின் ஐந்து சதவீதத்தை எந்தசந்தர்ப்பத்திலும் விஞ்சுதலாகாது.

3) இச் சட்டத்திற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள மொத்த மற்றும் சில்லறை விற்பனையிலிருந்து எழுகின்ற மொத்த விற்பனை வரவானது, அத்தகைய மொத்த விற்பனை வரவு வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டதாதல் வேண்டும்,

3. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

4. இச்சட்டத்தின் "பொருள்" அத்துடன் " உற்பத்தியாளர் " என்பன 1981 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க மொத்த விற்பனை வரவு வரிச் சட்டத்தினால் அவற்றிற்கு குறித்தொதுக்கப்பட்ட அந்தந்த கருத்துக்களை முறையே கொண்டனவாகும்:

" மாகாண சபை " என்பது அரசியலமைப்பின் XVII அ எனும் அத்தியாயத்தினால் தாபிக்கப்பட்ட மாகாண சபை ஒன்று என்று பொருளாகும்.

1995 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, பணச் சட்டம் (திருத்தச்) சட்டம்

[1995, நவெம்பர் மாதம் 17 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

பணச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

1. இச்சட்டம், 1995 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, பண (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) (422 ஆம் அத்தியாயமான) பணச்சட்டத்தின் V ஆம் அத்தியாயத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய அத்தியாயம் இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் இது அச்சட்டவாக்கத்தின் Vஅ என்னும் அத்தியாயமாகப் பயனுறுதலும் வேண்டும்.

"அத்தியாயம் Vஅ

மத்திய வங்கி குறித்த சில கம்பனிகளில் பங்குகளைக் கொள்வனவு செய்தல்

மத்திய வங்கி குறித்த சில கம்பனிகளில் பங்குகளைக் கொள்ளவனவு செய்தல்

105அ. இச்சட்டத்திலுள்ள வேறு ஏதேனும் ஏற்பாடு எவ்வாறிருப்பினும் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்திலுள்ள எது எவ்வாறிருப்பினும் மத்திய வங்கியானது, பணச்சபையின் அபிப்பிராயப்படி இலங்கையிலுள்ள வங்கித் தொழில் மற்றும் நிதிசார் துறையின் மனித வளங்களையும் தொழில்நுட்பவியல் அபிவிருத்தியையும் முன்னெடுத்துச் செல்வதற்கும் ஊக்குவிப்பதற்குமென உருவாக்கப்பட்ட ஏதேனும் கம்பனியில் பங்குகளைக் கொள்ளலாம் அல்லது வைத்திருக்கலாம் அல்லது இச்சட்டத்தின் 98 ஆம் அல்லது 112 அ என்னும் பிரிவின் (i) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட எல்லா அல்லது எவையேனும் வசதிகளை ஏற்பாடு செய்யலாம்."

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 112 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அவை முதன்மைச் சட்டவாக்கத்தின் 112 அ மற்றும் 112ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்.

"வர்த்தகச் சார்பற்ற வங்கிகளின் முதனிலை வியாபாரிகளால் பேணப்படும் கணக்குகள்

112அ. மத்திய வங்கியானது,

(அ) பிணையங்களின் கொடுக்கல் வாங்கல்களைக் கொடுத்துத்தீர்க்கும் நோக்கத்திற்காக மத்திய வங்கியில் கணக்குகளைப் பேணுவதற்கு வர்த்தக சார்பற்ற வங்கிகளாகிய முதனிலை வியாபாரிகளுக்கும் ;

(ஆ) பங்குத் தொகைச் சான்றிதழ் இல்லாத பிணையங்களை வைத்திருத்தல், ஆயந்தீர்த்தல், நேரடிப் பங்கேற்பாளர்களிடையே பங்குத்தொகைச் சான்றிதழ் இல்லாத பிணையங்களில் கொடுக்கல் வாங்கல்களைச் செலுத்தித்தீர்த்தல் ஆகிய நோக்கத்திற்கென மத்திய வங்கியில் கணக்குகளைப் பேணுவதற்கு வர்த்தக வங்கிகள் அல்லாத எவரேனும் நேரடிப் பங்கேற்பாளர்கள் உட்பட நேரடிப் பங்கேற்பாளர்களுக்கு, வசதிகளை ஏற்பாடு செய்தல் வேண்டும்:

"நேரடிப் பங்கேற்பாளர்" என்பது, பதிவுசெய்யப்பட்ட பங்குத்தொகுதி, பிணையங்கள் கட்டளைச் சட்டத்தின் 21ஈ என்னும் பிரிவின் கீழ் அல்லது உள்ளூர் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டத்தின்கீழ் நேரடிப் பங்கேற்பாளர் நடுவராக நியமிக்கப்பட்ட ஆளொருவர் என்று பொருள்படும் ;

"வர்த்தகச் சார்பற்ற வங்கியான முதனிலை வியாபாரி" என்பது ஒரு வர்த்தக வங்கியல்லாத முதனிலை வியாபாரி ஒருவர் என்று பொருள்படும் ;

"முதனிலை வியாபாரி" என்பது பங்குத் தொகுதிக்கும் பிணையங்களுக்குமான முதனிலை மற்றும் இரண்டாந்தர எதிர்திறத்தவரொருவராக மத்திய வங்கியுடன் நடவடிக்கையை மேற்கொள்ளும் நோக்கத்திற்கு முதனிலை வியாபாரி ஒருவராக பணச்சபையால் நியமிக்கப்பட்ட ஏதேனும் வர்த்தக வங்கி, கம்பனி அல்லது வேறு ஆள் என்று பொருள்படும் ;

"பங்குத் தொகைச் சான்றிதழ் இல்லாத பிணையங்கள்" என்பது பங்குச் தொகைச் சான்றிதழ் இல்லாத விதத்தில் வழங்கப்பட்ட பிணையங்கள் என்று பொருள்படும் ; அத்துடன்

"பிணையங்கள்" என்பது –

(i) பங்குத் தொகைச் சான்றிதழ் இல்லாத விதத்தில் வழங்கப்பட்டதாயினுஞ்சரி, வேறு வகையில் வழங்கப்பட்டதாயினுஞ்சரி உள்ளூர் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்கள் ;

(ii) பங்குத் தொகைச் சான்றிதழ் இல்லாத விதத்தில் வழங்கப்பட்டதாயினுஞ்சரி வேறுவகையில் வழங்கப்பட்டதாயினுஞ்சரி பதிவுசெய்யப்பட்ட பங்குத் தொகுதி மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க வழங்கப்பட்டதான பதிவு செய்யப்பட்ட பங்குத் தொகுதி அல்லது பிணையங்கள் ;

(iii) பங்குத்தொகைச் சான்றிதழ் இல்லாவிதத்தில் வழங்கப்பட்டதாயினுஞ்சரி, வேறுவகையில் வழங்கப்பட்டதாயினுஞ்சரி, மத்திய வங்கியின் எவையேனும் பிணையங்கள் என்பது பொருள்படும்.

98 (i) அல்லது 213அ என்னும் பிரிவின் கீழ் பணிகளை நிறைவேற்றுவதற்கு கூட்டிணைக்கப்பட்ட ஏதேனும் குழு வசதிகளை ஏற்பாடு செய்தல்.

112ஆ. மத்திய வங்கியானது, 98 ஆம் பிரிவின் (i) ஆம் உட்பிரிவால் அல்லது 112அ என்னும் பிரிவால் அதன்மீது சுமத்தப்பட்ட கடமைகளைப் புரியும் நோக்கத்திற்கென அப்பிரிவுகளில் குறிப்பீடு செய்யப்பட்ட எல்லா வசதிகளையும் அல்லது அவற்றுள் எதனையும் ஏற்பாடு செய்வதற்கு ஏதேனும் கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்கு அதிகாரமளிக்கலாம்."

4. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்டசத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

1995 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம்

[1995, நவெம்பர் மாதம் 22 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சடடத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

1. இச்சட்டமானது, *1995* ஆம் ஆண்டின் *27* ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) *1979* ஆம் ஆண்டின் *28* ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் *9* ஆம் பிரிவு அப்பிரிவின் *(1)* ஆம் உட்பிரிவின் (ஆஆ) என்னும் பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

(1) "அலுவலகமுறையிலான வேதனாதிகள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அலுவலக முறையிலான வேதனாதிகள்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் :-

(2) அப்பந்தியின் (i) ஆம், உட்பந்தியை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாக பின்வரும் உட்பந்தியை இடுவதன் மூலமும் :-

"(i) திரட்டு நிதியத்திலிருந்து, குடியரசின்கீழ் கொடுப்பனவு பெறும் ஏதேனும் பதவியை வகிக்கும் ஏவரேனும் தனியாளின்;"

(3) அப்பந்தியின் (ix) ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் உட்பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் :-

"(x) ஏதேனும் சட்டத்தால் அல்லது சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்டதும் எந்தச் சபையின் அல்லது ஆணைக்குழுவின் எல்லா உறுப்பினர்களும் சனாதிபதியால் அல்லது அமைச்சர் ஒருவரால் நியமிக்கப்படுகிறார்களோ அந்த ஏதேனும் சபையின் அல்லது விசாரணை ஆணைக்குழுவின் ஓர் உறுப்பினருக்கு அல்லது ஊழியருக்கு".

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் *11* ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது

(1) அப்பிரிவின் (அ) என்னும் பந்தியை உடனடுத்து பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் ;

"(அஅ) எந்தப் ஃபிளாக்ஷிப் கம்பனியுடன் இலங்கை முதலீட்டுச் சபையால் உடன்படிக்கையொன்று செய்துகொள்ளப்பட்டுள்ளதோ அந்த ஃபிளாக்ஷிப் கம்பனியால் எந்தக் காலப்பகுதிக்கு, அக்கம்பனியின் இலாபங்களும் வருமானமும் அந்த உடன்படிக்கையின் நியதிகளின்கீழ் வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளனவோ அந்தக் காலப்பகுதியில் அல்லது அதன் பின்னரான ஓராண்டிற்குள் அத்தகைய கம்பனியில் எவ்விலாபங்களும் வருமானமும் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளதோ அவ்விலாபத்திலிருந்தும் வருமானத்திலிருந்தும் எவரேனும் பங்குதாரருக்குச் செலுத்தப்பட்ட ஏதேனும் பங்கிலாபமும்.

இப்பந்தியில், 'ஃபிளாக்ஷிப் கம்பனி' என்பது *1978* ஆம் ஆண்டின் *4* ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் *17* ஆம் பிரிவின்கீழ் இலங்கை முதலீட்டுச் சபையுடன் உடன்படிக்கையொன்றைச் செய்துகொண்டுள்ளதும் அத்தகைய உடன்படிக்கைக்கிணங்க அத்தகைய

உடன்படிக்கைக்கிணங்க, அத்தகைய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் கம்பனியால் கொண்டுநடாத்தப்படும் பொறுப்பு முயற்சியின் பாவனைக்கென –

(அ) ஏதேனும் கட்டிடத்தின் கொள்வனவில் அல்லது நிர்மாணத்தில் அல்லது ஏதேனும் காணியின் பொறியின், பொறித்தொகுதியின் அல்லது தளபாடங்களின் கொள்வனவில் அத்துடன் –

(ஆ) பந்தி (அ) என்பதில் உள்ளடக்கப்படாத ஏதேனும் சொத்தின் கொள்வனவில் அல்லது கொள்ளளவில், ஐம்பது மில்லியனுக்குக் குறையாத அமெரிக்க ஐக்கிய அரசின் டொலர்களை அல்லது வேறேதும் வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகையை இலங்கையில் முதலீடு செய்துள்ளதுமான ஒரு கம்பனி எனப் பொருள்படும் ;"

(2) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் 17ஈ ஆம், 18 ஆம் என்னும் இலக்கங்களுக்கும் சொற்களுக்கும் பதிலாக 17ஈ ஆம், 17ஒ ஆம், 18 ஆம் என்னும் இலக்கங்களையும் சொற்களையும் இடுவதன் மூலமும்,

4. பிரிவு 17ஒ என்பதை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவு 17 ஒ என்றாற்போன்று பயனுறுதலும் வேண்டும் :–

"மேம்பாடடைந்த தொழில் நுட்பவியலைப் பயன்படுத்தும் கம்பனியொன்றினால் கொண்டு நடாத்தப்படும் கைத்தொழிற் பொறுப்பு முயற்சியொன்றின் இலாபங்களும் வருமானமும் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல்.

17. ஒ (1) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் கம்பனியின் 3 ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்தெல்லைக்குட்பட்ட இலாபங்களும் வருமானமும் (மூலதனச் சொத்தின் விற்பனையிலிருந்தான எவையேனும் இலாபங்களையும் வருமானத்தையும் தவிர) எந்த வரிமதிப்பீட்டாண்டில் அத்தகைய கம்பனி, தொழிலைக் கொண்டு நடாத்தத் தொடங்கியதோ அந்த வரிமதிப்பீட்டாண்டின் தொடக்கத்திலிருந்து ஐந்து ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் –

(அ) 1995 ஏப்ரில் 1 ஆம் திகதியன்று அல்லது அதன்பின்னர் கூட்டிணைக்கப்பட்டதும் ;

(ஆ) எந்தக் கம்பனிக்கு இப்பிரிவு ஏற்புடைத்தாகின்றதோ அக்கம்பனியொன்றாக அதன் பொருட்டு 1996 செப்ரெம்பர் 30 ஆம் திகதியன்று அல்லது அதற்குமுன்னர் செய்யப்பட்ட எழுத்திலான விண்ணப்பமொன்றின் மீது 1997 மார்ச் 31 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கசெற்றில் வெளியிடப்பட்ட கட்டளையால் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டதும் ;

(இ) மேம்பாடடைந்த தொழில்நுட்பவியலைப் பயன்படுத்தி –

(i) எவையேனும் பொருட்களின் அல்லது வியாபாரப் பொருட்களின் உற்பத்திக்கென அல்லது தயாரிப்புக்கென; அல்லது

(ii) ஏதேனும் சேவையை வழங்குவதற்கென ;

ஏதேனும் கைத்தொழிற் பொறுப்பு முயற்சியைக் கொண்டு நடாத்துவதில் மட்டும் ஈடுபாடுள்ளதும் ;

(ஈ) அது கூட்டிணைக்கப்பட்ட திகதியிலிருந்து இரண்டாண்டு காலம் முடிவடையுமுன்னர் கம்பனியால் மேற்கொள்ளப்படும் பொறுப்பு முயற்சியின் உபயோகத்திற்கென, ஏதேனும் பொறித்தொகுதியின், எந்திரத்தின், பொருத்திகளின் அல்லது உபகரணத்தின் கொள்வனவில் பத்து மில்லியன் ரூபாவுக்குக் குறையாமல் முதலீடு செய்துள்ளதுமான ;

(உ) அது தொழிலைக் கொண்டுநடாத்தத் தொடங்கிய திகதியிலிருந்து ஆறு மாதங்களைக் கொண்டவொரு காலப்பகுதியைப் பிந்தாத ஒரு திகதியன்று உள்ளவாறு, அத்தகைய கம்பனியின் பணிப்பாளர்களைத் தவிர ஐம்பது ஊழியர்களுக்குக் குறையாதோரை தொழிலுக்கமர்த்துகின்றதும் அத்துடன் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஐந்தாண்டுகளைக் கொண்ட காலப்பகுதி முடிவுறும்வரை தொடர்ந்து தொழிலுக்கமர்த்துகின்றதுமானதும் ; அத்துடன்

(ஊ) முன்பிருந்த ஏதேனும் தொழிலைக் கூறுபடுத்துவதன் மூலம், புனரமைப்பதன் மூலம் அல்லது கொள்ளலின்மூலம் அமைக்கப்படாததுமான

ஏதேனும் கம்பனிக்கு ஏற்புடைத்தாதல் வேண்டும்.

இவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் உட்பந்தியின் நோக்கத்திற்கு "ஊழியர்" என்னும் சொல் 16 ஈ என்னும் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டுள்ளது."

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 23உ என்னும் பிரிவு –

(1) அப்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "17 ஈ என்னும் பிரிவு அல்லது 20 ஆம் பிரிவு அல்லது 22இ என்னும் பிரிவு" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக "17ஈ என்னும் பிரிவு, 17ஓ என்னும் பிரிவு அல்லது 20 ஆம் பிரிவு அல்லது 22இ என்னும் பிரிவு" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

(2) அப்பிரிவுக்கான ஓரக்குறிப்பில் "17ஈ, 20" என்னும் இலக்கங்களுக்குப் பதிலாக, "17ஈ, 17ஓ, 20" என்னும் இலக்கங்களை இடுவதன் மூலமும்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவு அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "17எ என்னும் பிரிவின்கீழ்" அல்லது 37ஏ என்னும் பிரிவின்கீழ் அல்லது 22அ என்னும் பிரிவின்கீழ்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "17ஏ என்னும் பிரிவின்கீழ் அல்லது 17ஏ என்னும் பிரிவின்கீழ் அல்லது 17ஓ என்னும் பிரிவின் கீழ் அல்லது 22அ" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :–

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் –

(அ) அவ்வுட்பிரிவின் (அஅஅஅஅ) என்னும் பந்தியில் "1992 ஏப்றில் 1 ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு, தொடர்பில் நாற்பத்திரண்டாயிரம் ரூபா விடுதொகையொன்று அத்துடன்" என்னும் சொற்களுக்கம் இலக்கங்களுக்கும் பதிலாக "1992 ஏப்பிரில் 1 ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் ஆனால் 1995 ஏப்பிரில் 1 ஆம் திகதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டு தொடர்பில்

நாற்பத்திரண்டாயிரம் ரூபா விடுதொகையொன்று" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ;

(ஆ) அவ்வுட்பிரிவின் (அஅஅஅஅ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் :-

"(அஅஅஅஅஅ) 1995 ஏப்பிரில் 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் அறுபதினாயிரம் ரூபா படியொன்றுடன்: அத்துடன் ."

(இ) அவ்வுட்பிரிவின் காப்புவாசகத்தில், "(அஅஅஅ) என்னும் பந்தியில் அல்லது (அஅஅஅஅ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "(அஅஅஅ) என்னும் பந்தியில் அல்லது (அஅஅஅஅ) என்னும் பந்தியில் அல்லது (அஅஅஅஅஅ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் -

(அ) அப்பிரிவிற்கான முதலாம் காப்புவாசகத்தில் -

(i) அக்காப்புவாசகத்தின் (ஊ) என்னும் பந்தியில் "1992 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "1992 ஏப்பிரில் 1 ஆம் திகதியன்று அல்லது அதன்பின்னர் ஆனால் 1995 ஏப்பிரில் 1 ஆம் திகதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ;

(ii) அக்காப்பு வாசகத்தின் (ஊ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் :-

"(எ) 1995 ஏப்பிரில் 1 ஆம் திகதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் அறுபதினாயிரம் ரூபா விடுதொகை ;"

(ஆ) அவ்வுட்பிரிவிற்கான இரண்டாம் காப்பு வாசகத்தில் -

(i) அக்காப்புவாசகத்தின் (i) ஆம் உட்பந்தியில், "இருக்குமிடத்து இருபத்தேழாயிரம் ரூபாவுக்கும், அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இருக்குமிடத்து இருபத்தேழாயிரம் ரூபாவுக்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ii) அக்காப்புவாசகத்தின் (ii) ஆம் உட்பந்தியில், "1992 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டொன்றாக இருக்குமிடத்து நாற்பத்திரண்டாயிரம் ரூபாவுக்கு" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "1992 ஏப்பிரில் 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர், ஆனால் 1995 ஏப்பிரில் 1 ஆம் திகதிக்கு முன்னர் தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டொன்றாக இருக்குமிடத்து நாற்பத்திரண்டாயிரம் ரூபாவுக்கு ; அத்துடன்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ; அத்துடன்

(iii) அக்காப்புவாசகத்தின் (ii) ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் உட்பந்தியைப் சேர்ப்பதன் மூலமும் :-

"(iii) அத்தகைய வரிமதிப்பீட்டாண்டு 1995 ஏப்பிரில் 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் மதிப்பீட்டாண்டொன்றாக இருக்குமிடத்து அறுபதினாயிரம் ரூபாவுக்கு ;"

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற்கான காப்பு வாசகத்தில் -

(அ) அக்காப்புவாசகத்தில் (iv) ஆம் உட்பந்தியில் "1986 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 1992 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்குமுன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு இருபத்தேழாயிரம் ரூபாவையும் ; "என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "1986 ஏப்பிரில் 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 1992 ஏப்பிரில் 1 ஆம் திகதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு இருபத்தேழாயிரம் ரூபாவையும் ;" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(ஆ) அக்காப்புவாசகத்தின் (v) ஆம் உட்பந்தியில் "தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு நாற்பத்திரண்டாயிரம் ரூபாவையும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஆனால் 1995 ஏப்பிரில் 1 ஆம் திகதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு நாற்பத்திரண்டாயிரம் ரூபாவையும் அத்துடன்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ;

(இ) அக்காப்புவாசகத்தின் (v) ஆம் உட்பந்தியை உடனடுத்து பின்வரும் உட்பந்தியை இடுவதன் மூலமும் :-

"(vi) 1995 ஏப்பிரில் 1 ஆம் திகதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு அறுபதினாயிரம் ரூபாவையும் ;"

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் -

(அ) அவ்வுட்பிரிவின் (vi) ஆம் பந்தியில் "1988 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையின் 11ஈ என்னும் அதனுடன்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்கங்களுக்கும் பதிலாக, "1988 ஏப்பிரில் 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 1992 ஏப்பிரில் 1 ஆம் திகதிக்கு முன்தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையின் 11ஈ என்னும்; அல்லது" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ;

(ஆ) அவ்வுட்பிரிவின் (vi) ஆம் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்திகளை இடுவதன் மூலமும் :-

"(vii) 1992 ஏப்ரில் 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 1994 ஏப்ரில் 1 ஆம் திகதிக்கு முன் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையின் 11உ என்னும் பாகத்தில் ; அல்லது

(viii) 1994 ஏப்ரில் 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையின் 11ஊ என்னும் பாகத்தில் ;"

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 32இஇ என்னும் பிரிவு, "பதினைந்து சதவீதம் என்ற வீதப்படி வருமானவரி அறவிடற்பாலதாதல் வேண்டும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

"பதினைந்து சதவீதம் என்ற வீதப்படி வருமானவரி அறவிடற்பாலதாதல் வேண்டும் ;

ஆயினும், இலங்கையிலுள்ள அத்தகைய ஆள் 11 ஆம் பிரிவின் (அஅ) என்னும் பந்தியின் கருத்தெல்லைக்குள் ஃபிளாக்ஷிப் கம்பனியொன்றாகவிருக்குமிடத்து அத்தகைய அரசுரிமை பத்துச் சதவீதப்படி வருமான வரிக்குப் பொறுப்பாதல் வேண்டும்".

10.முதன்மைச் சட்டவாக்கத்தின் 32உஉ என்னும் பிரிவு அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பந்தியில் (ii) ஆம் உட்பந்தியில் "1992 ஏப்ரில் 1 ஆம் திகதி அல்லது அதன்பின்னர் ஆனால் 1994 ஏப்ரில் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "1992 ஏப்பிரில் 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 1993 ஏப்ரில் 1 ஆம் திகதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ;

(2) அப்பந்தியின் (iii) ஆம் உட்பந்தியை நீக்கஞ்செய்வதன் மூலமும்.

11. முதன்மைச் சட்வாக்கத்தின் 32உஉ என்னும் பிரிவை உடனடுத்து பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகிறது என்பதுடன், அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 32உஉஉ என்னும் பிரிவு என்றாற்போன்று பயனுறுதலும் வேண்டும் :-

"1993 ஏப்பிரில் 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கு வரிமதிப்பீட்டாண்டிற்கு ஊழியத்திலிருந்தான இலாபங்கள் மீது வரிக்கெதிரான வரிவரவு

32உஉஉ. (1) அறுபத்தேழாம் பிரிவின் (7) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும் தனியாள் ஒருவர் தவிர்ந்த எந்தத் தனியாளின் வரிமதிப்பிடற்பாலதான வருமானம் அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு ஊழியத்திலிருந்தான வருமானங்களை உள்ளடக்குகின்றதோ அந்தத் தனியாளினால் 1993 ஏப்ரில் 1 ஆம் திகதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்குச் செலுத்தப்படற்பாலதான வருமானவரியிலிருந்து இப்பிரிவின் பின்னுறும் ஏற்பாடுகளுக்கிணங்க நிச்சயிக்கப்படும் ஒரு தொகை கழிக்கப்படுதல் வேண்டும் :-

(அ) அத்தகைய வரிமதிப்பீட்டாண்டு 1993 ஏப்ரில் 1 ஆம் திகதியின்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டாக இருக்குமிடத்தும் அத்துடன் அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய தனியாளின் ஊழியத்திலிருந்து இயைபான இலாபங்களின் தொகை –

(i) ஒரு இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் ரூபாவை விஞ்சாதவிடத்து

இருபத்தையாயிரத்து அறுநூற்றி ஐம்பது ரூபா, அல்லது

அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய தனியாளின் ஊழியத்திலிருந்து இயைபான இலாபங்களுக்கு ஏற்றிக் கூறப்படற்பாலதான வருமான வரித்தொகை என்பனவற்றுள் எது குறைவானதோ அதற்குச் சமமான ஒரு தொகை.

(ii) ஒரு இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் ரூபாவை விஞ்சுகின்றவிடத்து ஆயிரத்து எண்ணூறு ரூபா, அல்லது

அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய தனியாளின் ஊழியத்திலிருந்து இயைபான இலாபங்களின் அத்தகைய பாகத்திற்கு ஏற்றிக் கூறப்படற்பாலதான வருமானவரித்தொகை

என்பனவற்றுள் எது குறைவானதோ அதற்குச் சமமான ஒது தொகை,

(ஆ) அத்தகைய வரிமதிப்பீட்டாண்டு 1994 ஏப்ரில் 1 ஆம் திகதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டாக இருக்குமிடத்தும் அத்துடன் அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய ஊழியரின் ஊழியத்திலிருந்து இயைபான இலாபங்களின் தொகை –

(i) ஒரு இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் ரூபாவை விஞ்சாதவிடத்து –

இருபத்தோராயிரத்துத் தொளாயிரத்துத் ஐம்பது ரூபா, அல்லது

அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய தனியாளின் ஊழியத்திலிருந்து இயைபான இலாபங்களுக்கு ஏற்றிக்கூறப்படற்பாலதான வருமானவரித் தொகை என்பனவற்றில் எது குறைவானதோ அதற்குச் சமமான ஒரு தொகை ;

(ii) ஒரு இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் ரூபாவை விஞ்சுகின்றவிடத்தும் ஆனால் ஒரு இலட்சத்து எண்பதினாயிரம் ரூபாவை, விஞ்சாதவிடத்து –

பதினேழாயிரத்து ஒன்பதாயிரத்துப் பதினெட்டு ரூபாவிலிருந்து, ஒரு இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் ரூபாவின்மேல், அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய தனியாளின் ஊழியத்திலிருந்து இயைபான இலாபங்களின் விஞ்சு தொகையின் முப்பத்திரண்டும் ஐந்தில் நாலு சதவீதத்தால் குறைக்கப்பட்ட தொகை, அல்லது அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய தனியாளின் ஊழியத்திலிருந்து இயைபான இலாபங்களுக்கு ஏற்றிக் கூறப்படற்பாலதான வருமான வரித் தொகை

என்பனவற்றுள் எது குறைவானதோ அதற்குச் சமமான தொகை ;

(iii) ஒரு இலட்சத்து எண்பதினாயிரம் ரூபாவை விஞ்சுகின்றவிடத்து,

ஆறாயிரம் ரூபா, அல்லது

அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தனியாளின் ஊழியத்திலிருந்து இயைபான இலாபங்களுக்கு ஏற்றிக் கூறப்படற்பாலதான வருமானவரித் தொகைஎன்பனவற்றுள் எது குறைவானேதா அதற்குச் சமமான தொகை

(இ) அத்தகைய வரிமதிப்பீட்டாண்டு 1995 ஏப்ரில் 1 ஆம் திகதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டாக இருக்குமிடத்தும் அத்துடன் வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய தனியாளின் ஊழியத்திலிருந்து இயைபான இலாபங்களின் தொகை –

(i) ஒரு இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் ரூபாவை விஞ்சாதவிடத்து,

பதினையாயிரத்து எழுநூறு ரூபா ; அல்லது

அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய தனியாளின் ஊழியத்திலிருந்து இயைபான இலாபங்களுக்கு ஏற்றிக்கூறப்படற்பாலதான வருமான வரித்தொகை என்பவற்றுள் எது குறைவானேதா அதற்குச் சமமான தொகை ;

(ii) ஒரு இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் ரூபாவை விஞ்சுகின்றவிடத்தும் ஆனால் ஒரு இலட்சத்து ஏழாயிரத்து நானூறு ரூபாவை விஞ்சாதவிடத்து,

பன்னிரண்டாயிரத்து இருநூற்றி நாற்பத்துநாலு ரூபாவிலிருந்து ஒரு இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் ரூபாவின் மேல் அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய தனியாளின் ஊழியத்திலிருந்து இயைபான இலாபங்களின் விஞ்சுதொகையின் முப்பத்தைந்து சதவீதத்தால் குறைக்கப்பட்ட தொகை, அல்லது

அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தனியாளின் ஊழியத்திலிருந்து இயைபான இலாபங்களின் அத்தகைய பாகத்திற்கு ஏற்றிக் கூறப்படற்பாலதான வருமானவரியின் தொகை

என்பனவற்றுள் எது குறைவானதோ அதற்குச் சமமான தொகை,

(iii) ஒரு இலட்சத்து எழுபதினாயிரத்து நானூறு ரூபாவை விஞ்சுகின்றவிடத்து –

மூவாயிரம் ரூபா, அல்லது அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தனியாளின் தொழிலிலிருந்து இயைபான இலாபங்களுக்கு ஏற்றிக் கூறப்படற்பாலதான வருமானவரியின் தொகை

என்பனவற்றுள் எது குறைவானதோ அதற்குச் சமமான தொகை

(2) இப்பிரிவின் நோக்கங்களுக்கு –

(அ) எவரேனும் தனியாள் தொடர்பிலும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பிலும் "ஊழியத்திலிருந்து இயைபான வருமானங்கள்" என்பது –

(i) இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையின் iv ஆம் பாகத்தில் குறித்துரைக்கப்பட்ட வீதத்தில் வரி விதிக்கப்படற்பாலதானவாறான அத்தகைய இலாபங்களின் அத்தகைய பாகம் எதுவுமிருப்பின் அதனதும், அத்துடன்

(ii) 32 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் காப்பு வாசகத்தின் ஏற்பாடுகளின்கீழ் ஏற்பாடு செய்யப்பட்டவாறு 32 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவிற்கிணங்க வருமானவரி அறிவிடப்படற்பாலதாகின்றவாறான அத்தகைய இலாபங்களின் அத்தகைய பாகம் எதுவுமிருப்பின் –

அதனதும் கூட்டுத்தொகையை, அத்தகைய வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய தனியாளின் ஊழியத்திலிருந்து கிடைத்த இலாபங்களிலிருந்து கழித்த பின்னரான இலாபங்கள் என்று பொருள்படும்.

(ஆ) எவேரனும் தனியாள் தொடர்பிலும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பிலும் "ஊழியத்திலிருந்து இயைபான இலாபங்களுக்கு ஏற்றிக் கூறப்படற்பாலதான வருமான வரித்தொகை" என்பது, அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தனியாளினால் செலுத்தப்படற்பாலதான வரிக்குப் பொறுப்பான அந்தப் பணத்தொகை, அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தனியாளின் ஊழியத்திலிருந்தான இயைபான இலாபங்கள் எந்த விகிதாசாரத்தில் அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தனியாளின் இயைபான வரிமதிப்பிடற்பாலதான வருமானத்திற்குப் பொறுப்பாகின்றேதா அந்த விகிதாசாரத்தில் பொறுப்பாகும் அந்தப் பணத்தொகை என்று பொருள்படும்.

(இ) எவரேனும் தனியாள் தொடர்பிலும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பிலும் "இயைபான வருமான வரி" என்பது இச்சட்டத்தின் இப்பிரிவின் கீழாயினும்சரி, அல்லது வேறு ஏதேனும் பிரிவின் கீழாயினும்சரி, ஏதேனும் நிவாரணம் அளிக்குமுன்னரும் அத்துடன் இவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (i) ஆம் (ii) ஆம் பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்ட ஊழியத்திலிருந்தான இலாபங்கள் தொடர்பில் அதிலிருந்து வருமான வரியைக் கழித்தபின்னரான அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தனியாளினால் செலுத்தப்படற்பாலதான வருமானவரி என்று பொருள்படும்.

(ஈ) எவரேனும் தனியாள் தொடர்பிலும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பிலும் "இயைபான வரிமதிப்பிடற்பாலதான வருமானம்" என்பது

அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தனியாளின் வரிமதிப்பிடற்பாலதான வருமானத்திலிருந்து இவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (i) ஆம், (ii) ஆம் உட்பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்ட இலாபங்களின் கூட்டுமொத்தத் தொகையைக் கழித்த பின்னரான தொகை அல்லது ;

அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய தனியாளின் ஊழியத்திலிருந்தான இயைபான இலாபங்களுக்குச்சமமான ஒரு தொகை

என்பனவற்றுள் –

எந்தத் தொகை குறைவானதோ அந்தத் தொகை என்று பொருள்படும்.

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் 32க என்னும் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "அத்தகைய பொறுப்பு முயற்சியினால் உற்பத்தி செய்யப்படுவதற்கான அல்லது தயாரிக்கப்படுவதற்கான" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அத்தகைய பொறுப்பு முயற்சியினால் உற்பத்தி செய்யப்படுவதற்கான, தயாரிக்கப்படுவதற்கான அல்லது சிப்பம் செய்யப்படுவதற்கான" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாக, பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :–

"(அ) எந்தத் காலப்பகுதிக்கு

(i) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட குறித்துரைக்கப்பட்ட பொறுப்புமுயற்சியைக் கொண்டுநடாத்தும் எந்த ஆளின் அல்லது பங்குடைமையொன்றின் எந்தப் பங்காளரின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின்மீது இந்தஅத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க வருமானவரி அறவிடப்படற்பாலதாகின்றதோ; அல்லது

(ii) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட குறித்துரைக்கப்பட்ட எந்தப் பொறுப்பு முயற்சியின் ஏற்றுமதி இலாபங்களும் வருமானமும் 20 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் அல்லது குறித்துரைக்கப்பட்ட அத்தகைய பொறுப்பு முயற்சியால் 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின்கீழ் இலங்கை முதலீட்டுச் சபையுடன் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையொன்றின் நியதிகளின்படி வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுகின்றனவோ

அக்காலப்பகுதியின்போது செய்யப்பட்டிருந்தால் ஏற்புடையதாதல் வேண்டும்."

13. முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 அ என்னும் பிரிவு அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (i) ஆம் பந்தியில் "பிரிவு 33 (1) இன் கீழ்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக "பிரிவு 33 (1) (அ) இன்கீழ்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

14. முதன்மைச் சட்டவாக்கத்தின் 67 ஆம் பிரிவு அப்பிரிவுன் (7) ஆம் உட்பிரிவில் "பதிவற்றவராகக் கருதப்படுதல் வேண்டும்:" என்னும் சொற்களுக்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"வதிவற்றவராகக் கருதப்படுதல் வேண்டும் ;

ஆயின், அத்தகைய தனியாள், II ஆம் பிரிவின் (அஅ) என்னும் பந்தியின் கருத்தெல்லைக்குள் ஃபிளாக்ஷிப் கம்பனியொன்றில் தொழில் புரிபவராக இருக்குமிடத்து அத்தகைய தனியாள் அவர் இலங்கையில் தொழிலைத் தொடங்கிய திகதியிலிருந்து கணிக்கப்பட்ட ஐந்து ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு வதிவற்றவராகக் கருதப்படுதல் வேண்டும்".

15.முதன்மைச் சட்டவாக்கத்தின் 73 ஆம் பிரிவு அப்பிரிவின் (1 அ) என்னும் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அவ்வுட்பிரிவின் (v) ஆம் பந்தியில் "1992 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு நாற்பத்திரண்டாயிரம் ரூபாவையும்," என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக "1992 ஏப்ரில் 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 1995 ஏப்பிறில் 1 ஆம் திகதிக்கு முன் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு நாற்பத்திரண்டாயிரம் ரூபாவையும்: அத்துடன்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்: அத்துடன்

(2) அவ்வுட்பிரிவின் (v) ஆம் பந்தியை உடனடுத்து பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் :-

"(vi) 1995 ஏப்ரில் 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு அறுபதினாயிரம் ரூபாவையும்"

16.முதன்மைச் சட்டவாக்கத்தின் 99 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம், இத்தால் திருத்தப்படுகின்றது

(1) (அ) மாதம் ஒன்றுக்கு ஐயாயிரம் ரூபாவுக்குக் கூடுதலான அல்லது ஆண்டொன்றுக்கு அறுபதினாயிரம் ரூபாவுக்குக் கூடுதலான ஊதியத்தைப் பெறும் தனியாள் ஒருவரை, அல்லது

(ஆ) இலங்கையில் செய்த சேவைகளுக்காக, மாதம் ஒன்றுக்கு எண்பத்தைந்து ரூபாவுக்குக் கூடுதலான அல்லது ஆண்டொன்றுக்கு ஆயிரம் ரூபாவுக்குக் கூடுதலான ஊதியத்தைப் பெறுகின்ற வதிவற்ற ஆளெவரையும் ;

தொழிலுக்கமர்த்தியுள்ளவரும் 1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 107இ என்னும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது இச்சட்டத்தின் இந்த அத்தியாயத்தின்கீழ் ஆணையாளர் தலைமை அதிபதிக்கு அறிவித்தல் கொடுத்திராதவருமான தொழில்தருநர் ஒவ்வொருவரும்

(இவ்வத்தியாயத்தில் இதனகத்துப்பின்னர் குறித்துரைக்கப்பட்ட ஊழியர் எனக் குறிப்பீடு செய்யப்படும்) அத்தகைய தனியாளை அவர் அவரிடத்தில் தொழிலுக்கமர்த்தியுள்ளார் என 1995 திசெம்பர் 1 ஆம் திகதிக்குப் பிந்தாமல் ஆணையாளர் தலைமையதிபதிக்கு அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்."

17. முதன்மைச் சட்டவாக்கத்தின் 112 ஆம் பிரிவை உடனடுத்து பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது அச்சட்டவாக்கத்தின் 112அ என்னும் பிரிவு என்றாற்போன்று பயனுறுதலும் வேண்டும் :-

"தொழில் தருநரால் 1993 ஏப்பிரில் 1 ஆம் திகதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டிற்கு குறித்த சில ஊழியர்களின் வேதனத்திலிருந்து வரிகள் கழிப்பனவு செய்யப் படுதற்கான சிறப்பேற்பாடுகள்

112.அ. (1) எவரெனும் குறித்துரைக்கப்பட்ட ஊழியரின் ஊழியத்திலிருந்து (32உஉஉ என்னும் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கருத்தெல்லைக்குள்) 1993 ஏப்ரில் 1 ஆம் திகதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டிற்கு இயைபான இலாபங்களான ஊழியத்தின் அத்தகைய பாகத்தின் கூட்டுமொத்தத் தொகையானது ஒரு இலட்சத்து நாற்பத்து நாலாயிரத்தை விஞ்சாதவிடத்து, அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க அத்தகைய தொழில்தருநரால் அத்தகைய ஊழியரின் ஊதியத்தின் அத்தகைய பாகத்திலிருந்து கழிப்பனவு செய்யப்பட்டு ஆணையாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட்ட வருமான வரியை அத்தகைய ஊழியருக்கு மீளளிப்பது அத்தகைய தொழில்தருநருக்குச் சட்ட முறையானதாதல் வேண்டும்.

(2) தொழில்தருநர் ஒருவர் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் வருமானவரியை எவரெனும் ஊழியருக்கு மீளளிப்புச் செய்துள்ளவிடத்து அத்தகைய தொழில்தருநர் –

(அ) அவ்வாறு மீளளிப்புச் செய்யப்பட்ட தொகையை அல்லது அதன் ஏதேனும் பாகத்தை ஏதேனும் கொடுப்பனவுக் காலப்பகுதி தொடர்பில் அவரால் செய்யப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் அடுத்துறும் செலுத்துகைக்கு எதிராக எதிரீடு செய்வதற்கும் ; அத்துடன்

(ஆ) அது தொடர்பில் 1997 மார்ச் 31 ஆம் திகதிக்குப் பிந்தாமல் ஆணையாளர் தலைமையதிபதிக்கு எழுத்து மூலமாக உரிமைக் கோரிக்கையொன்று செய்யப்படுமானால், (அ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளின்கீழ் எதிரீடு செய்யப்பட்ட பணத்தொகைகளின் மொத்தத்திற்கு மேலாக அவ்வாறு மீளளிப்புச் செய்யப்பட்ட தொகையின் மிகை எதுவுமிருப்பின் அதன் மீளளிப்பதற்கும் ;

உரித்துடையவராதல் வேண்டும்

(3) ஆணையாளர் தலைமையதிபதி, (2) ஆம் உட்பிரிவின்கீழ் மீளளிப்புச் செய்யும் அல்லது எதிரீட்டை அனுமதிக்கும் நோக்கத்திற்கு (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவாறு அத்தகைய வருமான வரியின் மீளளிப்பிற்கான எண்பிப்பை முன்வைக்குமாறு அத்தகைய தொழில் தருநரைத் தேவைப்படுத்தலாம்.

(4)தொழில் தருநர் ஒருவர் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் வருமானவரியை, அவரால் செலுத்தப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் அடுத்துறும் செலுத்துகைக்கெதிராக (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளின்கீழ் எதிரீடு செய்துள்ளவிடத்து, 107 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினதும் 108 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினதும் ஏற்பாடுகள் அவ்வாறு எதிரீடு செய்யப்பட்ட வரி தொடர்பில் அத்தகைய தொழில் தருநருக்கு ஏற்புடைத்தாதல் ஆகாது.

(5) குறித்துரைக்கப்பட்ட ஊழியர் ஒருவர் (1) ஆம் உட்பிரிவின்கீழ் மீளளிப்பொன்றைப் பெற்றுள்ளவிடத்து, அத்தகைய ஊழியர் :-

(அ) இவ்வத்தியாயத்தின்கீழ் கழிப்பனவு செய்யப்பட்டதும் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அவருக்கு மீளளிப்புச் செய்யப்பட்டதுமான வருமான வரியின் தொகையின் (iii) ஆம் பிரிவின் கீழான எதிரீடு ஒன்றிற்கும், அல்லது

(ஆ) 149 ஆம் பிரிவின்கீழ் அத்தகைய தொகையின் மீளளிப்பொன்றுக்கும்

உரித்துடையவராதல் ஆகாது."

18. முதன்மைச் சட்டவாக்கத்தின் 113க என்னும் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் –

"அத்தகைய தொழில்தருநரால் செலுத்தப்பட வேண்டும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அத்தகைய தொழில்தருநரால் செலுத்தப்பட வேண்டும் :

ஆயினும், எவ்வாறாயினும் 1994 ஏப்பிரில் 1 ஆம் திகதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய ஊழியரின் அலுவலக முறையான வேதனத்தின் கூட்டு மொத்தம் அவ்வரிமதிப்பீட்டாண்டிற்கு ஒரு இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் ரூபாவை விஞ்சாதவிடத்து அத்தகைய ஊழியரின் அத்தகைய வேதனம் தொடர்பில் அவ்வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய தொழில் தருநரால் வருமானவரி எதுவும் செலுத்தப்படற்பாலதாதல் ஆகாது; அத்துடன்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்.

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "99 ஆம் பிரிவு, 102ஆம் பிரிவு" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "99ஆம் பிரிவு, 100 ஆம் பிரிவு, 102 ஆம் பிரிவு" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்.

19. முதன்மைச் சட்டவாக்கத்தின் 113ண என்னும் பிரிவு இத்தால் திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் –

(அ) "1994 ஏப்பிரில் 1 ஆம் திகதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக "1994 ஏப்பிரில் 1 ஆம் திகதியன்று தொடங்கும்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ;

(ஆ) அப்பந்தியின் (ii) ஆம் உட்பந்தியில் "ஆறாயிரம் ரூபாவின் விஞ்சுதொகையாதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஆறாயிரம் ரூபாவின் விஞ்சுதொகையாதல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்து பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :-

"(இ) 1995 ஏப்பிரில் 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு –

(i) அத்தகைய ஊழியரின் அத்தகைய வேதனாதிகளிலிருந்து அறுபதினாயிரம் ரூபா பணத்தொகையொன்றை கழிப்பனவு செய்தபின்னர் அத்தகைய வேதனாதிகள்மீது இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையின் 11ஊ என்னும் பாகத்தில் குறித்துரைக்கப்பட்ட வீதங்களின்படி கணக்கிடப்பட்ட வருமானவரியின் மேலான,

(ii) மூவாயிரம் ரூபாவின் விஞ்சுதொகையாதல் வேண்டும்".

20. முதன்மைச் சட்டவாக்கத்தின் 163 ஆம் பிரிவு "தகைமையளிக்கும் பகிர்வு" என்பதன் வரைவிலக்கணத்தின் (ஆ) என்னும் பந்தியில் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பந்தியின் (i) ஆம் உட்பந்திக்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :-

"(i) அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு வரிவிதிக்கப்படற்பாலதாயின் -

(அ) அவ்வகுப்பைச் சேர்ந்த கம்பனிகளுக்கு ஏற்புடைத்தான வீதப்படி இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணை குறித்தரைக்கப்பட்ட தோதான வீதங்களில் வரிவிதிக்கப்படுமா, அல்லது

(ஆ) 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின்கீழ் முதலீட்டுச் சபையால் ஆக்கப்பட்டதும், அத்தகைய சட்டத்தின் 17 ஆம் பிரிவின்கீழ் அத்தகைய சபையுடன் உடன்படிக்கையொன்றைச் செய்துள்ள ஏதேனும் கம்பனிக்கு ஏற்புடைத்தானதாக வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான ஏதேனும் ஒழுங்குவிதியில்

குறித்துரைக்கப்பட்ட தோதான வீதப்படி வரிவிதிக்கபடுமோ ;"

(2) அப்பந்தியின் (ii) ஆம் உட்பந்தியில் "பிரிவு 32ஏ அல்லது பிரிவு 32ஓ" என்னும் இலக்கங்களுக்கும் சொற்களுக்கும் பதிலாக, "பிரிவு ஏ அல்லது பிரிவு 32ஓ அல்லது பிரிவு 32க" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்;

(3) அப்பந்தியின் (அ) என்னும் உட்பந்தியில் "(i) அவ்வுட்பந்தியின் (iii) ஆம் இனத்தில் "அல்லது வருமானத்திலிருந்து" என்னும் சொற்களுக்கும் பதிலாக "அல்லது வருமானத்திலிருந்து" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் (ii) அவ்வுட்பந்தியின் (iii) ஆம் இனத்தை உடனடுத்துப் பின்வரும் இனத்தை உட்புகுத்துவதன் மூலமும்

"(iv) எந்த இலாபங்களினதும் வருமானத்தினதும் மீது 33 (1) ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் செலுத்தப்படற்பாலதான வரி அத்தகைய இலாபங்களினதும் வருமானத்தினதும் மீது இலங்கைக்கு வெளியே செலுத்தப்பட்ட ஏதேனும் வரிக்கு 82 ஆம் பிரிவின் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் வரி வரவின் தொகையை விஞ்சமாட்டாதோ அந்த இலாபங்களிலும் வருமானத்திலிருந்து".

21. முதன்மைச் சட்வாக்கத்திற்கான ஏழாம் அட்டவணை இத்தால் நீக்கம் செய்யப்பட்டு அதற்குப் பதிலாக இத்தால் பின்வரும் அட்டவணை இடப்படுகின்றது :-

"ஏழாம் அட்டவணை (பிரிவு 33அ (1)

1988 ஏப்பிரில் 1 ஆம் திகதியன்று அல்லது அதன்பின்னர் ஆனால் 1992 ஏப்ரில் 1 ஆம் திகதிக்கு முன்னர் தொடங்கும் ஒவ்வொரு வரிமதிப்பீட்டாண்டிற்கும் முற்பணக் கம்பனியின் வரிவீதங்கள் பின்வருமாறு இருத்தல் வேண்டும் :-

(i) சிறிய கம்பனியொன்றினால் செய்யப்பட்ட தகைமையளிக்கும் பகிர்வு ஒவ்வொன்றினதும் தொகைக்குச் சமமான தொகையின் மீது

25 சதவீதம்

(ii) விலைகோரிப் பெறப்பட்ட பகிரங்கக் கம்பனியொன்றினால் அல்லது மக்கள் கம்பனியொன்றினால் செய்யப்பட்ட தகைமையளிக்கும் பகிர்வு ஒவ்வொன்றினதும் தொகைக்குச் சமமான தொகையின்மீது

33 1/3 சதவீதம்

(iii) சிறிய கம்பனியொன்றோ அல்லது விலைகோரிப் பெறப்பட்ட பகிரங்கக் கம்பனியொன்றோ அல்லது மக்கள் கம்பனியொன்றோ அல்லாத கூறு நம்பிக்கை பொறுப்பு ஒன்றினால் அல்லது பரஸ்பர நிதியத்தினால் அல்லது கம்பனியொன்றினால் செய்யப்பட்ட தகைமையளிக்கும் பகிர்வு ஒவ்வொன்றினதும் தொகைக்குச் சமமான தொகையின்மீது

50 சதவீதம்

1992 ஏப்ரில் 1 ஆம் திகதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டிற்கான முற்பணக் கம்பனி வரிவீதங்கள் பின்வருமாறு இருத்தல் வேண்டும் :-

(i) சிறிய கம்பனியொன்றினால் செய்யப்பட் தகமையளிக்கும் பகிர்வு ஒவ்வொன்றிற்கும் சமமான தொகைமீது

25 சதவீதம்

(ii) விலைகோரிப் பெறப்பட்ட பகிரங்கக் கம்பனியொன்றினால் அல்லது மக்கள் கம்பனியொன்றினால் செய்யப்பட்ட தகைமையளிக்கும் பகிர்வு ஒவ்வொன்றிற்கும் சமமான தொகையின் மீது

33 1/3 சதவீதம்

(iii) சிறிய கம்பனியொன்றோ அல்லது விலைகோரிப் பெறப்பட்ட பகிரங்கக் கம்பனியொன்றோ அல்லது மக்கள் கம்பனியொன்றோ அல்லாத கூறு நம்பிக்கைப் பொறுப்பு ஒன்றினால் அல்லது பரஸ்பர நிதியத்தால் அல்லது கம்பனியொன்றினால் செய்யப்பட்ட தகைமையளிக்கும் பகிர்வு ஒவ்வொன்றினதும் தொகைக்குச் சமமான தொகையின்மீது

40 சதவீதம்

1993 ஏப்ரில் 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டிற்கு முற்பணக் கம்பனி வரிவீதங்கள் பின்வருமாறு இருத்தல் வேண்டும் :-

(i) சிறிய கம்பனியொன்றினால் செய்யப்பட்ட தகைமையளிக்கும் பகிர்வு ஒவ்வொன்றினதும் தொகைக்குச் சமமான தொகையின் மீது

25 சதவீதம்

(ii) சிறிய கம்பனியொன்றல்லாத கூறு நம்பிக்கைப் பொறுப்பு ஒன்றினால், பரஸ்பர நிதியத்தால் அல்லது கம்பனியால் செய்யப்பட்ட தகைமையளிக்கும் பகிர்வு ஒவ்வொன்றினதும் தொகைக்குச் சமமான தொகையின் மீது

33 1/3 சதவீதம்

1994 ஏப்ரில் 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கம் வரிமதிப்பீட்டாண்டு ஒவ்வொன்றுக்கும் முற்பணக் கம்பனி வரிவீதங்கள் பின்வருமாறு இருத்தல் வேண்டும் :-

(i) கூறு நம்பிக்கைப்பொறுப்பு ஒன்றினால் அல்லது பரஸ்பர நிதியத்தால் அல்லது வேறு ஏதேனும் கம்பனியால் பிரிவு 32ஏ பிரிவு 32ஊ, பிரிவு 32ஓ அல்லது பிரிவு32க என்பதன் ஏற்பாடுகளுக்கிணங்க வரியிறுக்கப்பட்ட இலாபங்கள் தவிர்ந்த இலாபங்களிலிருந்து செய்யப்பட்ட தகைமையளிக்கும் பகிர்வு ஒவ்வொன்றினதும் தொகைக்குச் சமமான தொகையின் மீது

27 சதவீதம்

(ii) பிரிவு 32ஏ அல்லது பிரிவு 32ஓ அல்லது பிரிவு 32க என்பதன் ஏற்பாடுகளுக்கிணங்க வரியிறுக்கப்பட்ட இலாபங்களிலிருந்து கம்பனியொன்றினால் செய்யப்பட்ட தகமையளிக்கும் பகிர்வு ஒவ்வொன்றினதும் தொகைக்குச் சமமான தொகையின்மீது

8 சதவீதம்

(iii) பிரிவு 32ஊ என்பதன் ஏற்பாடுகளுக்கிணங்க வரியிறுக்கப்பட்ட இலாபங்களிலிருந்து கம்பனியொன்றினால் செய்யப்பட்ட தகமையளிக்கும் பகிர்வு ஒவ்வொன்றினதும் தொகைக்குச் சமமான தொகையின்மீது

5 சதவீதம்".

22. முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவு 32உஉ, பிரிவு 32க, பிரிவு 33அ என்பனவற்றிற்குச் செய்யப்பட்ட திருத்தங்களும் முறையே இச்சட்டத்தின் 10 ஆம், 12 ஆம், 13 ஆம் அத்துடன் 21 ஆம் பிரிவுகளால் முதன்மைச் சட்டவாக்கத்திற்கான ஏழாம் அட்டவணைக்குச் செய்யப்பட்ட மாற்றீடும் எல்லா நோக்கங்களுக்காகவும் 1994 ஒக்ரோபர் 31 ஆம் திகதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

23.தொழில்தருநர் ஒருவர் 1994 மே 18 ஆம் திகதி தொடங்குவதும் இச்சட்டம் தொடங்கும் திகதியன்று முடிவடைவதுமான காலப்பகுதியில் ஏதேனும் காலப்பகுதியில் செலுத்தப்பட்ட ஏதேனும் வருமானவரி தொடர்பில் அத்தகைய வரியை 112அ என்னும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் மீளளிப்புச் செய்துள்ளவிடத்து அல்லது 112அ என்றும் பிரிவில் (2) ஆம் உட்பிரிவின்கீழ் எதிரீடு செய்துள்ளவிடத்து அத்தகைய தொழில்தருநர் -

(அ) அவ்வாறு மீளளிக்கப்பட்ட அல்லது எதிரீடு செய்யப்பட்ட அத்தகைய வரியை விடயத்திற்கேற்ப செல்லுபடியான விதத்தில் மீளளிப்புச் செய்துள்ளார் அல்லது எதிரீடு செய்துள்ளார் எனவும், அத்தடன்

(ஆ) நூற்றியேழாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் என்பதன் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் அவ்வாறு எதிரீடு செய்யப்பட்ட அத்தகைய வரிதொடர்பில் தவறாளர் ஒருவரல்லர் எனவும்

கருதப்படுதல் வேண்டும்.

24. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

1995 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கி (திருத்தச்) சட்டம்

(1995, நவம்பர் மாதம் 28ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.)

1971 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, தேசிய சேமிப்பு வங்கிச்சட்டத்தைத் திருத்துவதற்கான தொரு சட்டம்.

1. இச்சட்டம், 1995 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, தேசிய சேமிப்பு வங்கி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (இதனகத்துப் பின்னர் "சட்டவாக்கம் " எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1971 ஆம் 30 ஆம் இலக்க. தேசிய சேமிப்பு வங்கி (திருத்தச்) சட்டம்.

2. (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1971ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க. தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்தின் 2ஆம் பிரிவு, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் "(இதனகத்து பின்னர் வங்கி எனக் குறிப்பீடு செய்யப்படும்) " தேசிய சேமிப்பு வங்கி" என அழைக்கப்பட வேண்டியதும் 6ஆம் பிரிவினகீழ் அப்போதைக்கு வங்கியின் உறுப்பினர்களாக இருக்கும் ஆட்களை கொன்டுள்ளதுமான கூட்டுத்தாபனம் ஒன்று" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக " (இனகத்து பின்னர் வங்கி எனக் குறிப்பீடு செய்யப்படும்) தேசிய சேமிப்பு வங்கி என அழைக்கப்படும் வங்கி ஒன்று.. என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

3, இரண்டாம் பிரிவை நேரே உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :-

வங்கியின் குறிக்கோள்.

2.அ. இலங்கை மக்களிடையே அதிலும் குறிப்பாக குறைந்த வருமானம் பெறுவோரிடையே சேமிப்பை ஊக்குவிப்பதும் அவ்வாறு திரட்டப்பட்ட சேமிப்புக்களை இலாபகரமாக முதலீடு செய்வதும் வங்கியின் குறிக்கோளாகும் :

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு, பின்வரும் பிரிவு அதற்குப் பதிலாக இடப்படுகின்றது :-

வங்கியின் மூலதனம்

5. (1) வங்கியின் அதிகாரமளிக்கப்பட்ட மூலதனம் ஒவ்வொன்றும் பத்து ரூபா கொண்ட ஒரு மில்லியன் பங்குகளாக பிரிக்கப்பட்ட பத்து மில்லியன் ரூபாவாதல் வேண்டும்.

(2) வங்கியின் வழங்கப்பட்ட மூலதனம் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம், சபையின் ஆலோசனையுடன் அமைச்சரினால் காலத்துக்கு காலம் தீர்மானிக்கப்பட்டவாறாக இருத்தல் வேண்டும், ஆயின் எவ்வாறாயினும். அத்தகைய வழங்கப்பட்ட மூலதனமானது ஒவ்வொன்றும் பத்து ரூபா கொண்ட நூற்றிருபது மில்லியன் பங்குகளாகப் பிரிக்கப்பட்ட ஒரு பில்லியன்இருநூறு மில்லியன் ரூபாவுக்கு குறைந்த தொகையாக இருத்தலாகாது.

(3) வங்கியின் எல்லாப்பங்குகளும் திறைசேரிச் செயலாளரின் பெயரில் அவரது உத்தியோக பூர்வத் தன்மையில் வழங்கப்படுதல் வேண்டும் என்பதுடன், எத்தன்மைத்தான எந்த முறையிலும் அவர் அப்பங்குகளைக் கையுதிர்த்தலும் ஆகாது.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு, பின்வரும் பிரிவு அதற்குப் பதிலாக இடப்படுகின்றது:-

"வங்கியின் அதிகாரமளிக்கப்பட்ட செயற்பாடுகளும் பணிகளும்

(6) (1) இச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக வங்கியானது பின்வரும் பணிகள் அல்லது செயற்பாடுகள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் அவற்றையும் பொறுப்பேற்பதற்கு அதிகாரமளிக்கப்படுகின்றது:-

(அ) வைப்புக்கணக்குகளையும் சேமிப்புக் கணக்குகளையும் திறத்தல், மற்றும் சேமிப்புச் சான்றிதழ்கள் வழங்குதல் என்பன உட்பட, இலங்கையில் சேமிப்புக்களையும் அதன் இடைநேர் விளைவான ஏதேனும் செயற்பாட்டையும் ஊக்குவித்தலும் திரட்டுதலும்;

(ஆ) எவையேனும் பிணையங்கள், தொகுதிக்கடன் முறிகள், திறைசேரி உண்டியல்கள் அரசாங்கத்தினால் வழங்கப்பட அல்லது உத்தரவாதமளிக்கப்பட்ட ஏதேனும் அத்தகைய நிதிசார் சாதனம் என்பவற்றை கொள்வனை செய்தலும் அவற்றில் வியாபாரஞ் செய்தலும்;

(இ) பங்குச் சபையினால் காலத்துக்கு காலம் அங்கீகரிக்கப்படக் கூடியவாறான அத்தகைய முழு மொத்த உச்ச வரம்புக்கு அமைவாக, வங்கிகளுக்கிடையிலான அழைப்புப் பணச்சந்தையில் பணம் கடன் கொடுத்தல் :

(ஈ) உரிமையளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளினதும் ஏனைய நிதி நிறுவனங்களினதும் வாடிக்கையாளர்களுக்குக் கடன் கொடுப்பதற்காக மொத்தக் கடன் கொடுப்பதனைப் பொறுப்பேற்றல்

(உ) அதன் சொந்த பண வைப்பாளர்களுக்கு அவர்களது பணவைப்புக்களின் பிணைப்பொறுப்புக்குகெதிராக சில்லறைக் கடன் கொடுப்பதனைப் பொறுப்பேற்றல்;

(ஊ) அசைவற்ற ஆதனத்தை ஈடுவைப்பதன் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட பிணைப்பொறுப்பின் மீது வீடமைப்புக் கடன்களை ஏற்பாடு செய்தல் :

(எ) ஏனைய வங்கிகளுடன் நிதிசார் நிறுவனங்களுடனும் கடன் ஒருங்கிணைப்பில் பங்குபற்றுதல்,

(ஏ) அசைவற்ற அல்லது அசைவுள்ள ஆதனத்தைக் கொள்ளுதல் அல்லது அத்தகைய ஆதனத்திலுள்ள எவை யேனும் உரிமைகளைக் கொள்ளுதல் அத்துடன் அத்தகைய ஆதனத்தை குத்தகைக்குக் கொடுத்தல், ஈடுவைத்தல், விற்றல் அல்லது வேறுவகையாகக் கையுதிர்த்தல்;

(ஐ) வங்கியினால் கொள்வனவு செய்யப்பட்ட குத்தகைக்கு எடுக்கப்பட்ட அல்லது வேறுவகையாகக் கொள்ளப்பட்ட காணியில் கட்டிடங்களை நிர்மாணித்தல்;

(ஒ) மேலே குறிப்பீடு செய்யப்பட்ட பணிகளின் மற்றும் செயற்பாடுகளின் இடை நேர் விளைவான அல்லது அவற்றுக்கு உகந்தனவாக இருக்கக்கூடியவாறான அத்தகைய வேறு செயற்பாடுகளைக் கொண்டு நடாத்துதல்.

(2) இப் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட நிதிசார் சாதனங்களில் வங்கியினால் முதலீடு செய்யப்படுவதானது பணச் சபையினால் வெறுவகையாக தீர்மானிக்கப்பட்டாலொழிய, வங்கியின் சேமிப்பு மற்றும் வைப்புக்கணக்குகளில் வைப்பிலிடப்பட்ட பணத்தின் அறுவது வீதத்திற்குக் குறையாததாக அமைதல் வேண்டும் :

முதன்மைச் சட்டவாக்கத்தின் 8ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு, பின்வரும் பிரிவு அதற்குப் பதிலாக இடப்படுகின்றது:-

சபையின் அமைப்பு

8. (1) சபையானது 7 பணிப்பாளர்களைக் கொண்டிருத்தல் வேண்டும். அவர்களுள் -

(அ) ஐவர் வங்கியானது அதன் குறிக்கோள்களை அது எய்துவதனை இயலச் செய்யும் அத்தகைய முறையில் வங்கியின் அலுவல்கள் திறமையாகவும் பயனுறுதியுள்ள விதத்திலும் நெறிப்படுத்த வல்லவர்கள் என அமைச்சர் கருதும் ஆட்களிடையேயிருந்து அமைச்சரால் நியமிக்கப் படுதல் வேண்டும். (இவர்கள் இதனகத்துப் பின்னர் "நியமிக்கப்பட்ட பணிப்பாளர்கள்" எனக் குறிப்பீடு செய்யப்படுவர்) இவர்களுள் ஒவ்வொருவரும்-

(1) வங்கித் தொழில், வர்த்தகம், வியாபாரம் அல்லது இவற்றையொத்த துறைகளில் சிரேட்ட முகாமைத்துவ மட்டத்தில் அனுபவம் கொண்டவராக அல்லது நிருவாக அனுபவம் கொண்டவராக அல்லது

(11) வங்கித் தொழில், பொருளியல், வர்த்தகம், கணக்கியல், தொழில் முகாமை அல்லது வேறு கற்கை நெறியில் உயர் தொழில் தகைமைகள் கொண்டவராக இருக்க வேண்டும்: அத்துடன்

(ஆ) ஒருவர் திறைசேரிச் செயலாளராக அவரின் நியமத்தராக இருக்க வேண்டும் : அத்துடன்

(இ) ஒருவர் அஞ்சல் அதிபதியாக அல்லது அவரது நியமத்தராக இருக்க வேண்டும்.

(2) நியமிக்கப்பட்ட பணிப்பாளர் ஒருவர் இறப்பதன் மூலம், பதவி துறப்பதன் மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன் மூலம் முன்னதாகவே தமது பதவியை வறிதாக்கினாலொழிய, மூன்றாண்டு காலப் பகுதி ஒன்றுக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(3) அமைச்சர், நியமிக்கப்பட்ட பணிப்பாளர் ஒருவரை பதவியைத் தொடர்ந்திருக்க விடுதல் வங்கியின் நலன்களுக்கு பாதகமானதெனத் திருப்திப்பட்ட விடத்து. குறித்துரைக்கப்படும் காரணத்தின் பேரில் அப் பணிப்பாளரைப் பதவியிலிருந்து அகற்றலாம்.

(4) நியமிக்கப்பட்ட பணிப்பாளர் ஒருவர் அமைச்சருக்கு முகவரியிட்ட கடிதத்தின் மூலம் தமது பதவியிலிருந்து எந்த நேரத்திலும் விலகலாம்: அத்துடன் அத்தகைய பதவி விலகலானது எழுத்தில் அமைச்சரினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதன் மேல் பயனுடையதாக வருதல் வேண்டும்.

(5) பதவி விலகுவதன் மூலம் அல்லது காலம் கழிவதன் மூலம் பதவியை வறிதாக்குகின்ற நியமிக்கப்பட்ட பணிப்பாளர் ஒருவர் மீள நியமிக்கப்படுவதற்கு தகுதியுடையராவார்.

(6) நியமிக்கப்பட்ட பணிப்பாளர் ஒருவர் அவரது பதவிக்காலம் முடிவடைவதன் மூலமல்லாது வேறு வகையாக தமது பதவியை வறிதாக்கினால் அவரின் இடத்துக்கு பணிப்பாளர் ஒருவர் அமைச்சரினால் நியமிக்கப் படலாம், அத்துடன் அவ்வாறு இரண்டாவதாகக் கூறப்பட்ட

பணிப்பாளர் அவ்வாறு பதவியை வறிதாக்கும் பணிப்பாளரின் பதவிக் காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள காலத்தின்போது பதவி வகித்தல் வேண்டும்.

(7) நியமிக்கப்பட்ட பணிப்பாளர் ஒருவர் சுகயீனம் காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக தமது பதவிக்குரிய கடமைளைத் தற்காலிகமாக புரிய முடியவில்லையாயின், அமைச்சர் அவருக்காகச் செயலாற்றுவதற்காக தகுதி வாய்ந்த வேறோர் ஆளை நியமிக்கலாம்"

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 9ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு, பின்வரும் பிரிவு அதற்குப் பதிலாக இடப்படுகின்றது:-

சபையின் பணிப்பாளர் ஒருவராக நியமிக்கப் படுவதற்கான தகமைகள்.

9. ஆள் ஒருவர்-

(அ) பாராளுமன்ற அல்லது ஏதேனும் மாகாணசபை அல்லது ஏதேனும் உள்ளூர் அதிகாரசபை உறுப்பினராக இருந்தால்: அல்லது

(ஆ) இலங்கையில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின் கீழ், சித்தசுவாதீனமற்றவரெனக் காணப்பட்டால் அல்லது வெளிப்படுத்தப்பட்டால்: அல்லது

(இ) இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டில் வலுவுள்ள ஏதேனும் சட்டத்தின் கீழ் கடனிறுக்க வகையற்றவரென அல்லது வங்குரோத்தானவரென வெளிப்படுத்தப்பட்டு பொறுப்பு விடுவிக்கப்படாத கடனிறுக்க வகையற்றவராக அல்லது வங்குரோத்தானவராக இருந்தால்: அல்லது

(ஈ) நல்லொழுக்கப் பிறழ்வை உள்ளடக்குவதும் ஒரு காலத்துக்கான மறியல் தண்டனையினால் தண்டிக்கப் படற்பாலதுமான தவறொன்றுக்குக் குற்றத் தீர்ப்பழிக்கப்பட்டு இருந்தால். அவர் 8ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ் சபையின் பணிப்பாளர் ஒருவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது தொடர்ந்திருந்து வருவதற்கு தகமையற்றவராதல் வேண்டும்.

8. முதன்மை சட்டவாக்கத்தின் 11ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு பின்வரும் பிரிவு அதற்குப் பதிலாக இடப்படுகின்றது:-

சபையின் தலைவர்.

11.(1) அமைச்சர், சபையின் பணிப்பாளர்களுள் ஒருவரை அதன் தலைவராக இருப்பதற்கெனப் பெயர் குறித்து நியமித்தல் வேண்டும்.

(2) தலைவர், சமூகமாயிருந்தால், சபையின் கூட்டங்களில் தலைமைதாங்குதல் வேண்டும். தலைவர் ஒருவர் நியமிக்கப்படவில்லையாயின் அல்லது சபையின் கூட்டத்தைக் கூட்டுவதற்கென நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் சமூகமாயிருக்கவில்லையாயின், சமூகமாயிருக்கும் பணிப்பாளர்கள் அத்தகைய கூட்டத்தில் தலைமை தாங்கவென தம்முள் ஒருவரைத் தெரிவு செய்தல் வேண்டும்.

(3) தலைவரைப் பதவியில் தொடர்ந்திருந்துவர விடுதல் வங்கியின் நலனுக்குப் பாதகமானதென அமைச்சர் திருப்திப்பட்டவிடத்து, அவர் தலைவரைப் பதவியிலிருந்து அகற்றலாம்.

(4) தலைவர் அமைச்சருக்கு முகவரியிட்ட கடிதம் மூலம் தலைவர் பதவியிலிருந்து எந்நேரத்திலும் விலகலாம். அத்தகைய பதவி விலகலானது அமைச்சரினால் அது ஏற்றுக்கொள்ளப்பட்டதன்மேல் பயனுறுவதாதல் வேண்டும்.

(5) மூன்றாம் (4) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, தலைவரின் பதவிக்காலமானது சபையினால் அவர் உறுப்பினராக இருக்கும் காலப்பகுதியாதல் வேண்டும்:

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 13ஆம் பிரிவானது, அப்பிரிவின் (4)ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்தவதன் மூலமும் அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

4. இச்சட்டத்தின் 29ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்படும் வங்கியின் பொது முகாமையாளர். பொது முகாமையாளரின் வேலைபற்றி அல்லது அவரின் பொதுவான நடத்தை பற்றி கலந்தாராயப்படும் ஏதேனும் அத்தகைய கூட்டத்தில் தவிர சபையின் கூட்டங்களில் சமூகமளிப்பதற்கும் பங்குபற்றுவதற்கும் உரிமையுடையவராதல் வேண்டும்:

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :-

"நிதி வசதிகள் வழங்குதல்

17. (1) வங்கியானது கடன்களுக்கு ஏற்புடைத்தான வழமையான வர்த்தக அளவைப் பிரமாணங்களின் அடிப்படையில் இச்சட்டத்தின் கீழ் நிதி வசதிகளை வழங்குதல் வேண்டும்: அத்துடன் அத்தகைய கடன்களுக்காக விதிக்கப்படற்பாலதான நடப்புச் சந்தை வட்டி வீதத்தில் அத்தகைய நிதி வசதி மீதியான திரும்பல் ஒன்றைப் பெற்றுக்கொள்ள முயலுதல் வேண்டும்.

(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எற்படியிருப்பினும், அமைச்சர், இலங்கையின் தேசிய பொருளாதார நலனைக் கருத்திற் கொண்டும், நிதிவசதியை வழங்குதல் பொருளாதாரத்தின் ஏதேனும் துறையை அல்லது உபதுறையை ஆதரிப்பதற்கு அவசியமென அவர் அபிப்பிராயப்படுகின்ற விடத்தும், நிதிவசதி கோரும் விண்ணப்பம் தொடர்பிலான எவையேனும் சிறப்பான சந்தர்ப்ப சூழ்நிலைகளைக் கருத்திற் கொண்டும்-

(அ) சபையின் அபிப்பிராயப்படி வழமையான புத்திசாலித்தனமான வங்கித் தொழில் அளவைப் பிரமாணங்களுக்கு இணங்கவிராத, அல்லது

(ஆ) அத்தகைய கடன் வசதிக்கு வழமையாக வங்கி விதித்திருக்கவேண்டிய வட்டி வீதத்திலும் குறைந்த ஒரு வட்டி வீதத்தில்

ஏதேனும் நிதி வசதியை வழங்குமாறு எழுத்தில் சபைக்கு பணிக்கலாம்

(3) (அ) இரண்டாம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் ஏதேனும் பணிப்பு அமைச்சரினால் கொடுக்கப்பட்டவிடத்து திறைசேரிச் செயலாளர், அத்தகைய கடன் வசதியை வழங்குமுன்னதாக, அத்தகைய மீள் கொடுப்பனவு அல்லது வட்டி வருமதியாக வந்ததும், அத்தகைய கடன் வசதியையும் அதன் மீது செலுத்தப்படற்பாலதான வட்டியையும் மீளச் செலுத்துவதற்காக சபைக்கு ஏற்புடைத்தான நியதிகளின் மீது, இலங்கை அரசாங்கத்தின் சார்பில் கைமீட்க முடியாத காலக்கட்டுபாடு கொண்ட உத்தரவாத மொன்றைக் கொடுக்கவேண்டும்: அல்லது

(ஆ) இரண்டாம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழ் ஏதேனும் பணிப்பு அமைச்சரினால் கொடுக்கப்பட்டவிடத்து. திறைசேரிச் செயலாளர், விதிக்கப்பட்ட வட்டிக்கும் அத்தகைய கடன் வசதிக்கும் வங்கி வழமையாக விதித்திருக்கவேண்டிய வட்டிக்கும் இடையேயுள்ள வித்தியாசத்தை வங்கிக்கு மானியமாகச் செலுத்துதல் வேண்டும்.. அத்துடன் அத்தகைய மானியமானது ஆண்டு தோறும் அல்லது

திறைசேரிச் செயலாளருக்கும் சபைக்கும் இடையே உடன்பட்டுக்கொள்ளக் கூடியவாறான அத்தகைய வேறு கால இடைவெளிகளில் செலுத்தப்படுதல் வேண்டும்., அல்லது

(இ) இரண்டாம் உட்பிரிவின் (அ) அத்துடன் (ஆ) என்னும் பந்திகளின் கீழ் ஏதேனும் பணிப்பு அமைச்சரினால் கொடுக்கப்பட்டவிடத்து. திறைசேரிச் செயலாளர். அத்தகைய கடன் வசதியை வழங்கு முன்னதாக இவ்வுட்பிரிவின் (அ)என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறாக உத்தரவாதமொன்றை வழங்குதல் வேண்டும் என்பதுடன் இவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறாக மானியத்தைச் செலுத்துதல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவின் கீழ் உத்தரவாதமொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவிடத்து. அமைச்சர், வசதியான ஆகக்கிட்டிய சந்தர்ப்பத்தில், உத்தரவாதம் தொடர்பான கூற்றொன்றை பாராளுமன்றத்தின் முன்னர் இடுதல் வேண்டும்"

11. பதினேழாம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் அது முதன்மை சட்டவாக்கத்தில் 17 அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"அமைச்சருக்கு தகவல் கொடுத்துதவப்பட வேண்டும்மென்பது

17. அ. அமைச்சர் காலத்துக்குக்காலம் தாம் தேவைப்படுத்தக் கூடியவாறான வங்கியின் தொழில் தொடர்பான அத்தகைய தகவலை தமக்குக் கொடுத்துதவுமாறு சபையை எழுத்தில் பணிக்கலாம் என்பதுடன் சபை அத்தகைய பணிப்பு ஒவ்வொன்றையும் நிறைவேற்றுதலும் வேண்டும்"

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் 19ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு பின்வரும் பிரிவு அதற்குப் பதிலாக இடப்படுகின்றது:-

வங்கியின் செலவுகள்.

19. வங்கியின் பணிகளையும் செயற்பாடுகளையும் நிறைவேற்றுவதில் அதனால் உறப்பட்ட எல்லாச் செலவுகளும் வங்கியின் பணங்களிலிருந்து கொடுக்கப்படுதல் வேண்டும்.

13. முதன்மைச் சட்டவாக்கத்தின் 20ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

"(1) வங்கியானது, பொருத்தமானது எனக்கருதும் அத்தகைய நோக்கங்களுக்காக -

(அ) பொது ஒதுக்கு ஒன்றையும் : அத்துடன்

(ஆ) வேறு எவையேனும் சிறப்பு ஒதுக்கங்களையும் தாபித்தல் வேண்டும், அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "வங்கியின் ஒதுக்குகளுக்கு ஏற்பாடு செய்த பின்பு", என்னும் சொற்களுக்குப் பதிலாக "வங்கியின் ஒதுக்குகளுக்கு மாற்றலைச் செய்த பின்பு", என்னுஞ் சொற்களை இடுவதன் முலமும்.

14. முதன்மைச் சட்டவாக்கத்தின் 21. 22 அத்துடன் 23ஆகிய பிரிவுகள் இத்தால் நீக்கஞ் செய்யப்படுகின்றன.

15. முதன்மை சட்டவாக்கத்தின் 26ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு பின்வரும் பிரிவு அதற்குப்பதிலாக இடப்படுகின்றது:-

"பொது முகாமையாளரை நியமித்தல்

(2) சபையானது வங்கியின் தொழிலைக்கொண்டு நடாத்துவதற்காக அவசியமானதென அது கருதக்கூடியவாறான அத்தகைய வேறு உத்தியோகத்தர்களையும் சேவையாளர்களையும் நியமிக்கலாம்.

26. (1) சபையானது தகுந்தவரும் பொருத்தமானவருமான ஆள் ஒருவரை வங்கியின் பொது முகாமையாளராக நியமித்தல் வேண்டும்.

(3) வங்கியின் பொது முகாமையாளரதும், உத்தியோகத்தர் மற்றும் சேவையாளர்களதும் சம்பளங்கள், படிகள், ஏனைய நலன்கள் சேவை நிபந்தனைகள் என்பன சபையினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்"

16. முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு பின்வரும் பிரிவு அதற்கு பதிலாக இடப்படுகின்றது..-

"ஆலோசகர்களையும் உசாத் துணைவர்களையும் நியமித்தல்.

27. சபையானது, காலத்துக்கு காலம், இச்சட்டத்தின்கீழ் அதன் தொழிலை நடாத்துவதற்காகவும் அதன் பணிகளைப் புரிவதற்காகவும் அதன் பணிகளைப் புரிவதற்காகவும் தேவைப்படுவோரான கணக்காளர்கள், சட்டத்தரணிகள், கணக்காய்வாளர்கள் பெறுமதியான மதிப்பீட்டாளர்கள் போன்ற விசேட திறமைகள் அல்லது உயர்தொழில் தகமைகள் கொண்ட ஆட்களை வங்கிக்கான ஆலோசகர்களாகவும் உசாத்துணைவர்களாகவும் நியமிக்கலாம் அத்துடன் அவ்வாறு நியமிக்கப்பட்ட ஆலோசகர்களும் உசாத்துணைவர்களும் சபை தீர்மானிக்கக் கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய வீதங்களிலும் ஊதியம் அளிக்கப்படுதல் வேண்டும் :

17. முதன்மைச் சட்டவாக்கத்தின் 28.29ஆம் பிரிவுகள் இத்தால் நீக்கஞ் செய்யப்படுகின்றன

18. முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு பின்வரும் பிரிவு அதற்குப் பதிலாக இடப்படுகின்றது:-

"துர்நடத்தை அல்லது வேண்டும் என்ற தவறுகை மூலமல்லாது வேறு வகையாக விளைவிக்கப்பட்ட சேதத்துக்கு அல்லது இழப்புக்கு பொறுப்பு இல்லை.

30. வங்கியின் பணிப்பாளர், அலுவலர், அல்லது சேவையாளர் எதுவும் அல்லது இச் சட்டத்தின் 27 ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட ஆலோசகர் அல்லது உசாத்துணைவர் ஒருவர், வங்கியினால் அடையப்பட்ட ஏதேனும் இழப்புக்கு அல்லது சேதத்துக்கு, அத்தகைய இழப்பு அல்லது சேதம் அவரது துர் நடத்தையினால் அல்லது வேண்டும் என்ற தவறுகையினால் விளைவிக்கப் பட்டிருந்தாலொழிய, பொறுப்புடையவராதலாகாது"

19. முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவு. " வங்கியின் பணிப்பாளர், பொதுமுகாமையாளர், கணக்காளர் , சேவையாளர் ஆலோசகர் அல்லது வேறு உத்தியோகத்தர் , சேவையாளர் ஒவ்வொருவரும் " எனும் சொற்களுக்குப் பதிலாக, " வங்கியின் பணிப்பாளர், உத்தியோகத்தர் , சேவையாளர் ஒவ்வொருவரும் இச் சட்டத்தின் 27 ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட ஆலோசகர் அல்லது உசாத்துணைவர் ஒவ்வொருவரும்" எனும் சொற்களையும் இலக்கங்கங்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

20. முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவு. " பணிப்பாளர், பொதுமுகாமையாளர், கணக்காய்வாளர், உத்தியோகத்தர் , சேவையாளர் முகவர் நிலைய உறுப்பினர், கணக்காளர், அல்லது வங்கியின் தொழிலுக்கு அமர்த்தப்பட்டுள்ள வேறு ஆள் ஒருவரும் " என்னும் சொற்களுக்குப் பதிலாக, " வங்கியின் பணிப்பாளர், உத்தியோகத்தர் , சேவையாளர் ஒவ்வொருவரும் இச் சட்டத்தின் 27 ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்டவரும் சபையினால் அவ்வாறு செய்யுமாறு தேவைப்படுத்தப்பட்டவருமான ஆலோசகர் அல்லது உசாத்துணைவர் ஒவ்வொருவரும்" எனும் சொற்களையும் இலக்கங்கங்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

21. முதன்மைச் சட்டவாக்கத்தின் 34 ஆம் பிரிவு, " வங்கியின் பணிப்பாளர், பொதுமுகாமையாளர், கணக்காளர், செயலாளர் ஆலோசகர் அல்லது வேறு உத்தியோகத்தர், அல்லது சேவையாளர் ஒவ்வொருவரும் " எனும் சொற்களுக்குப் பதிலாக, " வங்கியின் பணிப்பாளர், உத்தியோகத்தர், அல்லது சேவையாளர் ஒவ்வொருவரும் இச் சட்டத்தின் 27 ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட ஆலோசகர் அல்லது உசாத்துணைவர் ஒவ்வொருவரும்" எனும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

22. முதன்மைச் சட்டவாக்கத்தின் 35ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நேரே உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன் மூலமும்

" (1அ) ஒய்வூதிய நிதியம் தனியான ஒரு நிதியமாக தாபிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் ஐந்தொகையிலிருந்து தனியாக பிரிக்கப்பட்டிருத்தலும் வேண்டும்:

" (1ஆ) ஒய்வூதிய நிதியத்தில் அதன் பொறுப்புகளைச் சமாளிப்பதற்கு போதிய பணம் இருக்கின்றதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக இரண்டு ஆண்டுகளுக்கு ஒருதடவை நிதியத்தின் ஆயுட் கணக்கு மதிப்பீடொன்று செய்யப்படுதல் வேண்டும் "

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், " அசைவற்ற ஆதனத்தின் பிணைப்பொறுப்பு" என்னும் சொற்களுக்குப்பதிலாக, " அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தின் பிணைப்பொறுப்பு" என்னும் சொற்களை இடுவதன் மூலம்.

23. முதன்மைச் சட்டவாக்கத்தின் 36 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், " அமைச்சரின் அங்கீகாரத்துடன் சபையினால் தீர்மானிக்கப்படும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக சபையினால் தீர்மானிக்கப்படும்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

24 முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

"வங்கிக் கணக்கின் கணக்காய்வு .

37. (1) ஒவ்வொரு நிதி ஆண்டுக்குமான வங்கியின் கணக்குகள் நிதியாண்டு முடிவடைந்த மூன்று மாதங்களுக்குள்ளாக கணக்காய்வுக்கென கணக்காய்வாளர்கள் தலைமையதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(2) பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் கணக்குகளை கணக்காய்வு செய்தல் தொடர்பான அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் வங்கியின் கணக்குகளைக் கணக்காய்வு செய்வதற்கு ஏற்புடையதாதல் வேண்டும்".

25. முதன்மைச் சட்டவாக்கத்தின் 39 ஆம், 40 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்படுகின்றன.

26. முதன்மைச் சட்டவாக்கத்தின் 41 ஆம், பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவு இடப்படுகின்றது.

" கணக்குகள் மீதான வட்டி.

41. வங்கியினால் வைப்புச் செய்யப்பட்ட பணங்கள் மீது சபையினால் தீர்மானிக்கப்படும் வீதங்களில் வட்டி செலுத்தப்படற்பாலதாதல் வேண்டும்" எனினும் உரிமை கோரப்படா வைப்புக்கள் ஒதுக்குக்கு மாற்றப்பட்ட பணங்களுக்கு வட்டி கொடுக்கப்படலாகாது."

27. முதன்மைச் சட்டவாக்கத்தின் 42 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்படுகின்றது.

28. முதன்மைச் சட்டவாக்கத்தின் 44 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (5), (6), (7), (8), (9), (10), ஆகிய உட்பிரிவுகளை நீக்கஞ் செய்வதன் மூலமும் அவற்றுக்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன் மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது:-

" (5) நியமித்த எவரும், தமது அடையாளம் தொடர்பில் வங்கி ஏற்றுக்கொள்ளத்தக்க சான்றுமூலமும் ஆதாரப்படுத்தப்பட்ட விண்ணப்பமொன்றை செய்தாலொழிய நியமித்தருக்கு வங்கியினால் கொடுப்பனவு எதுவும் செய்யப்படுதலாகாது.

(6) மரணமெய்திய பெயர் நியமனம் செய்தவர் ஒருவரின் நியமத்தர் ஒருவருக்குச் செய்யப்பட்ட ஒரு கொடுப்பனவு, அத்தகைய பெயர் நியமனம் செய்தவரின் வரவில் இருக்கும் பணங்கள் தொடர்பில் வங்கிக்குள் கடப்பாடுகளின் பூரண பொறுப்பு விடுவிப்பதாதல் வேண்டும்."

29. முதன்மைச் சட்டவாக்கத்தின் 46 ஆம், பிரிவானது " அமைச்சரின் அங்கீகாரத்துடன் அவரது வரவில் இருக்கும் பணத்தை வங்கி தகுந்ததெனக் கருதும் அத்தகைய வேறு ஆளுக்கு என்னும் சொற்களுக்குப் பதிலாக , " சபையின் அங்கீகாரத்துடன் அவரது வரவில் இருக்கும் பணத்தை வங்கி தகுந்ததெனக்கருதும் அத்தகைய வேறு ஆளுக்கு "என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

30. 1982 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 47 ஆம், பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு பின்வரும் பிரிவு அதற்குப் பதிலாக இடப்படுகின்றது.

"கோரப்படா வைப்புக்கள் ஒதுக்கு

47. (i) கணக்கொன்று செயலற்றதாக இருக்கின்றவிடத்த, அதாவது -

(அ) சேமிப்புக் கணக்கொன்றின் விடயத்தில் 16 வயதை எய்தியதன் மீது அல்லது அதன் பின்னர் கணக்கொன்றை ஆரம்பித்த ஆள் ஒருவரினால் 10 வருட காலப்பகுதிக்கு அல்லது 16 வயதை எய்த முன்னர் தமது கணக்கை ஆரம்பித்த ஆள் ஒருவரின் விடயத்தில், 16 வயதை எய்தியதன் மீது அல்லது அதன் பின்னர் 10 வருட காலப்பகுதிக்கு சேமிப்புப் பண வைப்புப் புத்தகமானது ஒன்றில் அதிலிருந்து பணத்தை எடுப்பதற்காகவோ அல்லது அக் கணக்கில் பணத்தை போடுவதற்காகவோ அல்லது வட்டி பதிவதற்காவோ வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாத விடயத்தில், அல்லது

(ஆ) வைப்புக் கணக்கொன்றின் விடயத்தில் 16 வயதை எய்தியதன் மீது அல்லது அதன் பின்னர் கணக்கொன்றை ஆரம்பித்த ஆளொருவரினால் 10 வருட காலப்பகுதிக்கு அல்லது 16 வயதை எய்திய முன்னர் தனது கணக்கை ஆரம்பித்த ஆள் ஒருவரினால் 10 வருட காலப்பகுதிக்கு அல்லது 16 வயதை எய்த முன்னர் தமது அல்லது கணக்கை ஆரம்பித்த ஆள் ஒருவரின் விடயத்தில், 16 வயதை எய்தியதன் மீது அல்லது அதன் பின்னர் 10 வருட காலப்பகுதிக்கு முதிர்ச்சியில் தானாகவே புதுப்பிக்கப்படுவதற்காக அறிவுறுத்தல்களை வங்கிக்கு வழங்காமலும் புதுப்பிக்கப்படுவதற்காக வைப்புப் பற்றுச் சீட்டு சமர்ப்பிக்கப்படாமலும் இருக்கும் விடயத்தில்,

அத்தகைய கணக்குகளின் வரவில் இருக்கும் பணங்கள் " உரிமை கோரப்படா வைப்புக்கள் ஒதுக்கு" என அழைக்கப்பட வேண்டிய விசேட ஒதுக்கொன்றுக்கு மாற்றப்படுதல் வேண்டும்.

2. உரிமை கோரப்படா வைப்புக்கள் ஒதுக்கு" எந்தக் கணக்கிலிருந்து பணங்கள் கைமாற்றப்பட்டனவோ அந்தக் கணக்கு, அத்தகைய கைமாற்றல் திகதியிலிருந்து, வங்கியின் பொறுப்பாக ஒருபோதும் கருதப்படமாட்டாது.

(3) அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறவான உரிமை கோரப்படா வைப்புக்கள் ஒதுக்கின் வரவில் இருக்கும் பணங்கள் முழுவதும் அல்லது பணங்களின் அத்தகைய பாகம் மூலதனமாக்கப்பட்டு, மூலதனமாக்கப்பட்ட பணத்தின் பெறுமதிக்குச் சமமான பங்குகள் வங்கியினால் திறைசேரிச் செயலாளருக்கு வளங்கப்படலாம்.

4. உரிமை கோரப்படா வைப்புக்கள் ஒதுக்கு" ஏதேனும் பணம் கைமாற்றப்பட்டதன் பின்னர் (1) ஆம் உட் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட கணக்கொன்றின் வரவில் இருக்கும் பணங்கள் தொடர்பில் வங்கிக்கு ஏதேனும் உரிமைக் கோரிக்கை செய்யப்படுமிடத்து வங்கியானது, அத்தகைய உரிமைக்கோரிக்கையைப் பரிசீலித்த பின்னர், கணக்கில் இருந்த பணத்தொகைக்குச் சமமான பணத்தொகையொன்றை கோரிக்கை செய்பவருக்குக் கொடுத்தல் வேண்டும் என்பதுடன் அதன் பின்னர் செலுத்தப்பட்ட பணத் தொகையை மீளளிப்புச் செய்வதற்காக திறைசேரி செயலாளருக்கு விண்ணப்பம் ஒன்றைச் செய்தலும் வேண்டும். திறைசேரிச் செயலாளர், விண்ணப்பத்தைப் பெற்றதன் பின்னர் இயலக்கூடியளவு விரைவாக, கோரப்பட்ட தொகையை திரட்டு நிதியத்திலிருந்து வங்கிக்குச் செலுத்தல் வேண்டும்"

31. முதன்மைச் சட்டவாக்கத்தின் 48 ஆம், பிரிவானது அப் பிருவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ் பிரிவின் (அ) என்னும் பந்தியின், " அசைவற்ற ஆதனத்தின் ஈட்டின் " என்னும் சொற்களுக்குப் பதிலாக அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தின் ஈட்டின் அல்லது உத்தரவாதமொன்றின் அடிப்படையின் மீது" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்: அத்துடன்

(2) அவுட் பிரிவின் (இ) என்னும் பந்தியில், " அத்தகைய வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஏதேனும் அசைவற்ற ஆதனம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, " அத்தகைய வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

32. முதன்மை சட்டவாக்கத்தின் 50 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் , " கணிசமான அக்கறை கொண்டுள்ள " என்னும் சொற்களுக்குப் பதிலாக, போதுமான அசைவற்ற ஆதனத்தின் ஈட்டின்மீது வீடொன்றை கொள்வனவு செய்யும் அல்லது நிர்மாணிக்கும் நோக்கத்துக்காக தவிர, கணிசமான அக்கறை கொண்டுள்ள " என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

33. முதன்மை சட்டவாக்கத்தின் 51 ஆம் பிரிவானது, "ஏதேனும் அசைவற்ற ஆதனத்தின் ஈட்டின்மீது " என்னும் சொற்களுக்குப் பதிலாக ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தின் ஈட்டின்மீது" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

34. முதன்மைச் சட்டவாக்கத்தின் 60 ஆம் பிரிவு தவிர்ந்த 52 முதல் 76 வரையான (இரு பிரிவுகளும் உட்பட) பிரிவுகள் இத்தால் நீக்கஞ் செய்யப்படுகின்றன.

35. முதன்மைச் சட்டவாக்கத்தின் 77 ஆம், அப்பிரிவின் (2) ஆம் (3) ஆம் உட்பிரிவுகளை நீக்கம் செய்வதன் மூலமும் அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன் மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(2) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் உத்தியோகத்தர் வங்கியின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுகின்றவிடத்து, 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச் சபைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அவருக்கும் அவர் தொடர்பிலும், ஏற்றமாற்றங்களுடன், ஏற்புடையனவாதல் வேண்டும்."

3. பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் உத்தியோகத்தர் வங்கியின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்பட்டவிடத்து, 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச் சபைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அவருக்கும் அவர் தொடர்பிலும், ஏற்புடையனவாதல் வேண்டும்."

36. முதன்மைச் சட்டவாக்கத்தின் 78 ஆம் பிரிவு " கடன் இணக்கக் கட்டளைச்சட்டத்தில் உள்ளது எதுவும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக 1988 ஆம் ஆண்டின் 72 ஆம் இலக்க மத்தியஸ்த சபைகள் சட்டத்தில் கடன் இணக்கக் கட்டளைச்சட்டதில் உள்ளது எதுவும்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

37. முதன்மைச் சட்டவாக்கத்தின் 79 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்படுகின்றது.

38. முதன்மைச் சட்டவாக்கத்தின் 81 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்படுகின்றது.

38. முதன்மைச் சட்டவாக்கத்தின் 84 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வுட்பிரிவின் (ஈ) மற்றும் (உ) என்னும் பந்திகளை நீக்கஞ் செய்வதன் மூலமும் அவற்றிற்குப்பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன் மூலமும் :-

"(ஈ) வைப்புக் கணக்குகள் மற்றும் சேமிப்புக் கணக்குகள் வைத்திருக்கும் ஆட்களினால் பண வைப்புப் புத்தகங்கள் அல்லது எவையேனும் அதையொத்த ஆவணங்கள் பயன்படுத்தப்படல்:

(உ) கணக்குகளின் வகை, வைப்பாளர்களின் வகுப்பு, ஒவ்வொரு தடவையும் எடுக்கக்கூடிய ஆகக்கூடிய பணத்தொகை, பணம் எடுக்கக்கூடிய தடவைகள் என்பன தொடர்பிலான சபை வறையரைகள் உட்பட, பணச்சபையினால் குறித்துரைக்கப்படக் கூடியவாறவன அத்தகைய வரையறைகளுக்கும் மட்டுப்பாடுகளுக்கும் அமைவாக, கணக்குகள் வைத்திருக்கும் ஆட்களினால் காசோலைகள் வரைவதற்கான வசதிகள்"

(2) அவ்வுட்பிரிவின் (எ), (ஐ), (ஒ), (ஓ), (ஔ), (க), (ங), (ச), (ஞ), (ட), (ண), (த), (ந), (ப), (ம), (ய), (ர), (ல), (வ), (ழ), என்னும் பந்திகளை நீக்குவதன் மூலமும்.

40. முதன்மைச் சட்டவாக்கத்தின் 87 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) முறையே "அங்கீகரிக்கப்பட்ட சேமிப்புத் தொகுதி" "அதிஷ்டலாபச்சீட்டிழுப்பு" "பெறுமான மதிப்பீட்டாளர் குளாம் " பரீட்சைப் போட்டி " என்ற சொல்லமைப்புக்களின் வரைவிலக்கணங்களை நீக்குவதன் மூலமும்..

(2) "வர்த்தக வங்கி" என்ற சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும் :-

" வர்த்தக வங்கி " என்பது வங்கித் தொழிலைக் கொண்டு நடாத்துகின்றதும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒன்றாக 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித் தொழில்ச்சட்டதின் ஏற்பாடுகளின் கீழ் உரிமமளிக்கப்பட்டதுமான ஒரு கம்பெனி என்று பொருளாகும்:"

(3) " பணிப்பாளர் " என்ற சொல்லின் வரைவிலக்கணத்தை நேரே உடன் எடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும்:-

"நிதி வசதி" என்பது வாடிக்கையாளர் சார்பில் வங்கி உத்தரவாதமளித்துள்ளவிடத்து அல்லது வேறுவகையாக பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ளவிடத்து, வாடிக்கையாளர் ஒருவர் சார்பில் வங்கியினால் வளங்கப்படும் ஏதேனும் நேரடியான அல்லது நேரடியற்ற முற்பணம் என்று பொருளாகும்,"

(4) " விதித்துரைக்கப்பட்ட "என்பதன் வரைவிலக்கணத்தை நேரே உடன் அடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும்:-

"மாகாண சபைகள் " என்பது அரசியலமைப்பின் XVi ஆம் அத்தியாயத்தின் கீழ் தாபிக்கப்பட்ட ஒரு மாகாண சபை என்று பொருளாகும்: "

(5) " உள்ளூரதிகாரசபை" என்பதன் வரைவிலக்கணத்தை நீக்கம் செய்துவிட்டு அதற்குப்பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும்:-

"உள்ளூரதிகாரசபை, எனும் ஒரு மாநகரசபை, நகரசபை, பிரதேசசபை என்று பொருளாகும் என்பதுடன் ஏதேனும் அத்தகைய சபையினால் பிரயோகிக்கப் படும், புரியப்படும் அத்துடன் நிறைவேற்றப்படும் தத்துவங்களை, கடமைகளை அத்துடன் பணிகளை நேரொத்த அல்லது ஒத்த தத்துவங்களையும், கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு அத்துடன் நிறைவேற்றுவதற்கென எழுத்திலான ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட ஏதேனும் அதிகார சபையையும் உள்ளடக்கும்," அத்துடன்

3) " கொள்வனைகாரர் " என்ற சொல்லின் வரைவிலக்கணத்தை நீக்கம் செய்துவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும்:-

" கொள்வனைகாரர்," என்பது சேமிப்புச் சான்றிழ் தொடர்பாகப் பயன்படுத்தப்படும் போது, இச்சட்டதின்கீழ் சேமிப்புச் சான்றிதழ்கள் வளங்கப்பட்டுள்ள ஆள் அல்லது ஆட்கள் குழு என்று பொருளாகும்:"

41. இச் சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல் வேண்டும்.

42. ஐயங்களைத் தவிர்ப்பதற்காக, முதன்மை சட்டவாக்கத்தின் 52 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் தீர்மானம், அப்பிரிவு நீக்கம் செய்யப்பட்டது எது எப்படி இருப்பினும் எல்லா நோக்கங்களுக்காகவும் செல்லு படியும் பயனுறுதியும் கொண்டதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அதற்கிணங்க, அத்தகைய தீர்மானத்தைப் பின்பற்றிச் செய்யப்பட்ட எல்லாச் செயல்களும் அத்தகைய நீக்கம் எதுவும் இல்லையென்றாற் போன்று தொடர்ந்து செய்யப்பட்டு பூரணமாக்கப்படலாம்.

1995 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க உள்ளூர்த் திறைசேரி உண்டியல்கள் (திருத்தச்) சட்டம்

(1995 திசெம்பர் மாதம் 11 ஆம் திகதியானது அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

உள்ளூர்த் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

1. இச்சட்டம் 1995 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, உள்ளூர்த் திறைசேரி உண்டியல்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படுவதான) உள்ளூர்த் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(அ) அதன் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன்மூலமும்:

"(2) இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் திறைசேரி உண்டியல்களை வழங்கும் அத்துடன் திருப்பிக்கொடுக்கும் நோக்கத்துக்கும் அது சம்பந்தமாகவும் அவசியமான எல்லாச் செயல்களும் அல்லது காரியங்களும், மத்திய வங்கியினால் திறைசேரிப் பிரதிச் செயலாளரின் சார்பில் செய்யப்படுதல் வேண்டும்.

(ஆ) அதன் (3) ஆம் உட்பிரிவை நீக்கிவிடுவதன் மூலமும்; அத்துடன்

(இ) அதன் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய (3) ஆம், (4)ஆம் உட்பிரிவுகளை உட்புகுத்துவதன்மூலமும்:-

"(3) ஒன்றில் எழுத்திலான சான்றிதழ்கள் என்ற வடிவத்திலான உண்டியல்களாக அல்லது கட்டுப்பணமில்லாத திறைசேரி உண்டியல்களாகத் திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படலாம்.

(4) திறைசேரி உண்டியல்களைக் கொள்வனவு செய்வதற்கான ஏதேனும் விண்ணப்பம் அல்லது எவையேனும் விலைக்கேள்விகள், தேசிய பொருளாதாரத்தின் அக்கறைகளைக் கருத்திற்கொண்டு முதனிலை வணிகர்களுக்கும் பதவிப்பெயர் குறிக்கப்பட்ட வணிகரல்லாத விலைக்கேள்வியாளர்களுக்கும் மட்டுப் படுத்தப்பட வேண்டும்."

3 முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு, "நிர்ணயித்துத் தீர்மானிக்கின்ற அத்தகைய நேரத்தில் அல்லது நேரங்களில்" என்ற சொற்களுக்குப் பதிலாக "நிர்ணயித்துத் தீர்மானிக்கின்ற அத்தகைய நேரத்தில் அல்லது நேரங்களில், ஆனால் வழங்கற் தேதியிலிருந்து ஓராண்டுக்குப் பிந்தாமல்" என்ற சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

4.முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :-

"கட்டுப்பணமில்லாத திறைசேரி உண்டியல்கள் தவிர்ந்த திறைசேரி உண்டியல்கள்.

7. (1) கட்டுப்பணமில்லாத திறைசேரி உண்டியல்கள் தவிர்ந்த, இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ஒவ்வொரு திறைசேரி உண்டியலும் திறைசேரிப் பிரதிச் செயலாளரின் ஒப்பத்தைப் படியுருவிற் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) கட்டுப்பணமில்லாத திறைசேரி தவிர்ந்த ஒவ்வொரு திறைசேரி உண்டியலுக்குமான உரித்து, உண்டியலைப் புறக்குறிப்பிடுவதன் மூலமும் ஒப்படைப்பதன் மூலமும் கைமாற்றப்படற்பாலதாதல் வேண்டும்.

(3) கட்டுப்பணமில்லாத திறைசேரி உண்டியல் தவிர்ந்த ஒவ்வொரு திறைசேரி உண்டியல் தொடர்பிலும்–

(அ) திறைசேரி உண்டியலின் புறக்குறிப்பெதுவும், அந்நோக்கத்துக்காக ஏற்பாடு செய்யப்பட்ட இடைவெளிகளுள் ஒன்றில் உண்டியலின் பிற்புறத்தில் அல்லது ஒழுங்குவிதியினால் விதித்துரைக்கப்பட்டு மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட ஒரு படிவத்தில் உள்ளதாக தனிவேறானகுறித்தொதுக்கலில் அல்லது வேறு சாதனத்தில் எழுதப்பட்ட உண்டியலை வைத்திருப்பவரின் ஒப்பத்தினால் செய்யப் பட்டாலொழிய, செல்லுபடியாதலாகாது;

(ஆ) ஆளொருவர் திறைசேரி உண்டியலொன்றில் புறக்குறிப்பிட்டுள்ளார் அல்லது பிறக்குறிப்பிட்டு ஒப்படைத்துள்ளார் என்ற காரணத்தினால் மட்டும் அதன்மீது வருமதியாகவுள்ள ஏதேனும் பணத்தைச் செலுத்துவதற்கு ஆளாதாலாகாது."

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன், அவை அச்சட்டவாக்கத்தின் 8, 9, 10, 11, 12, 13, 14, 15, 16, 17, என்ற பிரிவுக்காகப் பயனுறுதலும் வேண்டும்:–

"கட்டுப்பணமில்லாத திறைசேரி உண்டியல்களை வழங்குதலும், அவற்றில் வியாபாரஞ் செய்தலும் அவற்றைப் பேணுதலும்.

8. (1) இக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க கட்டுப்பணமில்லாத திறைசேரி உண்டியல்களை வழங்குவதற்கும் அவற்றில் வியாபாரம் செய்வதற்கும் அவசியமான ஏதேனும் நடவடிக்கையை எடுப்பதற்கு மத்திய வங்கி அதிகாரம் கொண்டதாதல் வேண்டும். மேற்போன்றவற்றின் பொதுமையை வரையறுக்காமல், மத்திய வங்கி பின்வருவனவற்றைப் பொறுப்பேற்பதற்கும் நிறைவேற்றுவதற்கும் அதிகாரம் கொண்டதாதல் வேண்டும்.

(அ) கட்டுப்பணமில்லாத திறைசேரி உண்டியல்களை வழங்குவதனையும் அவற்றில் வியாபாரம் செய்வதனையும் பதிவதற்கு மத்திய வங்கி பதிவேடுகளில் பதிவீடுகளைச் செய்தலும் பேணுதலும்;

(ஆ) நேரடி பங்குபற்றுநர்களுக்காக அல்லது மத்திய வங்கிக்காக அல்லது அவர்களின் அல்லது அதன் சார்பில், கட்டுப்பணமில்லாது திறைசேரி உண்டியல்களின் சொத்துவத்தை அல்லது கட்டுகாப்பாக வைத்திருக்கைகளைப் பதிவதற்குக் கணக்குகளை பேணுதல்;

(இ) 9 ஆம் பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட நேரடிப் பங்குபற்றுதல்களைக் காலத்துக்குக்காலம் நியமித்தலும், கட்டுப்பணமில்லாத திறைசேரி உண்டியல்களில் அவர்களின் கொடுக்கல் வாங்கல்களும் நேரடிப் பங்குபற்றுநர்களாக அவர்களினது கடமைகளின் புரிகையும் தொடர்பில் அத்தகைய நேரடிப் பங்கு பற்றுநர்களை ஒழுங்குபடுத்துலும், மேற்பார்வை செய்தலும் அல்லது கண்காணித்தலும்;

(ஈ) 10 ஆம் பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட வணிகர் நேரடிப் பங்குபற்றுநர்களைக் காலத்துக்குக்காலம் நியமித்தலும் கட்டுப்பணமில்லாத திறைசேரி உண்டியல்களில் அவர்களின் கொடுக்கல் வாங்கல்களும் வர்த்தகர் நேரடிப் பங்குபற்றுநர்களாக அவர்களினது கடமைகளின் புரிகையும் தொடர்பில் அத்தகைய வர்த்தகர் நேரடிப் பங்குபற்றுநர்களை வணிகர் இடைத்தரகர்கள் ஒழுங்குபடுத்தலும், மேற்பார்வை செய்தலும் அல்லது கண்காணித்தலும்;

(உ) வணிகர் இடைத்தரகர்களைக் காலத்துக்குக்காலம் நியமித்தலும், கட்டுப்பணமில்லாத திறைசேரி உண்டியல்களில் அவர்களின் தரகுத் தொழிலும் வணிகர் இடைத் தரகர்களாக அவர்களினது கடமைகளின் புரிகையும் தொடர்பில் அத்தகைய வணிகர்இடைத்தரகர்களைஒழுங்குபடுத்தலும், மேற்பார்வை செய்தலும் அல்லது கண்காணித்தலும்:

(ஊ) முதனிலை வணிகர்களைக் காலத்துக்குக்குக் காலம் நியமித்தலும், கட்டுப்பணமில்லாத திறைசேரி உண்டியல்களில் அவர்களின் கொடுக்கல்வாங்கல்களும் முதனிலை வர்த்தகர்களாக அவர்களினது கடமைகளின் புரிகையும் தொடர்பில் அத்தகைய முதனிலை வர்த்தகர்களை ஒழுங்குபடுத்தலும், மேற்பார்வை செய்தலும் அல்லது கண்காணித்தலும்:

(எ) பதவிப்பெயர் குறிக்கப்பட்ட வர்த்தகரல்லாத விலைக்கேள்வியாளர்களை நியமித்தலும், கட்டுப்பணமில்லாத திறைசேரி உண்டியல்களில் அவர்களின் கொடுக்கல் வாங்கல்கல்களும் வர்த்தகரல்லாத விலைக்கேள்வியாளர்களாக அவர்களினது கடமைகளின் புரிகையும் தொடர்பில் அத்தகைய வர்த்தகரல்லாத விலைக்கேள்வியாளர்களை ஒழுங்குபடுத்தலும், மேற்பார்வை செய்தலும், கண்காணித்தலும்:

(ஏ) கட்டுப்பணமில்லாத திறைசேரி உண்டியல்களுக்கான ஒழுங்கான சந்தையொன்றை மேம்படுத்துவதற்கும் அபிவிருத்திசெய்வதற்கும் நடத்தைக் கோவையொன்றை வகுத்தமைத்தல்:

(2) மத்திய வங்கியானது, 8, 9, 10, 11, என்னும் பிரிவுகளில் வேறுவகையில் ஏற்பாடு செய்யப்படாத அளவுக்கு, பின்வருவனவற்றுக்கு ஏற்பாடு செய்யுமாறு, நேரடிப் பங்குபற்றுநர்களுக்கு அல்லது அவர்களின் எதேனும் வகுதிக்குப் பணிப்புகளை வழங்கலாம்:–

(அ) வணிகர் நேரடிப் பங்குபற்றுநர்களின் வாடிக்கையாளர்களது கணக்குகள் பேணப்பட வேண்டிய அத்துடன் நிருவகிக்கப்படவேண்டிய விதம்:

(ஆ) முதல் தொகையின் கொடுப்பனவுகளும், அத்துடன் ஏதேனும் கடன் மீட்பு வரும்படிகள் அத்தகைய கணக்குகளுக்கு வரவுவைக்கப்பட வேண்டிய நேரங்கள்:

(இ) அத்தகைய கணக்குகளைப் பேணுவதற்கும் நிருவகிப்பதற்கும் அறவிடப்படக்கூடிய கட்டணம்:

(ஈ) நேரடிப் பங்குபற்றுநர்கள், வணிகர் நேரடிப் பங்குபற்றுநர்கள், வணிகர் இடைத்தரகர்கள் அல்லது முதனிலை வணிகர்கள் என்போரை ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல், அல்லது கண்காணித்தல்:

(உ) கட்டுப்பணமில்லாத திறைசேரி உண்டியல்கள் அல்லது அதனகத்துள்ள அக்கறைகள் கொள்வனவு செய்யப்படக்கூடிய கைமாற்றப்படக்கூடிய அடகுவைக்கப்படக்கூடிய அல்லது பாரபந்தத்திற்குட்படுத்தக்கூடிய விதமும் உபாயங்களும்.

9. (1) மத்திய வங்கியானது, எவரேனும் முதனிலை வணிகரைஅலலது வேறு ஆளை நேரடிப்பங்குபற்றுநரொருவராக இருப்பதற்கென எழுத்தில் நியமிக்கலாம், நேரடிப்பங்குபற்றுநர் ஒவ்வொருவரும், மத்திய வங்கியுடன், இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட வாறான அதன் சொந்த, கட்டுப்பணமில்லாத திறைசேரி உண்டியல் கணக்கைப் பேணுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(2) நேரடிப் பங்குபற்றுநர் ஒருவர் கட்டுப்பணமில்லாத திறைசேரி உண்டியல்களைக் கொண்டிருப்பதற்காக மத்திய வங்கியுடன் அதன் சொந்தக் கணக்கில் தனியான கணக்கொன்றைப் பேணுதல் வேண்டும். அத்தகைய கணக்கு, காலத்திற்குக் காலம் மத்திய வங்கியினால் எழுத்தில் குறித்துரைக்கப்பட்ட படிவத்திலும் விதத்திலும் நேரடிப் பங்குபற்றுநரினால் பேணப்படுதல் வேண்டும்.

(3) மத்திய வங்கி, நேரடிப் பங்குபற்றுநர் ஒருவரின் கணக்குப் பற்றிய பதிவேடுகளைப் பேணுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய பதிவேடுகள், அத்தகைய கணக்கின் நிலையினது முடிவான சான்றாதலும் வேண்டும், அத்துடன் அதுவே மத்திய வங்கியையும் நேரடிப்பங்குபற்ற பணிப்பதாதலும் வேண்டும்.

(4) மத்திய வங்கி (ஒன்றில் முதலிலிருந்தான அல்லது மீட்புவரும்படிகளிலிருந்தான) எல்லாப் பணத்தொகைகளையும், மத்திய வங்கியுடன் நேரடிப் பங்குபற்றுநர்களினால் பேணப்பட்டுவரும் கட்டுப்பணமில்லாத திறைசேரி உண்டியல்களின் கணக்குகளுக்கிணங்க, அந்தக் கணக்குகள் அவர்களது சொந்தக் கணக்கில் வைத்திருக்கப்படும் கட்டுப்பணமில்லாத திறைசேரி உண்டியல்கள் தொடர்பிலாயினுஞ்சரி அல்லது வணிகர் நேரடிப்பங்குபற்றுநர்களின் விடயத்தில், அவர்களது சொந்தக் கணக்கில் வைத்திருக்கப்படும் அத்தகைய திறைசேரி உண்டியல்களிலும் அத்துடன் கூட்டுமொத்த வாடிக்கையாளர் கணக்குகள் தொடர்பில் வைத்திருக்கப்படும் திறைசேரி உண்டியல்களிளாயினுஞ்சரி அவர்களுக்கு அவை கொடுபடற்கானவாக வரும் தேதியில் செலுத்துதல் வேண்டும். அத்தகைய கொடுப்பனவுகள் மத்திய வங்கியினால் குறித்துரைக்கப்படக்கூடிய வாறான அத்தகைய வழிகளிலும் அத்தகைய முறையிலும் செய்யப்படுதல் வேண்டும்.

(5) நேரடிப் பங்குபற்றுநர் ஒருவர், மத்திய வங்கிக்கு அதன் சொந்தக் கட்டுப்பணமில்லாத திறைசேரி உண்டியற்கணக்குத் தொடர்பானவையும் வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் ஒருவரின் விடயத்தில், அதன் சொந்தக் கட்டுப்பணமில்லாத திறைசேரி உண்டியல் கணக்கு, அத்துடன் அதன்கூட்டு மொத்த வாடிக்கையாளர் கணக்கு அல்லது வாடிக்கையாளர் கணக்கு அல்லது காலத்திற்குக் காலம் மத்திய வங்கி குறித்துரைக்கக் கூடியவாறான அதன் சொந்தக் கணக்குத் தொடர்பானவையுமான அத்தகைய விபரத்திரட்டுகள், விடயங்கள், விபரங்கள் அல்லது தகவல் என்பவற்றைக் கொடுத்துதவுதல் வேண்டும்.

(6) மத்திய வங்கியானது, பணச்சபையால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட அதன் அலுவலர்கள் எவரூடாகவும், அதன் சொந்தக் கணக்கில் வைத்திருக்கப்படும் கட்டுப்பணமில்லாத திறைசேரி உண்டியல்கள் தொடர்பாக எவையேனும் புத்தகங்கள், பதிவேடுகள் அல்லது கணக்குகள் உட்பட எவையேனும் கட்டுப்பணமில்லாத திறைசேரி உண்டியல்கள் தொடர்பாக அல்லது அவற்றைப் பாதிக்கின்றனவும் நேரடிப் பங்கு பற்றுநர் ஒருவரின் விடயத்தில் அதன் சொந்தக் கணக்கிலும் கூட்டு மொத்த வாடிக்கையாளர் கணக்கிலும் வைத்திருக்கப்படும் அதன் கட்டுப் பணமில்லாத திறைசேரி உண்டியல்கள் தொடர்பிலும் நேரடிப் பங்குபற்றுநர் ஒருவரால் பேணப்படுவனவான எவையேனும் புத்தகங்கள், பதிவேடுகள் அல்லது கணக்குகள் என்பனவற்றை பரிசோதனை செய்யலாமென்பதடன் அவற்றின் பிரதிகளையும் எடுக்கலாம். நேரடிப் பங்குபற்றுநரும் அதன் அலுவலர்கள், பணிப்பாளர்கள், ஊழியர்கள், சேவையாளர்கள் அத்துடன் முகவர்கள் என்போர், மத்திய வங்கியால் தேவைப்படுத்தப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் புத்தகங்கள், பதிவேடுகள், கடிதத்தொடர்பு அல்லது வேறெவையேனும் ஆவணங்கள் என்பவற்றை அத்தகைய வங்கிக்குக் கொடுத்துதவுதல் வேண்டுமென்பதுடன் கட்டுப்பணமில்லாத திறைசேரி உண்டியல்கள் தொடர்பாக இக்கட்டளைச் சட்டத்தினால் மத்திய வங்கிமீது சுமத்தப்பட்ட கடமைகளைப் புரிவதற்கு அது தேவைப்படும் அத்தகைய எல்லா உதவியையும் மத்திய வங்கிக்கு ஏற்பாடு செய்தலும் வேண்டும்.

(7) அரசாங்கம் ஏதேனும் பொறுப்பினை உறும் பட்சத்தில் அல்லது கட்டுப்பணமிலலாதவொரு திறைசேரி உண்டியல் தொடர்பாக எவையேனும் முதல் அல்லது மீட்சி வரும்படிகளின்

கொடுப்பனவுகளைச் செய்தும் நேரடிப் பங்குபற்றுநர் ஒருவரின் அல்லது வணிகர் நேரடிப் பங்கு பற்றுநர் ஒருவரின் ஏதேனும் தவணைதவறுகையின் விளைவாக அல்லது அது காரணமாக அத்தகைய பொறுப்பு எழுகின்ற சந்தர்ப்பத்தில், அத்தகைய பங்கு பற்றுநர் அரசாங்கத்தால் கோரப்படுவதன் மூலம் அத்தகைய பொறுப்பு அலலது கொடுப்பனவு தொடர்பில் அரசாங்கததிற்கு நட்டோத்தரவாதமளிப்பதற்கு உட்பட்டவராலும் வேண்டும்.

இந்த உட்பிரிவின் நோக்கத்திற்காக "தவணை தவறுகை" என்பது பின்வருவனவற்றை உள்ளடக்கும்:-

(அ) நேரடிப் பங்குபற்றுநர் ஒருவரின் அல்லது வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் ஒருவரின் பக்கலில் இக்கட்டளைச் சட்டத்தினால் அவருக்குக் குறித்துரைக்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட எதேனும் பணியைக் கொண்டு நடாத்துவதில் அல்லது கடமையை நிறைவேற்று வதிலான ஏதேனும் அசட்டை அலலது தவறுகை; அத்துடன்

(ஆ) நேரடிப் பங்குபற்றுநரொருவரின் அல்லது வணிகர் நேரடிப் பங்குபற்றுநரொருவரின் பக்கலில், இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் தவறொன்றாக அமையும் அல்லது இக்கட்டளைச்சட்டத்தினால் கையாளப்படும் பின்வரும் ஏதேனும் கருமம் தொடர்பாக வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் தவறொன்றாக அமையும் ஏதேனும் செயல் அல்லது தவிர்வு –

(1) அத்தகைய தவறு தொடர்பாக ஏதேனும் குற்றவழக்கு இருந்தாலும்சரி இல்லாவிட்டாலும் சரி; அல்லது

(11) அத்தகைய செயல் அல்லது தவிர்வு நேரடிப் பங்குபற்றுநரால் அல்லது வணிகர் நேரடிப் பங்குபற்றுநரால் அல்லது அத்தகைய நேரடிப் பங்குபற்றுநரின் அல்லது வணிகர் நேரடிப் பங்குபற்றுநரின் எவரேனும் பணிப்பாளர், அலுவலர், ஊழியர் அல்லது முசவரால் செய்யப்பட்டிருப்பினும் சரி.

10. (1) மத்திய வங்கியானது, எவரேனும் நேரடிப்பங்குபற்றுநரை, வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் ஒருவராக எழுத்தில் நியமிக்கலாம்.

(2) வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் ஒருவர், மத்தியவங்கியுடன் அதன் கூட்டுப்பணமில்லாத திறைசேரி உண்டியல் கணக்குடன் மேலதிகமாகவும், புறம்பாகவும், கூட்டுமொத்த வாடிக்கையாளர் கணக்கொன்றைப் பேணுதல் வேண்டும். அது அத்தகைய வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் ஊடாக, இப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ் பயனுறுத்தப்படும் எல்லாக் கைமாற்றங்கள் தொடர்பிலுமான தனிக் கூட்டுமொத்தக் கணக்கொன்றாதல் வேண்டும். கூட்டுமொதத வாடிக்கையாளர் கணக்கு, மத்திய வங்கியினால் காலத்திற்குக் காலம் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய படிவத்திலும், விதத்திலும் வணிகர் நேரடிப் பங்குபற்றுநரால் பேணப்படுதல் வேண்டும்.

(3) வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் ஒருவர் மாத்திரம், ஏனையோர் சார்பில் கட்டுப்பணமில்லாத திறைசேரி உண்டியல்களில் கொடுக்கல் வாங்கல்களைச் செய்யலாம். ஒன்றில் கட்டுப்பணமில்லாத திறைசேரி உண்டியலொன்றை கைமாற்றம் செய்வதற்கு அல்லது கைமாற்றம் ஒன்றைப் பெறுவதற்கு விரும்புகின்றவரான நேரடிப் பங்குபற்றநரும் மத்திய வங்கியும் தவிர்ந்த ஆளெவரும், வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் ஊடாக மாத்திரமே அவ்வாறு செய்யலாம்.

(4) வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் ஒருவர், அதன் வாடிக்கையாளர்கள் ஒவ்வொருவர் தொடர்பிலும், ஒருகணக்கையும், இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் அவரது கடமைகளைப் புரிவதற்கு இயலச் செய்வதற்கு அவசியமாகக்கூடியவாறான அல்லது தோதாகக்கூடியவாறான அதன் வாடிக்கையாளர் தொடர்பான வேறெவையேனும் புத்தகங்கள், பதிவேடுகள், அத்துடன் கோவைகள் என்பவற்றையும் பேணுதல் வேண்டும்.

(5) வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் ஒருவர், அதன் வாடிக்கையாளர் ஒவ்வொருவருக்கும், அத்தகைய வாடிக்கையாளர்களின் கட்டுப்பணமில்லாத திறைசேரி உண்டியல்கள் தொடர்பில், மத்திய வங்கியினால் அதற்காகக் குறித்துரைக்கப்பட்ட தேதியில் அல்லது தேதிகளில், அல்லது அதற்குமுன்னர் ஒரு மாதாந்த, அல்லது வேறு காலாந்தரக் கூற்றை அல்லது கூற்றுக்களை வழங்குதல் வேண்டும். அத்தகைய கூற்று ஒவ்வொன்றும், மத்திய வங்கி குறித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கும், அத்தகைய படிவத்திலும் இருத்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய தகவலை கொண்டிருத்தலும் வேண்டும்.

(6) ஒன்பதாம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான, வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் கூட்டுமொத்த வாடிக்கையாளர் கணக்கில் வைத்திருக்கப்படும் கட்டுப்பணமற்ற திறைசேரி உண்டியல்கள் மீது போகுமதியான தொகையில் அத்தகைய கொடுப்பனவுகளை வணிகர் நேரடிப்பங்குபற்றுநர் மத்திய வங்கியிடமிருந்து பெற்றுக் கொண்டதன்மேல், வணிகர் நேரடிப் பங்குபற்றநரானவர் அவை கொடுபடற்பாலனவாக வரும் தேதியன்று அதற்கு உரித்துடைய திறத்தவருக்கு அல்லது திறத்தவர்களுக்கு அத்தகைய கட்டுப்பணமற்ற திறைசேரி உண்டியல்கள் மீது கொடுபடற்பாலனவான (ஒன்றில் முதல்வகையான அல்லது மீட்பு வரும்படிகள் வகையான) எல்லாத் தொகைகளையும் செலுத்துதல் வேண்டும்.

அத்தகைய கொடுப்பனவுகள் மத்திய வங்கியினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான நேரத்திலும் அத்தகைய முறையிலும் அத்தகைய வழிவகைகள் மூலமும் செய்யப்படுதல் வேண்டும்.

(7) இப்பிரிவின் (3) ஆம் 6 ஆம் உட்பிரிவின்கீழ் வணிகர் நேரடிப்பங்குபற்றுநர் ஒருவருக்கூடாகப் பயனுறுத்தப்பட்ட கட்டுப்பணமற்ற திறைசேரி உண்டியல்களின் கைமாற்றம் ஒவ்வொன்றும் இப்பிரிவிலும் 11 ஆம் பிரிவிலும் ஏற்பாடு செய்யப்பட்ட முறையிலும் அந்நோக்கங்களுக்காகவும் கொடுத்து வாங்கப்படுதல் வேண்டும்.

(8) இப்பிரிவின் (2) ஆம் (3) ஆம் உட்பிரிவின்கீழ் வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் ஒருவரால் பேணப்படும கணக்கு ஒரு வாடிக்கையாளரை அது தொடர்புறுத்துகின்ற அளவுக்கு வணிகர் நேரடிப் பங்குபற்றுநருக்கும் வாடிக்கையாளருக்கும் இடையே அந்தரங்கமானதாக இருத்தல் வேண்டுமென்பதுடன் மத்திய வங்கி அலலது சட்டத்தினால் வேறு வகையாகத் தேவைப்படுத்தப்பட்ட அல்லது வாடிக்கையாளரின் மரபுரிமையாளர்கள், மரணசாதன நிறைவேற்றுநர்கள் அல்லது சாட்டுதல்காரர்கள் தவிர்ந்த ஆள் எவருக்கும் அவ்வாறு வெளிவிடுவது வாடிக்கையாளரினால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்டிருந்தால் ஒழிய ஆள் எவருக்கும் வெளிவிடப்படுதல் ஆகாது.

(9) வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் ஒருவர் அததகைய வணிகர் நேரடிப் பங்குபற்றுநருக்கூடாக அத்தகைய வாடிக்கையாளரினால் எடுக்கப்பட்ட அல்லது செய்யப்பட்ட எல்லாக் கைமாற்றங்கள் தொடர்பிலும் வாடிக்கையாளர்களுக்கு முழுமையாக பொறுப்புடையவராதலும் பொறுப்பாளியாதலும் வேண்டும்.

11. (1) வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் ஒருவர் மத்திய வங்கி தவிர்ந்த அல்லது வாடிக்கையாளர் கணக்கொன்று கைமாற்றப் பெறுபவர் ஒருவர் தொடர்பாக வேறொரு வணிகர் நேரடிப் பங்குபற்றுநரால் பேணப்படுகின்றவிடத்து தவிர 10ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவுக்கிணங்க அத்தகைய வணிகர் நேரடிப் பங்குபற்றுநருக்கூடாகப் பயனுறுத்தப்பட்ட ஏனேும் கைமாற்றத்திற்கான திறத்தவர் ஒருவராக உள்ள நேரடிப் பங்குபற்றுநர் தவிர்ந்த கட்டுப்பணமற்ற திறைசேரி உண்டியல்களின் ஒவ்வொரு கைமாற்றுபவர் அத்துடன் கைமாற்றம் பெறுபவர் தொடர்பிலும் கணக்கொன்றைப் பேணிவருதல் வேண்டும். ஆனால் வாடிக்கையாளர் கணக்கொன்று வேறொரு வணிகர் நேரடிப் பங்குபற்றுநரால் பேணப்படும் விடயத்தில் முதலில் கூறப்பட்ட வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் இரண்டாவதாகக் கூறப்பட்ட வணிகர் நேரடிப் பங்குபற்றுநரின் கைமாற்றம், பெறுபவரின் கணக்குக்கு கட்டுப்பணமற்ற திறைசேரி உண்டியல்களைக் கைமாற்றுவித்தல் வேண்டும்.

(2) கட்டுப்பணமற்ற திறைசேரி உண்டியல்களின் கைமாற்றம் ஒன்று 10 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவுக்கிணங்க எவரேனும் ஆளினால் செய்யப்பட்டவிடத்து எந்த வணிகர் நேரடிப் பங்குபற்றுநருக்கூடாக அக்கைமாற்றம் பயனுறுத்தப்பட்டதோ அந்த வணிகர் நேரடிப்பங்குபற்றுநர் உடனடியாக மத்திய வங்கியினால் காலத்துக்குக் காலம் குறித்துரைக்கப்படும் படிவத்திலும் முறையிலும் –

(1) கைமாற்றுபவருக்கு அத்தகைய கைமாற்றம் தொடர்பில் உறுதிப்பாடொன்றை அல்லது ஏற்றுக்கொண்டமைபற்றிய பற்றுச்சீட்டு ஒன்றை வழங்க வேண்டும்; அத்துடன்

(11) கைமாற்றம் பெறுபவருக்கு அத்தகைய வணிகர் நேரடிப்பங்கு பற்றுநர் கைமாற்றம் பெறுபவரின் திறைசேரி உண்டியல்கள் தொடர்பில் கணக்கொன்றைப் பேணுபவராக இருந்தால், அததகைய கைமாற்றம் தொடர்பில் உறுதிப்பாடொன்றை அல்லது ஏற்றுக்கொண்டமை பற்றிய பற்றுச் சீட்டொன்றை வழங்குதல் வேண்டும்;

ஆயின், எவ்வாறாயினும் மேற்சொல்லப்பட்ட வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் தவிர்ந்த ஒரு வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் கைமாற்றம் பெறுபவரின் கட்டுப்பணமற்ற திறைசேரி உண்டியல்கள் தொடர்பில் வாடிக்கையாளர் கணக்கொன்றைப் பேணுகின்றவராக இருந்தால் முதலில் கூறப்பட்ட வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் உடனடியாக மத்திய வங்கியினால் காலத்திற்குக்காலம் குறித்துரைக்கப்பட்ட முறையில் அத்தகைய கைமாற்றம் பற்றி இரண்டாவதாகக் கூறப்பட்ட வணிகர் நேரடிப் பங்குபற்றுநருக்கு அறிவித்தல் வேண்டும். அத்துடன் அத்தகைய இரண்டாவதாகக் கூறப்பட்ட வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் உடனடியாக கைமாற்றம் பெற்றவருக்கு மத்திய வங்கியினால் காலத்திற்குக் காலம் குறித்துரைக்கப்பட்ட முறையிலும் படிவத்திலும் உறுதிப்பாடொன்றை அல்லது பெற்றமைபற்றிய பற்றுச் சீட்டொன்றை வழங்குதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட உறுதிப்பாடு அல்லது பெற்றுக்கொண்டமைபற்றிய பற்றுச்சீட்டு கைமாற்றப்படக்கூடியதாதலாகாது என்பதுடன் அதனை வழங்கிய வணிகர் நேரடிப் பங்குபற்றுநருக்கும் அது வழங்கப்பட்ட வாடிக்கையாளருக்கும் இடையே அது தொடர்பிலான 10 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ் கட்டுப்பணமற்ற திறைசேரி உண்டியல்களின் கைமாற்றத்துக்கான சான்றாக மாத்திரமே பயன்படுத்தப்படல் வேண்டும்.

(4) மத்திய வங்கியுடன் வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் ஒருவரால் பேணப்படும் கூட்டுமொத்த வாடிக்கையாளர் கணக்கிலுள்ள பணத்தொகையானது 10 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவுக்கிணங்க வணிகர் நேரடிப் பங்குபற்றுநருக்கூடாகப் பயனுறுத்தப்பட்ட கைமாற்றம் ஒன்றினால் பாதிக்கப்பட்டவிடத்து வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் உடனடியாக அத்தகைய கைமாற்றத்தின் மூலம் அத்தகைய தொகையில் ஏற்பட்ட ஏதேனும் மாற்றம்பற்றி தகவலை மத்திய வங்கிக்கு தெரியப் படுத்துதல் வேண்டும்.

(5) மத்திய வங்கியானது இப்பிரிவின்கீழ் எழுத்தில் இல்லாத படிவத்தில் இருக்கவேண்டுமென தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் அறிவித்தலை அல்லது உறுதிப்பாட்டை அல்லது பெற்றுக்கொண்டமைபற்றிய பற்றுச் சீட்டை மத்திய வங்கியினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான கம்பி மூலம் தொலைபேசி மூலம் செய்மதி மூலம் படத்தின் முலம் அல்லது ஏதேனும் அத்தகைய இலத்திரனியல் காந்த அலலது கட்புல வழிகள் முலம் அனுப்பப்பட அல்லது ஒப்படைக்க அனுமதிக்கலாம்.

12. இக்கட்டளைச் சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டின் மூலம் ஏதேனும் தத்துவம் கடமை அல்லது பணி மத்திய வங்கியினால் பிரயோகிக்கப்பட வேண்டுமென அல்லது புரியப்படவேண்டுமென அதிகாரமளிக்கப்பட்டுள்ள அல்லது தேவைப்படுத்தப்பட்ட போதிலெல்லாம் அததகைய தத்துவம் கடமை அல்லது பணி மத்திய வங்கியின் அலுவலர் ஒருவரால் அல்லது மத்திய வங்கியின் பணச்சபையினால் அதன் சார்பில் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட வேறெவரேனும் ஆளினால் பிரயோகிக்கப்படலாம அல்லது புரியப்படலாம்.

13. துடர்ச்சி அல்லது குற்றவழக்கு எதுவும் அரசாங்கத்திற்கெதிராக பணச்சபைக்கெதிராக அல்லது மத்தியவங்கியின் எவரேனும் அலுவலருக்கு அல்லது சேவையாளருக்கு எதிராக இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் அரசாங்கத்தினால் பணச்சபையினால் அல்லது மத்திய வங்கியின் எவரேனும் அத்தகைய அலுவலரால் அல்லது சேவையாளரால் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் ஏதேனும் கொடுப்பனவு தொடர்பாக அல்லது செயல் தொடர்பாக் இருத்தலாகாது.

(1) (அ) இக்கட்டளைச் சட்டத்தின் அல்லது அதன்கீழ் கொடுக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் கட்டளையின் அல்லது பணிப்பின் ஏற்பாட்டுக்கிண்ங்கியொழுகத் தவறுகின்ற:

(ஆ) இக்கட்டளைச் சட்டத்தின் நோக்கங்களுக்காக தமது அறிவுக்கெட்டியவரை அவற்றின் பொருளடக்கங்கள் பொய்யாக அல்லது செம்மையற்றவையாக இருக்கும் ஏதேனும் தகவலை அல்லது ஏதேனும் விவரத் திரட்டைக் கொடுத்துதவுகின்ற:

(இ) ஏமாற்றும் கருத்துடன் மத்திய வங்கியின் ஏதேனும் பதிவேடுகளில் அல்லது எவரேனும் நேரடிப் பங்கு பற்றுநரின் அல்லது எவரேனும் முதனிலை வணிகரின் ஏதேனும் புத்தகங்களில் பதிவேடுகளில் அல்லது கணக்குகளில்,

(1) பொய்யான பதிவீடொன்றைச் செய்கின்ற அல்லது செய்விக்கின்ற: அல்லது

(11) ஏதேனும் பதிவீட்டைச் செய்யத் தவிர்க்கின்ற அல்லது தவிர்க்க வைக்கின்ற: அல்லது

(111) ஏதேனும் பதிவீட்டை மாற்றுகின்ற மறைக்கின்ற சேதமாக்குகின்ற அல்லது மாற்றப்பட மறைக்கப்பட அல்லது சேதமாக்கப்படச் செய்விக்கின்ற,

ஆள் எவரும் இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(2) இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியான எவரேனும் ஆள், ஒரு நீதிவானால் சுருக்க விசாரணையின் பின்னர், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மீது ஐந்து ஆண்டுகளை விஞ்சாத ஒரு காலத்திற்கு மறியற்றண்டணைக்கு அல்லது பத்து மில்லியன் ரூபாவை விஞ்சாத ஒரு குற்றப்பணத்திற்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை குற்றப்பணம் ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.

15. இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆள் ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாக இருக்குமிடத்து தவறு புரியும் காலத்தில் கூட்டிணைக்கப்பட்ட குழுவாக ஒரு பணிப்பாளராக அல்லது ஒரு அலுவலராக இருக்கும் ஒவ்வொரு ஆளும், அவரது அறிவு இல்லாமல் தவறு புரியப்பட்டது அல்லது அத்தகைய தவறைப் புரிவதற்கு எல்லாவித உரிய விழிப்புக்கவனத்தை அவர் பிரயோகித்தாரென எண்பித்தாலன்றி, அத்தவறுக்கு குற்றவாளியாவாரெனக் கருதப்படுதல் வேண்டும்.

16. (1) நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் இக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு பயனுறுத்தலைக் கொடுக்கும் நோக்கத்திற்காக, ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) குறிப்பாகவும் முற்போந்த தத்துவங்களின் பொதுமைக்கும் பங்கமின்றியும், அத்தகைய ஒழுங்குவிதிகள், பின்வரும் எல்லாம் அல்லது ஏதேனும் கருமங்களுக்கு ஏற்பாடுசெய்யலாம் ; –

(அ) இக்கட்டளைச் சட்டங்களின்கீழ் திறைசேரி உண்டியல்களை வழங்கும் விதிகள்;

(ஆ) திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படவேண்டிய வகையும் முறையும்;

(இ) முதனிலை வணிகர்களின் நியமனமும் முதனிலை வணிகர்களினால் அவதானிக்கப்படவேண்டிய நிபந்தனைகளும், அவர்களுக்கு உரித்தான சிறப்புரிமைகளும் அவர்களினால் புரியப்படவேண்டிய கடமைகளும்;

(ஈ) நேரடி பங்குபற்றுநர்கள், வணிகர் நேரடி பங்குபற்றுநர்கள், அத்தடன் வணிகர் இடைத் தரகர்கள் என்பவர்களை நியமித்தலும் அவர்களின் ஒழுங்குவிதிகள் மேற்பார்வை அல்லது கண்காணித்தல் என்பனவும்;

(உ) இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் கட்டுப்பணமல்லாத திறைசேரி உண்டியல்களின் வழங்கலும், வைத்திருத்தலும் நிருவாகமும்;

(ஊ) கட்டணமில்லாத திறைசேரி உண்டியல் உள்ளடங்கலாக, திறைசேரி உண்டியல்கள் அல்லது அவற்றின் மீதான வட்டிகள் கொள்வனவு செய்யப்படவேண்டிய, விற்கப்படவேண்டிய, மாற்றப்படவேண்டிய, அடைமானம் செய்யப்படவேண்டிய அல்லது பாரபந்தத்திற்குட்படுத்தபட வேண்டிய முறை;

(எ) திறைசேரி உண்டியல்கள் தொடர்பாக, முதனிலை வழங்கல், பின்னரான மாற்றம் அத்துடன் வேறு கொடுக்கல் வாங்கல் என்பனவற்றிற்கு ஏற்புடைய நடவடிக்கை முறைகளும் நிபந்தனைகளும்."

17. இக்கட்டளைச் சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி–

"கூட்டுமொத்த வாடிக்கையாளர்கள் கணக்கு" என்பது, 10 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் பிரகாரம் ஒரு வணிகர் நேரடி பங்குபற்றுநரினால் மத்திய வங்கியுடன் பேணப்பட்ட ஒரு தனிக்கணக்கு என்று பொருளாகும்; புதிய வங்கி "மத்திய வங்கி" என்பது பணச்சட்டத்தின் 5 ஆம் பிரிவினால் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கி என்று பொருளாகும்;

ஒரு வணிகர் நேரடி பங்குபற்றுநர் தொடர்பான "வாடிக்கையாளர்" என்பது, அத்தகைய வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் முலம் கட்டுப்பணமில்லாத திறைசேரி உண்டியல்கள் அல்லது அதன் மீதான ஒரு வட்டியைக் கொள்வனவு செய்யும் அல்லது விற்கும், அல்லது வேறுவகையில் கொள்ளும் அல்லது கையுதிர்க்கும், அல்லது அத்தகைய திறைசேரி உண்டியல்களின் அல்லது வட்டியின் சாத்தியமான கொள்ளலுக்கு அல்லது கையுதிர்ப்பிற்கு அத்தகைய வணிகர் நேரடி பங்குபற்றுநருடன் இணக்கப் பேச்சு வார்த்தை நடாத்தும் எவரேனும் ஆள், என்று பொருளாகும்;

"வணிகர் நேரடிப் பங்குபற்றுநர்" என்பது 10ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் நேரடிப் பங்குபற்றநராக நியமிக்கப்பட்ட எவரேனும் நேரடி பங்குபற்றுநர் என்ற பொருளாகும்;

"பதவிப் பெயர் குறிக்கப்பட்ட வணிகரல்லாத விலைக் கேள்வியாளர்" என்பது, திறைசேரி உண்டியல்களின் மத்திய வங்கி ஏலத்தில் நேரடியாகக் கோரத்தகைமை பெற்றவராக மத்திய வங்கியினால் எழுத்தில் குறிப்பாகப் பெயர் குறிக்கப்பட்ட ஒரு முதனிலை வணிகரல்லாத ஏதேனும் முதலீடு செய்யப்பட்ட நிறுவனம் என்ற பொருளாகும்;

"நேரடிப் பங்குபற்றுநர்" என்பது ஒரு நேரடிப் பங்குபற்றுநராக 9 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் எழுத்தில் மத்திய வங்கியினால் நியமிக்கப்பட்ட எவரேனும் முதனிலை வணிகர் அல்லது வேறு ஆள் என்பது பொருளாகும்;

"வணிகர் இடைத் தரகர்" என்பது 8 ஆம் பிரிவின் உட்பிரிவு (1) (உ) வைப் பின்பற்றி மத்திய வங்கியினால் ஒரு வணிகர் இடைத்தரகராக நியமிக்கப்பட்ட எவரேனும் ஆள் அல்லது குழுமம் என்று பொருளாகும்;

ஒரு நேரடிப் பங்குபற்றுநர் தொடர்பாக "சொந்த கட்டுப்பணமில்லாத திறைசேரி உண்டியல் கணக்கு" என்பது கட்டுப்பணமில்லாத திறைசேரி உண்டியல்களைத் தனது சொந்தக் கணக்கில் வைத்திருப்பதற்கு, 9 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் பிரகாரம் மத்திய வங்கியுடன், ஒரு நேரடிப் பங்குபற்றுநரினால் பேணப்பட்ட தனிக் கணக்கு என்று பொருளாகும்;

"அடையாளம்" என்பது கடன்களுக்கான அல்லது முற்பணங்களுக்கான இணைப்பொறுப்பாக அல்லது பகிரங்கப் பணங்களின் வைப்புக்களை அல்லது கடப்பாடொன்றின் நிறைவேற்றுகையைப் பெற்றுக்கொள்வதற்காகக் கட்டுப்பணமற்ற திறைசேரி உண்டியல்களை அடைமானம் வைத்தலை அல்லது அவற்றிலான ஏதேனும் பிணைப்பொறுப்பு அக்கறையை உள்ளடக்கும்.

"முதனிலை வணிகர்" என்பது, திறைசேரி உண்டியல்களுக்காக முதனிலை அத்துடன் இரண்டாவது நிலை சந்தையில் ஒரு மாற்றுத் திறத்தவராக மத்திய வங்கியுடன் கொடுக்கல் வாங்கல்களைச் செய்யும் நோக்கத்துடன் முதனிலை வணிகராக, பணச்சபையினால் நியமிக்கப்பட்ட ஏதேனும் வர்த்தக வங்கி, கம்பனி, அல்லது வேறு ஆள் என்பது பொருளாகும்;

"மத்திய வங்கியின் பதிவேடுகள்" பணச்சபையினால் அந்நோக்கத்திற்கென நியமிக்கப்பட்ட எவரேனும் ஆளினால் மத்திய வங்கியின் சார்பில் பேணப்படும் பதிவேடுகளை உள்ளடக்குவதுடன், கணனிப் படலம், தட்டுக்கள், நாடாக்கள் அல்லது வேறு காந்த இலத்திரனியல், கட்புல தொடர்பு சாதன வடிவில் வைத்திருக்கப்படும், களஞ்சியப்படுத்தப்படும் அல்லது அனுப்பிவைக்கப்படும் பதிவேடுகளையும் உள்ளடக்குகிறது.

"கட்டுப்பணமில்லாத திறைசேரி உண்டியல்" என்பது சான்றிதழ் ஒன்றில் அல்லது வேறு உருப்படியான சாதனத்தில் உள்ளடக்கப்படாததும் அல்லது குறிக்கப்படாததும் மத்திய வங்கியின் பதிவேடுகளில் உள்ள பதிவேடுகளாக வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல் என்று பொருளாகும்;

"திறைசேரி உண்டியல்" என்பது இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ஒரு திறைசேரி உண்டியல் என்று பொருளாகும் என்பதுடன் கட்டுப்பணமற்ற திறைசேரி உண்டியல் ஒன்றையும் உள்ளடக்குகிறது.

6. இச்சட்டத்தில் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

1995 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, பதிவு செய்யப்பட்ட பங்குத் தொகுதி, பிணையங்கள் (திருத்தச்) சட்டம்

(1995 திசெம்பர் மாதம் 15 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

பதிவு செய்யப்பட்ட பங்குத்தொகுதி, பிணையங்கள் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

1. இச்சட்டம் 1995 ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க, பதிவு செய்யப்பட்ட பங்குத்தொகுதி, பிணையங்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படுவதான) பதிவு செய்யப்பட்ட பங்குத்தொகுதி, பிணையங்கள் கட்டளைச் சட்டத்துக்கான விரிவுப் பெயர், "அரசாங்க வாக்குறுதிப் பத்திரங்களையும், காவுவோன் முறிகளையும்" என்ற சொற்களுக்குப் பதிலாக "அரசாங்க வாக்குறுதிப் பத்திரங்களையும், காவுவோன் முறிகளையும், திறைச்சேரி முறிகளையும்" என்ற சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பந்திகளை இடுவதன் மூலமும் :-

(இ) காவுவோன் முறிகள் என்ற வகையிலான பிணையங்களை வழங்குவதன் மூலம் ;

(ஈ) திறைசேரி முறிகள் என்ற வகையிலான பிணையங்களை வழங்குவதன் மூலம்."

(2) அப்பிரிவுக்கான ஓரக்குறிப்பில் "வாக்குறுதிப்பத்திரங்களையும், காவுவோன் முறிகளையும்" என்ற சொற்களுக்குப் பதிலாக "வாக்குறுதிப்பத்திரங்களையும், காவுவோன் முறிகளையும், திறைசேரி முறிகளையும்" என்ற சொற்களையும் இடுவதன் மூலமும்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (ஆ), (இ), (ஈ), (உ) என்னும் பந்திகளை நீக்கிவிட்ட அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :-

"(அ) கடனைத் திரட்டும் மாதிரிகளையும் அத்தகைய கடன் திரட்டப்படவேண்டிய முறையையும்;

(இ) கடனின்மீது செலுத்தப்படற்பாலதான வட்டி வீதத்தையும் அல்லது செலுத்தப்படற்பாலதான வட்டிவீதத்தை தீர்மானிக்கும் விதத்தையும்;

(ஈ) கடனின் மீதான வட்டி செலுத்தப்படற்பாலதான தேதிகளையும்;

(உ) அக்கடனை மீட்கும் நோக்கத்துக்காகத் தாபிக்கப்பட்ட கடனாழ் நிதியத்துக்கான உதவுத்தொகையாகத் திரட்டு நிதியத்திலிருந்தும் இலங்கையின் சொத்துக்களிலிருந்தும் ஆன ஒதுக்கீடு செய்யப்படவேண்டிய வீதத்தையும் எக்காலப்பகுதியின் முடிவில் அவ்வொதுக்கீடு செய்யப்படவேண்டுமோ அக்காலப்பகுதிகளையும், அவ்வுதவுதொகைகள் ஆரம்பிக்கப்படவேண்டிய தேதியையும்."

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகிறது என்பதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 5அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :-

"பங்குத் தொகுதிகளையும் பிணையங்களையும் கொள்வனவு செய்வதன் மீதான மட்டுப்பாடுகள்

5அ. பதிவுசெய்யப்பட்ட பங்குத்தொகுதியை அல்லது பிணையங்களைக் கொள்வனவு செய்வதற்கான ஏதேனும் விண்ணப்பம் அல்லது எவையேனும் விலைக் கேள்விகள் தேசிய பொருளாதாரத்தின் நலன்களைக் கருத்திற்கொண்டு, முதனிலை வணிகர்களுக்கும் பதவிப் பெயர் குறிக்கப்பட்ட வணிகரல்லாத விலைக் கேள்வியாளர்களுக்கும் மட்டுப்படுத்தப்படலாம்."

6. முதன்மைச் சட்டவாக்கத்தின 21 ஆம் பிரிவை உடனடுத்து பின்வரும் புதிய தலையங்களும் புதிய பரிவுகளும் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன், அச்சட்டவாக்கத்தின் 21அ, 21ஆ, 21இ, 21ஈ, 21உ, 21ஊ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும்

"திறைசேரி முறிகள்

21அ. (1) ஒவ்வொரு திறைசேரி முறியும், வழங்கப்பட்டபோது, இக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க 4 ஆம் பிரிவின்கீழான கட்டளையிற் குறித்துரைக்கப்பட்ட வீதத்திலும் தேதிகளிலும் அல்லது அக்கட்டளையில் ஒதுக்கப்பட்டதும் அத்தகைய முறியை மீட்பதற்கானதுமான ஒரு விருப்பத் தெரிவைப் பின்புற்றி முறியானது முதலாகவுள்ள எந்தப் பணத்தொகைக்கு வழங்கப்படுகின்றதோ முதலாகவுள்ள அந்தப் பணத்தொகையையும் அதன்மீதான வட்டியையும் செலுத்துவதற்கு அரசாங்கத்தைப் பிணித்தல் வேண்டும்.

(2) இக்கட்டளைச் சட்டத்தின் வேறு எவையேனும் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், திறைசேரி முறிகள் ஒன்றில் எழுத்திலான சான்றிதழ்கள் என்ற படிவத்திலான முறிகளாக கட்டுப்பணமில்லாத திறைசேரி முறிகளாக வழங்கப்படலாம். எழுத்திலான சான்றிதழ்கள் என்ற வடிவத்தில், வழங்கப்பட்ட திறைசேரி முறிகளின் விடயத்தில் 21ஆ என்னும் பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய எழுத்திலான சான்றிதழ்களுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும். கட்டுப்பணமில்லாத திறைசேரி முறிகளின் விடயத்தில், அத்தகைய கட்டுப்பணமில்லாத திறைசேரி முறிகளுக்கு 21இ, 21ஈ, 21உ, 21ஊ என்னும் பிரிவுகளின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

எழுத்திலான சான்றிதழ்களின் வடிவத்திலான திறைசேரி முறிகள்.

21ஆ. (1) எழுத்திலான சான்றிதழ் என்ற வடிவத்தில் வழங்கப்பட்ட ஒவ்வொரு திறைசேரி முறியும் அரசாங்கத்துக்காகவும் அதன் சார்பிலும் பதிவாளரினால் ஒப்பமிடப்படவேண்டுமென்பதுடன், அதற்கான உரித்து முறியின் புறக்குறிப்பின் மூலமும் ஒப்படைப்பின் மூலமும் கைமாற்றப்படற்பாலதாதலும் வேண்டும்.

(2) ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும்,

(அ) எழுத்திலான சான்றிதழ் என்ற வடிவத்தில் வழங்கப்பட்ட திறைசேரி முறியொன்றின் புறக் குறிப்பெதுவும், அந்நோக்கத்துக்கென ஏற்பாடுசெய்யப்பட்ட இடைவெளிகளுள் ஒன்றில் முறியின் பிற்புறத்தில் எழுதப்பட்ட திறைசேரி முறியை வைத்திருப்பவரின் ஒப்பத்தினால், அல்லது ஒழுங்குவிதியினால் விதித்துரைக்கப்பட்ட தனிவேறான படிவத்தில் செய்யப்பட்டாலொழிய, செல்லுபடியாதலாகாது;

(ஆ) ஆளொருவர் எழுத்திலான சான்றிதழ் என்ற வடிவத்தில் வழங்கப்பட்ட திறைசேரி முறியொன்றில் புறக்குறிப்பிட்டுள்ளார், அல்லது அதைப் புறக்குறிப்பிட்டு ஒப்படைத்துள்ளார் என்ற காரணத்தினால் மட்டும், ஒன்றில் முதலாக அல்லது அதன்மீதான வட்டியாக வருமதியாகவுள்ள ஏதேனும் பணத்தைச் செலுத்துவதற்கு ஆளாதலாகாது.

21இ. (1) இக்கட்டளைச் சட்டத்தின் வேறு எவையேனும் ஏற்பாடுகளில் எது எவ்வாறிருப்பினும், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளையின் மூலம் கட்டுப்பணமில்லாத திறைசேரி முறிகளை வழங்குமாறு பணிக்கலாம். அத்தகைய கட்டுப்பணமில்லாத திறைசேரி முறிகள் இப்பிரிவினதும் இக்கட்டளைச் சட்டத்தின் 21ஈ, 21உ, 21ஊ என்னும் பிரிவுகளினதும் ஏற்பாடுகளுக்கிணங்க வழங்கப்படுதலும் பேணப்படுதலும் வேண்டும்.

2. இக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க கட்டுப்பணமில்லாத திறைசேரி முறிகளை வழங்குவதற்கும் அவற்றில் வியாபாரஞ் செய்வதற்கும் அவசியமான ஏதேனும் நடவடிக்கையை எடுப்பதற்கு மத்தி வங்கி அதிகாரம் கொண்டதாதல் வேண்டும். மேற்போந்தவற்றின் பொதுமையை வரையறுக்காமல் மத்தியவங்கி பின்வருவனவற்றைப் பொறுப்பேற்பதற்கும் நிறைவேற்றுவதற்கும் அதிகாரம் கொண்டதாதல் வேண்டும். :-

(அ) கட்டுப்பணமில்லாத திறைசேரி முறிகளை வழங்குவதனையும் அவற்றில் வியாபாரஞ் செய்வதனையும் பதிவதற்கு மத்திய வங்கியின் பதிவேடுகளில் பதிவீடுகளைச் செய்தலும் பேணுதலும் ;

(ஆ) நேரடிப் பங்குபற்றுநர்களுக்காக அல்லது மத்திய வங்கிகளுக்காக அல்லது அவர்களின் அல்லது அதன்சார்பில் கட்டுப்பணமில்லாத திறைசேரி முறிகளின் சொத்துவத்தை அல்லது கட்டுக்காப்பான வைத்திருக்கைகளுக்கு கணக்கைப் பேணுதல்;

(இ) 21ஈ என்னும் பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட நேரடிப் பங்குபற்றுநர்களைக் காலத்துக்குக்காலம் நியமித்தலும், கட்டுப்பணமில்லாத திறைசேரி முறிகளில் அவர்களின் கொடுக்கல் வாங்கல்களும் நேரடிப் பங்கு பற்றுநர்களாக அவர்களினது கடமைகளின் புரிகையும் தொடர்பில் அத்தகைய நேரடிப் பங்குபற்றுநர்களை ஒழுங்குபடுத்தலும் மேற்பார்வை செய்தலும் அல்லது கண்காணித்தலும் ;

(ஈ) 21ஈ என்னும் பிரிவிற்குறிப்பீடு செய்யப்பட்ட வணிகர் நேரடிப் பங்கு பற்றுநர்களைக் காலத்துக்குக் காலம் நியமித்தலும், கட்டுப்பணமில்லாத திறைசேரி முறிகளில் அவர்களின் கொடுக்கல் வாங்கல்களும் வர்த்தகர் நேரடிப் பங்குபற்றுநர்களாக அவர்களினது கடமைகளின் புரிகையும் தொடர்பில் அத்தகைய வர்த்தகர் நேரடிப் பங்குபற்றுநர்களை வணிகர் இடைத்தரகர்கள் ஒழுங்குபடுத்துதலும், மேற்பார்வை செய்தலும் அல்லது கண்காணித்தலும் ;

(உ) வணிகர் இடைத்தரகர்களைக் காலத்துக்குக் காலம் நியமித்தலும், கட்டுப்பணமில்லாத திறைசேரி முறிகளில் அவர்களின் தரகுத் தொழிலும் வணிகர் இடைத்தரகர்களாக அவர்களினது கடமைகளின் புரிகையும் தொடர்பில் அத்தகைய வணிகர் இடைத்தரகர்களை ஒழுங்குபடுத்தலும், மேற்பார்வை செய்தலும் அல்லது கண்காணித்தலும் ;

(ஊ) முதனிலை வணிகர்களைக் காலத்துக்குக் காலம் நியமித்தலும் பிணையங்களில் அவர்களின் கொடுக்கல் வாங்கல்களும் முதனிலை வர்த்தகர்களாக அவர்களினது கடமைகளின் புரிகையும் தொடர்பில் அத்தகைய முதனிலை வர்த்தகர்களை ஒழுங்குபடுத்தலும், மேற்பார்வை செய்தலும் அல்லது கண்காணித்தலும் ;

(எ) பதவிப்பெயர் குறிக்கப்பட்ட வர்த்தகரல்லாத விலைக்கேள்வியாளர்களை நியமித்தலும், பிணையங்களில் அவர்களின் கொடுக்கல் வாங்கல்களும் வர்த்தகரல்லாத விலைக்கேள்வியாளர்களாக அவர்களினது கடமைகளின் புரிகையும் தொடர்பில் அத்தகைய வர்த்தகரல்லாத விலைக்கேள்வியாளர்களை ஒழுங்குபடுத்தலும், மேற்பார்வை செய்தலும் கண்காணித்தலும் ;

(ஏ) கட்டுப்பணமில்லாத திறைசேரி முறிகளுக்கான ஒழுங்கான சந்தையொன்றை மேம்படுத்துவதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் நடத்தைக்கோவையொன்றை வகுத்தமைத்தல்

(3) மத்திய வங்கியானது 21இ, 21ஈ, 21உ, 21ஊ என்னும் பிரிவுகளில் வேறுவகையில் ஏற்பாடு செய்யப்படாத அளவுக்கு பின்வருவனவற்றுக்கு ஏற்பாடு செய்யுமாறு, நேரடிப் பங்குபற்றுநர்களுக்கு அல்லது அவர்களின் ஏதேனும் வகுதிக்கு பணிப்புக்களை வழங்கலாம்.

(அ) வணிகர் நேரடிப் பங்குபற்றுநர்களின் வாடிக்கையாளர்களினது கணக்குகள் பேணப்பட்டு நிருவகிக்கப்பட வேண்டிய முறை ;

(ஆ) முதல், வட்டிக் கொடுப்பனவுகளும், எவையேனும் மீட்பு வரும்படிகளும் அத்தகைய கணக்குகளுக்கு வரவு வைக்கப்பட வேண்டிய நேரங்கள் ;

(இ) அத்தகைய கணக்குகளைப் பேணுவதற்கும் நிருவகிப்பதற்கும் இறுக்கப்படக்கூடிய கட்டணங்கள் ;

(ஈ) நேரடிப் பங்குபற்றுநர்கள், வணிகர் நேரடிப் பங்குபற்றுநர்கள், அல்லது வணிகர் இடைத்தரகர்கள் என்போரை ஒழுங்கு படுத்தலும் மேற்பார்வை செய்தலும் அல்லது கண்காணித்தலும் ;

(உ) கடடுப்பணமில்லாத திறைசேரி முறிகள், அல்லது அவற்றின் கண்ணுள்ள அக்கறைகள் கொள்வனவு செய்யப்படக்கூடிய, விற்பனை செய்யப்படக்கூடிய கைமாற்றப்படக்கூடிய, அடைமானம் வைக்கப்படக்கூடிய அல்லது வில்லங்கத்துக்குட்படுத்தப்படக்கூடிய முறையும் வழிகளும் .

21ஈ (i) மத்திய வங்கியானது நேரடிப் பங்குபற்றுநராகவிருப்பதற்கென எவரேனும் முதனிலை வணிகரை அல்லது வேறு ஆளை எழுத்தில் நியமிக்கலாம்.

ஒவ்வொரு நேரடிப் பங்குபற்றுநரும் இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு மத்திய வங்கியில் தனது சொந்தக் கட்டுப்பணமில்லாத திறைசேரி முறிக் கணக்கை வைத்துப் பேணுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(2) நேரடிப் பங்குபற்றுநர் ஒருவர், மத்திய வங்கியுடன், அதன் நோக்கங்களுக்காகக் கட்டுப்பணமில்லாத் திறைசேரி முறிகளை வைத்திருப்பதற்காகத் தனியொரு கணக்கைப் பேணுதல் வேண்டும். அத்தகைய கணக்கானது, நேரடிப் பங்குபற்றுநரால், காலத்துக்குக்காலம் மத்திய வங்கியினால் எழுத்தில் குறித்துரைக்கப்படும் படிவத்திலும் முறையிலும் பேணப்படுதல் வேண்டும்.

(3) மத்திய வங்கி, நேரடிப் பங்குபற்றுநர் ஒருவருடைய கணக்குப் பற்றிய பதிவேடுகளைப் பேணுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய பதிவேடுகள், அத்தகைய கணக்கின் நிலை பற்றிய முடிவான சான்றாதல் வேண்டும் என்பதுடன், மத்திய வங்கியையும் நேரடிப் பங்குபற்றுநரையும் பிணிப்பதாலும் வேண்டும்.

(4) மத்திய வங்கியானது, நேரடிப் பங்குபற்றுநர்களினால் மத்திய வங்கியுடன் பேணப்படும் கட்டுப்பணமில்லா திறைசேரி முறிக் கணக்குகளுக்கிணங்க,அக்கட்டுப்பணமில்லாத் திறைசேரிமுறிகள் மீது வருமதியான எல்லாப் பணத்தொகை, வட்டி அல்லது மீட்பு வரும்படித் தொகைகளையும், அவை செலுத்தப்படற்பாலனவையாக வரும் தேதியன்று, அக்கணக்குகள் கட்டுப்பணமில்லாத் திறைசேரி முறிகள் சம்பந்தமாக அவர்களின் சொந்தக் கணக்கில் வைத்திருக்கப்பட்டிருந்தாலென்ன, அல்லது அவர்களின் நோக்கத்துக்காக வைத்திருக்கப்படும் அத்தகைய திறைசேரி முறிகள் தொடர்பில் வணிகர் நேரடிப் பங்குபற்றுநர்களின் விடயத்திலும் அத்துடன் கூட்டுமொத்த வாடிக்கையாளர்கள் கணக்குகள் தொடர்பிலான விடயத்திலும், செலுத்துதல் வேண்டும். அத்தகைய

கொடுப்பனவுகிः, மதःதிய வங்கியினால் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய வழிகளிலும் அத்தகைய முறையிலும் செய்யப்படுதல் வேண்டும்.

(5) நேரடிப் பங்குபற்றுநர் ஒருவர், மத்திய வங்கிக்கு, அதன் சொந்த கட்டுப்பணமில்லாத் திறைசேரி முறி தொடர்பிலும், அத்துடன் வணிகர் நேரடிப் பங்கு பற்றுநர் ஒருவரின் விடயத்தில் அதன் சொந்த கட்டுப்பணமில்லாத் திறைசேரி முறிக் கணக்கு மற்றும் மத்திய வங்கி ---துகுக்காலம் குறித்துரைக்கின்றவாறு அதன் கூட்டுமொத்த வாடிக்கையாளர்கள் கணக்குத் தொடர்பிலும், அத்தகைய விபரத்திரட்டுகளை, விபரங்களை, விபரக் குறிப்புக்களை அல்லது தகவலைக் கொடுத்துதவுதல் வேண்டும்.

(6) மத்திய வங்கியானது, நேரடிப் பங்குபற்றுநர் ஒருவரினால் கட்டுப்பணமில்லாத திறைசேரி முறிகள் எவற்றின் தொடர்பிலும் அல்லது அவற்றைப் பாதிக்கின்றது தொடர்பில், அதன் சொந்தக் கணக்கில் வைத்திருக்கப்படும் கட்டுப்பணமில்லா திறைசேரி முறிகள் தொடர்பிலான எவையேனும் புதःதகங்கள், பதிவேடுகள் அல்லது கணக்குகள் உட்பட, அல்லது அதன் சொந்தக் கணக்கில் வைத்திருக்கப்படும் கட்டுப்பணமில்லாத் திறைசேரி முறிகள் அத்துடன் அதன் கூட்டு மொத்த வாடிக்கையாளர்கள் கணக்கில் வைத்திருக்கப்படும் கட்டுப்பணமில்லா திறைசேரி முறிகள் தொடர்பில் வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் ஒருவர் தொடர்பில், பேணப்படும் எவையேனும் புத்தகங்களை, பதிவேடுகளை அல்லது கணக்குகளை பணச் சபையினால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட அதன் எவரேனும் அலுவலர்கள் மூலம் பரிசோதித்து அவற்றின் பிரதிகளை எடுக்கலாம். நேரடிப் பங்குபற்றுநர், அத்துடன் அதன் அலுவலர்கள், பணிப்பாளர்கள், ஊழியர்கள், சேவையாளர்கள் மற்றும் முகவர்கள் மத்திய வங்கியினால் தேவைப்படுத்தப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் புத்தகங்களையும் பதிவேடுகளையும், கடிதப் போக்குவரத்தையும் அல்லது எவையேனும் வேறு ஆவணங்களையும், மத்திய வங்கிக்குக் கொடுத்துதவுதல் வேண்டும் என்பதுடன் கட்டுப்பணமில்லாத் திறைசேரி முறிகள் தொடர்பில் இக்கட்டளைச் சட்டத்தினால் மத்திய வங்கியின்மீது சுமத்தப்பட்டுள்ள கடமைகளைப் புரிவதற்கு அதற்குத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய எல்லா உதவியையும் வழங்குதலும் வேண்டும்.

(7) கட்டுப்பணமில்லா திறைசேரி முறியொன்று தொடர்பில் அரசாங்கத்துக்கு ஏதேனும் பொறுப்பு வந்துற்றால் அல்லது அரசாங்கம் வட்டி எதனையும், பணத்தொகை எதனையும் அல்லது மீட்பு வரும்படிகள் எவற்றையும் கொடுப்பனவு செய்து அத்துடன் நேரடிப் பங்குபற்றுநர் அல்லது வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் ஒருவரது ஏதேனும் தவறுகையின் விளைவாக அல்லது அதன் காரணமாக அத்தகைய பொறுப்பு எழுகின்றவிடத்து அல்லது அத்தகைய கொடுப்பனவு செய்யப்படுகின்றவிடத்து, அத்தகைய பொறுப்பு அல்லது கொடுப்பனவு தொடர்பில் அரசாங்கத்தினால் உரிமையுடன் கோரப்பட்டதன் மேல் அரசாங்கத்துக்கு நட்டோத்தரவாதம் வழங்குவதற்கு அத்தகைய பங்குபற்றுநர் ஆளாதல் வேண்டும்.

இவ்வுட்பிரிவின் நோக்கங்களுக்காக "தவறுகை" என்பது –

(அ) நேரடிப் பங்குபற்றுநர் அல்லது வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் ஒருவரைப் பொறுத்தவரையில் இக்கட்டளைச் சட்டத்தினால் அவருக்குக் குறித்தொதுக்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட ஏதேனும் பணியைப் புரிவதில் ஏதேனும் கடமையை நிறைவேற்றுவதில் அவரினால் காட்டப்படும் ஏதேனும் அசட்டை அல்லது தவறுகை ; அத்துடன்

(ஆ) (i) அத்தகைய தவறு தொடர்பில் ஏதேனும் வழக்குத் தொடர்தல் இருந்தாலென்ன இல்லாவிட்டாலென்ன; அல்லது

(ii) அத்தகைய செயல் அல்லது விட்டுவிடுகை, நேரடிப் பங்கு பற்றுநரினால் அல்லது வணிகர் நேரடிப் பங்குபற்றுநரினால் அல்லது அத்தகைய நேரடிப் பங்கு பற்றுநரின் அல்லது அத்தகைய வணிகர் நேரடிப் பங்குபற்றுநரின் பணிப்பாளர்,

அலுவலர், ஊழியர் அல்லது முகவர் எவரினாலும் செய்யப்பட்டிருந்தாலென்ன, இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் தவறொன்றாக அமைகின்றதும் நேரடிப் பங்குபற்றுநர் ஒருவரினால் அல்லது வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் ஒருவரினால் செய்யப்படும் செயல் அல்லது புரியப்படும் விட்டுவிடுகை எதுவும் அல்லது இக்கட்டளைச் சட்டத்துக்குள் அடங்குகின்ற ஏதேனும் விடயம் தொடர்பில் எழுத்திலாக வேறேதேனும் சட்டத்தின்கீழ் தவறு ஒன்று ஆகியவற்றையும் உள்ளடக்கும்.

21உ. (1) மத்திய வங்கியானது வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் ஒருவராக இருப்பதற்கு நேரடிப் பங்கு பற்றுநர் எவரையும் எழுத்தில் நியமிக்கலாம்.

(2) வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் ஒருவர் அதன் சொந்தக் கட்டுப்பணமில்லாத் திறைசேரி முறிக் கணக்குடன் சேர்த்தும், தனிவேறாகவும், கூட்டுமொத்த வாடிக்கையாளர்கள் கணக்கொன்றையும் மத்திய வங்கியுடன் பேணுதல் வேண்டும். இக்கணக்கானது, அத்தகைய வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் மூலம் இப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்படும் எல்லாக் கைமாற்றல்கள் தொடர்பிலும் தனி ஒரு கூட்டுமொத்தக் கணக்காக இருத்தல் வேண்டும். கூட்டுமொத்த வாடிக்கையாளர்கள் கணக்கு மத்திய வங்கியினால் காலத்துக்குக்காலம் எழுத்தில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும் முறையிலும், வணிகர் நேரடிப் பங்குபற்றுநரினால் பேணப்படுதல் வேண்டும்.

(3) வணிகர் நேரடிப் பங்குபற்றுநர்கள் மாத்திரமே மற்றவர்கள் சார்பில் கட்டுப்பணமில்லாத் திறைசேரி முறிகளில் கொடுக்கல் வாங்கல் செய்யலாம். கட்டுப்பணமில்லா திறைசேரி முறியொன்றை கைமாற்ற விரும்புகின்ற அல்லது கைமாற்றல் மூலம் பெற்றுக் கொள்ள விரும்புகின்ற நேரடிப் பங்குபற்றுநர் அத்துடன் ஒருவர் அல்லது மத்திய வங்கி தவிர்ந்த ஆள்எவரும், வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் ஒருவர் மூலமாக மட்டுமே அவ்வாறு செய்தல் வேண்டும்.

(4) வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் ஒருவர் அதன் ஒவ்வொரு வாடிக்கையாளர் தொடர்பிலும் கணக்கொன்றையும் அத்துடன் இச்சட்டத்தின்கீழ் வணிகர் நேரடிப்பங்குபற்றுனர் தமது கடமைகளைப் புரிவதற்கு அவரை இயலக்கூடியவராகத் செய்வதற்கு அவசியமாகக் கூடியவாறாக அல்லது பொருத்தமாகக் கூடியவறாக அதன் வாடிக்கையாளர்கள் தொடர்பில் வேறு எவையேனும் புத்தகங்களை, பதிவேடுகளை அத்துடன் கோப்புக்களைப் பேணுதல் வேண்டும்.

(5) வணிகர் நேரடிப்பங்குபற்றுர் ஒருவர் அதன் வாடிக்கையாளர் ஒவ்வொருவருக்கும் அத்தகைய வாடிக்கையாளர்கள் கட்டுப்பண மில்லாத் திறைசேரி முறிகள் தொடர்பில் மத்திய வங்கியினால் அதற்கெனக் குறித்துரைக்கப் படக்கூடியவாறான அத்தகைய தேதியன்று அல்லது அதற்கு முன்னர் அல்லது அத்தகைய தேதிகளன்று அல்லது அவற்றுக்கு முன்னர் மாதாந்தகூற்றொன்றை அல்லது கூற்றுக்களை அல்லது வேறுபருவகாலக் கூற்றை அல்லது கூற்றக்களை வழங்குதல் வேண்டும். அத்தகைய கூற்று ஒவ்வொன்றும் அத்தகைய காலப்பகுதிக்காகவும் அத்தகைய படிவத்திலும் இருத்தல் வேண்டும் என்பதுடன் மத்தியவங்கி குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய தகவலைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

(6) வணிகர் நேரடிப்பங்குபற்றுநரின் கூட்டு மொத்த வாடிக்கையாளர்கள் கணக்கில் வைத்திருக்கப்படும் கட்டுப்பணமில்லாத் திறைசேரி முறிகள் மீது வருமதியான தொகைகளுக்கு 21ஈ என்னும் பிரிவின் (4) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளவாறு மத்திய வங்கியிடமிருந்து அத்தகைய கொடுப்பனவுகளை வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் ஒருவர் பெற்றக்கொண்டதன்மேல், அவர் அதற்கு உரித்தான திறத்தவருக்கு அல்லது திறத்தவர்களுக்கு அத்தகைய கட்டுப் பணமில்லாத் திறைசேரி முறிகள் மீது செலுத்தப்பாலனவான எல்லாதொகைகளையும், அவற்றை ஒன்றில் வட்டியாக அல்லது பணத்தொகையாக அல்லது மீட்பு வரும்படிகளாக அவை செலுத்தப்படற்பாலனவாக வரும் தேதியன்று செலுத்தப்படல் வேண்டும். அத்தகைய கொடுப்பனவுகள் அத்தகைய வழிகள் மூலமாக இருத்தல் வேண்டும் என்பதுடன் மத்திய வங்கியினால்

குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நேரத்திலும் அத்தகைய முறையிலும் செய்யப்படுதலும் வேண்டும்.

(7) வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் ஒருவர் மூலம் இப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்படும் ஏதேனும் கைமாற்றம் தொடர்பில் அவரினால் கொடுக்கல் வாங்கல் செய்யப்படும் கட்டுப்பணமில்லாத் திறைசேரி முறிகளானவை, அப்பிரிவிலும் 21ஊ என்னும் பிரிவிலும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள முறையிலும் நோக்களுக்காகவும் கொடுக்கல் வாங்கல் செய்யப்படுதல் வேண்டும்.

(8) இப்பிரிவின் கீழ் (2) ஆம் (4) ஆம் உட்பிரிவுகளின் கீழ் வணிகர் நேரடிப்பங்குபற்றுநர் ஒருவரினால் பேணப்படும் கணக்குகள், அவை வாடிக்கையாளர் தொடர்பானதாக இருக்கும் அளவுக்கு, வணிகர் நேரடிப்பங்குபற்றுநருக்கும் வாடிக்கையாளர்களுக்கும் இடையில் இருப்பது போன்று இரகசியமாகவிருத்தல் வேண்டும் என்பதுடன், இக்கட்டளைச் சட்டத்தின் 54 ஆம் பிரிவில் உள்ள எது எப்படியிருப்பினும், மத்திய வங்கி அல்லது வாடிக்கையாளரின் பின்னுரிமையாளர்கள், நிறைவேற்றுநர்கள் அல்லது சாட்டுதல் பெறுநர்கள் தவிர்ந்த எவரேனும் ஆளுக்கு அல்லது சட்டத்தினால் வேறு வகையில் தேவைப்படுத்தப்பட்டவாறு தவிர, அத்தகைய வெளிவிடுகைக்கு வாடிக்கையாளர் எழுத்தில் அதிகாரம் அளித்திருந்தாலொழிய, வெளியிடப்படுதலாகாது.

(9) வணிகர் நேரடிப்பங்குபற்றுநர் ஒருவர் அத்தகைய வணிகர் நேரடிப்பங்குபற்றுநர் மூலம் அத்தகைய வாடிக்கையாளரினால் பெற்றுக் கொள்ளப்படும் அல்லது செய்யப்படும் எல்லாக் கைமாற்றல்கள் தொடர்பிலும் வாடிக்கையாளர் ஒருவருக்கு முதற்பொறுப்புடையவரும், பொறுப்பாளியும் ஆதல் வேண்டும்.

21ஊ. (1) வணிகர் நேரடிப்பங்குபற்றுநர் ஒருவர் கைமாற்றல் பெறும் ஒருவர் தொடர்பில் வாடிக்கையாளர்கள் கணக்கானது இன்னொரு வணிகர் நேரடிப்பங்குபற்றுநரினால் பேணப்படுகின்ற சந்தர்ப்பம் தவிர, மத்தியவங்கி அல்லது 21உ என்னும் பிரிவின் (3) ஆம் பிரிவிற்கு இணங்க அத்தகைய வணிகர் நேரடிப்பங்கு பற்றுநர் மூலம் செய்யப்படும் ஏதேனும் கைமாற்றலுக்குத் திறத்தவர் ஒருவரான நேரடிப்பங்குபற்றுநர் தவிர்ந்த கடுப்பணமில்லாத் திறைசேரி முறிகளின் கைமாற்றம் செய்பவர் மற்றும் கைமாற்றல் பெறுபவர் ஆகிய ஒவ்வொருவர் தொடர்பிலும் கணக்கொன்றைப் பேணுதல் வேண்டும். இவ்விடயத்தில் முதற்குறிக்கப்பட்ட வணிகர் நேரடிப்பங்கு பற்றுநர், கட்டுப்பணமில்லாத் திறைசேரி முறிகளை இரண்டாவதாகக் குறிக்கப்பட்ட நேரடிப்பங்குபற்றுநரிடமுள்ள கைமாற்றல் பெறுபவரின் கணக்குக்குக் கைமாற்றல் செய்ய வேண்டும்.

(2) இருபத்தொன்று உ என்னும் பிரிவின் (3) ஆம் உட்பிரிவுக்கிணங்க ஆள் எவரினாலும், கட்டுப்பணமில்லாத் திறைசேரி முறிகளின் கைமாற்றலொன்று செய்யப்படுகின்றவிடத்து, எவ்வணிகர் நேரடிப்பங்குபற்றுநர் மூலமாக கைமாற்றல் செய்யப்படுகின்றதோ அவ்வணிகர் நேரடிப்பங்கு பற்றுநர் மத்தியவங்கியினால் காலத்துக்குக்காலம் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும் முறையிலும் பின்வருவனவற்றை உடனடியாக வழங்குதல் வேண்டும். :-

(i) கைமாற்றல் செய்பவருக்கு ஓர் உறுதிச்சீட்டு அல்லது கிடைக்கப்பெற்றமைபற்றிய அறிவித்தல்; அத்துடன்

(ii) அத்துடன் கைமாற்றம் பெறுநரின் திறைசேரி முறிகள் தொடர்பாக, அத்தகைய வணிகர் நேரடிப் பங்குபற்றுநர், கணக்கொன்றைப் பேணினால், அத்தகைய கைமாற்றம் தொடர்பில் ஓர் உறுதிப்படுத்துகை அல்லது பெற்றுக் கொண்டமை பற்றிய பற்றுச் சீட்டு.

ஆயின் எவ்வாறாயினும் மேற்குறிப்பிட்ட வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் தவிர்ந்த வணிகர் நேரடிப்பங்கு பற்றநர் ஒருவர் கைமாற்றம் பெறுநரின் கட்டுப்பணமில்லாத திறைசேரி முறிகள்

தொடர்பில் வாடிக்கையாளர் ஒருவரின் கணக்கொன்றைப் பேணினால், முதலில் குறிப்பிட்ட வணிகர் நேரடிப்பங்கு பற்றுநர் காலத்துக்குக் காலம் மத்திய வங்கியால் குறித்துரைக்கப்படும் விதத்தில் இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்ட வணிகர் நேரடிப்பங்கு பற்றுநருக்கு அத்தகைய கைமாற்றம் பற்றி உடனடியாக அறிவித்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்ட வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் மத்திய வங்கியினால் காலத்துக்காலம் குறித்துரைக்கப்படும் படிவத்திலும் விதத்திலும் ஓர் உறுதிப்படுத்துகையை அல்லது பெற்றுக் கொண்டமைபற்றிய பற்றுச் சீட்டை உடனடியாக கைமாற்றம் பெறுநருக்கு வழங்குதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட உறுதிப்படுத்துகை அல்லது பெற்றுக்கொண்டமை பற்றிய பற்றுச் சீட்டு கைமாற்றப்படக் கூடியதாக இருத்தலாகாது என்பதுடன், அது தொடர்புறுத்துகின்றதான 21உ என்னும் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் கட்டுப்பணமில்லாத திறைசேரி முறிகளை கைமாற்றியமைக்குச் சான்றாக அதனை வழங்கியவாறான வணிகர் நேரடிப்பங்குபற்றுநருக்கும் அது எந்த வாடிக்கையாளருக்கு வழங்கப்பட்டதோ அந்த வாடிக்கையாளருக்கும் இடையில், மாத்திரம் பயன்படுதப்படுதல் வேண்டும்.

(4) கூட்டு மொத்த வாடிக்கையாளர் கணக்கில், வணிகர் நேரடிப் பங்குபற்றுநரொருவரால் மத்திய வங்கியில் பேணப்படும் மொத்தக் கணக்கு, 21உ என்னும் பிரிவின் (3) ஆம் உட்பிரிவிற்கிணங்க, வணிகர் நேரடிப் பங்குபற்றுநருக்கூடாகப் பயனுறுத்தப்பட்ட கைமாற்றமொன்றினால் பாதிக்கப்படுமிடத்து, வணிகர் நேரடிப்பங்குபற்றுநர், அத்தகைய தைமாற்றமொன்றினால் அத்தகைய மொத்தத் தொகையில் ஏற்படுத்தப்பட்ட ஏதேனும் மாற்றம் பற்றிய தகவலை உடனடியாக மத்திய வங்கிக்கு அறிவித்தல் வேண்டும்.

(5) மத்திய வங்கியானது, இப்பிரிவின் கீழ் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் அறிவித்தலை அல்லது உறுதிப்படுத்துகையை அல்லது ஏற்றுக்கொண்டமை பற்றிய பற்றுச்சீட்டை எழுத்தில் இல்லாத வடிவத்தில் இருப்பதற்கு அனுமதிக்கலாமென்பதுடன், மத்திய வங்கியினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான கம்பி, தொலைபேசி, செய்மதி, வடம் அல்லது ஏதேனும் அத்தகைய வேறு இலத்திரனியல், காந்த அல்லது ஒளிச்சாதனம் வாயிலாக அனுப்பப்பட அல்லது ஒப்படைக்கப்பட அனுமதிக்கப்படலாம்.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவு "ஒவ்வோர் அரையாண்டிலும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஒவ்வோர் காலப் பகுதிக்கும்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்துவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

"(1) பதிவு செய்யப்பட்ட ஏதேனும் பங்குத் தொகுதி அல்லது பிணையங்கள் மீது வருமதியான வட்டி 4 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்படும் கட்டளை மூலம் குறித்துரைக்கப்படும் தேதிகளில் கொடுபடற்பாலனவாதல் வேண்டும்.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :

27. ஏதேனும் கடனுக்கான ஆழ் நிதியத்திற்கு உதவுதொகைகள் எந்தத் தேதியன்று செலுத்தத் தொடங்குதல் வேண்டுமோ அந்தத் தேதியென 4 ஆம் பிரிவின் கீழான கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட தேதிக்குப் பின்னர் அந்தக் கடன் தொடர்பில் வழங்கப்படும் ஏதேனும் பங்குத் தொகுதி மீதிலான அல்லது பிணையங்கள் மீதிலான வட்டிக் கொடுப்பனவுத் தேதி என அக்கட்டளையில் குறித்துரைக்கப்படும் தேதியுடன் முடிவடையும் காலப்பகுதி ஒவ்வொன்றிற்கும் அந்தக் கடனை

மீளும் நோக்கத்திற்கெனத் தாபிக்கப்பட்ட ஆழ் நிதியத்திற்கெனக் கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட வீதத்திதிற்கிணங்கத் தீர்மானிக்கப்பட்ட பணத்தொகையொன்றைத் திரட்டு நிதியத்தினின்றும் இலங்கையில் உள்ள சொத்தக்களிலிருந்தும் ஒதுக்கீடு செய்யப்படலாம்."

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவு "அரை ஆண்டு உதவுதொகைக் கொடுப்பனவுகள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக 'உதவுத்தொகைக் கொடுப்பனவு" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவு, இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு, அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :-

பங்குத் தொகுதிச் சான்றிதழ்களையும் பிணையங்களையும் புதுப்பித்தல்

38. உருவழிக்கப்பட்டதான அல்லது சேதமுற்றதான பங்குத் தொகுதிச் சான்றிதழொன்று, வாக்குறுதிப் பத்திரம், காவுவோன்முறிஅல்லது திறைசேரிமுறி, அல்லது புறக்குறிப்புக்கென ஏற்பாடு செய்யப்பட்ட இடைவெளியாவும், அந்நோக்கத்திற்கெனப் பயன்படுத்தப்பட்டதான வாக்குறுதிப்பத்திரம் அல்லது முறியுடன் ஆரம்பத்தில் இணைந்துள்ள வட்டிக் கூப்பன்களின் காலப்பகுதி முடிவில் ஒரு காவுவோன் முறி அல்லது திறைசேரி முறி பதிவாளரிடம் ஒப்படைக்கப்பட்டதன்மேல், பதிவாளர் சான்றிதழை பத்திரத்தை அல்லது முறியை ஒப்படைக்கின்ற ஆட்களின் உரிமைக் கோரிக்கை நீதியானதும் சட்டபூர்வமானதுமெனத் திருப்தியடைந்தால், விதித்துரைக்கப்பட்ட கட்டணம் ஏதும் இருப்பின், அதனைச் செலுத்தியதன் மேல் அதே வகுப்பை அல்லது தொடரையும் பெறுமதியையுங்கொண்ட புதிய சான்றிதழொன்றை பத்திரமொன்றை, முறியொன்றை அத்தகைய ஆளுக்கு வழங்கலாமென்பதுடன், புதுப்பிப்பதற்காக அவரிடம் ஒப்படைக்கப்பட்ட சான்றிதழை, பத்திரத்தை அல்லது முறியை அதன் மேல் நீக்கஞ் செய்யலாம்."

12. முதன்மைச் சட்வாக்கத்தின் 49 ஆம் பிரிவு, "வாக்குறுதிப் பத்திரம் அல்லது காவுவோன் முறி" என்னும் சொற்களுக்குப் பதிலாக "வாக்குறுதிப் பத்திரம் காவுவோன் முறி, அல்லது திறைசேரி முறி" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

13. பின்வரும் பிரிவுகள், 53 ஆம் பிரிவை உடனடுத்து, இத்தால் உட்புகுத்தப்படுகின்றனவென்பதுடன், அவை முதன்மைச் சட்வாக்கத்தின் 53அ, 53ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும். :-

அலுவலர்கள் முதலானோரால் பிரயோகிக்கப்படும் மத்திய வங்கியின் தத்துவங்கள்

53.அ. இக்கட்டளைச் சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டினால் ஏதேனும் தத்துவம், கடமை அல்லது பணி மத்திய வங்கியினால் பிரயோகிக்கப்பட வேண்டும் அல்லது புரியப்பட வேண்டுமெனத் தேவவைப்படும் போதெல்லாம் அல்லது அதிகாரமளிக்கப்படும் போதெல்லாம் அத்தகைய தத்துவம், கடமை, அல்லது பணி மத்திய வங்கியின் அலுவலர் ஒருவரால், அல்லது மத்திய வங்கியின் பணச்சபையால் அதன் சார்பில் எழுத்திலான அதிகாரமளிக்கப்பட்ட வேறெவரேனும் ஆளினால் பிரயோகிக்கப்படலாம் அல்லது புரியப்படலாம்.

53.ஆ. இக்கட்டளைச் சட்டத்தின் கீழ், அரசாங்கத்தினால் மத்திய வங்கியின் பணச் சபையினால், பதிவாளரால் அல்லது அத்தகைய வேறு அலுவலரால் அல்லது சேவையாளரால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட ஏதேனும் கொடுப்பனவு அல்லது செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்படும் ஏதேனும் செயல் தொடர்பில் அரசாங்கம் மத்திய வங்கியின்

பணச்சபை பதிவாளர், எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர் என்போருக்கு எதிராகத் துடர்ச்சி அல்லது குற்ற வழக்கு எதுவும் தொடுக்கப்படுதலாகாது."

14. முதன்மைச் சட்டவாக்கத்தின் 55 ஆம் பிரிவு (2) ஆம் உட்பிரிவின் (ஏ) என்னும் பந்தியை அப்பிரிவின் (க) என்னும் பந்தியாக மீள இலக்கமிடுவதன் மூலமும் அப்பிரிவின் (எ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளை உட்புகுத்துவதன் மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது. :-

"(ஏ) முதனிலை வணிகர்களை நியமித்தலும், அவர்களால் அவதானிக்கப்படவேண்டிய நிபந்தனைகள் அவர்களின் சிறப்புரிமைகள், அவர்களால் புரியப்படவேண்டிய கடமைகள்;

(ஐ) நேரடிப் பங்குபற்றுநர்கள், வணிகர் நேரடிப் பங்குபற்றுநர்கள் அத்துடன் வணிகர் இடைத்தரகர்கள், என்போரின் நியமனம் அத்துடன் அவர்களை ஒழுங்குபடுத்தல் மேற்பார்வை அல்லது கண்காணிப்பு ;

(ஒ) இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டுப்பணமில்லாத திறைசேரி முறிகளை வழங்குதல், வைத்திருத்தல், அத்துடன் அவற்றை நிருவகித்தல்.

(ஓ) கட்டுப்பணமில்லாத திறைசேரி முறிகள் அல்லது அதனகத்துள்ள வட்டிகள் உட்படக் பங்குத்தொகுதியும் பிணையங்களும், கொள்வனவு செய்யப்படக்கூடிய, விற்பனை செய்யப்படக்கூடிய கைமாற்றம் செய்யப்படக்கூடிய அடகுவைக்கப்படக்கூடிய அல்லது பாசபந்தத்திற்கு உட்படுத்தப்படக்கூடிய விதம்;

(ஔ) பங்குத் தொகுதி அத்துடன் பிணையங்கள் தொடர்பிலான முதனிலை வழங்குகை, அத்துடன் அடுத்துறும் கைமாற்றங்களும் பிற கொடுக்கல் வாங்கல்களும் என்பனவற்றிற்கு ஏற்புடைத்தான நடவடிக்கை முறைகளும் நிபந்தனைகளும் ; அத்துடன்

15. பின்வரும் பிரிவுகள், 56 ஆம் பிரிவை உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுகின்றனவென்பதுடன் அவை முதன்மைச் சட்டவாக்கத்தின் 56அ, 56ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்.

தவறுகள்

"56அ. (1) எந்த ஆள், மத்திய வங்கியின் எவையேனும் பதிவேடுகளில் அல்லது எவரேனும் வணிகர் நேரடிப்பங்குபற்றுநர், அல்லது எவரேனும் முதனிலை வணிகர் உட்பட எவரேனும் நேரடிப் பங்குபற்றுநரின் ஏதேனும் புத்தகங்களின், பதிவேடுகளில், அல்லது கணக்குகளில் –

(அ) இக்கட்டளைச் சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டுடன் அல்லது அதன்கீழ் தரப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியுடன், கட்டளையுடன், அல்லது பணிப்புடன் இணங்கியொழுகத் தவறுகின்றாரோ ;

(ஆ) இக்கட்டளைச் சட்டத்தின் நோக்கங்களுக்காக அவரது அறிவுக்கெட்டியவரை பொய்யான அல்லது செம்மையற்றதான ஏதேனும் தகவலை அல்லது உள்ளடக்கங்களைக் கொண்ட ஏதேனும் விபரத்திரட்டைக் கொடுத்துதவுகின்றாரோ ;

(இ) ஏமாற்றும் கருத்துடன் –

(i) பொய்யான பதிவொன்றைச் செய்கின்றாரோ, அல்லது செய்விக்கின்றாரோ; அல்லது

(ii) ஏதேனும் பதிவைச் செய்யாது விடுகின்றாரோ; அல்லது செய்யாது விடுவிக்கின்றாரோ; அல்லது

(iii) ஏதேனும் பதிவை மாற்றுகின்றாரோ, மறைக்கின்றாரோ, அழிக்கின்றாரோ அல்லது மாற்றுவிக்கின்றாரோ, மறைப்பிக்கின்றாரோ, அல்லது அழிப்பிக்கின்றாரோ

அந்த ஆளெவரும் இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(2) இக்கட்டளைச் சட்டத்தின்கீழ், தவறொன்றுக்குக் குற்றவாளியாகும் ஆளெவரும், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின்பின், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், ஐந்து ஆண்டுகளுக்கு மேற்படாதவொரு காலத்திற்கான மறியற்றண்டனைக்கு, அல்லது ஒரு கோடி ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றிற்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்.

"பணிப்பாளர்களினதும் அலுவலர்களினதும் தவறு.

56ஆ. இக்கட்டளைச் சட்டத்தின்கீழ், தவறொன்றுக்குக் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட ஆள், கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக இருக்குமிடத்து தவறொன்றைப் புரியும் நேரத்தில் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்பாளர் ஒருவராக அல்லது அலுவலரொருவராக இருந்தவரான ஒவ்வோர் ஆளும், அவர் தாம் அறியாமலே தவறு புரியப்பட்டது அல்லது அத்தகைய தவறு புரியப்படுவதனைத் தவிர்ப்பதற்குரிய எல்லா விழிப்புக் கவனத்தையும் பிரயோகித்தார் என எண்பித்தலாலன்றி அத்தவறுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்"

16. முதன்மைச் சட்டவாக்கத்தின் 58 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(அ) "காவுவோன் முறி" என்பதன் வரைவிலக்கணத்திற்கு நேர் முன்னதான பின்னரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும் :-

"கூட்டுவாடிக்கையாளர் கணக்கு" என்பது 21உ என்னும் பிரிவின் (2) ஆம் உட்பிரிவுக்கிணங்க மத்திய வங்கியுடன் வணிகர் நேரடிப் பங்குபற்றுநரினால் பேணப்படும் தனியான கணக்கு என்று பொருளாகும்.

(ஆ) "காவுவோன் முறி" என்பதன் வரைவிலக்கணத்தை நேரே உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணங்களை உட்புகுத்துவன் மூலமும் :-

வணிகர் நேரடிப் பங்குபற்றநர் தொடர்பில் "வாடிக்கையாளர்" என்பது கட்டுநிதியற்ற திறைசேரி முறிகளை அல்லது அவற்றிலுள்ள ஓர் அக்கறையை அத்தகைய வணிகர் நேரடிப் பங்குபற்றுநருக்கூடாக கொள்வனை செய்கின்ற அல்லது விற்கின்ற அல்லது வேறுவகையாகக் கொள்ளுகின்ற அல்லது கையுதிர்க்கின்ற அல்லது அத்தகைய முறிகளின் அல்லது அக்கறைகளின் இயலக்கூடிய கொள்ளகைக்காக அல்லது கையுதிர்ப்புக்காக அத்தகைய வணிகர் நேரடிப் பங்குபற்றுநருடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுகின்ற எவரேனும் ஆள் என்று பொருளாகும்.

"வணிகர் நேரடிப் பங்குபற்றுநர்" என்பது வணிகர் நேரடிப் பங்குபற்றுநராக இருப்பதற்கென 21உ என்னும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் எழுத்தில் மத்திய வங்கியினால் நியமிக்கப்பட்ட எவரேனும் நேரடிப் பங்குபற்றுநர் என்று பொருளாகும்;

"பதவிப் பெயர் குறிக்கப்பட்ட வணிகரல்லாத விலைக் கேள்வியாளர்" என்பது மத்திய வங்கியின் பிணையங்களின் ஏல விற்பனையில் நேரடியாக விலைகேட்பதற்குத் தகுதியுடையவரென மத்திய வங்கியினால் எழுத்தில் நியமிக்கப்பட்ட முதல் நிலை வணிகர் அல்லாத ஏதேனும் நிறுவனம் என்று பொருளாகும்.

"நேரடிப் பங்குபற்றுநர்" என்பது நேரடிப்பங்குபற்றுநர் ஒருவராக இருக்கவென 21ஈ என்னும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் எழுத்தில் மத்திய வங்கியினால் நியமிக்கப்பட்ட எவரேனும் முதநிலை வணிகர் அல்லது வேறு ஆள் என்று பொருளாகும்;

"வணிகரிடைத் தரகர்" என்பது 21இ என்னும் பிரிவின் (2) (உ) என்னும் உட்பிரிவினைப் பின்பற்றி மத்திய வங்கியினால் வணிகரிடைத் தரகர் ஒருவராக இருப்பதற்கென நியமிக்கப்பட்ட எவரேனும் ஆள் அல்லது குழாம் என்று பொருளாகும்.

"வணிகரல்லாத நேரடிப் பங்குபற்றுநர்" என்பது வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் ஒருவராக இராத எவரேனும் நேரடிப் பங்குபற்றுநர் என்று பொருளாகும்.

"அடைமானம்" என்பது கடன்களுக்கான அல்லது முற்பணங்களுக்கான இணைப்பொறுப்பாக அல்லது பகிரங்கப் பணங்களின் வைப்புக்களை அல்லது கடப்பாடொன்றின் நிறைவேற்றுகையைப் பெற்றுக்கொள்ளுவதற்காக கட்டுப்பணமற்ற திறைசேரி முறிகளை அடைமானம் வைத்தலை அல்லது அவற்றிலான ஏதேனும் பிணைப்பொறுப்பு அக்கறையை உள்ளடக்கும்."

(இ) "விதிதுரைக்கப்பட்ட" என்பதன் வரைவிலக்கணத்தை நேரே உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலம் :-

"முதநிலை வணிகர்" என்பது பங்குத்தொகுதிகளுக்கும் பிணையங்களுக்குமான முதனிலை மற்றும் இரண்டாம் நிலைச் சந்தைகளில் மாற்றுத் திறத்தவர்களாக மத்திய வங்கியுடன் கொடுக்கல் வாங்கல்களைச் செய்யும் நோக்கத்திற்காக முதநிலை வணிகராக பணச்சபையினால் நியமிக்கப்பட்ட ஏதேனும் வர்த்தக வங்கி, கம்பெனி, அல்லது வேறு ஆள் என்று பொருளாகும்.

(ஈ) "வாக்குறுதிப் பத்திரம்" என்பதன் வரைலிலக்கணத்தை நேரே உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணங்களை இடுவதன் மூலமும் :-

"வட்டிவீதம் என்பது 4 ஆம் பிரிவின் (1) (இ) என்னும் உட்பிரிவின்கீழான கட்டளை ஒன்றின் நியதிகளில் குறித்துரைக்கப்பட்ட முறை ஏதும் இருந்தால் அதற்கிணங்கத் தீர்மானிக்கப்படும் ஒரு வட்டி வீதத்தையும் உள்ளடக்கும் ;

"மத்திய வங்கியின் பதிவேடுகள்" என்பது சபையினால் அந்நோக்கத்திற்கென அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளினால் மத்திய வங்கியின் சார்பில் பேணப்படும் பதிவேடுகளை உள்ளடக்கும் என்பதுடன் கணனிக் கோவைகள், தட்டுகள், நாடாக்கள், அல்லது வேறு காந்த, இலத்திரனியல் அல்லது கட்புல சாதனங்கள் மூலம் வைத்திருக்கப்படும், களஞ்சியப்படுத்தப்படும் அல்லது அனுப்பப்படும் பதிவேடுகளையும் உள்ளடக்கும்."

(உ) "பதிவுசெய்யப்பட்ட பங்குத்தொகுதி" என்பதன் வரைலிலக்கணத்தை நேரே உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணங்களை இடுவதன் மூலமும் :-

"கட்டுப்பணமற்ற திறைசேரி முறிக் கணக்கு" என்பது 21ஈ என்னும் பிரிவின் (2) ஆம் உட்பிரிவுக்கிணங்க மத்திய வங்கியுடனான நேரடிப் பங்குபற்றுநர் ஒருவரால் வேண்டப்பட்டுவரும் தனிக் கணக்கு என்று பொருளாகும் ;

"கட்டுப்பணமற்ற திறைசேரி முறி" என்பது சான்றிதழ் ஒன்றில் அல்லது வேறு சாதனத்தில் உள்ளடக்கப்படாததும் அல்லது குறிக்கப்படாததும் மத்திய வங்கியின் பதிவேடுகளில் உள்ள பதிலீடுகளாக வழங்கப்பட்ட திறைசேரி முறி ஒன்று என்று பொருளாகும்."

(ஊ) "பிணைப்பொறுப்பு" என்பதன் வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும் :-

"பிணைப்பொறுப்பு" என்பது காவுவோன் முறி அல்லது வாக்குறுதிப் பத்திரம் அல்லது திறைசேரி முறி ஒன்று என்று பொருளாகும்.

(எ) "பிணைப்பொறுப்பு" என்பதன் வரைவிலக்கணத்தை நேரே உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும் :-

"திறைசேரி முறி" என்பது இக்கட்டளைச் சட்டத்தின்கீழும் 37, 38, 39,42,44,46 (ஆ), அத்துடன் (இ), 49, 52 அத்துடன் 55 (2) (இ) அத்துடன் (ஈ) ஆகிய பிரிவுகளின்கீழ் தவிரவும் வழங்கப்பட்ட திறைசேரி முறி ஒன்று என்று பொருளாகும் என்பதுடன் கட்டுப்பணம் அற்ற திறைசேரி முறி ஒன்றையும் உள்ளடக்குகின்றது.

17. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

1995 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, வங்கித்தொழில் (திருத்தச்) சட்டம்

[1995, திசெம்பர் மாதம் 19 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

1923 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித் தொழிற் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

1. இச்சட்டம், 1995 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, வங்கித் தொழில் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழிற் சட்டத்தின் விரிவுப்பெயர் இத்தால் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் விரிவுப்பெயர் இடப்படுகின்றது.

"வங்கித்தொழிலைக் கொண்டுநடாத்துபவர்களும், வைப்புக்களை ஏற்று அத்தகைய பணத்தை முதலீடுசெய்யும் தொழிலைக் கொண்டுநடாத்துபவர்களுமான ஆட்களுக்கு உரிமமளிப்பதற்கான நடவடிக்கைமுறையொன்றை அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்துவதற்காகவும்; அத்தகைய தொழில்கள் தொடர்பான கருமங்களை ஒழுங்குபடுத்திக் கட்டுப்படுத்துவதற்காகவும் ஏற்பாடு செய்வதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்".

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

(1) அப்பிரிவுக்கான கடைசிப் பந்தியை நீக்கிவிடுவதன் மூலம்; அத்துடன்

(2) அப்பிரிவின் முடிவில் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும் :-

"(6) இப்பிரிவின் நோக்கத்துக்காக "கம்பெனி" என்பது, 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் 449 ஆம் பிரிவில் வரைவிலக்கணம் கூறப்பட்டவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், இலங்கைக்கு வெளியே உரியமுறையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனியொன்றையும், அல்லது ஏதேனும் வெளிநாட்டின் நியதிச்சட்டம் எதனையும் அரச பட்டயம் எதனையும் அல்லது உரிமையோலை எதனையும் பின்பற்றி அமைக்கப்பட்டதான கூட்டிணைப்புக் குழுவொன்றையும் அத்துடன் ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்டதான கூட்டிணைப்புக் குழுவொன்றையும் உள்ளடக்கும்; அத்துடன் மத்திய வங்கியை, அல்லது இச்சட்டத்துக்கான 1 ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட வங்கிகள் நீங்கலாக இலங்கைக்கு வெளியில் கூட்டிணைக்கப்பட்டதான தனியார் கம்பனியொன்றை உள்ளடக்குதலாகாது".

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

"(இ) இலங்கைக்கு வெளியில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றினால் அல்லது கூட்டிணைப்புக் குழுவொன்றினால் விண்ணப்பமொன்று செய்யப்படும் விடயத்தில், இலங்கையில் அதன் வங்கித்தொழிலைக் கொண்டுநடாத்துவதில் உறப்பட்ட எல்லாக் கடப்பாடுகளையும் பொறுப்புக்களையும் ஈடுசெய்வதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய நிதிகள் மத்திய வங்கியினால்கோரப்படுவதன்மேல் விடயத்துக்கேற்ப அத்தகைய கம்பெனியினால் அல்லது

கூட்டிணைப்புக் குழுவினால் அவை ஏற்பாடு செய்யப்படுமெனக் கூறுகின்றதும், அதன் பணிப்பாளர் சபையின் தீர்மானமொன்றின்மூலம் ஆதாரப்படுத்தப்படுகின்றதுமான எழுத்திலான பொறுப்பேற்பும், அத்துடன் விடயத்துக்கேற்ப அத்தகைய கம்பெனி அல்லது கூட்டிணைப்புக்குழு எந்த நாட்டில் கூட்டிணைக்கப்பட்டதோ அல்லது அமைக்கப்பட்டதோ அந்நாட்டின் பண அதிகாரியிடமிருந்து பணச்சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தகவலைக்கொண்டுள்ள அறிக்கையொன்றும்".

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில்,

"இலங்கைக்கு வெளியில் கூட்டிணைக்கப்பட்டதும், 3 ஆம் பிரிவின் கீழான உரிமமொன்றுக்காக விண்ணப்பித்துள்ளதுமான ஏதேனும் கம்பெனியை அத்துடன் அத்தகைய கம்பெனியின்" என்ற சொற்களுக்குப் பதிலாக முறையே "இலங்கைக்கு வெளியில் கூட்டிணைக்கப்பட்டதும், 2 ஆம் பிரிவின்கீழான உரிமமொன்றுக்காக விண்ணப்பித்துள்ளதுமான ஏதேனும் கம்பெனியை அல்லது கூட்டிணைப்புக் குழுவை அத்துடன் அத்தகைய கம்பெனியின் அல்லது கூட்டிணைப்புக் குழுவின்" என்ற சொற்களையும் இலக்கத்தையும் இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், "இலங்கைக்கு வெளியில் கூட்டிணைக்கப்பட்டவையும், அத்தகைய ஒவ்வொரு தீர்மானத்தின் பின்னரும் உரிமத்துக்காக விண்ணப்பிக்கின்றவையுமான எல்லாக் கம்பெனிகளுக்கும்" என்ற சொற்களுக்குப் பதிலாக "இலங்கைக்கு வெளியில் கூட்டிணைக்கப்பட்டவையும், அத்தகைய ஒவ்வொரு தீர்மானத்தின் பின்னரும் உரிமத்துக்காக விண்ணப்பிக்கின்றவையுமான எல்லாக் கம்பெனிகளுக்கும் கூட்டிணைப்புக் குழுக்களுக்கும்" என்ற சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவுக்கான ஓரக்குறிப்பில், "இலங்கைக்கு வெளியில் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனிகள்" என்ற சொற்களுக்குப் பதிலாக "இலங்கைக்கு வெளியில் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனிகளும், கூட்டிணைப்புக் குழுக்களும்" என்ற சொற்களை இடுவதன் மூலமும்

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "அத்தகைய உரிமத்தின் நியதிகளும் நிபந்தனைகளும் விண்ணப்பகாரரினால் பின்பற்றப்படுமெனத் தாம் திருப்தியடைந்ததும்", என்ற சொற்களுக்குப் பதிலாக "அத்தகைய உரிமத்தின் நியதிகளும் நிபந்தனைகளும் விண்ணப்பகாரரினால் பின்பற்றப்படுமெனத் திருப்திப்பட்டும் தேசிய பொருளாதாரத்தின் நலன்களைக் கவனத்துட்கொண்டும்" என்ற சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

"(உ) அது இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றாகவிருக்குமிடத்து, அத்தகைய வங்கி எந்த நாட்டில் கூட்டிணைக்கப்பட்டதோ அந்நாட்டின் தோதான அதிகாரியினால் அல்லது ஒழுங்குபடுத்தும் குழுவினால் நடைமுறைப்படுத்துவதற்கான அதன் உரிமம் அல்லது அதிகாரம் இல்லாதாக்கப்பட்டதாக அல்லது மீளப்பெறப்பட்டதாகவிருக்குமிடத்து;"

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், இது அச்சட்டவாக்கத்தின் 11 அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :-

"பணச்சட்டத்தின் 30 ஆம் பிரிவு ஏற்புடையப்படற்பாலதாதல்

11அ. இச்சட்டத்தின் 9 ஆம், 10 ஆம் 11 ஆம் பிரிவுகளிலுள்ளதெதுவும், பணச் சட்டத்தின் 30 ஆம் பிரிவினால் பணச்சபைக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களை எவ்வகையிலேனும் பாதித்தலாகாது."

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், இது அச்சட்டவாக்கத்தின் 13அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :-

"நடமாடு வங்கித் தொழிற் கூறுகள்.

13அ. (1) பன்னிரெண்டாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியிலுள்ள ஏற்பாடுகளில் எது எப்படியிருப்பினும், பிரதி ஆளுநர், அத்தகைய நோக்கத்துக்காகப் பணச்சபையினால் வழங்கப்பட்ட வழிகாட்டு நெறிகளின்மீது, காலத்துக்குக்காலம், அவர் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய நியதி நிபந்தனைகளுக்கு அமைய, நடமாடு வங்கித்தொழிற் கூறுகளைத் தாபிப்பதற்கான அங்கீகாரத்தை வழங்கலாம்.

(2) பிரதி ஆளுநர், வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரின் அறிக்கைமீது, எழுத்தில் ஆக்கப்பட்ட கட்டளையின் மூலம், (1) ஆம் உட்பிரிவின்கீழ் அளிக்கப்பட்ட அங்கீகாரத்தை மீளப்பெறலாம் அல்லது, அத்தகைய அங்கீகாரத்தின் நியதி நிபந்தனைகளை வேறுபடுத்தலாம் என்பதுடன், அம்முடிபு பற்றிய அறிவித்தல் இயைபான உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிக்குத் தெரிவிக்கப்படுதலும் வேண்டும்."

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், இது அச்சட்டவாக்கத்தின் 14அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :-

"அமைப்புப் புறவிதிகளும் அமைப்பக விதிகளும் அங்கீகாரத்துடன் மாற்றப்படுதல்.

14அ. ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்திரெண்டாம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் 449 ஆம் பிரிவில் வரைவிலக்கணங்கூறப்பட்டவாறான கம்பெனியொன்றாகவுள்ள உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்று, அதன் அமைப்புப் புறவிதிகளையும் அமைப்பக விதிகளையும் பணச்சபையின் முன்கூட்டிய எழுத்திலான அங்கீகாரமில்லாது மாற்றுதலாகாது."

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "அதன் பெயரில் ஒரு பாகமாக.....பயன்படுத்துதல் ஆகாது:, என்ற சொற்களுக்குப் பதிலாக "அதன் பெயரின் ஒரு பாகமாக.....பணச்சபையின் முன்கூட்டிய எழுத்திலான அங்கீகாரத்துடனன்றி பயன்படுத்துதல் ஆகாது:" என்ற சொற்களை இடுவதன் மூலமும்: அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "ஏதேனும் தொழிலைக் கொண்டு நடாத்தும் நோக்கத்துக்காக" என்ற சொற்களுக்குப் பதிலாக "பணச் சபையின் முன்கூட்டிய எழுத்திலான அங்கீகாரத்துடனன்றி, ஏதேனும் தொழிலைக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்காக," என்ற சொற்களை இடுவதன் மூலமும்.

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அவ்வுட்பிரிவுக்கான காப்பு வாசகத்தில் "துணைநிலை நிறுவனமொன்றைக்" என்ற சொற்களுக்குப் பதிலாக "தொழில்களுக்குள் ஒன்றோ பலவற்றையோ கொண்டுநடாத்தும் துணைநிலை நிறுவனமொன்றைக்" என்ற சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அவ்வுட்பிரிவின் காப்புவாசகத்தின் (அ), (ஆ), (இ), (ஈ), (உ) என்னும் பந்திகளில் "தொழிலைத் தனித்துக்" என்ற சொற்களுக்குப் பதிலாக "தொழிலைக்" என்ற சொல்லை இடுவதன் மூலமும் :-

(3) அவ்வுட்பிரிவின் (எ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :

"(எ) பணச்சபையின் அபிப்பிராயத்தில் வங்கித்தொழிலுக்கும் நிதி வழங்கலுக்கும் முரணானதாகவிராத எவ்வகையினதுமான தொழிலைக் கொண்டுநாடத்துவதான".

13. முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், இது அச்சட்டவாக்கத்தின் 17 அ என்னும் பிரிவாகப் பயனுறுதல் வேண்டும் :-

"உரிமமளிக்கப்பட்ட ஒரு வர்த்தக வங்கியினால் ஐம்பது சதவீதமான அல்லது அதற்குக் குறைவான பங்குகள் கொள்வனவு செய்யப்படுதல்

17அ (1) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, உரிமமளிக்கப்பட்ட ஒரு வர்த்தக வங்கி, நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனியல்லாத ஏதேனும் கம்பெனியில் பங்குகளைக் கொள்ளுதலோ அல்லது வைத்திருத்தலோ ஆகாது; அத்துடன் -

(அ) அத்தகைய வங்கியினால் கொள்ளப்பட்ட பங்கு வைத்திருக்கையெதுவும், காலத்துக்குக்காலம் பணச்சபை தீர்மானிக்கக்கூடியவாறாக அதன் மூலதன நிதிகளின் அத்தகைய நூற்று வீதத்தை விஞ்சுதலாகாது; அத்துடன்

(ஆ) (வங்கியின் துணைநிலை நிறுவனங்களாகவுள்ள கம்பெனிகள் நீங்கலாக) நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனிகளின் பங்குகளில் முதலீடு செய்யப்பட்ட கூட்டுமொத்தத் தொகை, பணச்சபையினால் காலத்துக்குக்காலம் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அதன் மூலதன நிதிகளின் அத்தகைய நூற்றுவீதத்தை விஞ்சுதலாகாது;

ஆயின் எவ்வாறாயினும், உரிமமளிக்கப்பட்ட ஒரு வர்த்தக வங்கி, மேலே குறித்துரைக்கப்பட்ட வரையறைகளை விஞ்சாமல், நிரற்படுத்தப்பட்ட கம்பெனியொன்றல்லாத ஒரு பகிரங்கக் கம்பெனியை நிதி தொடர்பாக நிலைபெறச் செய்வதற்கு என அதனை மறுசீரமைக்கும் நோக்கத்துக்காக அத்தகைய கொள்ளுதல் அவசியமானவரின், அத்தகைய கம்பெனியில் பங்குகளைக் கொள்ளலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் பின்வருவனவற்றுக்கு ஏற்புடையனவாதலாகாது :-

(அ) உரிமமளிக்கப்பட்ட ஒரு வர்த்தக வங்கியாகவுள்ள அத்தகைய வங்கியின் துணைநிலைக் கம்பெனியிலான முதலீடு;

(ஆ) பணச்சபையின் அங்கீகாரத்துடன் கொள்ளப்பட்ட வங்கியின் வேறேதேனும் துணைநிலைக் கம்பெனியிலான முதலீடுகள்;

(இ) வங்கிக்கு வருமதியாகவுள்ள ஏதேனும் கடனைத் திருப்திப்படுத்தும்போது, அல்லது பங்கு வழங்கலொன்றைப் பொறுப்பேற்பதன் விளைவாக அத்தகைய வங்கி கொள்ளக்கூடிய ஏதேனும் பங்கு வைத்திருக்கை ;

(ஈ) பணச்சபையின் கருத்தில் வங்கித்தொழில் நிதிசார் துறைகளின் மனித மூலவள அபிவிருத்தி மற்றும் தொழில்நுட்பவியல் அபிவிருத்தி என்பனவற்றின் முன்னேற்றுகைக்கும் மேம்படுத்துகைக்குமாகத் தாபிக்கப்பட்டுள்ளதான ஏதேனும் கம்பெனியிலான பங்குகளின் ஏதேனும் கொள்ளுகை அல்லது பற்றுதல் :

ஆயின் இப்பங்குகள் கொள்ளப்பட்டதன் விளைவாக வங்கியின் மொத்த முதலீடு (1) ஆம் உட்பிரிவின்கீழ் பணச்சபையினால் தீர்மானிக்கப்பட்டவாறாக மூலதன நிதிகளின் நூற்று வீதத்தை விஞ்சுமிடத்து, வங்கியானது அத்தகைய விஞ்சுதலான பங்குகளை, அத்தகைய கொள்ளுதல் திகதியிலிருந்து இரண்டாண்டுகளினுள் அல்லது பணச்சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நீட்டிய காலப்பகுதியினுள் கையாளுதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் நோக்கத்திற்காக "நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனி" என்பது, 1987 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்ட பங்குத்தொகுதி பரிவர்த்தனையில் அதன் பிணையங்கள் நிரற்படுத்தப்பட்ட அல்லது விலை கோரப்பட்ட ஏதேனும் பகிரங்கக் கம்பனி என்று பொருளாகும்".

14. முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது

(1) அப்பிரிவின் (1) ஆம், (2) ஆம், (3) ஆம் உட்பிரிவுகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன் மூலமும் :-

"(1) மூன்றாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒவ்வொன்றும் -

(அ) இப்பிரிவு தொடங்கும் திகதிக்கு முன்னர் ஓர் உரிமம் வழங்கப்பட்டிருப்பின், இருபத்தைந்து மில்லியன் ரூபாவுக்குக் குறையாத தொகையிலான ஒப்புரவு மூலதனத்தை எல்லா நேரங்களிலும் பேணுதல் வேண்டும்;

(ஆ) இவ்வுட்பிரிவு தொடங்கிய திகதிக்கு பின்னர் ஓர் உரிமம் வழங்கப்பட்டிருப்பின், நூறு மில்லியன் ரூபாவுக்கு அல்லது பணச்சபை வங்கித்தொழில் முறைமையின் நிலைபேறான தன்மையையும் உறுதி நிலையையும் தேசிய பொருளாதாரத்தின் நலனையும் அவர்களின் ஒருப்பாட்டுடனும் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கக்கூடிய அத்தகைய வேறு தொகைக்குக் குறையாத ஓர் ஒப்புரவு மூலதனத்தை எல்லா நேரங்களிலும் பேணுதல் வேண்டும்.

(2) "ஒப்புரவு மூலதனம்" பின்வருமாறு பொருளாதல் வேண்டும் :-

(அ) எழுத்திலான ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டதான அல்லது தாபிக்கப்பட்டதான உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியாகவிருப்பின் செலுத்தப்பட்ட மூலதனம்;

(ஆ) இலங்கைக்கு வெளியில் கூட்டிணைக்கப்பட்டதான அல்லது தாபிக்கப்பட்டதான உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியாகவிருப்பின் தலைமையலுவலகத்தினால் அத்தகைய வங்கிக்குக் குறித்தொதுக்கப்பட்ட தொகை.

(3) (அ) பணச்சபையானது, ஒரு வங்கியின் வைப்புப் பொறுப்புக்களை அல்லது எதிர்பாராப் பொறுப்புகளுட்பட மொத்தப் பொறுப்புகளை அல்லது மொத்தச் சொத்துக்களை அல்லது சொத்துக்களின் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் வகுதியைக் கவனத்திற்கொண்டு இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஒப்புரவு மூலதனமாக உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றினால் பேணப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட ஆகக் குறைந்த தொகைகளெனக் குறித்துரைக்கப்பட்ட தொகைகளைக் காலத்துக்குக்காலம் வேறுபடுத்தப்படலாம்.

(ஆ) தேவைப்படுத்தப்பட்ட ஆகக் குறைந்த ஒப்புரவு மூலதனம், பொறுப்புகள் அல்லது சொத்துக்களைத் தொடர்புறுத்தி விதித்துரைக்கப்படும்போது அத்தகைய தொகையைக் கணிக்கும் நோக்கத்துக்காக, மூலதனமும், பொறுப்புகளும் அல்லது சொத்துகளும், தேசிய பொருளாதாரத்தின் நலனைக் கவனத்துட்கொண்டு பணச்சபை காலத்துக்குக் காலம் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய வகையினவாகவிருத்தலும் அத்தகைய முறையில் கணிக்கப்படுதலும் வேண்டும்.

(இ) பணச்சபையானது, உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றினால் பேணப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட ஒப்புரவு மூலதனம் தொடர்பில் அதனால் செய்யப்பட்ட ஏதேனும் வேறுபாட்டை எல்லா உரிமமளிக்கப்பட்ட வர்த்தகவங்கிகளுக்கும் எழுத்தில் அறிவித்தல் வேண்டும்.

(ஈ) ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி அதன் ஒப்புரவு மூலதனத்தை அதிகரிக்க வேண்டுமென அத்தகைய வேறுபாட்டினால் தேவைப்படுத்தப்படுமிடத்து, அதனால் பணச்சபைக்குச் செய்யப்படும் விண்ணப்பத்தின்மீது, அத்தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுகுவதற்கெனப் பன்னிரண்டு மாத காலப்பகுதி, அல்லது பணச் சபையினால் வழங்கப்படக்கூடிய அத்தகைய நீட்டிய காலப்பகுதி அதற்கு அளிக்கப்படுதல் வேண்டும்".

(2) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :-

"(5) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி பணச்சபையின் முன்கூட்டிய எழுத்திலான அங்கீகாரமில்லாது அதன் ஒப்புரவு மூலதனத்தைக் குறைத்தலாகாது.",

(3) அப்பிரிவின் (7) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :-

"(7) (அ) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒவ்வொன்றும் எல்லா நேரங்களிலும், பணச்சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான மூலதன நிறைவு விகிதத்தைப் பேணிவருதல் வேண்டும்; பேணப்பட வேண்டிய அத்தகைய விகிதத்தைத் தீர்மானிப்பதில் பணச்சபையானது செயல்முறைக்குகந்த அளவு வரை, பஸ்லேயிலுள்ள சருவதேச தீர்த்து வைத்தலுக்கான வங்கியினால் தரப்பட்டுள்ள மூலதன நிறைவுக்கான வழிகாட்டு நெறிகளைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

(ஆ) பந்தி (அ) விற் குறிப்பீடு செய்யப்பட்ட மூலதன நிறைவு விகிதத்திலான ஏதேனும் வேறுபாடு பணச்சபையினால் எழுத்தில் ஒவ்வோர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிக்கும் அறிவிக்கப்படுதல் வேண்டும்; ஆயின், அதன் மூலதனத்தை அதிகரிக்குமாறு அத்தகைய வேறுபாட்டினால் தேவைப்படுத்தப்படும் ஒவ்வோர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிக்கும், அத்தகைய தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுகுவதற்கெனப் பன்னிரண்டு மாத காலப்பகுதி அல்லது

பணச்சபையினால் வழங்கப்படக்கூடியவாறான அத்தகைய நீட்டிய காலப்பகுதி அளிக்கப்படுதல் வேண்டும்"; அத்துடன்

(4) அப்பிரிவின் (8) ஆம் உட்பிரிவை நீக்கிவிடுவதன் மூலமும்.

(5) அப்பிரிவின் (9) ஆம் உட்பிரிவில் "மூலதனம் அல்லது மூலதன நிதியங்கள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஒப்புரவு மூலதனம் அல்லது மூலதன நிதியங்கள்" என்னும் சொற்களை இடுவதன் மூலம்.

15. முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :-

"குறித்த சில சூழ்நிலைகளில் பாகங்கள் III. V, VI என்பன கரைகடந்த வங்கித் தொழிலுக்கு ஏற்புடையனவாகாதிருத்தல்.

24. (1) இப்பாகத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றின் கரைகடந்த நடைமுறைகள் எல்லாம் அதன் கரைகடந்த கூறினால் கொண்டு நடாத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, இச்சட்டத்தின் பாகங்கள் III, V, VI என்பன அத்தகைய கரைகடந்த வங்கித்தொழில் தொடர்பில் ஏற்புடையனவாதலுமாகாது.

(2) பணச்சபையானது கசெற்றில் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம், இச்சட்டத்தின் பாகங்கள் III. V, VI என்பனவற்றில் அடங்கியுள்ள ஏற்பாடுகள் எல்லாம் அல்லது அவற்றுள் எவையும், பொதுவாக அல்லது வதிவோருடன் மட்டுமான அதன் கரைகடந்த வங்கித்தொழில் தொடர்பில் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றின் எல்லாக் கரைகடந்த வங்கித்தொழில் தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டுமென வெளிப்படுத்தலாம்".

16. முதன்மைச் சட்டவாக்கத்தின் 26ஆம் பிரிவு, "25 ஆம் பிரிவின்கீழ் குறித்துரைக்கப்படும்" என்ற சொற்களுக்குப் பதிலாக "வதிபவரொருவருடன் 25 ஆம் பிரிவின்கீழ் குறித்துரைக்கப்படும்" என்ற சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

17. முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது.

"குறித்தசில சூழ்நிலைகளில் பணச் சட்டத்தின் V ஆம் அத்தியாயத்தின் பாகங்கள் III. VI, VII என்பன ஏற்புடையன வாகாதிருத்தல்.

29. (1) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, பணச்சட்டத்தின் Vஆம் அத்தியாயத்தின் பாகங்கள் III. VI, VII என்பனவற்றின் ஏற்பாடுகள் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றின் கரைகடந்த வங்கித்தொழில் தொடர்பில் ஏற்புடையனவாதலாகாது.

(2) பணச்சபையானது, கசெற்றில் வெளியிடப்படும் அறிவித்தல்மூலம், (422 ஆம் அத்தியாயமான) பணச்சட்டத்தின் V ஆம் அத்தியாயத்தின் பாகங்கள் III, VI, VII என்பனவற்றின் ஏற்பாடுகள் எல்லாம் அல்லது அவற்றுள் எவையும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றின் கரைகடந்த எல்லா வங்கித்தொழில் தொடர்பிலும் பொதுவாக அல்லது வதிவோருடன் மட்டுமான அதன் கரைகடந்த வங்கித்தொழில் தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டுமென வெளிப்படுத்தலாம்".

18. முதன்மைச் சட்டவாக்கத்தின் 34ஆ என்ற பிரிவைத்தவிர பாகம் IVஅ இத்தால் நீக்கிவிடப்படுகின்றது.

19. முதன்மைச் சட்டவாக்கத்தின் 43ஆ என்னும் பிரிவானது (இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "இப்பாகத்தின்கீழ் பணச்சபையால் அதிகாரமளிக்கப்பெற்ற உரிமமளிக்கப்பெற்ற வர்த்தக வங்கி ஒன்று இலக்கமிடப்பட்ட கணக்கொன்றைத் திறக்குமிடத்து" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "உரிமமளிக்கப்பெற்ற வர்த்தக வங்கி ஒன்று இலக்கமிடப்பட்ட கணக்கொன்றைத் திறக்குமிடத்து' என்னும் சொற்களை இடுவதன்மூலம் –

(2) அப்பிரிவின் இறுதியில் பின்வரும் புதிய உட்பிரிவை சேர்ப்பதன் மூலம் –

"(3) இப்பிரிவின் நோக்கத்திற்காக "இலக்கமிடப்பட்ட கணக்கு" என்பது பணச்சபையினால் தீர்மானிக்கப்பட்டதான ஓர் இலக்கம், குறிமீடு, சொல் அல்லது அத்தகைய வேறு வழிவகையினால் மட்டுமே அடையாளங் காணப்படுகின்றதான, நீக்கஞ்செய்யப்பட்ட 34அ என்னும் பிரிவின்கீழ் பணச்சபையினால் அதிகாரமளிக்கப்பெற்ற ஓர் உரிமமளிக்கப்பெற்ற வர்த்தக வங்கியுடன் திறக்கப்பட்ட ஒரு கணக்கு என்று பொருளாகும்."

20. முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "அதன் ஐந்தொகையையும்" என்ற சொற்களுக்குப் பதிலாக "அதன் கணக்காய்வு செய்யப்பட்ட ஐந்தொகையையும்" என்ற சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "அதன் ஐந்தொகையையும்" என்ற சொற்களுக்குப் பதிலாக "அதன் கணக்காய்வு செய்யப்பட்ட ஐந்தொகையையும்" என்ற சொற்களை இடுவதன் மூலமும்.

21. முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், இது அச்சட்டவாக்கத்தின் 38அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :-

"வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர், தகைமை பெற்ற கணக்காய்வாளர்களின் நிரலை வழங்குதல்.

38அ. (1) பணச்சபையானது, உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளின் கணக்குகளைக் கணக்காய்வதில் அனுபவம் பெற்றவர்களும் தகுதிவாய்ந்தவர்களும் தகைமை பெற்றவர்களுமான கணக்காய்வாளர்கள் ஈடுபடுத்தப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கான தேவையைக் கவனத்திற்கொண்டு, வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கு வழிகாட்டு நெறிகளை வழங்கலாம்; அவர் அத்தகைய வழிகாட்டு நெறிகளுக்கிணங்க, உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளின் கணக்குகளைக் கணக்காய்வு செய்வதற்குத் தகைமைபெற்ற அத்தகைய எண்ணிக்கையினரான கணக்காய்வாளர்களைக் காலத்துக்குக்காலம் தெரிவு செய்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய தெரிவுசெய்யப்பட்ட தகைமை பெற்ற கணக்காய்வாளர்களின் நிரலொன்றை எல்லா உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளுக்கும் அனுப்புதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் அனுப்பப்பட்ட நிரலிலிருந்து அதன் கணக்குகளைக் கணக்காய்வு செய்யும் நோக்கத்துக்காகக் கணக்காய்வாளர்களைத் தெரிவு செய்வது அத்தகைய உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள் எல்லாவற்றினதும் கடமையாதல் வேண்டும்.

22. முதன்மைச் சட்டவாக்கத்தின் 39 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "கணக்காய்வு செய்வதற்கென, தகைமை பெற்ற கணக்காய்வாளர் ஒருவரை ஆண்டு தோறும் நியமித்தல் வேண்டும்." என்ற சொற்களுக்குப் பதிலாக "கணக்காய்வு செய்வதற்கென, 38அ என்னும் பிரிவின் கீழ் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரினால் வழங்கப்பட்ட நிரலிலிருந்து தகைமை பெற்ற கணக்காய்வாளர் ஒருவரை ஆண்டு தோறும் நியமித்தல் வேண்டும்" என்ற சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவை உட்புகுத்துவதன் மூலமும் :-

"(3அ) மூன்றாம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர், அவ்வுட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட அறிக்கையைப் பெற்றதன்மேல் கணக்காய்வாளர்களைப் பின்வருமாறு செய்யுமாறு கோரலாம் :-

(அ) கணக்காய்வு தொடர்பாகப் பணச்சபை அவசியமெனக் கருதுகின்றவாறான அத்தகைய மேலதிகத் தகவலைச் சமர்ப்பித்தல்;

(ஆ) வங்கித் தொழிலினதும் அலுவல்களினதும் கணக்காய்வு நோக்கெல்லையை விரிவுபடுத்தல் அல்லது நீடித்தல்;

(இ) தமக்குத் தேவைப்படும் அத்தகைய வேறு பரிசோதனையை நிறைவேற்றுதல் அல்லது குறிப்பிட்ட ஒரு கருமம் தொடர்பிலான ஏதேனும் நடவடிக்கை முறையை உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிக்கு விதந்துரைத்தல்; அத்துடன்

(ஈ) பந்திகள் (ஆ) (இ) என்பனவற்றில் குறிப்பீடு செய்யப்பட்ட கருமங்களுள் எவற்றின் மீதும் ஓர் அறிக்கையைச் சமர்ப்பித்தல் ;

அத்துடன் அத்தகைய மேலதிகக் கணக்காய்வுக்கான அல்லது அத்தகைய வேறு வேலைக்கான செலவுத்தொகை மத்திய வங்கியினால் ஈடு செய்யப்படுதல் வேண்டும்.

23. முதன்மைச் சட்டவாக்கத்தின் 42 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :-

"(1) ஆள் எவரும் -

(அ) இலங்கையில் வலுவிலுள்ள ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் சித்த சுவாதீனமற்றவராகக் காணப்பட்டிருப்பாரெனின் அல்லது வெளிப்படுத்தப்பட்டிருப்பாரெனின் ; அல்லது

(ஆ) அவர், இலங்கையிலுள்ள அல்லது வேறு ஏதேனும் நாட்டிலுள்ள சட்டத்தின்கீழ் கடனிறுக்க வகையற்ற ஒருவர் அல்லது வங்கி முறிந்த ஒருவர் என வெளிப்படுத்தப்பட்டிருப்பதுடன் பொறுப்பு விடுவிக்கப்படாத கடனிறுக்க வகையற்றவரான அல்லது வங்கி முறிந்தவரான ஆளொருவராக இருப்பாரெனின் அல்லது

(இ) ஒழுக்கக்கேட்டை உட்படுத்துவதும் மறியற்றண்டனையினால் தண்டிக்கப்படற்பாலதுமான தவறொன்றுக்குக் குற்றத் தீர்ப்பளிக்கப் பட்டிருப்பாரெனின் ; அல்லது

(ஈ) வேறேதேனும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் ஊழியரொருவராக அல்லது பணிப்பாளரொருவராக அல்லது வங்கியின் (பிரதான நிறைவேற்றலுவலர் அல்லாத) ஊழியரொருவராக இருப்பாரெனின் ;

உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியில் பணிப்பாளர் ஒருவராக நியமிக்கப்படுதலோ அல்லது தேர்ந்தெடுக்கப்படுதலோ ஆகாது;" அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியை நீக்கிவிடுவதன் மூலமும்.

24. முதன்மைச் சட்டவாக்கத்தின் 43 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :-

"உரிமமளிக்கப்பட்ட ஒரு வர்த்தக வங்கியின் செயலாளர்.

43. உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்று 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் 176 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கம்பனியொன்றின் செயலாளருக்காக விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய தகைமைகளைக் கொண்ட ஆளொருவரை அதன் செயலாளராக நியமித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆள் அத்தகைய உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் ஊழியரொருவராக ஏலவே இருந்தாலொழிய அவ்வங்கியின் ஊழியராக வருதலும் வேண்டும்; அத்துடன் அத்தகைய ஆள் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் செயலாளராகத் தொடர்ந்து தொழிலுக்கமர்த்தப்படும் காலம்வரை வேறேதேனும் நிறுவனத்தின் ஊழியராக வருதலாகாது".

25. முதன்மைச் சட்டவாக்கத்தின் 46 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :-

"(இ) அத்தகைய உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் ஒப்புரவு மூலதனம், ஒதுக்குகள், வைப்புகள் என்பனவற்றையும் வேறு இயைபான விடயங்களையும் கவனத்திற்கொண்டு, அத்தகைய வங்கியினால் -

(i) ஏதேனும் ஒரு கம்பெனிக்கு, பகிரங்கக் கூட்டுத்தாபனத்துக்கு, குழுமத்துக்கு, ஆட்களின் அல்லது தனியாட்களின் கழகத்துக்கு;

(ii) கூட்டு மொத்தத்தில் -

(அ) தனியாளொருவருக்கு, அவரது மிக நெருங்கிய உறவினர்களுக்கு, அல்லது அவர் கணிசமான அக்கறைகொண்டுள்ள ஒரு கம்பெனிக்கு அல்லது குழுமத்துக்கு ;

(ஆ) ஒரு கம்பெனிக்கும் அத்துடன் பின்வருவனவற்றுள் ஒன்றிற்கும் அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றிற்கும்;

(அஅ) அதன் துணைநிலை நிறுவனங்களுக்கு ;

(ஆஆ) அதன் வைத்திருக்கைக் கம்பெனிக்கு ;

(இஇ) அதன் இணைப்புக் கம்பெனிக்கு ;

(ஈஈ) அதன் வைத்திருக்கைக் கம்பெனியின் துணைநிலை நிறுவனத்துக்கு ; அல்லது

(உஉ) அத்தகைய கம்பெனி, அல்லது அதன் துணைநிலை நிறுவனம், அல்லது அதன் வைத்திருக்கைக் கம்பெனி அல்லது அதன் வைத்திருக்கைக் கம்பெனியின் துணைநிலை நிறுவனம் கணிசமான அக்கறை கொண்டிருப்பதான கம்பெனியொன்றுக்கு,

அளிக்கப்படக்கூடிய கடனுதவியின் உச்சத்தொகை.

(2) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் :-

"இவ்வுட்பிரிவின் நோக்கத்துக்காக, ஒரு கம்பெனியின் பங்குகளில் இருபது சத வீதத்துக்குக் குறையாதவையும் ஐம்பது சதவீதத்திற்கு மேற்படாதவையும் இன்னொரு கம்பெனியினால் வைத்திருக்கப்படும் இடத்து, முன்னைய கம்பெனி அந்த மற்றையக் கம்பெனியின் "இணைப்புக் கம்பெனி" ஒன்றாகக் கருதப்படுகின்றது.'

26. முதன்மைச் சட்டவாக்கத்தின் 46 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், இது அச்சட்டவாக்கத்தின் 46 அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :

"அறவிட முடியா ஐயத் தனிசுகளுக்காகப் பொதுவானவையும் குறிப்பிட்டவையுமான ஏற்பாட்டுத் தேவைப்பாடுகளை விதித்தல்.

46அ. பண்ச்சபையானது, அறவிடமுடியா ஐயக் கடன்கள் தொடர்பாகப் பொதுவானவையும் குறிப்பிடப்பட்டவையுமான ஏற்பாடுகள், உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளினால் செய்யப்படுவதனைத் தேவைப்படுத்துவதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் அவ்வாறு விதிக்கப்பட்ட அத்தகைய தேவைப்பாட்டுக்கு இசைந்தொழுகுவது எல்லா உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளினதும் கடமையாதலும் வேண்டும்."

27. முதன்மைச் சட்டவாக்கத்தின் 47 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

(1) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவில் "எடுக்கப்படல் வேண்டும்" என்ற சொற்களுக்குப் பதிலாக "எடுக்கப்படல் வேண்டும்:

ஆயின், இப்பிரிவின் ஏற்பாடுகள், கடனுதவியொன்று அளிக்கப்பட்ட நேரத்தில் வங்கியின் ஊழியராகவிருந்தவரும், கடனுதவியானது அத்தகைய வங்கியின் ஊழியர்களுக்கு ஏற்புடையதான ஒரு திட்டத்தின் கீழ் அளிக்கப்பட்டவருமான பணிப்பாளருக்கு ஏற்புடையனவாதலாகாது." என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) அப்பிரிவின் (11) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும் -

"(11அ) ஏதேனும் நிதியாண்டின்போது பணிப்பாளரொருவருக்கு அல்லது அத்தகைய பணிப்பாளரின் மிக நெருங்கிய உறவினரொருவருக்கு அல்லது அத்தகைய பணிப்பாளர் கணிசமான அக்கறை கொண்டுள்ள ஏதேனும் தாபனத்திற்கு இப்பிரிவின்கீழ் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றினால் ஏதேனும் கடனுதவி அளிக்கப்படுமிடத்து, அத்தகைய கடனுதவி அவ்வாண்டிற்கான கணக்குகளில் வெளிக்காட்டப்படுதல் வேண்டும்.

இப்பிரிவின் கீழான தேவைப்பாடு 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தினால் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினால் விதிக்கப்பட்ட ஏதேனும் ஏற்பாட்டுக்கு மேலதிகமானதாகவிருத்தல் வேண்டும்; அதனை மதிப்புக் குறைப்பதாக இருத்தலாகாது."

28. முதன்மைச் சட்டவாக்கத்தின் 48 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், இது அச்சட்டவாக்கத்தின் 48 அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :-

"அசைவற்ற ஆதனத்தைக் கொள்வனவு செய்தலும், கொள்ளுதலும்

48அ. உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்று பணச்சபையினால் காலத்துக்குக்காலம் தீர்மானிக்கப்படக்கூடியவாறாக அதன் மூலதன நிதிகளின் அத்தகைய நூற்றுவீதத்தைக் கூட்டுமொத்தத்தில் விஞ்சுகின்றதும் அதன் வங்கித்தொழிலை நடாத்தும் நோக்கத்துக்காக அல்லது அதன் பணியாட்டொகுதியினருக்கு வீடமைத்துக் கொடுக்கும் அல்லது வாழ்வசதிகளை ஏற்பாடு செய்யும் நோக்கத்துக்காக நியாயமாகத் தேவைப்பட்டவை தவிர்ந்ததுமான ஏதேனும் அசைவற்ற ஆதனத்தை அல்லது அதிலுள்ள ஏதேனும் உரிமையைக் கொள்வனவு செய்தலாகாது அல்லது வேறெந்த வகையிலும் கொள்ளுதலாகாது ;

ஆயின், அந்த மட்டுப்பாடு, கடனொன்றுக்கான பிணைப்பொறுப்பாக ஏதேனும் அசைவற்ற ஆதனத்தை ஏற்றுக்கொள்வதனையும் கடனைச் செலுத்தத்தவறும் பட்சத்தில் ஆகக்கிட்டிய ஒரு சந்தர்ப்பத்தில் அது விற்கப்படும்வரை அத்தகைய அசைவற்ற ஆதனத்தை வைத்திருப்பதிலிருந்து வங்கியைத் தடுத்தலாகாது."

29. முதன்மைச் சட்டவாக்கத்தின் 49 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், இது அச்சட்டவாக்கத்தின் 49 அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும். :-

"கடனிறுக்க வகையின்மையின் விடயத்தில் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்குத் தெரிவித்தல்

49அ. ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி தனது கடப்பாடுகளை ஈடுசெய்ய இயலாதுள்ளதென அல்லது ஈடுசெய்ய இயலாதுள்ள சாத்தியங்கொண்டுள்ளதென அல்லது கடனிறுக்க வகையற்றதாக வரவுள்ளதென அல்லது வைப்பீட்டாளர்களுக்கும் மற்றும் வேறு கடன் கொடுத்தோருக்கும் வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளை இடைநிறுத்தவுள்ளதெனக் கருதுகின்றவிடத்து, அந்நிகழ்வு பற்றி வங்கியானது உடனடியாக வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்குத் தெரிவித்தல் வேண்டும்."

30. முதன்மைச் சட்டவாக்கத்தின் பாகம் VII என்பதை உடனடுத்துப் பின்வரும் புதிய பாகம் இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், இது அச்சட்டவாக்கத்தின் பாகம் VII அ என்பதாகப் பயனுறுதலும் வேண்டும் :-

"பாகம் VIIஅ

உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றின் வங்கித் தொழிலை உரித்தாக்குதல்

ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் வங்கித் தொழிலை உரித்தாக்கும் கட்டளை

49ஆ. (1) வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரினால் செய்யப்பட்ட அறிக்கையொன்றின் மீது, பணச்சபையானது, ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி இலங்கையில் வங்கித் தொழிலைக் கொண்டுநடாத்த இயலாதுள்ளதெனவும், அல்லது அதன் வைப்பீட்டாளர்களினதும் (இச்சட்டத்தின் இப்பாகத்தில் "செலுத்தத் தவறும் வங்கி" எனக் குறிப்பீடு செய்யப்படுவதான) அத்தகைய உரிமமளிக்கப்பட்ட வங்கியுடன் கொடுக்கல் வாங்கல்களை நடாத்தியுள்ள வேறு ஆட்களினதும்

கோரிக்கைகளை ஈடுசெய்ய இயலாதுள்ளதெனவும் அத்துடன் அது தொழிலில் தொடர்ந்திருப்பது பண முறைமைக்கும் வங்கித்தொழில் முறைமைக்கும் தேசிய பொருளாதாரத்துக்கு பாரதூரமான பொருளாதார நட்டத்தை உட்படுத்தும் சாத்தியங் கொண்டதெனவும் அவற்றைப் பங்கமான முறையில் பாதிக்கக்கூடிய சாத்தியங் கொண்டதெனவும் திருப்திப்படுமிடத்து பணச்சபையானது, வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளில் முரணாக எது எவ்விதமிருப்பினும் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம், அச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் எத்தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கு அது அதிகாரமளிக்கப்பட்டுள்ளதோ அத்தொழிலாகவுள்ளதும் அல்லது பணச் சபை தீர்மானிக்கக் கூடியவாறாக அதன் அத்தகைய பாகமாகவுள்ளதும் செலுத்தத்தவறும் வங்கியினால் கொண்டு நடத்தப்படுவதான தொழிலை, அத்தகைய உப உரித்தாக்குதலுக்குச் சம்மதிக்கின்ற (இச்சட்டத்தின் இப்பாகத்தில் "கொள்ளும் வங்கி" எனக் குறிப்பீடு செய்யப்படுவதான) இன்னுமோர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிக்கு உரித்தாக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கத்துக்காக "செலுத்தத்தவறும் வங்கியினால் கொண்டு நடாத்தப்படும் தொழில்" என்பது பின்வருவனவற்றையும் உள்ளடக்கும் :-

(அ) இயைபான திகதிக்கு முற்போந்த நாளுக்கு செலுத்தத் தவறும் வங்கியினால் சொந்தமான வைத்திருக்கப்பட்ட அசைவுள்ள, அசைவற்ற ஆதனம் எல்லாம் (காசு மீதிகள், ஒதுக்கு நிதிகள், முதலீடுகள், அத்துடன் வைப்புக்கள் உட்பட) :

(ஆ) இயைபான திகதிக்கு முற்போந்த நாளன்று செலுத்தத் தவறும் வங்கியினால் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட ஏதேனும் ஆதனத்தில் அல்லது அதிலிருந்து எழுகின்ற உரிமைகள், தத்துவங்கள், சிறப்புரிமைகள், அதிகாரங்கள் அத்துடன் அக்கறைகள் எல்லாம் ;

(இ) இயைபான திகதிக்கு முற்போந்த நாளன்று செலுத்தத்தவறும் வங்கிக்குள்ள பொறுப்புகள் எல்லாம் ; அத்துடன்

(ஈ) இலங்கையில் அத்தகைய பொறுப்பு முயற்சிகள் தொடர்பான அல்லது அதனோடிணைந்த புத்தகங்கள், கணக்குகள் அத்துடன் ஆவணங்கள் எல்லாம்,

49இ. நாற்பத்தொன்பது ஆ என்பதன் கீழான கட்டளையெதுவும், பின்வருமாறு செய்யப்பட்டாலொழிய பணச்சபையினால் ஆக்கப்படலாகாது :-

(அ) உத்தேசிக்கப்பட்ட கொள்ளும் வங்கி, உரித்தாக்கப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்ட செலுத்தத்தவறும் வங்கியின் தொழிலைத் தகுதிவாய்ந்தவொரு முறையில் கொண்டு நடாத்துவதற்கும், அத்துடன் உரித்தாக்கப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்ட தொழில் குறித்து அல்லது அது தொடர்பாகச் செலுத்தத் தவறும் வங்கிக்கு அதன் வைப்பீட்டாளர்கள்பாலும் கடன் தருநர்பாலும் உள்ள பொறுப்புக்களை ஈடுசெய்வதற்கும் ஆற்றலுடையதெனப் பணச்சபை திருப்திப்பட்டாலொழியவும் ;

(ஆ) உத்தேசிக்கப்பட்ட கொள்ளும் வங்கி -

(i) உரித்தாக்கப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்ட தொழில் முறிந்த அல்லது அது தொடர்பாகச் செலுத்தத் தவறும் வங்கியின் ஏலவேயுள்ள சொத்துக்கள் எவையும் பயன்படுத்தப்பட வேண்டிய முறையும் அத்துடன் உரித்தாக்கப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்ட தொழில் குறித்து அல்லது அது தொடர்பாகச் செலுத்தத்தவறும் வங்கியின் பொறுப்புக்கள் எவையும் ஈடுசெய்யப்பட வேண்டிய முறையும் ;

(ii) இறைமை கொண்ட அரசாங்கமொன்றுக்குச் செலுத்தத் தவறும் வங்கியிடமிருந்து வருமதியாகவுள்ள கொடுப்பனவுகள் எவையும் செய்யப்பட வேண்டிய முறையும் தொடர்பாகப் பணச் சபையினால் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய நியதி நிபந்தனைகளுக்கு இணங்கியொழுகுவதற்கு எழுத்தில் உடன்பட்டாலொழியவும்.

ஒரு கட்டளையின் பயன்

49ஈ. செலுத்தத்தவறும் வங்கியின் தொழிலை அல்லது அதன் பாகத்தைக் கொள்ளும் வங்கிக்கு உரித்தாக்குகின்ற பிரிவு 49 ஆ என்பதன் கீழான கட்டளை கசெற்றில் வெளியிடப்பட்ட திகதியிலிருந்து (அது இச்சட்டத்தின் இப்பாகத்தில் "இயைபான திகதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) –

(அ) கொள்ளும் வங்கி, செலுத்தத்தவறும் வங்கியின் உரித்தாக்கப்பட்ட தொழிலைக் கட்டுப்படுத்தலும் உடைமை கொண்டிருத்தலும் வேண்டுமென்பதுடன், அத்தகைய செலுத்தத் தவறும் வங்கியின் உரித்தாக்கப்பட்ட தொழிலின் கைமாற்றம் பெறுபவராக வருதலும் வேண்டும் ;

(ஆ) கொள்ளும் வங்கிக்கு உரித்தாக்கப்பட்ட தொழிலைக் கொண்டு நடாத்துவதற்குச் செலுத்தத்தவறும் வங்கிக்கு இச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட உரிமம், கொள்ளும் வங்கிக்கு உரித்தாக்கப்பட்டிராத அதன் தொழிலின் அத்தகைய பாகத்தைச் செலுத்தத் தவறும் வங்கி கொண்டு நடாத்துவதனை இயலச் செய்வதற்கு அவசியமான அளவுக்குத் திரிவுபடுதல் வேண்டும்;

(இ) கொள்ளும் வங்கி, 49இ என்னும் பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழ் அத்தகைய வங்கியினால் உடன்பட்டுக் கொள்ளப்பட்டவாறான அத்தகைய நியதி நிபந்தனைகளுக்கும் இச்சட்டத்தின்கீழ் அத்தகைய வங்கிக்குப் பணச் சபை விடுக்கக்கூடியவாறான அத்தகைய வேறு பணிப்புகளுக்கும் இணங்கியொழுகுதல் வேண்டும்; அத்துடன்

(ஈ) வங்கித் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்குச் செலுத்தத் தவறும் வங்கிக்கு இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட உரிமம், அத்தகைய வங்கியின் உள்ளூர் அத்துடன் கரை கடந்த வங்கித் தொழில், கொள்ளும் வங்கிக்கு உரித்தாக்கப்படுகின்றவிடத்து, இல்லாதாக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

49உ. இச்சட்டத்தில் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்விதமிருப்பினும், செலுத்தத்தவறும் வங்கியின் வெளிநாட்டு நாணய வைப்புக்கள், கொள்ளும் வங்கிக்குக் கிடைக்கக்கூடியனவாக்கப்படாத விடயத்தில், செலுத்தத்தவறும் வங்கியின் எவரேனும் வெளிநாட்டு நாணய வைப்பீட்டாளரின் கோரிக்கைகளை ஈடுசெய்வதற்குக் கொள்ளும் வங்கிக்குள்ள பொறுப்பு, செலுத்தத்தவறும் வங்கியின் தொழிலைப் பரிசீலனை செய்வதன்மேல் பணச்சபையினால் வகுத்தமைக்கப்படக்கூடியவாறாக, அத்தகைய வைப்பீட்டாளர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்கான ஏதேனும் திட்டத்தின் நியதி நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளுவதற்கு உடன்படுகின்றவர்களான அத்தகைய வைப்பீட்டாளர்கள் தொடர்பில் மட்டுமே அத்துடன் அத்தகைய திட்டத்தில் தரப்பட்டுள்ள அளவுவரை மட்டுமே இருத்தல் வேண்டும்;

ஆயின், எவ்வாறாயினும், கொள்ளும் வங்கிக்கு அத்தகைய வெளிநாட்டு நாணய வைப்புக்கள் கிடைக்கக் கூடியனவாக்கப்படும் பட்சத்தில் அல்லது கொள்ளும் வங்கி, செலுத்தத் தவறும் வங்கியின் வெளிநாட்டிலுள்ள அத்தகைய நாணய வைப்புக்களை அல்லது ஏனைய சொத்துக்களை அறவிடும் பட்சத்தில் பணச் சபையானது அத்தகைய வெளிநாட்டு நாணய வைப்பீட்டாளர்களுக்கு அவ்வாறு கிடைக்கக் கூடியனவாக்கப்பட்ட வைப்புக்களின் அல்லது அவ்வாறு அறவிடப்பட்ட வைப்புக்களினதும் ஏனைய சொத்துக்களினதும் கொடுப்பனவு பற்றிக் கொள்ளும் வங்கிக்குப் பணிப்புக்கள் விடுப்பதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டுமென்பதுடன், கொள்ளும் வங்கி அத்தகைய பணிப்புகளுக்கு இணங்கியொழுகுதலும் வேண்டும்.

49ஊ. (1) இயைபான திகதிக்கு நேர்முற்போந்த நாளன்று செலுத்தத்தவறும் வங்கியின் உரித்தாக்கப்பட்ட தொழிலினது பெறுமதியை நிச்சயிக்கும் நோக்கத்திற்காக வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர், பணச்சபையின் அங்கீகாரத்துடன் தம்மால் நியமிக்கப்பட்ட தகைமைபெற்ற கணக்காய்வாளர் ஒருவரைக் கொண்டு அத்தகைய உரித்தாக்கப்பட்ட தொழிலின் கணக்காய்வொன்றை நடாத்துவித்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட கணக்காய்வாளர் அவரது நியமனத் திகதியிலிருந்து மூன்று மாதங்களினுள் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கு அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன், வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர் அத்தகைய அறிக்கையைப் பணச்சபைக்கு அளித்தலும் வேண்டும்: பணச்சபையானது அறிக்கையைச் சீர்தூக்கிப் பார்த்து, அவசியமாயின் அது அவசியமெனக் கருதக்கூடியவாறான அத்தகைய ஏதேனும் மேலதிகத் தகவலை, அல்லது விளக்கங்களைக் கொடுத்துதவுமாறு கணக்காய்வாளரைத் தேவைப்படுத்துதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட கணக்காய்வாளர் செலுத்தத்தவறும் வங்கியின் கணக்குகளைப் பரிசோதனை செய்வதுடன் ஐந்தொகையின் சரிபிழையை நிச்சயித்து பின்வருவனவற்றைக் கூறுகின்ற அறிக்கையொன்றைக் கொடுத்துதவுதல் வேண்டும். :-

(அ) அவருக்குத் தேவைப்பட்ட எல்லாத் தகவலையும் விளக்கங்களையும் அவர் பெற்றிருந்தாரா பெற்றிருக்கவில்லையா என்பது; அத்துடன்

(ஆ) அறிக்கையிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஐந்தொகையும் கணக்குகளும், செலுத்தத்தவறு வங்கியினது அலுவல்களின் உண்மையானதும் நியாயமானதுமான கருத்தை வெளிக்காட்டும் வகையில் தகுந்த முறையில் தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பது; அத்துடன்

(இ) உரித்தாக்கப்பட்ட தொழிலின் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் பெறுமதி.

(4) பணச்சபையானது கணக்காய்வாளரின் அறிக்கையைத் சீர்தூக்கிப் பார்த்தபின்னர், உரித்தாக்கப்பட்ட தொழிலின் பெறுமதியைச் செலுத்தத்தவறிய வங்கிக்கு அல்லது விடயத்திற்கேற்ப அதன் ஒழிப்போருக்கு அல்லது வழியுரிமையாளர்களுக்கு, அது குறித்துரைக்கக் கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய காலத்தினுள்ளும் செலுத்துமாறு கொள்ளும் வங்கியைப் பணித்தல் வேண்டும்.

(5) நான்காம் உட்பிரிவின்கீழான ஒரு பணிப்பினைப் பின்பற்றிச் செலுத்தத்தவறும் வங்கிக்குச் செய்யப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட கொடுப்பனவும் (1) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட கணக்காய்வாளருக்குச் செய்யப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட எல்லாக் கொடுப்பனவுகளும், பணச்சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதி நிபந்தனைக்கிணங்கக் கொள்ளும் வங்கியினாற் செய்யப்படுதல் வேண்டும்.

பேணல் ஏற்பாடுகள்

49எ. இயைபான திகதியிலிருந்து -

(அ) செலுத்தத்தவறும் வங்கியின் உரித்தாக்கப்பட்ட தொழில் பற்றியவையும், அல்லது அது தொடர்பானவையும், இயைபான திகதிக்கு நேர் முற்போந்த நாளன்று உள்ளவையும் அல்லது பயனுள்ளவையும், செலுத்தத்தவறும் வங்கி அதற்கு ஒரு திறத்தவராக உள்ளவையும் அல்லது செலுத்தத்தவறும் வங்கிக்குச் சாதகமாக உள்ளவையுமான எல்லா ஒப்பந்தங்களும், உறுதிகளும், முறிகளும், உடன்படிக்கைகளும், அற்றோணித் தத்துவங்களும், சட்டப் பிரதிநிதித்துவ வழங்கல்களும், அத்துடன்

எத்தகைய தன்மையினவுமான மற்றும் ஏனைய சாதனங்களும், கொள்ளும் வங்கியினால் விடயத்திற்கேற்ப செய்துகொள்ளப்பட்ட அல்லது வழங்கப்பட்ட ஒப்பந்தங்கள், உறுதிகள், முறிகள், உடன்படிக்கைகள், அற்றோணித் தத்துவங்கள், சட்டப் பிரதிநிதித்துவ வழங்கல்கள் அல்லது மற்றும்வேறு சாதனங்கள் என்பனவாக இயைபான திகதியிலிருந்து கருதப்படுதல் வேண்டும்;

(ஆ) செலுத்தத்தவறும் வங்கியினால் அல்லது அதற்கெதிராகக் தொடுக்கப்பட்டவையும், செலுத்தத்தவறும் வங்கியின் உரித்தாக்கப்பட்ட தொழில் பற்றியவையும் அல்லது அதுதொடர்பானவையும், இயைபான திகதிக்கு நேர் முற்போந்த நாளன்று முடிவுறாதுள்ளவையும் எத்தகைய தன்மையினவையுமான எல்லா வழக்குகளும், வழக்கு நடவடிக்கைகளும், கொள்ளும் வங்கியினால் அல்லது அதற்கெதிராகத் தொடுக்கப்பட்ட வழக்குகளாகவும் வழக்கு நடவடிக்கைகளாகவும் இருப்பனவாக இயைபான திகதியிலிருந்து கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்கத் தொடர்ந்து நடாத்தப்படலாம் அல்லது குற்ற வழக்குத் தொடுக்கப்படலாம்;

(இ) இயைபான திகதிக்கு நேர்முற்போந்த நாளன்று விடயத்திற்கேற்ப கொள்ளும் வங்கியில் ஊழியம் முனையப்படாதவர்களும் உரித்தாக்கப்பட்ட செலுத்தத்தவறும் வங்கியினது தொழிலின் அத்தகைய பாகத்துடன் சம்பந்தப்பட்டவர்களுமான அத்தகைய வங்கியின் அத்தகைய எல்லா அலுவலர்களும் சேவையாளர்களும் அல்லது செலுத்தத்தவறும் வங்கியின் முழுத்தொழிலும் உரித்தாக்கப்பட்டுள்ளவிடத்து, வங்கியின் எல்லா அலுவலர்களும் சேவையாளர்களும் நட்டஈட்டுக் கொடுப்பனவுக்கு உரித்துடையவர்களாதல் வேண்டும்.

49ஏ. செலுத்தத்தவறும் வங்கியின் எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர் நட்டஈடு செலுத்தப்படுவதற்கு உரித்துடையவராகவிருக்குமிடத்து, கொள்ளும் வங்கி, தொழில் ஆணையாளரின் கலந்தாலோசனையுடன் செலுத்தப்படவேண்டிய நட்டஈட்டுத் தொகையைத் தீர்மானித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய தீர்மானம், வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் அத்தகைய அலுவலருக்கு அல்லது சேவையாளருக்கு இருக்கக்கூடிய உரிமையைப் பாதிப்பதாகக் கருதப்படுதலுமாகாது.

49ஒ. இப்பாகத்தின் ஏற்பாட்டை அல்லது இதன்கீழ் விதிக்கப்பட்ட நியதியை அல்லது நிபந்தனையை மீறுகின்ற அல்லது அதற்கு இணங்கியொழுகத் தவறகின்ற எவரேனுமாள் இச்சட்டத்தின் கீழான தவறுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

49ஓ. பன்னிரண்டாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளில் உள்ளதெதுவும், செலுத்தத்தவறும் வங்கியின் வங்கித் தொழிலை அல்லது அதன் பாகத்தைக் கொள்ளும் வங்கிக்கு உரித்தாக்குதல் தொடர்பாக ஏற்புடையதாதலாகாது.

49ஔ. இச்சட்டத்தின் இப்பாகத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய –

"உரித்தாக்கப்பட்ட தொழிலின் பெறுமதி" என்பது 49ஆ என்ற பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒரு கட்டளையின் பயனைக்கொண்டு கொள்ளும் வங்கிக்கு உரித்தாக்கப்பட்டனவான செலுத்தத்தவறும் வங்கியின் பொறுப்புக்களைக் கழித்து 49ஊ என்ற பிரிவின்கீழ் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட கணக்காய்வாளரினால் தீர்மானிக்கப்பட்டவாறான் அறிவிடமுடியாச் சொத்துக்கள் நீங்கலாக அத்தகைய கட்டளையின் பயனைக்கொண்டு கொள்ளும் வங்கிக்கு உரித்தாக்கப்பட்டனவான செலுத்தத்தவறும் வங்கியின் சொத்துக்களினது பெறுமதி என்று பொருளாகும்;

ஒரு கொள்ளும் வங்கி அல்லது செலுத்தத்தவறும் வங்கி தொடர்பாக "உரித்தாக்கப்பட்ட தொழில்" என்பது, 49ஆ என்னும் பிரிவின்கீழான கட்டளையினால் அத்தகைய கொள்ளும் வங்கிக்கு உரித்தாக்கப்பட்டுள்ளதான செலுத்தத்தவறும் வங்கியின் வங்கித்தொழில் அல்லது அதன் பாகம் என்று பொருளாகும்.".

31. முதன்மைச் சட்டவாக்கத்தின் IX ஆம் பாகத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய பாகம் இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், இது அச்சட்வாக்கத்தின் IX அ என்னும் பாகமாகப் பயனுறுதலும் வேண்டும்.

"பாகம் IX அ

உரிமம்பெற்ற விசேட வங்கிகள்

76அ. (1) கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சரினால் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய திகதியிலும், அதன்பின்னரும், பணவைப்புக்களை ஏற்று, அத்தகைய பணத்தை முதலீடு செய்யும் அத்துடன் கடன் வழங்கும் தொழிலானது, ஐம்பது மில்லியன் ரூபாவுக்குக் குறையாதவொரு தொகையிலான ஒப்புரவு மூலதனத்தைக் கொண்ட ஒரு கம்பெனியால் தவிரவும், இச்சட்டத்தின் இப்பாகத்தின் கீழ் அத்தகைய நோக்கத்துக்கெனப் பணச்சபையினால் வழங்கப்படும் உரிமமொன்றின் அதிகாரத்தின்கீழ் தவிரவும் கொண்டு நடாத்தப்படுதல் ஆகாது;

ஆயின், எவ்வாறாயினும், 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க, நிதிக் கம்பெனிகள் சட்டத்தின்கீழ் நிதிக் கம்பெனியாகப் பதிவு செய்யப்பட்ட ஒரு கம்பெனி, தேசிய அரசுப் பேரவையினது 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு கூட்டறவுச் சங்கம் (401 ஆம் அத்தியாயமான) தேசிய வீடமைப்புச் சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்ட ஒரு கட்டிடச் சங்கம் தொடர்பிலும், அத்துடன் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்றாக உரிமமளிக்கப்பட்ட ஒரு கம்பெனிக்கும், முக்கியமாக, இலாபமீட்டும் நோக்கத்துக்காகத் தாபிக்கப்பட்ட ஓர் ஒழுங்கமைப்பு அல்லாததும் ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்டதும் அல்லது பதிவு செய்யப்பட்டதுமான ஏதேனும் ஒழுங்கமைப்புக்கு உரிமமொன்றைப் பெறுவதற்கான தேவைப்பாடு ஏற்புடைத்தாதல் ஆகாது; ஆயின், அத்தகைய ஒழுங்கமைப்பு அதன் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்களிடமிருந்து மட்டுமே வைப்புக்களை ஏற்பதாகவும், அத்தகைய வைப்புக்களை ஏற்பதற்கும், அவ்வாறு ஏற்றுக்கொள்ளப்பட்ட அத்தகைய பணங்களை முதலீடு செய்வதற்கு அல்லது கடனாக வழங்குவதற்கு பணச் சபையிடமிருந்து அனுமதி பெற்றதாகவும் இருக்க வேண்டும்.

(2) அத்தகைய கம்பெனி இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட ஒரு கம்பெனியாவிருக்குமிடத்து, அத்தகைய கம்பெனி 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் XIII ஆம் பாகத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதாக இருந்தாலொழிய, இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் உரிமம் எதுவும் வழங்கப்படுதல் ஆகாது.

(3) இப்பிரிவின் (1) ஆம், (2) ஆம் உட்பிரிவினதும், 76ஆ என்னும் பிரிவினதும் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், இச்சட்டத்துக்கான III ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட அனைத்து நிறுவனங்களுக்கும், (1) ஆம் உட்பிரிவின்கீழ் அமைச்சரினால் தீர்மானிக்கப்படும் திகதியன்று அல்லது அதன்பின்னர் இச்சட்டத்தின் இப்பாகத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க உரிமமொன்று வழங்கப்படுதல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவுக்கு முரணாக தொழில் கொண்டு நடாத்தும் ஏதேனும் கம்பெனி இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(5) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, "கம்பெனி" என்பது 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் 449 ஆம் பிரிவில் வரைவிலக்கணம் கூறப்பட்டவாறான அதே பொருளைக் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன், இலங்கைக்கு வெளியே முறையாகக் கூட்டிணைக்கப்பட்ட ஒரு கம்பெனியை, அல்லது ஏதேனும் வெளிநாட்டில் ஏதேனும் நியதிச்சட்டத்தை அரச பட்டயத்தை அல்லது உரிமையோலைகளைப் பின்பற்றி அமைக்கப்பட்ட ஒரு கூட்டிணைப்புக் குழுவையும், ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஒரு கூட்டிணைப்புக் குழுவையும் உள்ளடக்கும். அத்துடன் இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட ஒரு தனியார் கம்பெனியை உள்ளடக்குதல் ஆகாது; அத்துடன்

"ஒப்புரவு மூலதனம்" என்பது, இச்சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் உள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

76ஆ. (1) பிரிவு 76அ என்பதன்கீழ் ஓர் உரிமத்துக்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும், விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் பணச்சபைக்குச் செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன், விண்ணப்பத்தில் எடுத்துக்கூறப்பட்ட விபரங்கள் விண்ணப்பக்காரரின் அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் உண்மையானவையும் செம்மையானவையும் என விண்ணப்பக்காரர் செய்யும் வெளிப்படுத்துகை ஒன்றை உள்ளடக்கியிருத்தலும் வேண்டும்.

(2) உரிமத்துக்கான ஒவ்வொரு விண்ணப்பமும் பின்வருவன இணைக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும் :-

(அ) கம்பெனியின் அமைப்பும் புறவிதியினதும், அமைப்பு அக விதியினதும், அல்லது கம்பெனியின் யாப்பினதும் அல்லது அது சம்பந்தப்பட்ட வேறு ஏதேனும் ஆவணத்தினதும் பிரதியொன்று;

(ஆ) இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட ஒரு கம்பெனியினால் அல்லது கூட்டிணைப்புக் குழுவினால் விண்ணப்பம் செய்யப்படும் விடயத்தில், இலங்கையில் அது தொழில் கொண்டு நடாத்தும்போது உறப்படும் அனைத்து கடப்பாடுகளையும் பொறுப்புக்களையும், மேவுவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய நிதிகளை மத்திய வங்கிகோரும்போது அத்தகைய கம்பெனி அல்லது கூட்டிணைப்புக் குழு ஏற்பாடு செய்தல் வேண்டும் என எடுத்துரைப்பதும், அதன் பணிப்பாளர் சபையின் தீர்மானமொன்றின்மூலம் ஆதாரப்படுத்துப்பட்டதுமான எழுத்திலான ஒரு பொறுப்பேற்பும், அத்தகைய கம்பெனி எந்நாட்டில் கூட்டிணைக்கப்பட்டதோ அந்நாட்டின் பண அதிகாரியிடமிருந்து பெறப்படும் பணச்சபையினால் தீர்மானிக்கப்படக்கூடிய அத்தகைய தகவல் அடங்கிய ஓர் அறிக்கையும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் விண்ணப்பமொன்று, கிடைக்கப்பெற்றதன்மீது பணச்சபை, அத்தகைய சபை அவசியமெனக் கருதுமிடத்து, அத்தகைய கம்பெனிக்கு உரிமமொன்று வழங்கப்படுதல் வேண்டுமா அல்லவா எனத் தீர்மானிப்பதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய வேறு ஆவணங்களை அல்லது விபரங்களை கொடுத்துதவுமாறு விண்ணப்பக்காரரைத் தேவைப்படுத்தலாம்.

(4) தமது அறிவுக்கு எட்டியவரையில் ஏதேனும் முக்கிய விபரத்தில் பொய்யானதாகவுள்ள அல்லது பிழைவழியுய்ப்பதான தகவல் அடங்கிய விண்ணப்பமொன்றையும் வேறு ஆவணங்களையும் இப்பிரிவின்கீழ் சமர்ப்பிப்பவரான எவரேனும் விண்ணப்பக்காரர், இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

76இ. (1) பிரிவு 76ஆ என்பதன்கீழ் விண்ணப்பமொன்று, கிடைக்கப்பெற்றதன்மீது, பணச்சபை, அத்தகைய விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்ட ஆவணங்களையும், விபரங்களையும் சீர்தூக்கிப் பார்த்து -

பயனுறுவதாதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய இல்லாதாக்கல் பற்றிய அறிவிப்பு கசெற்றில் வெளியிடப்படுதலும் வேண்டும்.

(5) மூன்றாம் உட்பிரிவின்கீழான ஏதேனும் இல்லாதாக்கல் தொடர்பிலான பணச்சபையின் முடிபினால் இன்னலுறும் ஆள் எவரும், அத்தகைய இல்லாதாக்கல் பற்றி சபையினால் அவருக்கு அறிவிக்கப்பட்டு பதினான்கு நாட்களுக்குள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் அத்தகைய முடிபுக்கு எதிராக மேன்முறையீடு செய்யலாம்.

(6) இப்பிரிவின்கீழான மேன்முறையீடுகள் சம்பந்தமாக அரசியலமைப்பின் 136 ஆம் உறுப்புரையின்கீழ் விதிகள் ஆக்கப்படுகின்றவரையில், மீளாய்வு என்ற வகையாக மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்குச் செய்யப்படும் விண்ணப்பங்கள் சம்பந்தமாக அந்த உறுப்புரையின்கீழ் ஆக்கப்படும் விதிகள், இப்பிரிவின்கீழ் செய்யப்படும் ஒவ்வொரு மேன்முறையீட்டிற்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(7) மேன்முறையீட்டு நீதிமன்றம், (5) ஆம் உட்பிரிவின்கீழ் அதற்குச் செய்யப்படும் மேன்முறையீடு ஒன்றில் அம்மேன்முறையீடு எம்முடிவுக்கு எதிராகச் செய்யப்படுகின்றதோ அம்முடிபை உறுதிப்படுத்தலாம், மீளாய்வு செய்யலாம், திரிவுபடுத்தலாம் அல்லது தள்ளிவைக்கலாம் என்பதுடன், நீதி நலன் தேவைப்படுத்தக்கூடியவாறான வேறு ஏதேனும் கட்டளையையும் ஆக்கலாம்.

(8) உரிமமொன்று இல்லாதாக்கப்படுகின்றவிடத்து, பணச்சபையானது, அத்தகைய உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியின் பெயரை, 76உ என்னும் பிரிவின்கீழ் பேணிவரப்படும் இடாப்பிலிருந்து அகற்றுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியை ஒடுக்குவதற்கான பணிப்புக்கள் உட்பட, அது அவசியமெனக் கருதக்கூடியவாறான அத்தகைய பணிப்புக்களை வழங்கவும் செய்யலாம்.

(9) உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியானது, கம்பெனியை ஒடுக்குவதற்கு (5) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட ஒரு பணிப்புக்கு, அத்தகைய கணிப்பு வழங்கப்பட்டு முப்பது நாட்களுக்குள் இணங்கியொழுகத் தவறுமிடத்து, பணச்சபையானது, உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியை ஒடுக்குவதற்கு வழக்குத் தொடுக்குமாறு வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரைத் தேவைப்படுத்தலாம் என்பதுடன், 76க என்னும் பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய ஒடுக்குதலுக்கு ஏற்புடையனவாதலும் வேண்டும்.

76எ. (1) உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியொன்று, எல்லா நேரங்களிலும் ஐம்பது மில்லியன் ரூபாவுக்குக் குறையாத ஒப்பரவு மூலதனமொன்றைப் பேணிவருதல் வேண்டும்.

(2) உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியொன்று, அதன் ஒப்பரவு மூலதனத்தை அல்லது நியதிச்சட்ட முறையான ஒதுக்குகளைப் பணச்சபையின் எழுத்திலான முன்னங்கீகாரத்துடன் தவிர, குறைத்தல் அல்லது கேடுறச் செய்தல் ஆகாது.

(3) இப்பிரிவின் நோக்கத்திற்காக –

(அ) "ஒப்புரவு மூலதனம்" இச்சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவிலுள்ள அதே கருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) "நியதிச்சட்ட முறையான ஒதுக்குகள்" என்பது, இச்சட்டத்தின் இப்பாகத்தின் கீழ் அதற்கு வழங்கப்படும் ஒரு பணிப்பைப்பற்றி உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியினால் பேணிவரப்படும் எவையேனும் வங்கியின் நிதிகள் எனப் பொருளாகும்.

76ஏ. இச்சட்டத்தின் V ஆம் பாகத்தின் ஏற்பாடுகள், "உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி" என்னும் சொல்லமைப்பு அப்பாகத்தில் காணப்படும் இடங்களிலெல்லாம் அதற்குப் பதிலாக, "உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கி" என்னும் சொல்லமைப்பு இடப்பட்டுள்ளது என்றாற்போன்று, உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கிகள் தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும்.

76ஐ. (1) வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும் பணச்சபையானது, உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கிகளின் அல்லது ஏதேனும் வகுதியினவான உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கிகளின் ஏதேனும் தொழில் அம்சம் நடாத்தப்படவேண்டியமுறை சம்பந்தமாக, குறிப்பாகப் பின்வருவன சம்பந்தமான அத்தகைய வங்கிகளுக்குப் பணிப்புக்களை விடுக்கலாம் –

(அ) உரிமமளிக்கப்பட்ட விசேட சங்கங்களினால் பணச்சபையினால் தீர்மானிக்கப்படுகின்றவாறான அத்தகைய தொகைகளில் மூலதன நிறைவு விகிதம் ஒன்று பேணிவரப்படுதல் ;

(ஆ) உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியின் ஒதுக்கு நிதியம் குறைக்கப்படுதல் அல்லது கேடுறுதல் உட்பட அந்நிதியம் பேணிவரப்படுதல் ;

(இ) வைப்புக்கள் எந்நியதி, நிபந்தனைகளின்கீழ் ஏற்றுக்கொள்ளப்படலாமோ அந்நியதி, நிபந்தனைகளும், அத்தகைய வைப்புக்கள்மீது செலுத்தப்படற்பாலனவான ஆகக்கூடிய வட்டிவீதங்களும், வைப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய ஆகக்கூடிய காலப்பகுதிகளும், உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியொன்றில் ஓர் ஆளின் பெயரில் அல்லது பலரின் கணக்குகளில் வைப்பிலிடப்படக்கூடிய ஆகக்கூடிய தொகையும் ;

(ஈ) ஏதேனும் கடன், கொடுகடன் வசதி அல்லது ஏதேனும் வகையான கடனுதவி அத்தகைய வங்கிகளினால் எந்நியதி, நிபந்தனைகளின்கீழ் வழங்கப்படலாமோ அந்நியதி, நிபந்தனைகளும், அத்தகைய கடன்கள், கொடுகடன் வசதிகள் அல்லது வேறு வகையான கடனுதவி மீது விதிக்கப்படக்கூடிய ஆகக்கூடிய வட்டிவீதங்களும், அத்தகைய கடன், கொடுகடன் வசதி அல்லது வேறு வகையான கடனுதவி கொடுக்கப்படக்கூடிய ஆகக்கூடிய காலப்பகுதிகளும் ;

(உ) தரகுப் பணங்கள், கழிவுகள், கட்டணங்கள் அல்லது வேறு எத்தகையனவுமான பெறுகைகள் அல்லது கொடுப்பனவுகள் என்ற வகையாக அத்தகைய வங்கிகளுக்குச் செலுத்தப்படக்கூடிய அல்லது அத்தகைய வங்கிகளினால் விதிக்கப்படக்கூடிய ஆகக்கூடிய வீதங்கள் ;

(ஊ) ஏதேனும் வாடகைக் கொள்வனவு உடன்படிக்கை மீது உத்தேச கேள்வுக்காரர் ஒருவரால் செலுத்தப்படவேண்டிய ஆகக்குறைந்த ஆரம்பக் கொடுப்பனவும், வெவ்வேறு வகுப்பினவான கொடுக்கல் வாங்கல்களுக்கு வெவ்வேறு குறிப்பிட்ட ஆரம்பக் கொடுப்பனவுகளும்; அத்தகைய ஆகக்குறைந்த ஆரம்பக் கொடுப்பனவு அத்தகைய உடன்படிக்கையின் கீழ் வாடகைக்கு விடப்பட்ட பண்டங்களினது பெறுமதியின் நூற்றுவீதமாக வெளிப்படுத்தப்படலாம்;

(எ) அத்தகைய வங்கிகளினால் முதலீடுகள் எந்நியதி நிபந்தனைகளின்கீழ் செய்யப்படலாமோ அந்நியதி நிபந்தனைகள் ;

(ஏ) அத்தகைய வங்கிகளினால் வழங்கப்படும் கடன்களுக்கு, கொடுகடன் வசதிகளுக்கு அல்லது வேறுவகையான கடனுதவிக்கும் செய்யப்படும் முதலீடுகளுக்கும் அனுமதிக்கத்தக்க ஆகக்கூடிய முதிர்வுக்காலங்களும், பல்வேறு வகையான கடன் வழங்கலுக்கு, கொடுகடன் மற்றும் முதலீட்டுத் தொழிற்பாடுகளுக்குத் தேவைப்படக்கூடிய அல்லது அனுமதிக்கப்படக்கூடிய பிணைப்பொறுப்பின் தன்மையும், தொகையும்;

(ஐ) அத்தகைய வங்கிகளினால் கணக்குப்புத்தகங்கள் அல்லது ஏனைய பதிவேடுகள் அல்லது ஆவணங்கள் பேணிவரப்படவேண்டிய படிவமும், முறையும் ;

(ஒ) வழங்கப்பட்ட கடன்கள் காலந் தப்பியனவாக வந்திருப்பின், அத்தகைய கடன்கள் தொடர்பில், செலுத்தப்படாதுள்ள வட்டியை முழுமையாகவோ பகுதியளவிலோ, உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கிகளின் வருமானத்திலிருந்து விலக்கி வைத்தல் ;

(ஓ) அத்தகைய வங்கிகளின் திரவச்சொத்துக்கள் அத்தகைய வங்கிகளின் மொத்தவைப்புப் பொறுப்புகளுக்கு என்ன விகிதத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமோ அந்த ஆகக் குறைந்த விகிதம் ;

(ஔ) பணச்சபையினால் தேவைப்படுத்தப்பட்டால், உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கிகள் மத்திய வங்கியுடன் காசு மீதிகளைப் பேணிவருதலும், அத்தகைய காசு மீதிகள் உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கிகளின் வைப்புப் பொறுப்புக்களுக்கு என்ன விகிதாசாரத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமோ அந்த ஆகக்குறைந்த விகிதாசாரமும்

(க) வைப்புக்கள் "முதிர்வடையுமுன்னராக வைப்பீட்டாளர்களினால்" மீளப் பெறப்படுவது சம்பந்தமாக ஏற்புடையனவாகும் நிபந்தனைகள் ;

(ங) அத்தகைய வங்கிகள் தமது கடன்களின் கொடுகடன் வசதிகளினது வேறுவகையான கடனுதவிகளின் அல்லது முதலீடுகளின் தொகையை அதிகரிப்பதைத் தடைசெய்தல்

(ச) அத்தகைய வங்கிகளினால் வழங்கப்படும் அல்லது செய்யப்படும் எவையேனும் கடன்களின் முதலீடுகளின் அல்லது கடனுதவிகளின் தொகை குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் எந்த வீதத்தில் அதிகரிக்கப்படலாமோ அந்த வீதத்திற்கான எல்லைகளை நிர்ணயித்தல் ;

(ஞ) அவற்றினது கடன்களின், முதலீடுகளின் அல்லது கடனுதவியின் தொகையைக் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் குறித்துரைக்கப்பட்ட எல்லைகளுக்குக் குறைக்குமாறு தேவைப்படுத்துதல் ;

(ட) உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியொன்றில் பின்வருவனவற்றினால் வைத்திருக்கக்கூடிய பங்கு மூலதனத்தின் ஆகக்கூடிய நூற்றுவீதமாக –

(i) ஒரு கம்பெனியினால், கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் அல்லது ஒரு தனியாளினால் வைத்திருக்கப்படக்கூடியது ;

(ii) (அ) ஒரு கம்பெனியினாலும் பின்வருவனவற்றுள் ஒன்றோ பலவோவற்றாலும், கூட்டு மொத்தமாக வைத்திருக்கக்கூடியது ; அதாவது –

(அஅ) அதன் துணைநிலைக் கம்பெனி ;

(ஆஆ) அதன் வைத்திருக்கைக் கம்பெனி ;

(இஇ) அதன் வைத்திருக்கைக் கம்பெனியின் துணைநிலைக் கம்பெனியொன்று ; அல்லது

(ஈஈ) அத்தகைய கம்பெனி அல்லது அதன் துணைநிலைக் கம்பெனி அல்லது அதன் வைத்திருக்கைக் கம்பெனி அல்லது அதன் வைத்திருக்கைக் கம்பெனியின் துணைநிலைக் கம்பனியொன்று கணிசமான அக்கறை கொண்டுள்ள ஒரு கம்பெனி ; அல்லது

(ஆ) ஒரு தனியாளினாலும் பின்வரும் ஒருவர் அல்லது, பலரினாலும், ஒன்றோ பலவோவற்றாலும் கூட்டுமொத்தமாக, வைத்திருக்கப்படக்கூடியது, அதாவது :–

(அஅ) அவரது கிட்டிய உறவினர் ;

(ஆஆ) அவர் அதில் கணிசமான அக்கறை கொண்டுள்ள அல்லது அவரது கிட்டிய உறவினர் அதில் கணிசமான அக்கறை கொண்டுள்ள ஒரு கம்பெனி ;

(இஇ) அத்தகைய கம்பெனியின் துணைநிலைக்கம்பெனியொன்று ;

(ஈஈ) அத்தகைய கம்பெனியின் வைத்திருக்கைக் கம்பெனியொன்று ;

(உஉ) அத்தகைய கம்பெனியின்து வைத்திருக்கைக் கம்பெனியின் துணைநிலைக் கம்பனியொன்று ;

(ஊஊ) அத்தகைய கம்பெனி, அல்லது அதன் துணைநிலைக் கம்பெனி அல்லது அதன் வைத்திருக்கைக் கம்பெனி கணிசமாக அக்கறை கொண்டுள்ள ஒரு கம்பெனி அல்லது

(எஎ) அத்தகைய தனியாள் அல்லது அவரது கிட்டிய உறவினர் கணிசமான அக்கறை கொண்டுள்ள ஒரு கம்பெனி தவிர்ந்த கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்று ;

ஆயின், எவ்வாறாயினும், 76ஒ என்னும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளின் கீழ் அத்தகைய வங்கிமீது விதிக்கப்படும் அல்லது 76 ங என்னும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளின்கீழ் பங்குதாரர் ஒருவர்மீது விதிக்கப்படும் ஒரு தேவைப்பாட்டின் மீதல்லாது, இச்சட்டத்தின் இப்பாகம் தொடங்கும் திகதியன்று உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியொன்றில் வைத்திருக்கப்படும் ஆளொருவரின் பங்குகளைக் குறைக்குமாறு இப்பிரிவின் கீழ் வழங்கப்படும் பணிப்பொன்று தேவைப்படுத்துதல் ஆகாது.

(ண) பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட முற்பணங்கள் தொடர்பில் பேணிவரப்பட வேண்டிய விளிம்புகள் ;

(த) உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கிக்கும், குத்தகை பெறுநருக்கும் இடையில் குத்தகை உடன்படிக்கைகள் தொடர்பிலான நியதி, நிபந்தனைகள் ;

(ந) உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கிகளினால் கொண்டுநடாத்தப்படக்கூடிய வகையான செயற்பாடுகள் மீது மட்டுப்பாடு.

(2) ஒராம் உட்பிரிவின், (இ), (ஈ) ஆகிய பந்திகளின் கீழான ஏதேனும் பணிப்பின்மூலம் நிர்ணயிக்கப்படும் ஆகக்குறைந்த வட்டிவீதங்கள், பணச்சபையினால் அவ்வாறு தீர்மானிக்கப்பட்டால், அத்தகைய பணிப்புத் திகதிக்கு முன்னராக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏதேனும் வைப்புத் தொடர்பில் அல்லது வழங்கப்பட்ட ஏதேனும் கடன், கொடுகடன் வசதி அல்லது வேறு ஏதேனும் கடனுதவி தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும் ;

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய ஏதேனும் பணிப்பில் உள்ள எதுவும் –

(அ) அத்தகைய ஏதேனும் வைப்பு அல்லது கடன், கொடுகடன் வசதி அல்லது வேறு கடனுதவி தொடர்பில் அத்தகைய பணிப்புத் திகதிக்கு முன்னர் திரண்ட ஏதேனும் வட்டிக்கு ஏற்புடையனவாதல் ஆகாது ; அல்லது

(ஆ) அத்தகைய பணிப்புத் திகதிக்கு முன்னர் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏதேனும் வைப்பு மீது அல்லது வழங்கப்பட்ட கடன், கொடுகடன் வசதி அல்லது கடனுதவிமீது செலுத்தப்படற்பாலதான வட்டி வீதத்தைக் குறைத்தலானது, விடயத்திற்கேற்ப அத்தகைய வைப்புக் கடன், கொடுகடன் வசதி அல்லது ஏனைய கடனுதவி தொடர்பிலான ஒப்பந்தத்தின் அல்லது உடன்படிக்கையின் மீறுகையாக அமையுமாயின், அத்தகைய குறைப்பைத் தேவைப்படுத்துதல் ஆகாது.

(3) இச்சட்டத்தின் இப்பாகத்தின் நோக்கங்களுக்காக, பணச்சபையானது, அவசியமானவிடத்து, குறிப்பாக (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய விடயங்களில், குறிப்பிட்ட ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கிக்கு பணிப்புக்களை வழங்கலாம் ;

(4) பணச்சபையானது (1) ஆம் உட்பிரிவின் (ஔ) என்னும் பந்தியின் கீழ் வழங்கப்படும் ஒரு பணிப்பைப் பின்பற்றி, உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியொன்றினால் மத்திய வங்கியில் பேணிவரப்படும் ஏதேனும் காசுமீதி மீது, பணச்சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வீதத்தில், அதன் தற்றுணிபின் பேரில், வட்டி செலுத்தலாம்.

(5) இப்பிரிவின் கீழ் வழங்கப்படும் ஒரு பணிப்புக்கு இணங்கியொழுகுவதாக செயற்படத்தவறுகின்ற அல்லது அத்தகைய பணிப்புக்கு முரணாகச் செயற்படுகின்ற உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியொன்று இச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

76ஒ (1) வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரினால் செய்யப்படும் ஓர் அறிக்கையின்மீது பணச்சபையானது, உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியொன்று –

(i) அதன் வைப்பாளர்களின் நலன்களுக்குப் பாதகமான ஸ்திரமற்ற அல்லது முறையற்ற நிதிசார் நடைமுறைகளைப் பின்பற்றுகின்றதென; அல்லது

(ii) அதன் வைப்பீட்டாளர்களின் நலன்களுக்குப் பாதகமான ஒரு முறையில் அதன் தொழிலைக் கொண்டு நடாத்தும் சாத்தியம் உள்ளதென ; அல்லது

(iii) இச்சட்டத்தின் இப்பாகத்தினதும் V ஆம் பாகத்தினதும் ஏற்பாடுகளினுள் எதனையும் மீறியுள்ளதென அல்லது அவற்றிற்கு இணங்கியொழுகத் தவறியுள்ளதென

அபிப்பிராயப்படுகின்றவிடத்து, பணச்சபையானது, அத்தகைய வங்கியை –

(அ) அத்தகைய ஏதேனும் நடைமுறையைப் பின்பற்றாதொழியுமாறு; அல்லது அத்தகைய ஏதேனும் மீறுகையைத் தவிர்க்குமாறு ;

(ஆ) இச்சட்டத்தின் இப்பாகத்தினதும், V ஆம் பாகத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுமாறு ; அல்லது

(இ) அத்தகைய நடைமுறையிலிருந்து அல்லது மீறுகையிலிருந்து விளையும் நிலைமைகளைச் சீராக்குவதற்கு அவசியமான நடவடிக்கையை எடுக்குமாறு ; அல்லது

(ஈ) எவரேனும் ஆளினால் கம்பெனியில் வைத்திருக்கப்படும் பங்குகளின் எண்ணிக்கையைக் குறைக்கப் பெறுமாறு ;

பணிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட கட்டளையொன்று பற்றி திருப்தியுறாத ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கி, அத்தகைய கட்டளை வழங்கப்படட திகதியிலிருந்து முப்பது நாட்கள் முடிவடையுமுன்னர், பணச்சபைக்கு எழுத்தில் மேன்முறையீடு செய்யலாம் என்பதுடன் சபையானது அத்தகைய மேன்முறையீடு கிடைக்கப்பெற்று பதினைந்து நாட்களுக்கு அதன் முடிபை வழங்குதலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியின் கீழ் அதற்கு வழங்கப்பட்ட பணிப்பொன்றுக்கு இணங்கியொழுகும் வகையில், உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியொன்று அத்தகைய வங்கியில் பங்குகள் வைத்திருக்கும் ஆளொருவரை, அத்தகைய வங்கியில், அத்தகைய ஆளினால் வைத்திருக்கப்படும் பங்குகளின் எண்ணிக்கையை, அத்தகைய பங்குகள் அத்தகைய ஆளினால் இச்சட்டத்தின் இப்பாகம் தொடங்கும் திகதிக்கு முன்னர் கொள்ளப்பட்டிருப்பினுஞ்சரி, அல்லது அதன் பின்னர் கொள்ளப்பட்டிருப்பினுஞ்சரி, அத்தகைய பணிப்பில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்குள், குறைக்குமாறு பணிக்கலாம்: அத்தகைய ஆள் அத்தகைய பணிப்புக்கு இணங்கியொழுகுவது அவரது கடமையாதல் வேண்டும்.

(4) விடயத்திற்கேற்ப (1) ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது (3) ஆம் உட்பிரிவின்கீழ் அதற்கு அல்லது அவருக்கு வழங்கப்படும் பணிப்புக்கு இணங்கியொழுகத்தவறும் உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கி அல்லது பங்குதாரர் ஒருவர் இச்சட்டத்தின் கீழான தவறொன்றுக்குக்குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவரினாலான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் பதினெட்டு மாதங்களை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது ஓராயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்.

76. (ஔ) (1) ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியின் புத்தகங்களையும் கணக்குகளையும் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர் எந்த நேரத்திலும் பரிசோதனையிடலாம் அல்லது அவரது பகுதியைச் சேர்ந்த எவரேனும் அலுவலருக்கு பரிசோதனையிட அதிகாரமளிக்கலாம்.

(2) அத்தகைய ஏதேனும் பரிசோதனை பற்றிய அறிக்கை, அத்தகைய பரிசோதனை முடிவடைந்தவுடன் விரைவில் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரினால் மத்திய வங்கியின் ஆளுநருக்குக் கொடுத்துதவப்படுதல் வேண்டும். வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர் அத்தகைய பரிசோதனைச் செலவுகளை உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியிடமிருந்து அறவிடலாம்.

(3) வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் –

(அ) ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியின் எவரேனும் பணிப்பாளருக்கு, முகாமையாளருக்கு, செயலாளருக்கு ஊழியருக்கு அல்லது கணக்காய்வாளருக்கு சத்தியக் கட்டளைச் சட்டத்திற்கு இணங்க, சத்தியங்களை அல்லது உறுதியுரைகளை எடுத்தோதுவித்தல் ;

(ஆ) ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியின் எவரேனும் பணிப்பாளரை, முகாமையாளரை, செயலாளரை, ஊழியரை அல்லது கணக்காய்வாளரை, வங்கி அலுவல்கள் தொடர்பில், இச்சட்டத்தின் இப்பாகத்தின் நோக்கத்திற்காக நிச்சயிப்பதற்கு அவசியமானவையென வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் கருதக்கூடியவாறான அத்தகைய அனைத்துத் தகவலையும் கொடுத்துதவுமாறு தேவைப்படுத்துதல் ;

(இ) ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியின் எவரேனும் பணிப்பாளரை, முகாமையாளரை, செயலாளரை, ஊழியரை அல்லது கணக்காய்வாளரை, வங்கி

அலுவல்கள் தொடர்பில் அத்தகைய ஏதேனும் தகவல் அடங்கியிருக்கும் சாத்தியம் கொண்டனவும் அவரது உடமையில் அல்லது கட்டுக்காப்பில் உள்ளனவுமான எவையேனும் புத்தகங்களை, பதிவேடுகளை அல்லது ஆவணங்களை பார்வையிடலுக்குக் காண்பிக்குமாறு தேவைப்படுத்துதல் ;

(ஈ) உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியொன்றினால் பிறழ்முகாமைத்துவம் பிரியப்படுவது பற்றிய சான்று காணப்படும் ஏதேனும் விடயத்தில் அத்தகைய வங்கியின் எவரேனும் பணிப்பாளரை, முகாமையாளரை அல்லது செயலாளரை, வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட கணக்காய்வாளர் ஒருவரினால் கணக்காய்வு செய்யப்படுவதற்கென அத்தகைய வங்கியின் கணக்குகளை சமர்ப்பிக்குமாறு தேவைப்படுத்துதல் அல்லது அத்தகைய கணக்காய்வாளருக்கு வங்கி மேற்பார்வைப் பணிப் பாளரினால் குறித்துரைக்கப் படக்கூடியவாறான அல்லது அதிகாரமளிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தகவலைக் கொடுத்துதவுமாறு, அல்லது அத்தகைய புத்தகங்களை, பதிவேடுகளை அல்லது ஆவணங்களைக் காண்பிக்குமாறும், அத்தகைய கட்டணங்களை செலுத்துமாறும் அவ்வங்கியைத் தேவைப்படுத்துதல்,

அவருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(4) எதேனும் உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியின் ஒவ்வொரு பணிப்பாளரும், முகாமையாளரும், செயலாளரும், ஊழியரும் அல்லது எவரேனும் கணக்காய்வாளர் இப்பிரிவின்கீழ் அவர்மீது சுமத்தப்பட்ட ஏதேனும் தேவைப்பாட்டிற்கு இணங்கியொழுகுதலும், வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரினால் அவ்வாறு செய்யத் தேவைப்படுத்தப்படும்போதெல்லாம் அதன் காசு மீதிகளும், சொத்துக்களும் பொறுப்புக்களும் உட்பட அந்த உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியின் அனைத்து புத்தகங்களையும் பதிவேடுகளையும் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் அல்லது (3) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியின் கீழ் அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் கணக்காய்வாளர் பார்வையிட வசதி செய்து கொடுத்தலும் அப்பணிப்பாளரின், முகாமையாளரின், செயலாளரின், ஊழியரின் அல்லது கணக்காய்வாளரின் கடமையாதல் வேண்டும்.

(5) வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர், உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியொன்றினது அலுவல்களின் உண்மையான நிலைபற்றி நிச்சயிப்பதும், அத்தகைய வங்கி அதன் தற்போதைய அல்லது எதிர்கால வைப்பீட்டாளர்களுக்குப் பாதகமானவொரு முறையில் தொழில் கொண்டுநடாத்துகின்றதா என நிச்சயிப்பதும் அவசியமானது எனக் கருதுகின்றவிடத்து, உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கி தொடர்பிலான தகவலை வைத்திருக்கின்றார் எனக்கருதும் எவரேனும் ஆளை,

எழுத்திலான அறிவித்தல் மூலம், அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய விடயங்கள் பற்றி அந்த ஆளை விசாரிக்கும் வண்ணம், அத்தகைய தகவலை தமக்கு அல்லது தம்மால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலருக்கு அல்லது (3) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியின்கீழ் தம்மால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் கணக்காய்வாளருக்குக் கொடுத்துதவுமாறு, அல்லது அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய இடத்திலும், அத்தகைய திகதியிலும், நேரத்திலும் தன்முன்னிலையில் அல்லது தம்மால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் முன்னிலையில் நேரடியாக வருகை தருமாறு தேவைப்படுத்தலாம்.

(6) உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியினது அலுவல்களின் உண்மையான நிலைமை பற்றி நிச்சயிக்கும் நோக்கத்துக்காக வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர், (5) ஆம் உட்பிரிவின்கீழான ஒரு விசாரணையின் நோக்கங்களுக்கு அவசியமானதென எண்ணினால், இயைபான நேரத்தில் –

(அ) விசாரணைக்குட்படுத்தப்பட்ட உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியினது வைத்திருக்கைக் கம்பெனியொன்றாக துணைநிலைக் கம்பனியொன்றாக இருக்கின்ற அல்லது இருந்திருக்கின்ற ;

(ஆ) அந்த உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியினது வைத்திருக்கைக் கம்பெனியொன்றின் துணை நிலைக் கம்பெனியொன்றாக இருக்கின்ற அல்லது இருந்திருக்கின்ற ;

(இ) அந்த உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியின் இணைந்த கம்பெனியொன்றாக இருக்கின்ற அல்லது இருந்திருக்கின்ற ;

ஏதேனும் கம்பெனியின் தொழில் பற்றியும் விசாரிக்கலாம் என்பதுடன், இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளினால் அவருக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களுள் எதனையும் அத்தகைய ஏதேனும் கம்பெனி தொடர்பில் பிரயோகிக்கவும் செய்யலாம்.

இவ்வுட்பிரிவில் "இணைந்த கம்பெனி" என்பது உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியொன்று தொடர்பில் பயன்படுத்தப்படும்போது, எக்கம்பெனியில், அந்த உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கி கம்பெனியின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்தில் இருபது சதவீத அல்லது அதற்கு மேற்பட்ட ஆனால் ஐம்பது சதவீதத்திற்குக் குறைவான சாதாரண பங்குகளை வைத்திருக்கின்றதோ அக்கம்பெனியொன்று எனப் பொருள்படும்.

(7) ஐந்தாம் அல்லது (6) ஆம் உட்பிரிவுகளின்கீழ் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரினால் அவர்மீது சுமத்தப்படும் ஏதேனும் தேவைப்பாட்டிற்கு இணங்கியொழுகத் தவறும் எவரேனும் ஆள் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

76க (1) வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர், ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியின் அலுவல்களைத் தாமாகவே அல்லது தம்மால் அதிகாரமளிக்கப்பட்ட அலவலர் மூலமாக பரிசோதனை செய்தபின்னர் அல்லது வங்கியிலிருந்து பெறப்பட்ட தகவல் மீது அவ்வங்கி கடனிறுக்க வகையற்றதென அல்லது அதன் வைப்பீட்டாளர்களின் கோரிக்கைகளைச் சமாளிக்க இயலாது வரும் சாத்தியம் உள்ளதென அல்லது அது தொழிலைத் தொடருவதால் அதன் வைப்பீட்டாளருக்கு அல்லது அதன் கடன் தருநர்களுக்கு நட்டம் ஏற்படும் சாத்தியம் உள்ளதென திருப்தியடையுமிடத்து, வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர் அதற்கிணங்க அறிக்கையொன்றை, பணச்சபைக்கு சமர்ப்பிக்கப்படுவதற்கென மத்திய வங்கி ஆளுநருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்; அத்துடன் அத்தகைய சபை, நிகழ்வுகளையும், சூழ்நிலைகளையும் மீளாய்வு செய்வதன் மேல், இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டவாறு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டுமென அபிப்பிராயப்பட்டால், பணச்சபை, தொழிலை இடைநிறுத்துமாறு வங்கியைப் பணிக்கும் கட்டளையொன்றை ஆக்கலாம் என்பதுடன், கம்பெனி தொழில் தொடருவதைத் தடுப்பதற்கு அவசியமாகக்கூடிய அனைத்து நடவடிக்கையையும் எடுக்குமாறு வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கு பணிப்பு வழங்கவும் செய்யலாம். கம்பெனி தொழில் தொடருவதைத் தடுக்கும் வண்ணம் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர் அத்தகைய நடவடிக்கை எடுப்பதற்கு எதிராக முட்டுக்கட்டையிடும் ஆள் எவரும் இச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(2) வேற ஏதேனும் சட்டத்தில் எது எப்படியிருப்பினும், (1) ஆம் உட்பிரிவின்கீழ் நன்னோக்கத்துடன் செய்யப்பட்ட ஏதேனும் கட்டளையை மீளாய்வு செய்யப்பெறும் அல்லது ஒழிக்கப்பெறும் நோக்கத்துக்காக அல்லது அத்தகைய கட்டளையின் காரணமாக உறப்படும் அல்லது உறப்படக்கூடிய சாத்தியம் கொண்ட அல்லது உறப்படும் எனச் சார்த்தப்பட்ட ஏதேனும் நட்டம் அல்லது சேதம் தொடர்பில், வழக்கு அல்லது நடவடிக்கை எதுவும் ஏதேனும் நீதிமன்றத்தில் கொடுக்கப்படலாகாது.

(3) ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கி தொடர்பில் (1) ஆம் உட்பிரிவின் கீழ் பணச்சபையினால் ஆக்கப்படும் கட்டளையொன்று, அது ஆக்கப்பட்ட திகதியிலிருந்து அறுபது நாட் காலப்பகுதி முடிவடைவதன்மேல் பயனுறாதொழிதல் வேண்டும் என்பதுடன், செயல்முறைக்குகந்தளவு விரைவிலும், எச்சந்தர்ப்பத்திலும் அத்தகைய காலப்பகுதி முடிவடையு முன்னராகவும் பின்வருமாறு செய்தல் பணச்சபையின் கடமையாதல் வேண்டும் –

(அ) ஒன்றில் நிபந்தனையின்றி அல்லது பொது மக்கள் நலன்கருதி அல்லது வங்கி வைப்பாளர்களினதும் ஏனைய கடன்தருநர்களினதும் நலன்கருதி பணச்சபை அவசியமெனக் கருதக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைக்கு அமைவாக, வங்கி, தொழிலை மீளத்தொடங்க அனுமதிக்கின்ற கட்டளையொன்றை ஆக்குதல் ; அல்லது

(ஆ) அத்தகைய உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கிக்கு வழங்கப்பட்ட உரிமத்தை இல்லாதாக்குகை –

(i) உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கி 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் 449 ஆம் பிரிவின் கருத்தெல்லைக்குட்பட்ட ஒரு கம்பெனியாக இருக்குமிடத்து, அத்தகைய கம்பெனிகள் சட்டத்தின் IX ஆம் பாகத்தின் (347 ஆம் பிரிவு தவிர்ந்து) ஏற்பாடுகளுக்கிணங்க நீதிமன்றத்தின் மேற்பார்வையின் கீழ் கம்பெனியை ஒடுக்குதற்கு விண்ணப்பிக்குமாறு அத்தகைய கம்பெனியின் பணிப்பாளர் சபையைப் பணித்தல் ;

(ii) உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கி எழுத்திலான ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனமாக இருக்கின்றவிடத்து, அத்தகைய பகிரங்கக் கூட்டுத்தாபனம் எந்த அமைச்சருக்கு குறித்தொதுக்கப்பட்டிருக்கின்றதோ அந்த அமைச்சர், அத்தகைய கூட்டுத்தாபனத்தைக் குலைப்பதற்கு 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் கீழ் அவசியமான அத்தகைய நடவடிக்கைகளை எடுக்க இயலச்செய்வதற்கென அவருக்கு அதுபற்றி அறிவித்தல் ;

(iii) உரிமளிக்கப்பட்ட விசேட வங்கி இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட ஒரு கம்பெனியாக அல்லது வேறு குழுவாக இருக்குமிடத்து, அதன் தொழில் அலுவல்கள் இச்சட்டத்தின் 70 ஆம் பிரிவில் அடங்கியுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க ஒடுக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அப்பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய ஒடுக்கல் தொடர்பில் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) இச்சட்டத்தின் 66 ஆம் பிரிவின் ஏற்பாடுகள், (3) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (1) ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஒரு கம்பெனியின் ஒடுக்குதல் நடவடிக்கையில் உரிமைக் கோரிக்கை முன்னுரிமைகள் தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும்.

76ங, (1) இச்சட்டத்தின் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளில் அல்லது உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியொன்றின் அமைப்புப் புறவிதிகளிலும் அமைப்பு அகவிதிகளிலும் முரணாக எது எப்படியிருப்பினும், 76ங என்னும் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ் பணச்சபையினால் கட்டளையொன்று ஆக்கப்படுகின்றவிடத்து, பணச்சபையானது –

(அ) உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியை வேறோர் உரிமமளிக்கப்பட்ட வங்கியுடன் அல்லது வேறு ஏதேனும் நிறுவனத்துடன் அத்தகைய மற்ற உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியின் அல்லது நிறுவனத்தின் சம்மதத்துடன் இணைப்பதற்கு அவசியமெனக் கருதக்கூடியவாறான அத்தகைய ஒழுங்கேற்பாடுகளைச் செய்யலாம் ;

(ஆ) அதன் மூலதனத்தை அதிகரித்து புதிய பங்குதாரர்களை ஏற்பாடு செய்வதன்மூலமும் அதன் பணிப்பாளர் சபையை மீளமைப்பதன் மூலமும் அத்தகைய உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியை மீள ஒழுங்குபடுத்தலாம்; அல்லது

(இ) தொழிலின் வளமற்ற பிரிவுகளை மூடிவிடுதலும், முகாமைத்துவத்தை மீள ஒழுங்குபடுத்தலும் உட்பட, வைப்பீட்டாளர்களின் நலனுக்குகந்தது என அது கருதும் அத்தகைய ஏதேனும் முறையில் உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியை மீளமைக்கலாம்;

(ஈ) ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியின் பங்குதாரர் எவரையும், அவருக்குச் சொந்தமான பங்குகளின் சொத்தாண்மையை உரிமை துறக்குமாறு அல்லது பணச்சபையினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் ஓர் ஆளுக்கு, அத்தகைய ஆள் பின்வருமாறு தீர்மானிக்கப்படும் நட்டஈட்டைச் செலுத்துவதன்மீது, கைமாற்றுமாறு பணிக்கலாம் :-

(i) அத்தகைய பங்குகள் விலை கோரப்பட்டனவாக இருக்குமிடத்து, அவற்றின் சந்தைப் பெறுமதிப்படி; அல்லது

(ii) அத்தகைய பங்குகள் விலைகோரப்பட்டனவாக இல்லாதவிடத்து, பணச்சபையினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் விலைமதிப்பீட்டாளர் ஒருவரினால் தீர்மானிக்கப்படும் ஒரு விலைப்படி.

(2) ஓராம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியின்கீழ் வழங்கப்படும் பணிப்புக்கு இணங்கியொழுகத் தவறும் பங்குதாரர் ஒருவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

32. முதன்மைச் சட்டவாக்கத்தின் 77 ஆம் பிரிவு, "ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியில் அல்லது உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியில்", என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

33. முதன்மைச் சட்டவாக்கத்தின் 78ஆம் பிரிவு, "ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஏதேனும் உரிமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் அல்லது உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியின்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

34. முதன்மைச் சட்டவாக்கத்தின் 79 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், இது அச்சட்டவாக்கத்தின் 79 அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :-

"தவறுகளை இணங்கித் தீர்த்தல்

79அ. (1) வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர், பணச்சபையின் அங்கீகாரத்துடன், இச்சட்டத்தின்கீழான தவறொன்று புரியப்பட்ட சந்தர்ப்பங்களை கவனத்திற்கொண்டு, அத்தகைய தவறை இருநூற்றியைம்பது ரூபாவை விஞ்சாதவொரு தொகைக்கு இணங்கித் தீர்க்கலாம்.

(2) இப்பிரிவின்கீழ் ஏதேனும் தவறை இணங்கித் தீர்த்தலானது குற்றஞ்சாட்டப்பட்டவரின் விடுவிப்பொன்றாகப் பயனுடையதாதல் வேண்டும்."

35. முதன்மைச் சட்டவாக்கத்தின் 80 ஆம் பிரிவு அப்பிரிவில் "உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி" என்னும் சொற்கள் தோன்றும் இடங்களிலெல்லாம், "விடயத்திற்கேற்ப உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி அல்லது உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கி" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது.

36. முதன்மைச் சட்டவாக்கத்தின் 81 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், இது அச்சட்டவாக்கத்தின் 81அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும். :-

"II ஆம் IV ஆம் அட்டவணைகள் தீர்மானம் மூலம் திருத்தப்பட வேண்டும்.

81அ. இச்சட்டத்திற்கான II ஆம், IV ஆம் அட்டவணைகளை அதற்கென நிறைவேற்றப்படும் தீர்மானம் மூலம் திருத்தப் பாராளுமன்றம் தத்துவம் கொண்டதாதல் வேண்டும்."

37. முதன்மைச் சட்டவாக்கத்தின் 82 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், இது அச்சட்டவாக்கத்தின் 82அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :-

"இச்சட்டம் ஏனைய சட்டங்களிலும் மேலோங்கி நிற்றல்.

82அ. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும், வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் இடையில் ஏதேனும் முரண்பாடு அல்லது ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில், இச்சட்டத்தின் ஏற்பாடுகளே மேலோங்கி நிற்றல்வேண்டும்."

38. முதன்மைச் சட்டவாக்கத்தின் 93 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் இவை அச்சட்டவாக்கத்தின் 83அ, 83 ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும். :-

"நகை அடைவு பிடிப்போர் கட்டளைச் சட்டம் ஏற்புடைத்தாதல் ஆகாது.

83அ. உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றுக்கு (99 ஆம் அத்தியாயமான) நகை அடைவு பிடிப்போர் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் ஆகாது என்பதுடன், அத்தகைய வங்கி பணச்சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தனை நிபந்தனைகளுக்கு அமைவாக நகை அடைவு பிடிப்போர் தொழிலைக் கொண்டுநடாத்தலாம்.

வர்த்தக விலக்களிக்கப்பட்ட கம்பெனியாகக் கருதப்படல்.

83ஆ. உரிமமளிக்கப்பெற்ற வர்த்தக வங்கி ஒன்றாக இச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ் உரிமம் ஒன்று வழங்கப்பட்டுள்ளதான, இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டதான கம்பனி ஒன்று, அத்தகைய உரிமம் வழங்கப்பெற்ற திகதியிலிருந்து, 1974 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, கம்பெனிகள் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் நோக்கங்களுக்காக விலக்களிக்கபெற்ற கம்பெனியொன்றாகக் கருதப்படல் வேண்டும்."

39. முதன்மைச் சட்டவாக்கத்தின் 86 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) "மூலதன நிதிகள்" என்னும் சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தை நீக்குவதன் மூலமும், அதற்குப் பதிலாக பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும் ;

"மூலதன நிதிகள்" என்பது -

(ஆ) உரிமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றின் விடயத்தில் 20 ஆம் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறான ஒப்பரவு மூலதனமும், ஒதுக்கு நிதியமும் எனப்பொருளாகும் என்பதுடன், குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதிகள் தவிர்ந்த ஒதுக்குகளையும் உள்ளடக்கும் ;

(ஆ) உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியொன்றின் விடயத்தில் ஒப்பரவு மூலமும் குறித்துரைக்கப்பட்ட நோக்கத்துக்காக ஒதுக்கப்பட்ட நிதி தவிர்ந்த அத்தகைய வங்கியின் ஒதுக்குகளும் எனப் பொருளாகும்," அத்துடன்

(2) "வர்த்தக வங்கியொன்றின் தலைமை அலுவலகம்" என்னும் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலமும் :-

"நிதிக் கம்பெனி" என்பது, 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக் கம்பெனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் நிதிக்கம்பெனியொன்றாக பதிவுசெய்யப்பட்ட ஒரு கம்பெனி எனப்பொருளாகும்.

40. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான 11 ஆம் அட்டவணை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அந்த அட்டவணைக்கான (இ) என்னும் விடயப்பொருளுக்குப் பதிலாக பின்வரும் விடயப்பொருளை இடுவதன் மூலமும் :-

"(இ) நிதிச்சேவைகளை ஏற்பாடுசெய்வதுடன் தொடர்புபட்ட ஏதேனும் தொழில் தொடர்பில், அரசாங்கத்துக்காக அல்லது உள்ளூரதிகாரசபைகளுக்காக அல்லது அவற்றின் சார்பில் அல்லது எவரேனும் ஆளுக்காக அல்லது ஆள்சார்பில் முகவராண்மை பணியைக் கொண்டுநடாத்துதல் அல்லது ஏதேனும் நிதி நிறுவனத்துக்கான முகாமைத்துவ முகவராகச் செயற்படுதல், "

(2) அந்த அட்டவணையில் (ஒ) என்னும் விடயத்துக்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன் மூலமும் :-

"(ஒ) ஏதேனும் கூறு நம்பிக்கைப்பொறுப்பின் நம்பிக்கைப் பொறுப்பாளர் ஒருவராகப் பணியாற்றுதல்உட்பட நம்பிக்கைப் பொறுப்புக்களைப் பொறுப்பேற்றலும், நிறைவேற்றுதலும்," ;

(3) பந்தி (க) வில் "கம்பெனியின் குறிக்கோள்களைஒத்த குறிக்கோளை கொண்டுள்ள வேறு ஏதேனும் கம்பெனியின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "வேறு ஏதேனும் கம்பெனியின்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(4) அந்த அட்டவணையின் (த) என்னும் விடயத்துக்குப் பதிலாக பின்வரும் அட்டவணையை இடுவதன் மூலமும் :-

"(த) முகாமைத்துவ உசாத்துணைச் சேவைகளையும், ஏனைய தொழினுட்ப ஆதாரச் சேவைகளையும் ஏற்பாடு செய்தல்";

(5) பந்தி (ப) வில் "தொழிற்சாலைக் குத்தகைச்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "தொழிற்சாலை தொழில் குத்தகைச்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(6) அந்த அட்டவணையின் இறுதியில் பின்வரும் புதிய விடயப் பொருட்களைச் சேர்ப்பதன் மூலமும் :-

"(ய) நகை அடைவு பிடிக்கும் தொழில்;

(ர) நிதிச் சேவைகள் தொழில் முயற்சியொன்றை நடாத்துவதற்காக அல்லது அதன் தொழிலை நடாத்துவதற்கு ஆதாரச் சேவைகளை ஏற்பாடு செய்யும் ஏதேனும் தொழில் முயற்சியை நடாத்துவதற்காக எவரேனும் ஆளுடன் அல்லது கம்பனியுடன் கூட்டுமுயற்சியொன்றுக்கு ஒழுக்கேற்பாடுகளைச் செய்துகொள்ளுதல்.

(அஅ) பணச்சபை உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்று ஈடுபடுவதற்கு அதிகாரமளிக்கக்கூடிய வேறு ஏதேனும் தொழில்".

41. பின்வரும் புதிய அட்டவணைகள் II ஆம் அட்டவணையை உடனடுத்து இத்தால் சேர்த்துக்கொள்ளப்படுகின்றன.

"அட்டவணை III

1. 1979 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, இலங்கை, தேசிய அபிவிருத்தி வங்கிச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை தேசிய அபிவிருத்தி வங்கி.

2. 1955 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம்.

3. 1955 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, அரச ஈட்டு முதலீட்டு வங்கிச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட அரச ஈட்டு, முதலீட்டு வங்கி.

4. 1971 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட தேசிய சேமிப்பு வங்கி.

அட்டவணை IV

(அ) இச்சட்டத்தில் வரைவிலக்கணம் கூறப்பட்டவாறாக வங்கித்தொழிலைக் கொண்டுநடாத்துவது நீங்கலாக, கால மற்றும் சேமிப்பு வைப்புக்களை ஏற்றுக்கொள்ளும், வைப்புக்களையும், சேமிப்புக்களையும், ஏனைய ஒத்த கணக்குகளையும் திறத்தலும், பேணுதலும், முகாமை செய்தலும் ;

(ஆ) கைத்தொழிலில், கமத்தொழிலில் அல்லது வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள அல்லது ஈடுபடவுள்ள ஏதேனும் தொழில் முயற்சிக்கு அல்லது வேறு ஏதேனும் தொழில் முயற்சிக்கு கடன்களையும் முற்பணங்களையும் வழங்குதல் அல்லது கடன்களை அல்லது முற்பணங்களை வழங்குவதில் வேறு நிதி நிறுவனங்களுடன் பங்குபற்றுதல் ;

(இ) கைத்தொழில், கமத்தொழில் வர்த்தக தொழில் முயற்சிகளுக்கும் ஏனைய தொழில் முயற்சிகளுக்கும் நிதி நிறுவனங்களினால் வழங்கப்படும் எவையேனும் கடன்களுக்கு அல்லது முற்பணங்களுக்கு மீள நிதி வசதியளித்தல் என்றவகையாக கடன்களையும், முற்பணங்களையும் வழங்குதல் ;

(ஈ) பின்வருவனவற்றிற்காக கடன்களையும் முற்பணங்களையும் வழங்குதல் –

(i) வாழ்மனையொன்றை நிருமாணிப்பதற்காக ஏதேனும் காணியை கொள்வனவு செய்தல் அல்லது குத்தகைக்கு எடுத்தல் ;

(ii) வாழ்மனையொன்றை நிருமாணித்தல், பழுதுபார்த்தல், புதுப்பித்தல் அல்லது விசாலித்தல் ;

(iii) வாழ்மனையொன்றை கொள்வனவு செய்தல் அல்லது குத்தகைக்கு எடுத்தல் ;

(iv) மேற்கூறிய (i). (ii). (iii) இல் கூறப்பட்ட ஏதேனும் நோக்கத்துக்கு இடைநேர்விளைவான, துணைநிலையான அல்லது இணைந்த ஏதேனும் நோக்கம்; அல்லது

(v) (i), (ii), (iii), (iv) இல் கூறப்பட்ட ஏதேனும் நோக்கத்துக்காக ஏலவே உறப்பட்ட ஏதேனும் தனிசை ஒழித்துக்கட்டல்.

(உ) கைத்தொழில், கமத்தொழில், வர்த்தக தொழில் முயற்சிகளுக்கு அல்லது ஏனைய தொழில் முயற்சிகளுக்கு குறுகியகாலக் கடன்களையும் முற்பணங்களையும் ஏற்பாடு செய்தலும், நிறுவனஞ்சார் பணச்சந்தையில் நிதிவசதியளித்தல் அல்லது கடன் வழங்குதல் ;

(ஊ) ஏதேனும் பகிரங்க அல்லது தனிப்பட்ட கம்பெனிக்காக, கூட்டுத்தாபனத்திற்காக அல்லது கழகத்திற்காக அல்லது அரசாங்கத்திற்காக அல்லது ஏதேனும் உள்ளூரதிகாரசபைக்காக, அதன் சொந்த மூலவளங்களிலிருந்து அல்லது ஏனைய வங்கிகளிலிருந்தும் நிதி நிறுவனங்களிலிருந்தும் ஒன்றில் ரூபாவில் அல்லது வெளிநாட்டு நாணயத்தில் கடன்களை ஒழுங்குபடுத்தலும், கடன்களுக்கு உத்தரவாதமளித்தலும், முகாமை செய்தலும், ஒன்றிணைத்தலும்

(எ) ஏணைய நிதி நிறுவனங்களுடனான கடன்களில், ஒப்பரவுகளில், பொறுப்பேற்பு ஒழுங்குகளில், உத்தரவாதங்களில் பங்குபற்றுதல் ;

(ஏ) நிதி நிறுவனங்களுக்கான முழுமொத்த கடன் வழங்கலைப் பொறுப்பேற்றல் ;

(ஐ) ஏதேனும் கைத்தொழில், கமத்தொழில், வர்த்தக தொழில் முயற்சிகளுக்கு அல்லது ஏனைய தொழில் முயற்சிகளுக்கு உள்ளூரிலும், வெளியூரிலும் மூலதனத்தை திரட்டுவதில் பங்குபற்றுதல் உட்பட, அத்தகைய தொழில் முயற்சிகளை மேம்படுத்தலும், அத்துடன் மேம்படுத்துவதில், தாபிப்பதில், விசாலிப்பதில், நவீனமயப்படுத்துவதில் உதவுதலும் ;

(ஒ) கைத்தொழில், கமத்தொழில், வர்த்தக முயற்சிகளினால் அல்லது ஏனைய தொழில் முயற்சிகளினால் நிதி நிறுவனங்களிலிருந்து திரட்டப்படும் அல்லது திரட்டப்படவுள்ள கடன்களுக்கு உத்தரவாதமளித்தலும் அத்தகைய கடன்களுக்கு உத்தரவாதமளிப்பதில் ஏனைய நிதி நிறுவனங்களுடன் பங்குபற்றுதலும் ;

(ஓ) ஏதேனும் கைத்தொழில் கமத்தொழில், வர்த்தக தொழில் முயற்சிகளிலிருந்தும், ஏனைய தொழில் முயற்சிகளிலிருந்தும் வருமதியான ஒத்திவைக்கப்பட்ட கொடுப்பனவுகளுக்கு உத்தரவாதமளித்தல் ;

(ஔ) கைத்தொழில், கமத்தொழில், வர்த்தக தொழில் முயற்சிகளினதும், ஏனைய தொழில் முயற்சிகளினதும் மூலதன வழங்கல்களைப் பொறுப்பேற்பதனால் எழுகின்ற நிதி நிறுவனங்களின் கடப்பாடுகளுக்கு உத்தரவாதமளித்தல் ;

(க) கைத்தொழில், கமத்தொழில், வர்த்தக தொழில்முயற்சிகளினதும் ஏனைய தொழில் முயற்சிகளினதும் ஒப்புரவில் பங்குபற்றுதலும், அத்தகைய எவையேனும் தொழில் முயற்சிகளின் பங்குகளின் முறிகளின் அல்லது தொகுதிக்கடன்களின் வழங்கலுக்கு ஒப்பப் பணமளித்தல் அல்லது அவற்றைக் கொள்வனவு செய்தல் அல்லது பொறுப்பேற்றல், அத்தகைய பங்குத்தொகுதிகளை, களஞ்சியங்களை, முறிகளை, தொகுதிக்கடன்களை விற்றலும் கையாளுதலும் ;

(ங) கைத்தொழில் கமத்தொழில், வர்த்தக தொழில் முயற்சிகளுக்கான அல்லது ஏனைய தொழில் முயற்சிகளுக்கான வங்கிக்கடன்களின் ஒரு பகுதியை அல்லது முழுவதையும் அத்துடன் அத்தகைய ஏதேனும் தொழில் முயற்சிகளினால் வழங்கப்படும் முறிகளுக்கான அல்லது தொகுதிக்கடன்களுக்கான அதன் ஒப்பப்பணங்களை ஒப்புரவு மூலதனமாக மாற்றுதல் ;

(ச) சேமிப்புக்களை திரட்டுதலும், மேம்படுத்தலும், அந்நோக்கத்துக்காக சேமிப்புச் சான்றிதழ்களையும், ஏனைய முறிகளையும், சான்றிதழ்களையும் சாதனங்களையும் வழங்குதலும், கையாளுதலும்;

(ஞ) கைத்தொழில், கமத்தொழில், வர்த்தக தொழில் முயற்சிகளினதும், ஏனைய தொழில் முயற்சிகளினதும் நாணய மாற்றுண்டியல்களை, வாக்குறுதிப்பத்திரங்களை, கூப்பன்களை, வரைவுகளை, தொகுதிக் கடன்களை, சான்றிதழ்களை, பங்குச் சான்றிதழ் தொகுதிகளை, ஏனைய சாதனங்களை, பிணையங்களை, அவை கைமாற்றத்தக்கனவாகவிருப்பினுஞ்சரி அல்லது உரிபெயர்த்தக்கனவாகவிருப்பினுஞ்சரி, ஏற்றுக்கொள்ளலும், அவற்றுக்கு கழிவு வழங்கலும், மீள்கழிவு வழங்கலும், அவற்றைக் கொள்வனவு செய்தலும், விற்பனை செய்தலும் கையாளுதலும் ;

(ட) விசேட நிதிசார் உற்பத்திப்பொருட்களையும், சேவைகளையும், பொதிகளையும், சாதனங்களையும் மேம்படுத்தலும், அறிமுகப்படுத்தலும் ;

(ண) பணத்தர்குத் தொழிலையும், விளிம்பு வியாபார வசதிகளையும் ஏற்பாடு செய்தல் ;

(த) மூலதன சந்தைகளையும், பணச்சந்தைகளையும் அபிவிருத்தி செய்வதற்கு உதவுதல் ;

(ந) கூறு நம்பிக்கைப் பொறுப்பின் முகாமையாளர்களாகச் செயலாற்றுவது உட்பட நம்பிக்கைப் பொறுப்புப் பணிகளைப் பொறுப்பேற்றல் ;

(ய) அரசாங்கத்திடமிருந்து அல்லது அரசாங்கத்தின் சார்பில் செயலாற்றும் முகவராண்மைகள் அல்லது நிறுவனங்களிடமிருந்து கடன்பெறுதலும், வைப்புக்களை ஏற்றுக்கொள்ளுதலும் ;

(ர) ஏதேனும் நியதிச் சட்டமுறையான குழுவுக்காக, கூட்டத்தாபனத்திற்காக அல்லது வேறு நிறுவனத்திற்காக முகவர்களாகச் செயலாற்றுதலும், அவற்றின் நிதிகளை நிருவகித்தலும் ;

(ல) வங்கியினால் வழங்கப்படும் ஏதேனும் கடனில் வங்கியின் நலனைப் பாதுகாக்கும் நோக்கத்திற்காக ஒரு வாடிக்கையாளரின் ஏதேனும் கைத்தொழில், கமத்தொழில், வர்த்தக பொறுப்பு முயற்சியையும் ஏனைய பொறுப்பு முயற்சியையும் முகாமை செய்தல், மேற்பார்வை செய்தல், கட்டுப்படுத்தல் அல்லது முகாமை செய்வதில், மேற்பார்வை செய்வதில் அல்லது கட்டுப்படுத்துவதில் பங்குபற்றல் ;

(வ) வர்த்தக அடிப்படையில் ஒழுங்கமைப்புக்களில் ஏலவேயுள்ள தனிசுகளைக் கொள்வனவு செய்தலும், வட்டி மாற்று வசதிகளையும், வட்டி தீர்ப்பு வசதிகளையும் ஏற்பாடு செய்தலும் ;

(ழ) கைத்தொழில், கமத்தொழில், வர்த்தக தொழில்முயற்சிகளுக்கும், ஏனைய தொழில் முயற்சிகளுக்கும் தொழினுட்ப, நிதி, முகாமைத்துவ அல்லது நிருவாக ஆலோசனைகள், உதவிகள் போன்ற அத்தகைய சேவைகளை ஏற்பாடு செய்தலும் ;

(ன) நிதி மீளமைப்பு, ஒன்று சேர்ப்புகள், மீள் நிருமாணங்கள், பொறுப்புகள், ஒன்றிணைவுகள் ஆகியவற்றில் கைத்தொழில், கமத்தொழில், வர்த்தக தொழில் முயற்சிகளுக்கும் ஏனைய தொழில் முயற்சிகளுக்கும் உதவுதல் ;

(அஅ) அமைப்பு முறை முகாமைத்துவத்தைப் பொறுப்பேற்றல் ;

(ஆஆ) கைத்தொழில், கமத்தொழில், வர்த்தகத் துறைகளிலும் ஏனைய துறைகளிலும் முன்னோடிக் கருத்திட்டங்கள் உட்பட அபிவிருத்திக்கருத்திட்டங்களைப் பொறுப்பேற்றல் ;

(இஇ) பொற்கட்டிகளையும், நாணயங்களையும் கொள்வனவு செய்தலும், விற்பனை செய்தலும், கையாளுதலும், பரிவர்த்தனைத் தொழிற்பாடுகளில் ஈடுபடுதலும் ;

(ஈஈ) நாணயக் கடிதங்களையும், புழக்கத் தாள்களையும் அளித்தலும், வழங்குதலும் ;

(உஉ) வங்கி புரியக்கூடிய பணிகளுக்குப் பிரதிபயனாக தரகுப்பணங்கள், தரகுக் கூலி, வட்டி, ஊதியம் அல்லது கட்டணங்கள் பெற்றுக்கொள்ளுதல் ;

(ஊஊ) இன்னலுற்ற தொழிற்றுறைகளைப் புனரமைக்கப் பொறுப்பேற்றல் ;

(எஎ) ஏதேனும் கமத்தொழில் அல்லது கைத்தொழில் பொறுப்புமுயற்சியின் உற்பத்திப் பொருள் எதனையும் விற்பனை செய்வதற்கு அல்லது சந்தைப்படுத்துவதற்கு அவசியமான ஒழுங்கமைப்பை அமைத்தல் அல்லது அமைக்க உதவுதல் ;

(ஏஏ) கமத்தொழில், கைத்தொழில், வர்த்தகச் செயற்பாடுகளுக்குத் தேவையான பண்டகசாலைகளையும், குதங்களையும், களஞ்சியங்களையும் நிருமாணிப்பதில் ஈடுபடுதல் ;

(ஐஐ) ஏதேனும் அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தை அல்லது ஏதேனும் கைத்தொழில், கமத்தொழில், வர்த்தக தொழில் முயற்சிகளையோ ஏனைய தொழில் முயற்சிகளையோ கொள்ளுதல் அல்லது கொள்வனவு செய்தலும் ; அத்தகைய ஆதனத்தை அல்லது தொழில் முயற்சியை முகாமை செய்தல் அல்லது முகாமை செய்ய ஒழுங்குபடுத்துதல் அல்லது அத்தகைய ஆதனத்தை அல்லது தொழில்முயற்சியை வேறுவகையில் கையுதிர்த்தல் ;

(ஒஒ) பண்டகசாலைகளையும், குதங்களையும், களஞ்சியசாலைகளையும், கட்டிடங்களையும், எந்திரத் தொகுதிகளையும், சாதனத்தையும், ஏனைய பண்டங்களையும் கொள்வனவு செய்தல், குத்தகைக்கு விடுதல், வாடகைக்கு விடுதல், பூரணமாக விற்றல் அல்லது வாடகைக் கொள்வனவின் மீது விற்றல்,

(ஓஓ) வங்கியின் பணங்களை முதலீடு செய்தல் ;

(ஔஔ) பொருளாதார, நிதி, அபிவிருத்தி, முகாமைத்துவத் துறையிலும் ஏனைய தொடர்புபட்ட துறைகளிலும், மதிப்பாய்வுகளையும், கற்கைகளையும், கருத்தரங்குகளையும் நடாத்துதல் ;

(கக) லொத்தர்களையும், பரிசுப்போட்டிகளையும் நடாத்துதல் ;

(ஙங) இலங்கை மத்திய வங்கியின் பணச்சபை விசேட உரிமமளிக்கப்பட்ட வங்கி ஈடுபடுவதற்கு அதிகாரமளிக்கக்கூடிய வேறு ஏதேனும் தொழில்,

42. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கு இடையில் ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

43. (1) இச்சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தில் ஏற்பாடுகளுக்கும் அத்தகைய முதன்மைச் சட்டவாக்கத்தின் கீழ் உரிமமொன்று பெறுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் அதிகாரசபை எந்த ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டதோ அந்த ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இடையில் முரண்பாடு காணப்படினும்கூட, அத்தகைய எழுத்திலான சட்டத்தின்கீழ் தொடங்கப்பட்டு (19 ஆம் பிரிவைத் தவிர்த்து) இச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதியன்று முடிவுறாததும், முடிவடையாததும் உள்ள எல்லாச் செயல்களும், முடிபுகளும் அல்லது காரியங்களும் அத்தகைய முரண்பாடு எப்படியிருப்பினும், தொடரப்பட்டு, முடிவாக்கப்படுதல் வேண்டும்.

(2)இச்சட்டத்தின் 25 ஆம் பிரிவினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 43 ஆம் பிரிவினால் சுமத்தப்பட்டவையும், உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றின் செயலாளர் ஒருவர் கொண்டிருக்கத் தேவைப்படுத்தப்பட்டவையுமான தகமைகள், (19 ஆம் பிரிவு தவிர்ந்த) இச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதியன்று ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் செயலாளராகப் பதவி வகிக்கும் எவரேனும் ஆளுக்கு அத்தகைய ஆள் வங்கியின் முழுநேர ஊழியர் ஒருவராகச் செயலாளர் பதவியை வகித்தால் மட்டுமே, ஏற்புடைத்தாதல் ஆகாது.

44. (1) இச்சட்டத்தின் VIIIஅ என்னும் பாகம் நடைமுறைக்கு வருவதற்கு முன்னர், உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிப் பொறுப்பு முயற்சியின் எப்பாகமும் ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் இன்னொரு உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிக்கு உரித்தாக்கப்பட்டிருக்கின்றவிடத்து, அமைச்சர் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம், அத்தகைய பொறுப்புமுயற்சி உரித்தாக்கப்பட்ட திகதிக்கு முற்போந்த நாளன்று, முதலாவதாகக் கூறப்பட்ட வர்த்தக வங்கியினால் மொத்தமாக வைத்திருக்கப்படும் ஏதேனும் அசைவுள்ள ஆதனத்தையும், அத்தகைய முதலாவதாகக் கூறப்பட்ட வர்த்தக வங்கி எந்த அசைவற்ற ஆதனம் மீது குத்தகை உரிமைகளைக் கொண்டுள்ளதோ அந்த ஏதேனும் அசைவற்ற ஆதனத்தையும் இரண்டாவதாகக் கூறப்பட்ட உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிக்கு உரித்தாக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளைமூலம் செய்யப்பட்ட உரித்தாக்கல் தொடர்பில், இரண்டாவதாகக் கூறப்பட்ட உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிக்கு, இரண்டாவதாகக் கூறப்பட்ட வர்த்தக வங்கியிடம் அத்தகைய முதலாவதாகக் கூறப்பட்ட உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் தொழில் உரித்தாக்கப்பட்ட திகதியன்று இரண்டாவதாகக் கூறப்பட்ட உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிக்கு உரித்தாக்கப்பட்ட சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் பெறுமதியையும் அத்தகைய உரித்தாக்கல் தொடர்பான எவையேனும் இயைபான கருமங்களையும் கருத்திற்கெடுத்துக் கொண்டதன் பின்னர் பணச் சபையினால் தீர்மானிக்கப்பட்டவாறான அத்தகைய தொகையிலான நட்ட ஈட்டைச் செலுத்துதல் வேண்டும்.

45. (1) இச்சட்டத்தின் 18 ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தில் IV அ என்னும் பாகம் நீக்கப்பட்டிருப்பினும்கூட, இலக்கமிடப்பட்ட கணக்கின் சொந்தக்காரர் கசெற்றில் வெளியிடப்படும் அறிவிப்பின்மூலம், பணச்சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான திகதியிலிருந்து தொடங்கும் இரண்டாண்டு காலப்பகுதிக்குள், அத்தகைய கணக்கைமூடிவிடுதல் வேண்டும் என்பதுடன் கணக்கை மூடும்வரையில் அக்கணக்கை நடைமுறைப்படுத்த உரித்துடையவராதலும் வேண்டும்.

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய கணக்கு வைப்பிலிடப்பட்ட பணங்களின் மீது வட்டியாக செலுத்தப்படக்கூடிய ஏதேனும் பணத்தொகையைத் தவிர அத்தகைய இலக்கமிடப்பட்ட கணக்குக்கு நிதி எதுவும் வரவிலிடப்படுதல் ஆகாது.

(2) இலக்கமிடப்பட்ட கணக்கொன்றில் சொந்தக்காரர் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி அந்த உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் அத்தகைய கணக்கை மூடத்தவறுமிடத்து, அத்தகைய கணக்கு, அக்காலப்பகுதி முடிவடைந்ததிலிருந்தும், முடிவடையும் திகதிக்குப் பின்னரும், அது இலக்கமிடப்பட்ட கணக்கொன்றாக இருப்பதன் பயனாக அதற்கு வழங்கப்படும் வசதியைத் துய்க்காதொழிதல் வேண்டும்.

"இப்பிரிவின் நோக்கத்திற்காக "இலக்கமிடப்பட்ட கணக்கு" என்பது முதன்மைச் சட்டவாக்கத்தின் 34ஆ எனும் பிரிவிலுள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்."

46. ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக உள்ளது எது எப்படியிருப்பினும் முதன்மைச் சட்டவாக்கத்தின் 83ஆ என்னும் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஏதேனும் உரிமமளிக்கப்பெற்ற வர்த்தக வங்கியினால் கொள்ளப்பட்ட இலங்கையிலுள்ள ஏதேனும் ஆதனத்திலுள்ள

அக்கறை ஒவ்வொன்றும் அத்துடன் முதன்மைச் சட்டவாக்கத்தின் 83ஆ எனும் பிரிவு தொடங்கும் திகதிக்கு முன்னரும் அவ்வங்கி தொடர்பில் அச்சட்டவாக்கத்தின் 5ஆம் பிரிவின் கீழ் உரிமம் ஒன்று வழங்கப்பட்ட திகதியன்றும் அதன் பின்னரும் ஏதேனும் அத்தகைய வங்கியினால் செய்யப்பட்ட எல்லாச் செயல்களும், எல்லா நோக்கங்களுக்காகவும் விடயத்திற்கேற்றாற்போன்று செல்லுபடியுள்ள விதமாகக் கொள்ளப்பட்டிருப்பதாகவும் செல்லபடியுள்ள விதமாகச் செய்யப்பட்டிருப்பதாகவும் கருதப்படுதல் வேண்டும்.

1995 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டம்

(1995 திசெம்பர் 29 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

1996 ஆம் நிதியாண்டின் சேவைக்கு ஏற்பாடு செய்வதற்கும், அத்தகைய சேவையின் நோக்கத்திற்காக இலங்கையிலோ அல்லது இலங்கைக்கு வெளியிலோ கடன்களைத் திரட்டுவதற்கு அதிகாரமளிப்பதற்கு, அந்நிதியாண்டின் போது அரசாங்கத்தின் குறித்த முயற்சிகள் தொடர்பில் நிதிகள் ஏற்பாடு செய்வதற்கும் அத்தகைய முயற்சிகளின் செலவினத்திற்கு அந் நிதியாண்டின் போது தேவைப்படும் பணங்களைத் திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்திற்குச் சேர்ந்த அல்லது அதனிடம் உள்ள வேறேதேனும் நிதியத்திலிருந்து அல்லது பணங்களில் இருந்து முற்பணமாக கொடுப்பதை இயலச் செய்வதற்கும், திரட்டு நிதியத்துக்கு அத்தகைய பணங்களை மீளளிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும், அத்துடன் மேற் சொல்லப்பட்ட கருமங்களுடன் தொடர்பான அல்லது அவற்றின், இடைநேர் விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.

1. இச் சட்டம் 1995 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (1) இச்சட்டத்தில், "நிதியாண்டான 1996ஆம் ஆண்டு" எனக்குறிப்பீடு செய்யப்படுவதும், 1996 சனவரி 10ஆந் தேதி தொடங்கி 1996 திசம்பர் 31ஆந் தேதியன்று முடிவடைவதுமான காலப்பகுதிக்கான சேவைக்காக இருநூற்றிப் பதினேழாயிரத்து நூற்றியிருபது மில்லியன் எண்ணூற்று நாலாயிரம் ரூபாவென மதிப்பிடப்படும் அரசாங்கத்தின் செலவினத் தொகையானது செலவினம் எதற்கும் அதிகாரமளிக்கும் வேறு சட்டமெதற்கும் பங்கமின்றி–

(அ) திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்தின் அல்லது அதனிடமுள்ள வேறேதேனும் நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து வழங்கப்பட வேண்டுமென இத்தால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள கொடுப்பனவுகளிலிருந்தும்; அத்துடன்,

(ஆ) அரசாங்கத்துக்காகவும் அதன் சார்பிலும் இலங்கையிலோ வெளிநாட்டிலோ திரட்டப்பட வேண்டுமென இத்தால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள கடன்களின் வரும்படியிலிருந்தும், பெறப்படல் வேண்டும். எவ்வாறாயினும் அத்தகைய வரும்படியில் கூட்டுமொத்தத் தொகையானது நூற்று இருபத்த நாலாயிரத்து அறுநூற்று முப்பத்தெட்டு மில்லியன் தொளாயிரத்து இருபத்து நாலாயிரம் ரூபாவினை விஞ்சுதலாகாது. இதன்கண் முன்னர் குறிப்பிட்ட இருநூற்றுப் பதினேழாயிரத்து நூற்றியிருபது மில்லியன் எண்ணூற்று நாலாயிரம் ரூபா கொண்ட பணத்தொகை இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு செலவிடப்படலாம்.

(2) இப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அரசாங்கத்துக்காகவும், அதன் சார்பிலும் கடன் திரட்டுவதற்கு அதிகாரமளிக்கும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்குப் பங்கமின்றி பயனுடையனவாதல் வேண்டும்.

3.(1) நிதியாண்டான 1996ஆம் ஆண்டின்போது, இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் 1ஆம் நிரையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு முயற்சியிலிருந்து அரசாங்கம் பெறும்பெறுகைகள் அத்தகைய முயற்சியின் கணக்கிற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

ஆனால், அவ்வாறு வரவுவைக்கப்படும் பெறுகைகளின் கூட்டு மொத்தத் தொகையானது, அந்த அட்டவணையின் 111ஆம் நிரையில் உள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப் பட்டுள்ள ஆகக் குறைந்த எல்லையை விஞ்சுதலாகாது. அத்தகைய முயற்சியின் தேறிய மேன்மிகை ஏதேனுமிருப்பின் அத் தேறிய மேன்மிகையானது நிதியாண்டான 1996ஆம் ஆண்டு முடிவுற்ற பின்னர் ஆறுமாதங்கள் முடிவடைவதற்கு முன்னர் திரட்டு நிதியத்துக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழான தேறிய மேன்மிகையைத்தீர்மானிக்கும் நோக்கத்திற்காகப் பின்வரும் கட்டணங்கள், அவையாவன:-

(அ) முயற்சியினது வருமானத்திற்கு முறைப்படி பொறுப்பாக்கப்படற்பாலனவான, கொடுக்கப்பட்டனவாயினுஞ்சரி அல்லது சேர்மானமானவை யாயினும்சரி, முயற்சியினது தொழிற்பாட்டு, தாபன, மற்றும் ஏனையசெலவுகள்; அத்துடன்,

(ஆ) முயற்சியினது அசைவுள்ளனவும் அசைவற்றனவுமான சொத்தினது தேய்மானத்தை மேவுவதற்கான ஏற்பாடு, என்பன ஒவ்வொரு முயற்சியின் வருமானத்திலும் எதிரீடு செய்யப்படல் வேண்டும்.

(3) நிதியாண்டான 1996ஆம் ஆண்டின்போது, இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் 1ஆம் நிரையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு முயற்சியின் பேரிலும், அரசாங்கத்தால் உறப்படும் செலவினம், அந்த நிதி ஆண்டின்போது அத்தகைய முயற்சியிலிருந்து, அரசாங்கம் பெறும் பெறுகையிலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும். ஆனால், அத்தகைய செலவினம் அந்த அட்டவணையின் 11 ஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய எல்லையை விஞ்சுதலாகாது.

(4). நிதியாண்டான 1996ஆம் ஆண்டின் முடிவில், இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் 1ஆம் நிரையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள ஏதேனும் முயற்சியிலிருந்து, நிலுவையாகவுள்ள பற்றுமீதி, அந்த அட்டவணையின் iv ஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய எல்லையை விஞ்சுதலாகாது. அத்துடன் அந்த நிதியாண்டின் இறுதியில் அந்த முயற்சியின் மொத்தப் பொறுப்புக்கள் அந்த அட்டவணையின் v ஆம் நிரலில் உள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய எல்லையை விஞ்சுதலாகாது.

(4) நிதியாண்டான 1996ஆம் ஆண்டின்போது எப்போதேனும், இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் 11ஆம் நிரையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள ஏதேனும் முயற்சியிலிருந்து, அரசாங்கம் பெறும் பெறுகைகள், அத்தகைய முயற்சியின் மீது அரசாங்கத்தினால் உறப்பட்ட செலவினங்களைச் சமாளிப்பதற்குப் போதியனவாயிராவிடின் அமைச்சர், அத்தகைய செலவினத்திற்கு அவசியமென அவர் கருதும் அத்தகைய தொகைகள் முற்பணங்களாகத் திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்திற்குச் சேர்ந்த அல்லது அதனிடமுள்ள வேறேதேனும் நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து கொடுக்கப்படற்பாலதாதல் வேண்டுமெனக் காலத்துக்குக்காலம் கட்டளை மூலம் பணிக்கலாம்; எவ்வாறாயினும், அவ்வாறு முற்பணமாகக் கொடுக்கப்படும் பணத்தொகைகளின் கூட்டுமொத்தத் தொகை, அந்தஅட்டவணையின் ii ஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள செலவினங்களின் ஆகக்கூடிய எல்லையை விஞ்சாதிருத்தல் வேண்டும். அத்தகைய முயற்சி தொடர்பில் அவ்வாறு முற்பணமாகக் கொடுக்கப்பட்ட ஏதேனும் பணத்தொகை அமைச்சரால் கட்டளைமூலம் பணிக்கப்படக்கூடிய அத்தகைய முறையில் திரட்டு நிதியத்திற்கு மீளளிக்கப்படுதல் வேண்டும்.

(5) (1) இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையின் ஏற்பாடுகளின் பயனைக்கொண்டு, அந்த அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள எந்தத் தலைப்பின் கீழும் தோன்றும் எந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழும் மீண்டுவருஞ் செலவினத்திற்குக் குறித்தொதுக்கப்பட்டிருந்து, ஆனால் செலவு செய்யப்படாமலும் அல்லது செலவு செய்யப்படுதல் சாத்தியமில்லாமலும் இருக்கும் எவையேனும் பணங்கள், திறைசேரிச் செயலாளரின் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட வேறெவரேனும் அலுவலரின் கட்டளைமூலம் அந்நிகழ்ச்சித் திட்டத்திற்குட்பட்ட ஆக்கப்பொருட் செலவினத்துக்கென செய்யும் குறித்தொதுக்கலுக்கு அல்லது அத்தலைப்பிற்குட்பட்ட வேறேதேனும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான மீண்டுவரும் செலவினத்தின் அல்லது மூலதனச் செலவினத்தின் குறித்தொதுக்கலுக்கும் கைமாற்றப்படலாம்.

(2) இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் தலைப்பின் கீழுள்ள நிகழ்ச்சித்திட்டம் எதன்கீழும் ஆக்கப்பொருட் செலவினத்துக்கென ஒதுக்கப்பட்டுள்ள பணங்களெவையும் குறித்தொதுக்கலில் இருந்து கைமாற்றப்படல் ஆகாது.

6(1) வரிகளிலிருந்தும் வேறு மூலங்களிலிருந்தும் பெறப்படும் பெறுகைகள், அதிகாரமளிக்கப்பட்ட செலவினங்களுக்கு நிதி வசதியளிப்பதற்கு என எதிர்பாக்கப்பட்ட பணத் தொகைகளையும், விடக் குறைவாக இருக்குமெனஃ அல்லது

(2) ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்கு அல்லது நோக்கங்களுக்கு முதலில் ஒதுக்கப்பட்ட பணத்தொகைகள் மேலும் தேவைப்படமாட்டாதென, அமைச்சர் திருப்திப்படுத்துமிடத்து, திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்துக்கு சேர்ந்த ஏதேனும் பிற நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து அவரால் வழங்கப்பட்ட ஆணைப்பத்திரத்தில் அதிகாரத்தின் கீழான செலவினத்துக்காக முன்னர் வழங்கப்பட்ட எவையேனும் பணத்தொகைகளை அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் முழுமையாக அல்லது பகுதியளவில் அவர் மீளப்பெறலாம்.

7 (1) (அ) இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் 11ஆம் நிரையிலும் 111 ஆம் நிரையிலும் குறித்துரைக்கப்பட்டுள்ள, ஆகக்கூடிய எல்லைகளுள் எதனையும்ஃ

(ஆ) இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் 111ஆம் நிரையிலும் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக் குறைந்த எல்லைகளையும் ;

அமைச்சர் அரசாங்கத்தின் அங்கீகாரத்தோடு 1997ஆம் ஆண்டு மே மாதம் 31ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கட்டளைமூலம் வேறுபடுத்தலாம் அல்லது மாற்றலாம்.

(2) இப்பிரிவின்கீழ் (1) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்படும் கட்டளை எதுவும், பாராளுமன்றத்தினாலான தீர்மானத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டிருந்தாலன்றி பயனுடைதாதல் ஆகாது.

(3) அத்தகைய கட்டளை எதுவும் அதன்கண் அவ்விதம் கூறப்பட்டிருந்தால் அதன்கண் குறிப்பிடப்பட்டிருக்கக்கூடியதும், அத்தகைய கட்டளை ஆக்கப்பட்ட திகதிக்கு முந்தியதுமான அத்தகைய திகதியிலிருந்து பயனுடையதாயிருந்ததாகக் கருதப்படுதல் வேண்டும்.

(8) பாராளுமன்றமானது தீர்மானத்தின் மூலம் இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையை, அந்த அட்டவணையின் தோதான நிரைகளுக்கு, ஏதேனும் முயற்சியையும், அத்துடன்

(அ) அத்தகைய முயற்சி தொடர்பான எல்லா ஆகக்கூடிய எல்லைகளையும் அல்லது அவற்றுள் எவற்றையும் ,

(ஆ) அத்தகைய முயற்சி தொடர்பிலான ஆகக்குறைந்த எல்லையையும் சேர்ப்பதன் மூலம் திருத்தலாம்.

(9) இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை இருக்கும் சந்தர்ப்பத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

1995 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க பாதுகாப்பு அறிவீடு (திருத்தச் சட்டம்)

(1995 திசெம்பர் மாதம் 29 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

1991 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, பாதுகாப்பு அறவீட்டுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

1. இச்சட்டம், 1995 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, பாதுகாப்பு அற்வீட்டு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (இதனகத்துப்பின்னர்"முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படுவதும்) 1991 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, பாதுகாப்பு அறிவீட்டுச் சட்டத்திற்கான விரிவுப்பெயர், "முறையே 1992 சனவரி 1, 1993 சனவரி1, 1994 சனவரி 1, அத்துடன் 1995 சனவரி 1 என்ற தேதிகளில் தொடங்குகின்ற ஆண்டுகளுக்காகப் பாதுகாப்பு அறவீடொன்றை விதிப்பதற்கு" என்ற சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "முறையே 1992 சனவரி 1, 1993 சனவரி 1, 1994 சனவரி 1,1995 சனவரி 1, அத்துடன் 1996 சனவரி 1 என்ற திகதிகளில் தொடங்குகின்ற ஆண்டுகளுக்காகத் தேசியப் பாதுகாப்பு அறவீடொன்றை விதிப்பதற்கு" என்ற சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

(3) முதன்மைச் சட்டவாக்கத்திலும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்திலும் பின்வருவன பதிலிடப்பட வேண்டும் :-

(அ) "பாதுகாப்பு அறவீட்டுச் சட்டம்" என்ற சொற்களுக்குப் பதிலாக, "தேசிய பாதுகாப்பு அற்வீட்டுச் சட்டம்" என்ற சொற்கள்; அத்துடன்

(ஆ) "பாதுகாப்பு அறவீடு" என்ற சொற்களுக்குப் பதிலாக, "தேசியபாதுகாப்பு அறவீடு" என்ற சொற்கள்.

(2) ஏதேனும் அறிவித்தலில், அறிவிப்பில், ஒப்பந்தத்தில், கடிதத்தொடர்பில் அல்லது வேறு ஆவணத்தில் "பாதுகாப்பு அறவீட்டுச் சட்டம்" மற்றும் "பாதுகாப்பு அறவீடு" பற்றிய குறிப்பீடு ஒவ்வொன்றும் முறையே தேசிய பாதுகாப்புச் சட்டம்" மற்றும் "தேசிய பாதுகாப்பு அறவீடு" என்பவற்றுக்கான குறிப்பீடாக வாசிக்கப்பட்டு பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகிறது:-

(1) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில்-

(அ) "1994 சனவரி 1, மற்றும் 1995 சனவரி 1" என்ற சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, 1994 சனவரி 1, 1995 சனவரி 1 மற்றும் 1996 சனவரி 1 என்ற தேதிகளில்" என்ற சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம்; அத்துடன்

(ஆ) ("மொத்த விற்பனை வரவு வரிச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கருத்துக்குட்பட) அவ்வாளின் மொத்த விற்பனையின்மீது" என்ற சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக," ("மொத்த விற்பனை வரவு வரிச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கருத்துக்குட்பட) அவ்வாளின் மொத்த விற்பனை வரவின்மீது அல்லது அதன் பாகத்தின்மீது" என்ற சொற்களையும் எண்களையும், இடுவதன் மூலம்.

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில்-

(1)அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்திகளில் "ஏற்றுமதிக்கான ஏதேனும்பொருளின் உற்பத்தியில் அத்தகைய ஆள் பிரத்தியேகமாகப் பயன்படுத்துவதற்கென" என்ற சொற்களுக்குப் பதிலாக, "ஏற்றுமதிக்கான ஏதேனும் பொருளின் உற்பத்தியில் அல்லது உற்பத்திக்காக அத்தகைய ஆள் பிரத்தியேகமாகப் பயன்படுத்துவதற்கென" என்ற சொற்களை இடுவதன்மூலம்;

(ii) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியில் "பெறப்படும் வருவாய்கள்;

அத்துடன் " என்ற சொற்களுக்குப் பதிலாக, "பெறப்படும் வருவாய்கள்; " என்ற சொற்களை இடுவதன்மூலம்;

(iii) அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில் "கிடைக்கும் வருமானம்" என்ற சொற்களுக்குப் பதிலாக, "கிடைக்கும் வருமானம்;" என்ற சொற்களை இடுவதன்மூலம்;

(iv) அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்திகளைச் சேர்ப்பதன் மூலம் :-

"(உ) இறக்குமதி செய்யப்பட்ட ஏதேனும் பொருள் பின்வருவனவற்றுக்காக இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்படுகின்றனவென்றும் அத்தகைய பொருள் இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்பட்ட திகதியிலிருந்து ஓராண்டுக் காலப்பகுதியொன்றினுள் அத்தகைய ஆளினால் மீளளிக்கப்படவுள்ளதென்றும் உண்ணாட்டரசிறைத் தலைமையதிபதியின் திருப்திக்கு எண்பிக்கப்படின், அத்தகைய பொருளின் பெறுமதி:-

(i) கண்காட்சியொன்றில் வெளிக்காட்டி வைப்பதற்காக;

(ii) அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் கருத்திட்டத்தில் இலங்கையில் தந்தாலிகமாகப் பயன்படுத்துவதற்காக;

(iii) இலங்கையில் நிறைவேற்றப்படவேண்டிய அப்பொருளுக்கான பழுதுபார்த்தல் நோக்கங்களுக்காக;
அல்லது

(iv) வேறேதேனும் ஒத்த நோக்கத்துக்காக;

(ஊ) தீர்வையற்ற ஏதேனும் கடையில் விற்பனை செய்வதற்காக அத்தகைய ஆளினால் மத்திய வங்கியின் அங்கீகாரத்தோடு இறக்குமதி செய்யப்பட்ட ஏதேனும் தங்கத்தின் பெறுமதி;
அத்துடன்

(எ) இறக்குமதி செய்யப்பட்ட ஏதேனும் பொருள் இறக்குமதி செய்யப்படு முன்னர் பழுதுபார்த்தல்களுக்காக இலங்கைக்கு வெளியே எடுத்துச் செல்லப்பட்டதெனச் சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதியின் திருப்திக்கு எண்பிக்கப்படின்; அத்தகைய பொருளின் பெறுமதி."

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு, அப்பிரிவின் (உ) என்னும் என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(உ) 1995 யூலை 1 ஆந் திகதியன்று அல்லது அதற்குப்பின்னர் ஆனால் 1996 சனவரி 1 ஆந் திகதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஒவ்வொரு காலாண்டுக்கும்-

(1) அக்காலாண்டின் முதலாம் மாதத்திற்காக அவ்வாளின் மொத்தவிற்பனை வரவின் நாலரைச் சதவீதத்துக்குச் சமனான தொகையொன்றை அக்காலாண்டின் இரண்டாம் மாதத்தின் பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர்;

(11) அக்காலாண்டின் இரண்டாம் மாதத்திற்கு அவ்வாளின் மொத்த விற்பனை வரவின் நாலரைச் சதவீதத்திற்குச் சமனான தொகையொன்றை அக்காலாண்டின் மூன்றாம் பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர்; அத்துடன்

(111) அக்காலாண்டிற்கு அத்தகைய ஆளினால் செலுத்தப்படற்பாலதான அளவீட்டின் தொகை, இப்பந்தியின் (1) ஆம், (11)ஆம் உட்பந்திகளின் ஏற்பாடுகளுக்கு இணங்க அவரால் செலுத்தப்படும் தொகைகளின் கூட்டுமொத்தத்தால் குறைக்கப்பட்டு, அக்காலாண்டின் முடிவை உடனடுத்து வரும் மாதத்தின் பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர்;

(ஊ) 1996 சனவரி 1 ஆந் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் ஆனால் 1997 சனவரி 1ஆந் திகதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஒவ்வொரு காலாண்டிற்கும், அக்காலாண்டின் முதலாம் மாதத்திற்கு-

(1) (அ) பொறித்தொகுதி, எந்திரத்தொகுதி அல்லது சாதனம் இறக்குமதியிலிருந்து அல்லது உற்பத்தியிலிருந்து எழுகின்றதான மொத்த விற்பனை வரவாகவிராத, அவ்வாளின் மொத்த விற்பனை வரவின் நாலரைச் சதவீதத்திற்குச் சமனான தொகையொன்றை; அத்துடன்

(ஆ) பொறித்தொகுதி, எந்திரத்தொகுதி அல்லது சாதனம் இறக்குமதியிலிருந்து அல்லது உற்பத்தியிலிருந்து எழுகின்றதான அவ்வாளின் மொத்த விற்பனை வரவின் இரண்டு சதவீதத்திற்குச் சமனான தொகையொன்றை,

அக் காலாண்டின் இரண்டாம் மாதத்தின் பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர்;

(11) அக்காலாண்டின் இரண்டாம் மாதத்திற்கு -

(அ) பொறித் தொகுதி, எந்திரத் தொகுதி அல்லது சாதனம் இறக்குமதியிலிருந்து அல்லது உற்பத்தியிலிருந்து எழுகின்றதான மொத்த விற்பனை வரவாகவிராத அவ்வாளின் மொத்த விற்பனை வரவின் நாலரை சதவீதத்திற்குச் சமமான தொகையொன்றை; அத்துடன்

(ஆ) பொறித்தொகுதி, எந்திரத்தொகுதி அல்லது சாதனம் இறக்குமதியிலிருந்து அல்லது உற்பத்தியிலிருந்து எழுகின்றதான அவ்வாளின் மொத்த விற்பனை வரவின் இரண்டு சதவீதத்திற்குச் சமனான தொகையொன்றை;

அக்காலாண்டின் மூன்றாம் மாதத்தின் பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர்; அத்துடன்

(111) அக்காலாண்டிற்கு அத்தகைய ஆளினால் செலுத்தப்படற்பாலதான அறவீட்டின் தொகை இப்பந்தியின் (1) ஆம் (11) ஆம் உட்பந்திகளின் ஏற்பாடுகளுக்கிணங்க அவரால் செலுத்தப்படும் தொகைகளின் கூட்டு மொத்தத்தால் குறைக்கப்பட்டு அக்காலாண்டின் முடிவை உடனடுத்துவரும் மாதத்தின் பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர்"

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5அ என்னும் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் உள்ள "பின்வருவனவற்றின் மூன்றரைச் சதவீதத்திற்குச் சமனான ஒரு தொகையை" என்னும் சொற்களுக்குப் பதிலாக "இச்சட்டத்திற்கான அட்டவணையில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள பின் வருவனவற்றின் தோதான வீதங்களில் கணிப்பிடப்பட்ட ஒரு தொகையை" என்ற சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) " வங்கியாளர் " என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும்:-

"மத்திய வங்கி" என்பது பணச்சட்டத்தினால் தாபிக்கப்பட்ட மத்திய வங்கி என்று பொருள்படும்;

(2) "உற்பத்தியாளர்" என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும்:-

"பொறித்தொகுதி, எந்திரத்தொகுதி, அல்லது சாதனம்" என்பது (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தில் வரைவிலக்கணங் கூறப்பட்ட ஏதேனும் மோட்டார் காரை, மோட்டார்க் கோச்சை அல்லது பொறியை உள்ளடக்காது.

8. முதன்மைச் சட்டவாக்கத்துக்கான அட்டவணை இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் அட்டவணை இடப்படுகின்றது:-

"அட்டவணை

(பிரிவுகள் 3 மற்றும் 5அ)

இச்சட்டம் எந்த ஆளுக்கு ஏற்புடைத்தாகுமோ அந்த ஆளெவரினதும் மொத்த விற்பனை வரவு தொடர்பில் ஏற்புடையற்பாலதான அறவீட்டு வீதம்

	காலாண்டு	வீதம்
1.	1992 சனவரி 1ஆம் திகதியன்று தொடங்கும் காலாண்டுக்கு	1 சதவீதம்
2.	1992 ஏப்பிறில் 1ஆம் திகதியன்று தொடங்கும் காலாண்டுக்கு	2.3 சதவீதம்
3.	1992 யூலை 1ஆம் திகதியன்றோ அல்லது அதற்குப் பின்னரோ ஆனால் 1994 சனவரி 1ஆம் திகதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் காலாண்டிற்கு	3 சதவீதம்
4.	1994 சனவரி 1ஆம் திகதியன்றோ அதற்குப் பின்னரோ ஆனால், 1995 யூலை 1ஆம் திகதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் காலாண்டிற்கு	3.5 சதவீதம்
5.	1995 யூலை 1ஆம் திகதியன்றோ அல்லது அதற்குப் பின்னரோ ஆனால் 1996 சனவரி 1ஆம் திகதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் காலாண்டிற்கு	4.5 சதவீதம்

6. 1996 யூலை 1ஆம் திகதியன்றோ அல்லது அதற்குப் பின்னரோ ஆனால் 1997 சனவரி 1ஆம் திகதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் காலாண்டிற்கு–

4.5 சதவீதம்

(1) ஏதேனும் பொறித்தொகுதியை,எந்திரத்தொகுதியை அல்லது சாதனத்தை இறக்குமதி செய்வதிலிருந்து அல்லது உற்பத்தி செய்வதிலிருந்து எழுகின்ற மொத்த விற்பனை வரவு தவிர்ந்த மொத்த விற்பனை வரவின் மீது

4.5 சதவீதம்

(11) ஏதேனும் பொறித்தொகுதியை, எந்திரத் தொகுதியை அல்லது சாதனத்தை இறக்குமதி செய்வதிலிருந்து அல்லது உற்பத்தி செய்வதிலிருந்து எழுகின்ற மொத்த விற்பனைவரவின் மீது –

2 சதவீதம்"

9. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.